# காலசுரபி

2003 இதழ் - 4









வரலாற்றுக்கழகம்
வரலாற்றுத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி.
2004

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவேசுரபி

## 2003 இதழ் - 4

DR. K. INDRAPALA
Archaeology Museum
Department of History
UNIVERSITY OF JAFFNA,
SRILANKA.

**இதழாசிரியர்கள்**
செல்வி ஜெ.பவித்திரா
செல்வி க.சிவப்பிரியா

*Dr. K. Indrapala Archaeology Museum*
*Department of History*
*University of Jaffna*
*Sri Lanka.*

***வரலாற்றுக்கழகம்***
***வரலாற்றுத் துறை***
***யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்***
***திருநெல்வேலி***
***2004***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுக்கழகம்
# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## 2002/2003 நிர்வாகக்குழு

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | **பேராசிரியர் ச. சத்தியசீலன்**<br>(தலைவர் வரலாற்றுத்துறை) |
| பெரும் பொருளாளர் | : | **கலாநிதி ப. புஷ்பரட்ணம்**<br>(சிரேஷ்ட விரிவுரையாளர்) |
| தலைவர் | : | **செல்வன் ம. பத்மராஜ்** |
| உபதலைவர் | : | **செல்வன் கு. சுதாகரன்** |
| செயலாளர் | : | **செல்வி சு. தயாபரி** |
| உப செயலாளர் | : | **செல்வன் ஜெ. டொன்பொஸ்கோ** |
| பொருளாளர் | : | **செல்வன் கே. பகீரதன்** |
| இதழாசிரியர்கள் | : | **செல்வி ஜெ. பவித்திரா**<br>**செல்வி க. சிவப்பிரியா** |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | **செல்வி நி. யசோதரா**<br>**செல்வி ப. விருபா**<br>**செல்வன் யோ.தயாபரன்**<br>**செல்வி ந.குமுதா**<br>**செல்வி சி. காமினி**<br>**செல்வன் இ. ஸ்ரீதரன்** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | *ஆசிச்செய்தி* | i |
| | *வாழ்த்துரைகள்* | ii -v |
| | *கழகத்தலைவர் எண்ணத்தில் இருந்து* | vi |
| | *இதழாசிரியர் இதயத்தில் இருந்து* | vii |
| | *கழகச் செயலாளரின் அறிக்கை* | viii |
| **01.** | இலங்கையில் தமிழ் பௌத்தம். | 01-16 |
| **02.** | ஈழத்தமிழர் வரலாற்றில் அம்பாந்தோட்டை அண்மைக்காலத் தொல்லியற் கண்டுபிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு. | 17-27 |
| **03.** | வரலாற்று நோக்கில் குருந்தலூர் வட்டாரம். | 28-34 |
| **04.** | உரோமப் பேரரசின் வீழ்ச்சி – ஒரு பார்வை. | 35-42 |
| **05.** | தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கமும் ஜதீகங்களும் ஒரு பார்வை. | 43-57 |
| **06.** | வரலாற்று நோக்கில் எல்லாளன் துட்டகாமினி போராட்டம். | 58-67 |
| **07.** | வரலாற்று நோக்கில் ஈழத்தமிழர் பண்பாட்டு உருவாக்கமும் சோழரும். | 68-78 |
| **08.** | பண்பாட்டு வரலாற்றில் தஞ்சைப்பிருகதீஸ்வரர் கோயில் ஒரு நோக்கு. | 79-88 |
| **09.** | இலக்கியங்களில் இலங்கையின் ஆதிகால இடப்பெயர்கள். | 89-102 |
| **10.** | நூற்றாண்டுப்போர். | 103-111 |
| **11.** | முப்பதாண்டுப் போருக்கான காரணங்களும் அவற்றின் போக்கும் – ஒரு நோக்கு. | 112-120 |
| **12.** | ஐரோப்பிய வரலாற்றில் நெதர்லாந்து விடுதலைப்போர். | 121-131 |
| **13.** | மதச்சீர்திருத்தத்தில் மாட்டின்லூதர். | 132-140 |
| **14.** | ஒட்டி சுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயம். | 141- 143 |
| **15.** | பிரான்சிய வரலாற்றில் 14ஆம் லூயி. | 144-153 |
| **16.** | சத்தியாக்கிரகப்போராட்டம் பற்றிய எண்ணக்கருவுக்கு காந்தீயம் வழங்கிய பங்களிப்பு. | 154-164 |
| **17.** | ருஷ்யாவின் எழுச்சியில் மகாபீட்டர். | 165-170 |
| **18.** | ஒரு கிராமத்து இதயம். | 171 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுக்கழக அங்கத்தவர்கள் 2002/2003



**இருப்பவர்கள் (இடமிருந்து வலம்)**

செல்வி சு.தயாபரி (செயலாளர்), திருமதி சோ.கிருஷ்ணகுமார் (சிரேஷ்ட விரிவுரையாளர்), பேராசிரியர் ச. சத்தியசீலன் (கழகக்காப்பாளர்), வரலாற்றுத்துறை பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் (பீடாதிபதி உயர்பட்டப்படிப்புக்கள் பீடம்), செல்வன் மா.பத்மராஜ் (தலைவர்), பேராசிரியர் சு.மோகனதாஸ் (துணைவேந்தர்), பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் (கலைப்பீடாதிபதி), கலாநிதி. ப.புஷ்பரட்ணம் (பெரும் பொருளாளர்), திரு.க.அருந்தவராஜா (விரிவுரையாளர்), செல்வன் கு.சுதாகரன் (உபதலைவர்)

**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)**

செல்வி ஜெ.பவித்திரா, செல்வி க.சிவப்பிரியா (இதழாசிரியர்கள்), செல்வி நி.யசோதரா, செல்வி.ந.குமுதா, செல்வி சி.காமினி, செல்வன் இ.சிறீதரன், செல்வன் யோ.தயாபரன், செல்வன் அ.டொன்பொஸ்கோ (உபசெயலாளர்), செல்வன் கே.பகீரதன் (பொருளாளர்) (கழகஉறுப்பினர்கள்)

**சமூகமளிக்காதவர்கள்:-** பேராசிரியர் செ.கிருஸ்ணராஜா, திருமதி சா.அருளானந்தம் (விரிவுரையாளர்), செல்வி கு.சசிதா (கழக உறுப்பினர்) செல்வன் சுரேஸ்குமார் (கழக உறுப்பினர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவேந்திரின் ஆசியுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒவ்வொரு துறைசார்ந்த மாணவர் அமைப்புக்களும் தமக்கென தனித்தனியாக கழகங்களை அமைத்து ஆண்டுதோறும் நூல்கள், சஞ்சிகைகள் வெளியிட்டு வருகின்றன. இவ்வகையில் மாணவ கழகங்களில் காலத்தால் முற்பட்ட கழகங்களுள் ஒன்றான வரலாற்றுக் கழகத்தினால் இம்முறையும் வெளிக்கொணரப்படும் "காலசுரபி இதழ் 4"க்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். குறிப்பாக வரலாற்றைச் சிறப்புப் பாடமாகக் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்கதாக இருந்தும் மாணவர்கள் தங்களது சுயமுயற்சியின் பயனாக நிதி சேகரித்து ஆண்டுதோறும் காலசுரபி இதழை வெளியிட்டு வருகின்றனர்.

இன்றைய இளம் சந்ததியினராகிய மாணவ சமுதாயம் வரலாறு பற்றிய பரந்த அறிவைக் கொண்டிருப்பது அவசியமானதாகும். எனவே மாணவர்கள் மத்தியில் சிந்திக்கும் ஆற்றல் வளர வேண்டும், வளர்க்கப்பட வேண்டும். இவ்வகையில் மாணவர்கள் தமது சுயமுயற்சியினால் எழுதப்படும் கட்டுரைகள், ஆக்கங்கள் அவர்கள் மத்தியில் எழுத்தாற்றலை வளர்ப்பதோடு மட்டுமல்லாது திறமைகளை வெளிக்கொணர்வதற்கும் பெரிதும் உதவுகின்றது.

சிறந்த ஆக்கங்கள் கட்டுரைகளைத் தாங்கி ஆண்டுதோறும் இச்சஞ்சிகை புதுப்பொலிவுடன் வெளிவர வேண்டுமென இறைவனை பிரார்த்திப்பதோடு இம்முயற்சியில் பங்குகொண்ட ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர் சு. மோகனதாஸ்
துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பீடாதிபதியின்
# வாழ்த்துச்செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் இயங்கும் வரலாற்றுக்கழகம் மாணவர்களது ஆக்கங்களையும், சிந்தனைகளையும் வெளிக்கொணரும் வகையில் "காலசுரபி" என்ற சஞ்சிகையின் நான்காவது இதழினை வெளியிடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைவதோடு இவ்வரிய முயற்சியில் தம்மை இணைத்துக் கொண்ட மாணவர்களுக்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இற்றைக் கால கட்டத்தில் தாம் வாழும் நாடு, சமூகம், சார்ந்துள்ள இனம் ஆகியவற்றின் வரலாறு பற்றி இளந்தலைமுறையினரும் ஏனையோரும் அறிந்திருக்கவேண்டியது இன்றியமையாத தேவையாகும். இத்தேவையை நிறைவுசெய்வதிலும் வரலாற்று உணர்வினை எம்மத்தியில் வளர்த்தெடுப்பதிலும் காலசுரபி என்னும் இச்சஞ்சிகை பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை. மேலும் வரலாற்றுப் பாடத்தை மாணவர்கள் விரும்பிக் கற்கவும் இம்முயற்சி வழிவகுக்கும் என நம்புகின்றேன். இச்சஞ்சிகை வரலாறு பற்றிய விடயங்களை அறிய விளையும் அனைவருக்கும் வரப்பிரசாதமாக அமையும் வகையில் புலமையாளர் களினதும் மாணவர்களினதும் ஆக்கங்களைக்கொண்டு விளங்குவதும் குறிப்பிடற்பாலது.

இச்சஞ்சிகை வெளியீட்டில் ஈடுபாட்டுடன் பங்குகொண்ட வரலாற்றுத் துறை சார்ந்த அனைவருக்கும் சிறப்பாக வரலாற்றுக் கழகத்தினர்க்கும் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**மேலும் இப்பணி தொடர எமது நல்லாசிகள்!**

**பேராசிரியர் கலாநிதி.ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
**கலைப்பீடாதிபதி,**
**யாழ். பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுத்துறைப் பேராசிரியரின் வாழ்த்துச்செய்தி

மனிதனுக்கும் சூழலுக்கும் இடையே ஏற்படும் உரையாடலே வரலாறாகும். இவ்வரலாற்றின் கதாநாயகன் மனிதன் தான். கால வெள்ளோட்டத்தில் எவ்வாறு பல்வேறு சவால்களைச் சமாளித்து நாடோடியாக, காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதன் நாகரிகம் படைத்தான் என்பதே வரலாற்றின் கருப்பொருளாகும். பல்வேறு சோதனைகள் மத்தியில் கட்டி வளர்க்கப்பட்ட இந்நாகரிகத்தின் விழுமியங்கள் இன்று உலகளாவப் பரந்துவிட, உலக நாகரிகத்தின் பங்காளிகளாக நாமும் ஆகிவிடுகின்றோம். இத்தகைய பின்னணியில் வெளியுலகத்தின் சிறப்பான அம்சங்களை நாம் பகிர்ந்து கொள்ளும் போது நாம் எதிர் நோக்கும் சிக்கல்களுக்கும் பரிகாரம் தேடுவதும் நமது தலையான வரலாற்றுக் கடமையாகிறது.

துரதிஷ்டவசமாக இன்று நமது நாட்டை எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை தேசிய இனப் பிரச்சினையாகும். இது இவ்வாறு விசுபரூபமெடுத்து வளரவைத்தமைக்கான பிரதான காரணம் பிறநாடுகளில் எவ்வாறு இதே போன்ற பிரச்சினை எழுந்த போது பல்வேறு இனங்கள் சுமூகமாக வாழ்வதற்கான வழிவகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. எவ்வாறு அவை அமுல் செய்யப்பட்டன போன்ற வரலாற்று அனுபவங்களை நாம் உள்வாங்கிப் பகிர்ந்து கொள்ளாததேயாகும். இன்றைய நாகரிக வளர்ச்சியில் அறிவுசால் பகிர்தல் பிரதான சக்தியாக விளங்குவதோடு பல்வேறு வழிகளில் பிரச்சினைகளைச் சுமூகமாகத் தீர்க்கவும் இது உதவுகின்றது என்பதை நாம் மறந்ததேயாகும்.

இதனால் இன்று நம் நாட்டு வரலாற்றையும் பிற நாடுகளின் வரலாற்றையும் ஊன்றிக் கற்கவேண்டியது காலத்தின் தேவையாகிறது. ஈழத்தின் வரலாறானது சிங்கள மக்களின் வரலாறே என்ற மாயையில், இந்நாட்டினதும் சகல மக்களினதும் தலைவிதியை நிர்ணயிக்கும் ஏகபோக உரிமை பெரும்பான்மைச் சமூகத்திற்கே உண்டு என்ற நினைப்பு இன்று முனைப்புப் பெற்றுள்ளது. அண்மைக்கால ஆய்வுகள் வரலாற்றுக்காலந் தொடக்கம் நமது நாடு பல்தேசிய இனங்களின் வரலாற்றையுடைய நாடாக விளங்கியது மட்டுமன்றி, ஒற்றை ஆட்சி மரபின்றிப் பிராந்திய அரசுகளின் வரலாற்றையும் படைத்த நாடாக விளங்கியதையும் உணர்த்தியுள்ளன. இதனால் இன்றைய தேசிய இனப்பிரச்சினையின் தீர்வில் நமது நாட்டின் நாகரிக வளர்ச்சி, அரச உருவாக்கம் பற்றிய தெளிவான சிந்தனை பற்றிய அறிவு அவசியமாகின்றது. இதனை உணர்ந்து நமது மாணவச் செல்வங்கள் அக்கறையுடன் வரலாற்றைக் கற்றல் வேண்டும். இதன் மூலம் நமது சமூகத்தை வரலாற்றுணர்வு பெற்ற விழிப்புணர்வுடைய சமூகமாகத் திகழ வைப்பதும் இவர்களது தலையாய கடமையாகிறது.

பல்வேறு சிரமங்கள் மத்தியில், வரலாற்றுத்துறையின் நாடித்துடிப்பாக விளங்கும் காலசுரபியை மலரச் செய்த சகலரது முயற்சியையும் பாராட்டி வாழ்த்துகின்றேன். தொடர்ந்தும் இவர்கள் தமது பணிகளைத் தொடர எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரன் அருள் பாலிப்பாராக.

**பேராசிரியர் சி. க. சிற்றம்பலம்**
**வரலாற்றுத் துறை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுத் துறைத் தலைவரின் வாழ்த்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவக் கழகங்களுள் காலத்தால் முற்பட்ட கழகங்களுள் ஒன்றாக வரலாற்றுக் கழகம் விளங்குகின்றது. 1976 ஆம் ஆண்டு அப்போதைய வரலாற்றுத்துறைத்தலைவர் பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக்கழகம் அன்றிலிருந்து இன்றுவரை வரலாற்றுக் கல்வியை வளர்க்கும் பயனுள்ள பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

வரலாற்றுக் கழகத்திற்கான மலர் ஒன்றினை வெளியிடும் விருப்பம் நீண்ட காலமாகவே இருந்து வந்தது. பலமுறை முயன்றும் ஆளணிப்பற்றாக்குறை, நிதிநிலைமை காரணமாக அம்முயற்சி வெற்றிபெறவில்லை. ஆனால் 1998 இல் வரலாற்றுத் துறைத்தலைவராக இருந்தபோது அவ்விருப்பம் நிறைவேறக் காலம் கனிந்து "காலசுரபி" என்ற பெயரில் மலர் ஒன்று வெளியிடப்பட்டது. தொடர்ந்து "காலசுரபி 2", "காலசுரபி 3" என மலர்கள் வெளிவந்தன. 2003 இன் வரலாற்றுக் கழக அங்கத்தவரும், சளைக்காது "காலசுரபி 4" எனும் மலரினை உருவாக்கியுள்ளனர். பல தடங்கல்கள் ஏற்பட்டபோதும் இவர்கள் அனைவரினதும் சளையாத உழைப்பினால் இம்மலர் வெளிவந்துள்ளது.

வரலாற்றுக்கல்வியின் முக்கியத்துவம் மீளவும் உணரப்பட்டு பாடத்திட்டங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில் இம்மலர் வெளிவருகின்றது. பெருமளவில் மாணவர் ஆக்கங்களை தாங்கி வர வேண்டுமென்ற பெருவிருப்பையும், கா. பொ. த உயர்தர வகுப்புக்களிலும், பட்டதாரி வகுப்புக்களிலும் வரலாற்றுக்கல்வி வளரவேண்டுமென்ற நோக்கையும் கொண்டதாக மலர் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பெரு முயற்சியை மேற்கொண்ட வரலாற்றுக்கழக தலைவர் உட்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள், மற்றும் அங்கத்தவர்களுக்கும், வரலாற்றுத்துறை விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் "காலசுரபி" வெளிவரவேண்டுமென்று இறைவனடி வேண்டி மனதார வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் கலாநிதி ச. சத்தியசீலன்**
**கழகக்காப்பாளரும், வரலாற்றுத்துறைத் தலைவரும்,**
**யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்ஜென்மம் எடுத்திருக்கும் காலசுரபி

1974இல் இப்பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகமாகத் தோற்றம் பெற்ற போது அப்போதிருந்த மனிதப்பண்பியல் பீடத்தில் ஆரம்பிக்கப்பட்ட முக்கிய துறைகளில் வரலாறும் ஒன்றாகும். அத்துறை பாட போதனைக்கு அப்பால் ஆற்றிய பலதரப்பட்ட பங்களிப்புக்கள் ஏனைய துறைகளுக்கு முன்மாதிரியாகவும், வழிகாட்டியாகவும் இருந்து வந்ததை யாரும் இலகுவில் மறைத்துவிட முடியாது. அதன் வழிகாட்டலில் தோன்றியதே வரலாற்றுக் கழகமும், காலசுரபி என்ற சஞ்சிகையின் வெளியீடும் ஆகும். இச்சஞ்சிகையின் வெளியீடு என்பது சமகால அனர்த்தங்களுக்கு ஏற்ப கடந்த காலங்களில் பல ஏற்ற இறக்கம் கொண்டதாக இருந்து வந்த போதும் அது 1997இல் இருந்து மீண்டும் புனர்ஜென்மம் எடுத்திருப்பது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியாகும்.

பல்கலைக்கழக மாணவ கழகங்களின் வளர்ச்சியும், அதன் செயற்பாடும் மாணவர்களின் எண்ணிக்கையால் மட்டும் தீர்மானிக்கப் படுவதில்லை. அது மாணவ, ஆசிரியர்களுக்கிடையேயுள்ள நல்லுறவாலும், புரிந்துணர்வாலும் தீர்மானிக்கப்படுகிறது. இதற்கு உதாரணமாக கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களால் கடந்த காலங்களில் வெளியிடப்பட்டு வந்த இளங்கதிர், சிந்தனை போன்ற சஞ்சிகைகளைக் குறிப்பிடலாம். அதை மீண்டும் நினைவுபடுத்துவதாகவே எமது வரலாற்றுக் கழகத்தால் வெளியிடப்படும் இக்காலசுரபி என்ற சஞ்சிகையும் விளங்குகிறது. இச்சஞ்சிகையில் பெருமளவுக்கு மாணவர்களின் ஆக்கங்கள் இடம்பெற்றிருப்பது முன்னைய கால அனுபவங்களுக்கு முற்றிலும் வேறுபட்ட நல்ல நிகழ்வாகும். இதன் மூலம் மாணவர்கள் தம் பாட நெறிகளுக்கு அப்பால், பல்வேறு துறைகளில் உள்ள ஈடுபாட்டையும், ஆளுமையை வெளிப்படுத்தும் வாய்ப்பையும் தேடியுள்ளனர். இதில் இடம் பெற்றுள்ள வரலாறு சார்ந்த கட்டுரைகள் அதிலும் குறிப்பாக ஈழத்தமிழர் வரலாறு சார்ந்த கட்டுரைகள் கடந்த காலங்களில் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் போதிக்கப்பட்ட பாட நெறியின் பிரதியாக மட்டும் அமையாது, அண்மைக் காலத்தொல்லியற் கண்டுபிடிப்புக்களையும் உள்ளடக்கியதாக இடம்பெற்றிருப்பது ஈழத் தமிழர் வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வுக்கு நல்ல சகுனமாகும்.

குறைந்த மாணவ எண்ணிக்கையையுடைய வரலாற்றுக் கழகத்தால் இச்சஞ்சிகையை வெளிக்கொணர்வதற்கு கழகத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர், பதிப்பாசிரியர்கள், நிர்வாக உறுப்பினர்கள் எனப் பலரும் கடுமையாக உழைத்தமை பாராட்டத்தக்கது. அது வரலாற்றுக் கழத்தின் எதிர்கால உறுப்பினர்களுக்கு நல்ல வழிகாட்டியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அத்தகைய ஒரு கழகத்தின் சிரேஷ்ட பெரும்பொருளாளர் என்ற வட்டத்திற்குள் இருந்து கொண்டு எனது கருத்தையும் இவ்விடத்தில் பதிவு செய்து கொள்வதில் எல்லாருடன் சேர்ந்து நானும் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

**கலாநிதி ப. புஷ்பரட்ணம்**
**சிரேஷ்ட பெரும்பொருளாளர்**
**வரலாற்றுக் கழகம்**
**யாழ் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகத் தலைவரின் எண்ணத்திலிருந்து

வரலாற்றுக் கழகத்தின் மிக முக்கிய நோக்கங்களில் ஒன்றாக விளங்கும் காலசுரபி இதழ் வெளியீட்டு நிகழ்வானது எமது கழகத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இந்த இதழ் ஆண்டுதோறும் வெளியிடப்பட வேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்தாலும் பணம் பலம், ஆளணி வளம் என்பவற்றின் பற்றாக்குறை காரணமாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையே வெளிவந்துகொண்டிருக்கிறது.

அந்தவகையில் எமது கழகத்தின் சார்பாக இந்தமுறை இந்த காலசுரபி இதழ் 4 வெளியிட்டுவைக்கப்படுவது எமக்குக் கிடைத்த அளப்பரிய அதிஷ்டமாகவே கருதுகிறோம். இந்த இதழின் வெளியீடு என்பது பலரது அரிய, அயராத உழைப்பின் பயனாக வெளிவருகிறது. கழகத்தினதும் கழக அங்கத்தவர்களினதும் வியர்வைத்துளிகளின் நீரில் முளைத்த செடியாகவே இந்த இதழைக் குறிப்பிடமுடியும்.

இந்த இதழின் வெளியீட்டிற்கு மிக முக்கிய காரணகர்த்தாக்களாக விளங்கும் எமது வரலாற்றுத்துறையின் பேராசிரியர்கள், விரிவுரையாளர்களின் ஒத்துழைப்பு மகத்தானது. நாம் எடுக்கும் முடிவுகளைச் சரியாகத் திட்டமிட்டுச் செயற்படுத்தியவர்கள் அவர்களே. எமது துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி ப. புஷ்பரட்ணம் அவர்களின் உந்துதல் இந்த இதழ் மலர்வதற்கும், மணம்வீசுவதற்கும் காலாய் அமைந்தது.

குறுகிய காலப்பகுதியில் பல கருத்தரங்குகளையும் நூல் வெளியீடுகளையும், தொல்பொருள் மையங்களுக்கான கல்விச் சுற்றுலாக்களையும் மேற்கொண்டு பல அரிய கருமங்களை ஆற்றியுள்ளோம். இதனை மெருகூட்டும் வகையில் அடுத்துவரும் கழகத்தின் உறுப்பினர்களும் தமது கடமைகளை வீறுடன் புரிந்து எமது துறையையும் கழகத்தையும் மேலும் வேர்விட வைத்து விருட்சமாக்குவதுடன் தொல்லியல் பாட மாணவர்களையும் ஒன்றிணைத்துச் செயற்படவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம்.

*நன்றி*

**மா. பத்மராஜா**
**தலைவர்,**
**வரலாற்றுக்கழகம்,**
**யாழ் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியர்களின் இதயங்களிலிருந்து...........

1974 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட யாழ்ப்பாண வளாக காலத்திலிருந்து இன்றுவரை வரலாற்றுத் துறையுடன் இணைந்த வகையில் தோன்றி வளர்ச்சியடைந்து வரும் ஒரு கழகமாகவே எமது வரலாற்றுக் கழகத்தை இனங்காண முடிகின்றது. வரலாற்றுக்கழக அங்கத்தினரால் கடந்த சில ஆண்டுகளாக ''காலசுரபி'' என்ற மாணவரிதழ் வெளியீடு வெளியிடப்படுகின்றது. இவ் வரலாற்றிதழானது வரலாற்றுக் கல்வியைக் கற்கின்ற மாணவர்களது முன்னேற்றம், ஆளுமைவிருத்தி, வளர்ச்சிபோன்ற பல்துறை சார்ந்த அறிவைப் பெறுவதற்கு வழிகாட்டியாகவும், பலவகைகளிலும் மாணவர்களின் வளர்ச்சிக்கு துணைசெய்து கொடுக்கின்ற வகையிலும் வெளிவருகின்றது. மேலும் இவ்விதழானது பல்கலைக் கழகத்திற்கு வெளியே வரலாற்றினை ஒரு பாடமாக கற்கும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும், வெளி வாரி மாணவர்களுக்கும் பெரிதும் பயனுள்ள பல ஆக்கங்களை உள்வாங்கி வெளிவருவதையிட்டும் நாம் மகிழ்வடைபவராகின்றோம்.

வரலாற்றின் பல பரிணாமங்களை சுரந்து நிற்கும் "காலசுரபி" இதழ் - 4 வெளிவருவதையிட்டு நாம் மிக மகிழ்வடைகின்றோம். இவ் இதழில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்தும் வரலாற்றுத்துறையில் ஆர்வமுள்ளோருக்கும், ஏனையோருக்கும் பயன்தரும் என நம்புகின்றோம். இவ்விதழின் உருவாக்கத்திற்கு பல்வேறு வழிகளில் ஆக்கமும், ஊக்கமும் அளித்து ஒத்துழைப்புத்தந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்களுக்கும், இதனை வடிவமைப்பதற்கு எமக்கு ஆலோசனைகள் வழங்கிய துறைத்தலைவரும், கழகக்காப்பாளருமான பேராசிரியர் ச. சத்தியசீலன் அவர்களுக்கும், பெரும் பொருளாளர் கலாநிதி ப.புஷ்பரட்ணம் அவர்களுக்கும், நல்லூர் திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும், கழகத்தின் சார்பில் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் "காலசுரபி" என்ற வரலாற்றுக்கழக இதழ் எதிர்காலத்தில் தொடர்ந்து வெளிவந்து, பயன் பல தரவேண்டும் என வாழ்த்தி நிற்கின்றோம்.

*நன்றி*

**செல்வி ஜெ. பவித்திரா**
**செல்வி. க. சிவப்பிரியா**
**இதழாசிரியர்கள் காலசுரபி**
**வரலாற்றுக்கழகம்,**
**யாழ் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செயலாளரின் அறிக்கை

யாழ் பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தின் செயலாளர் என்ற வகையில் 2002 / 2003 ஆம் கல்வியாண்டிற்கான எமது கழகத்தின் செயற்பாடுகள், முயற்சிகள், வளர்ச்சிகள் பற்றி எழுதுவதில் மிக்கமகிழ்ச்சி யடைகிறேன்.

2002 / 2003 ஆம் கல்வியாண்டிற்கான வரலாற்றுக்கழகம் 10.01.2003 இலிருந்து இன்று வரை இயங்கி வருகின்றது. அன்றிலிருந்து கழகத்தின் செயற்பாடுகளை வரலாற்றுத்துறைத் தலைவர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆகியோர் முன்னின்று நடாத்திவருகின்றனர். அவ்வகையில் எமது கழகத்தின் ஏற்பாட்டில் ஜனவரி மாதம் 2003 இல் மாயக்கை தொல்லியல் ஆய்வுமையம், கந்தரோடை, வல்லிபுரம், நாகர் கோயில் போன்ற தொல்லியல் பிரதேசங்களுக்கும், பெப்ரவரி 2003ல் நெடுந்தீவிற்கும் வரலாற்றுத்துறையினரால் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து, எமது கழகம் 30.06.2003 அன்று அரசறிவியற்றுறை விரிவுரையாளர் திரு.கே.ரீ கணேசலிங்கம் அவர்கள் மூலம் பாலஸ்தீன விடுதலைப் போராட்டமும் புதிய சமாதான முயற்சியும்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை நிகழ்த்துவித்தது.

அடுத்து, ஏகநாயகி - சிவராஜசிங்கம் என்பவரால் எழுதப்பட்ட "ஈழ வரலாற்றுப்பதிவுகள்" என்ற நூலை 22.10.2003 அன்று எமது கழகம் வெளியிட்டு வைத்தது. தொடர்ந்து எமது இச்சஞ்சிகை வெளியீட்டுக்கான நிதியைச் சேகரிக்கும் பொருட்டு யாருடைய ஒத்துழைப்புடன் அச்சடித்து விற்பனைசெய்யப்பட்ட அதிஷ்டலாபச் சீட்டிழுப்பை 10.08.2003 அன்று நிகழ்த்தி, அதன் மூலம் குறிப்பிடத்தக்களவு நிதியினைப் பெற்று இச்சஞ்சியையைத் தற்போது முழுவடிவில் வெளிக்கொணர்ந்துள்ளது.

எனவே, இச் சஞ்சிகையை வெளியிடுவதற்கு எமக்கு நிதியுதவியை வழங்கியும், இன்னும் பல்வேறு வழிகளில் ஆக்கமும், பேருக்கமும் தந்தும் உதவிபுரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் வரலாற்றுக்கழகத்தின் செயலாளர் என்ற வகையில் நன்றியைத் தெரிவிப்பதுடன், தொடர்ந்தும் இத்தகைய சஞ்சிகைகளை எமது இளையதலைமுறையினர் வெளியிட வேண்டும் எனவாழ்த்தி, அதற்கு எல்லாம் வல்ல பரம் பொருளின் அருட்கடாட்சம் கிடைக்க வேண்டும் எனவும் பிரார்த்திக்கிறேன்.

செல்வி.சு.தயாபரி
செயலாளர்,
வரலாற்றுக்கழகம்,
யாழ் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழ்ப் பௌத்தம்

**செல்வி. ஜெ.பவித்திரா**
**இறுதிவருடம்**
**வரலாறு சிறப்புக்கலை.**

இலங்கை பிரதேச ரீதியில் தனிப்பட்ட நிலப்பரப்பைக் கொண்டிருந்தாலும், பண்பாட்டு வளர்ச்சியில் அது பாரதத்துடன், சிறப்பாகத் தென்னிந்தியாவுடன் பண்டைய காலந்தொட்டு நெருங்கிய தொடர்புகொண்டு வளர்ந்து வந்துள்ளது. ஆயினும் இலங்கையின் புராதன பண்பாட்டு வரலாற்றை ஆராய்ந்த பலரும் வட இந்தியத் தொடர்பிற்கு முக்கியத்துவம் கொடுத்ததுபோல், தென்னிந்தியத் தொடர்பை ஆராய்வதில் அதிக அக்கறை காட்டவில்லை. இதற்கு இலங்கையின் ஆதிகால வரலாற்றைக் கூறும் பாளி இலக்கியங்களில் தென்னிந்தியாவை பகைமை நாடாகவும், வடஇந்தியாவைப் பாரம்பரிய நட்புறவு கொண்ட பிரதேசமாகவும், கூறப்பட்டுள்ளமையே முக்கிய காரணமாகும். ஆயினும், அண்மைக்காலத்தில் தொல்லியல், மானிடவியல், சமூகவியல் போன்ற ஆய்வுகள் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் இருந்து இலங்கைக்கும் திராவிட மொழிபேசும் தென்னிந்தியப் பிரதேசங்களான இன்றைய தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் என்பவற்றிற்கும் இடையே நெருங்கிய கலாசாரத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன என்பதை நிருபித்துள்ளன. இவற்றின் ஓர் அம்சமாகவே இக்கட்டுரையில் "**இலங்கையில் தமிழ்ப் பௌத்தம்**" பற்றி ஆராயப்படுகின்றது.

பௌத்தமதம், கி.மு.6ஆம் நூற்றாண்டில் இலங்கையில் இருந்ததாகக் கூறப்பட்டாலும், கி.மு.3ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் அசோகனின் ஆட்சிக் காலத்திலே இலங்கைக்கு அரசியல் ரீதியாகக் கொண்டுவரப்பட்டமையைக் காணலாம். இவ்வாறு கொண்டுவரப்பட்ட பௌத்த மதமே இன்று இலங்கையில் பெரும்பான்மையினரின் மதமாகக் கொள்ளப்டுகின்றது. பண்டைய காலத்தில் இலங்கையில் சமண, ஆஜீவிக மதங்கள் பற்றிய சான்றுகள் காணப்பட்டாலும் அவைபிற்காலத்தில் முக்கியத்துவம் பெறவில்லை. இதனால் இலங்கைப் பண்பாட்டு வரலாற்றில் இந்து, பௌத்த மதங்கள் ஏற்படுத்தியது போன்ற தாக்கங்களை இம்மதங்கள் ஏற்படுத்தவில்லை என்றே கூறலாம். இவற்றுள் சமணமதம் தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்ததனால் அதன் தாக்கம் பௌத்தம் செல்வாக்குப் பெறமுன் இலங்கையிலும் ஓரளவு காணப்பட்து. இவ்வாறாக இலங்கை தென்னிந்தியாவிற்கு மிக அருகில் அமைந்திருப்பதனால் அங்கிருந்து இம்மதங்கள் காலத்திற்குக் காலம் இலங்கைமீது செல்வாக்குச் செலுத்தின. இவற்றை புலப்படுத்தும் சான்றுகளாக இலக்கியங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், கட்டிட சிற்பங்கள் என்பன காணப்படுகின்றன. இச்சான்றாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு பௌத்த மதத்தில் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இருந்து வந்த தொடர்புகளை நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இலங்கையில் பௌத்தமதம்:-

பாரம்பரியமான இலங்கைக்கும், தென்னிந்தியாவிற்கும் இடையிலான உறவுகளை நோக்கும் போது வட இந்தியாவில் ஆட்சிசெய்த மௌரியப் பேரரசின் பின்னர், இலங்கையில் பௌத்தமதம் வளர்ச்சிபெற அயலிலுள்ள தென்னிந்தியச் செல்வாக்கே பெருமளவு காரணமாக இருந்துள்ளது என்பதை பல சான்றுகள் ஊடாக கண்டுகொள்ளலாம். ஜேர்மன் நாட்டு அறிஞரான கெயின்ஸ் பேசேட்(Heinz Becherz) இலங்கை- தென்னிந்திய உறவு பற்றிக் கூறுகையில் "பௌத்த மதம் வடஇந்தியாவில் இருந்து வந்தது போன்று தென்னிந்தியாவில் இருந்தும் வந்தது. இன்று சிங்கள, தென்னிந்திய வழிபாட்டிடையே வேறுபாடுகள் காணப்பட்டாலும், ஆரம்ப காலத்தில் தென்னிந்தியாவின் தனித்துவமான செல்வாக்கு சிங்கள மக்களின் தெய்வ வழிபாட்டில் காணப்பட்டது" எனக் குறிப்பிட்டார் (Becherz Heinz 1979:23).

அசோகனின் ஆட்சிக் காலத்தில்தான் இலங்கைக்குப் பௌத்த தூதுக்குழுக்கள் அனுப்பட்டு இலங்கையில் பௌத்தமதம் பரப்பப்பட்டதையும் இதே மகாவம்சம் கூறுகின்றது. இதனை மேலும் உறுதிப்படுத்துவதாக அசோகனின் கல்வெட்டுக் குறிப்புகளும் அமைகின்றன எனலாம். இதன் பின்புலத்திலேதான் அசோகனின் மகன் மகிந்தனும், மகள் சங்கமித்தையும் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்கள் எனவும், பௌத்தமதம் இங்கு பரப்பப்பட்டதாகவும் மகாவம்சமூடாக அறியலாம் (M.V.X.III:15). இவ்வாறக அசோகனால் அனுப்பப்பட்ட தூதுக்குழுவே இலங்கையில் பௌத்தமதம் அரசியல் ரீதியில் பரவுவதற்குக் காரணமாக அமைந்தாலும் அம்மதம் நேரடியாக வடஇந்தியாவில் இருந்து பரவியதா? அல்லது அசோகனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தென்மாநிலங்களிலிருந்து பரவியதா? என்பதில் கருத்து முரண்பாட்டிற்கு இடமுண்டு. பாளி இலக்கியங்களைத் தவிர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய சான்றுகளை நோக்கும் போது ஏனைய பண்பாட்டுச் சக்திகளைப் போன்று பௌத்த மதமும், பௌத்தபண்பாடும் தென்னிந்தியத் தொடர்பால் பரவியது என்ற முடிவுக்கு வரமுடிகின்றது (புஷ்பரட்ணம் 1985:99). ஆகவே இலங்கையில் பௌத்த மதம் பரவுவதற்குத் தென்னிந்தியத் தொடர்புகள் எத்தகைய பங்களிப்புக்களைச் செய்துள்ளன என்பதனை ஆதாரங்களூடாக நோக்குவதன் மூலம் இலங்கையில் பௌத்தமதத்தின் பரம்பல் எவ்வாறு இருந்தது என்பதனை அறிந்து கொள்ளலாம்.

## தமிழகம்:-

தமிழ் நாட்டிலுள்ள காவிரிப்பூம்பட்டினம், காஞ்சி, புத்தமங்கலம், மதுரை, திருநெல்வேலி ஆகிய பௌத்த மையங்கள் இலங்கையில் பௌத்த மதம் பரவியதில் பெரிதும் பங்காற்றியுள்ளன. இலங்கைக்கு பௌத்தமதத்தை பரப்பச் சென்ற மகிந்ததேரர் காவிரிப்பூம்பட்டினத்தில் தங்கி ஏழு விகாரைகள் கட்டியதாக கூறப்படுகிறது. எனவே அசோகன் ஆட்சியில் பௌத்த மதம் தென்னிந்தியாவில் பரப்பப்பட்டதனால் இங்கிருந்து தமிழ்நாட்டின் கிழக்குக் கரையோரமாக, கடல்வழியாக இலங்கைக்கும் பரவியிருக்கலாம் என எண்ணவைக்கின்றது. இதனை மேலும் வலுப்படுத்துவதாக மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் காணப்படும் இந்திரரால் கட்டப்பட்ட இந்திர விகாரை பற்றிய குறிப்பும் (வேங்கடசாமி 1950:25) அண்மையில் காவிரிப்பூம்பட்டினத்தில் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தால் முந்திய பௌத்த தூபிகளின் அழிபாடுகளும் சான்றுகளாக அமைகின்றன எனலாம். ஏனெனில் இது மகிந்தன்கட்டிய விகாரையாகவும் இருக்கலாம் எனத் தொல்லியலாளர்கள் நம்புகின்றமை இங்கு சுட்டிக் காட்டத்தக்கதாகும் (மேற்படி:27,28).

பௌத்தமதம் இன்று இலங்கையில் பெரும்பான்மை மக்களால் பின்பற்றப்பட்டு வருவதால் பௌத்தம் மதம் சிங்களவருடையது என்ற தவறான கருத்துக் காணப்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டில் பௌத்தம் பெற்றிருந்த முக்கியத்துவத்தையும், இலங்கை மீதான அதன் செல்வாக்கினையும் பார்க்கும் போது முன்னொரு காலத்தில் கணிசமான அளவு தமிழர்களும் பௌத்தர்களாக இருந்தமை தெளிவாகின்றது. இலங்கைக்குப் பௌத்தமதம் அறிமுகமானதைத்தொடர்ந்து தமிழகத்திற்கும், இலங்கைக்குமிடையே பௌத்தமத உறவுகள் நிலவிவந்ததைப் பௌத்த சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. இலங்கையில் காணப்படும் காலத்தால் முந்திய பௌத்தமத குகை அமைப்புகளும், அதில் காணப்படும் ஒரிரு வசனங்களில் அமைந்த வரிவடிங்களும் தமிழ்நாடு தவிர, இலங்கையில் மட்டும் காணப்பட்டமை தமிழகத்திற்கும், இலங்கைக்குமிடையேயான பௌத்தமதத் தொடர்புகளை எடுத்துக் காட்டுகின்றன எனலாம். உதாரணமாக இலங்கையில் தேவநம்பியதீசன் காலத்தில் அமைச்சராக இருந்த அரிட்டன் பௌத்த தூதுக் குழுவிற்குத் தலைமைதாங்கிப் பாடலிபுரம் சென்று பிற்காலத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த பிக்குவாக மாறி பாண்டிநாட்டிற்குச் சென்றதாகக் கூறப்படுகின்றது. எனவே பாண்டி நாட்டில் "அரிட்டாபட்டி" என்னும் கிராமத்திலுள்ள கல்வெட்டுக்களுடன் கூடிய குகைகள் அரிட்டனின் ஞாபகர்த்தமாக அமைக்கப்பட்டிருக்கலாம் என மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் கருதுவது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும் (மேற்படி: 80,81).

இதேபோன்று வர்த்தகத் தொடர்புகளும் பௌத்தமதக் தொடர்புகளுக்குக் காரணமாக இருந்துள்ளன என்பதற்குச் சான்றுகள் பல கிடைத்துள்ளன. எடுத்துக்காட்டாக இலங்கையில் அனுராதபுரம், பெரிய புளியங்குளம், அம்பாறை போன்ற இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கி.மு3ஆம், 2ஆம் நூற்றாண்டுகளுக்குரிய கல்வெட்டுக்கள், தமிழ் வர்த்தகர்கள் பௌத்த சங்கத்திற்குக் கொடுத்த தானங்கள் பற்றிக் கூறுகின்றன (Paranavithana:1970:356-359). இவ்வாறே இலங்கையில் இருந்து தமிழ்நாடு சென்ற இலங்கை வர்த்தகர்கள் அங்குள்ள பௌத்த சங்கத்திற்கு ஆற்றிய கொடைகள் பற்றி பாண்டிநாட்டிலுள்ள முத்துப்பட்டி, திருப்பரங்குன்ற கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. மேலும் இவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகள் இலங்கைப் பாளி நூல்களிலும் காணப்படுகின்றன. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் புரட்சிகள், பஞ்சங்கள் போன்றன குறிப்பாக வட்டகாமினி காலத்தில் (கி.மு103) ஏற்பட்ட பஞ்சத்தினால் பௌத்த சங்கம் தனது ஆதரவை இழக்கச் சங்கத்தைச் சேர்ந்தோர் தமிழ்நாடு சென்று அங்குள்ள விகாரைகளில் தங்கித் திரும்பினர் என அறியமுடிகின்றது (இந்திரபாலா 1975:3). 'இவை தமிழகத்திற்கும், இலங்கைக்கும் இடையிலான பௌத்தமத உறவுகளைத் தெளிவாக விளக்குவனவாக உள்ளன. இத்தகைய பௌத்தமத தொடர்புகள் பிற்பட்ட காலங்களிலும் தொடர்ந்தன என்பதற்குச் சான்றுகள் பல கிடைத்துள்ளன.

## இலங்கையில் தமிழ்ப் பௌத்தமும், சான்றாதாரங்களும்:-

வரலாற்றுக்கு முற்பட்டகாலத்திலிருந்து இலங்கையின் பண்பாடு தென்னிந்தியாவின் தென்பகுதியுடன் குறிப்பாகத் தமிழ்நாட்டுடன் தொடர்புகொண்டு வளர்ந்ததை அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன. இத்தொடர்புகளைச் சங்ககால இலக்கியங்கள் மட்டுமன்றி, இங்கு கிடைத்த முதுமக்கட் தாழிகள், தமிழ்ப்பிராமி எழுத்துப்பொறித்த மட்பாண்டங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள் என்பனவும் உறுதிப்படுதுகின்றன. இலங்கையில் பௌத்தமதம் பரவியமைக்கு இந்தியாவின் ஏனைய பிராந்தியங்களைப் போல் தமிழ் நாட்டிலுள்ள காவிரிப்பூம்பட்டினம், காஞ்சி, புத்தமங்கலம், மதுரை, திருநெல்வேலி ஆகிய பௌத்த மையங்கள் பெரிதும் பங்காற்றியுள்ளன. அசோகன் காலத்தில் மகிந்தன் காவிரிப்பூம்பட்டினத்தில் தங்கி வந்தமையும் பௌத்த மதம் அறிமுகமாகிய காலந்தொட்டு தமிழக, இலங்கை பௌத்தமத உறவுகளைச் சாசனங்கள் உறுதிப்படுத்துவதையும், இலங்கையில் ஏற்பட்ட அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்பங்களின் காரணமாக இலங்கைப் பௌத்த குருமார்கள் தமிழ்நாடு சென்று பௌத்தத்தை வளர்த்தனர் என்பதை மேலே நோக்கியுள்ளோம்.

கி.பி2ஆம், 7ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் தமிழ்நாட்டில் பௌத்த மதத்தின் பொற்காலம் எனக்கூறின் அது தவறாகாது (புஷ்பரட்ணம் 1988,100) இதற்கு முற்பட்ட காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள காவிரிப்பூம்பட்டினம், காஞ்சி, புத்தமங்கலம், மதுரை, திருநெல்வெலி ஆகிய இடங்கள் பௌத்த மையங்களாக இருந்தன எனக் கூறப்பட்டாலும், கி.பி2ஆம் நூற்றாண்டில் இவ்விடங்களில் பௌத்தமதத்தின் தூய்மையான வளர்ச்சியைக் காணலாம். இக்காலத்தில் பிக்குகளும், பிக்குணிகளும் காஞ்சிபுரம், காவிரிப்பூம்பட்டினம் போன்ற பௌத்தமையங்களில் இருந்து பௌத்த பிரச்சாரங்களை இலங்கை உட்பட அயல் நாடுகளில் மேற்கொண்டனர் (மேற்படி). இவற்றைச் சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சமண நீலகேசி, இந்துமத தேவாரம், பெரியபுராணம், பாளி இலக்கிய உரைநூல்கள், மேல்நாட்டார் குறிப்புகள் முதலியனவும் உறுதி செய்கின்றன. இவற்றில் காவிரிப்பூம்பட்டினத்திற்கும், இலங்கைக்கும் இடையே இருந்த தொடர்புகள் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. சோழநாட்டின் பெயர்பெற்ற தலைநகராகிய இது பண்டையகாலத்தில் இலங்கையுடன் கொண்ட வர்த்தகத்தில் முக்கிய துறைமுகமாகவும் விளங்கியது. இதனைப் பாளி நூல்கள், கவீரப்பட்டினம் எனவும், ஜாதக்கதைகள், டமிழதேசம் எனவும் கூறுகின்றன (வேங்கடசாமி 1950:38,39)

இதனைத் தொடர்ந்து கி.பி 3ஆம் நூற்றாண்டிற்கும் 6 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதி இலங்கை - தமிழ்நாட்டு பௌத்தமத உறவில் முக்கிய காலப்பகுதியாகும். இதற்குக் கடல் சார்ந்த வர்த்தக எழுச்சியும், தமிழ்நாட்டை முன்பு ஆண்ட சேர, சோழ, பாண்டிய வம்சங்களுக்குப் பதிலாக பௌத்தத்திற்கு ஆதரவு கொடுத்த களப்பிர வம்சம் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டதும் முக்கிய காரணங்களாய் அமைந்தன. பாண்டிய மன்னனது செப்பேடு ஒன்று இவர்களைக் கெட்ட ஆட்சியாளர் எனக் கூறுவதிலிருந்து இவர்கள் பௌத்தமத வளர்ச்சிக்கு ஆதரவாக இருந்துள்ளனர் என்பது தெரிகின்றது. களப்பிர மன்னன் அச்சுவிதக் கந்தனும், கண்ணதாசர் போன்ற பிரபுகளும் கொடுத்த ஆதரவால் பௌத்தமும், பௌத்த இலக்கியமும் நன்கு வளர்ச்சியடைந்தன. இக்காலப் பகுதியிலேதான் இலங்கையிலும் பௌத்தமத வளர்ச்சியில் பல மாறுதல்கள் காணப்பட்டன. இதற்குத் தமிழ்நாடு பெரிதும் காரணமாக அமைந்தது எனலாம்.

இலங்கையில் மேகவர்ணன் (கோதாபாயன்) தனது ஆட்சிக் காலத்தின் போது (கி.பி 254-266) தேரவாத பௌத்தக் கொள்கைக்கு மாறானவர்களை அடக்கியதன் மூலம் மதத்தைப் புனிதப்படுத்தினான். அபயகிரி விகாரையிலிருந்து 60 மகாஜானப் பிக்குகளைக் கைதுசெய்து புத்தர் போதனைக்கு மாறானவர்களை மதப்பிரதிஷ்டை செய்து மறு கரைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தமிழ்நாட்டிற்கு) அனுப்பினான் (M.V.XXXVL:111,112) என மகாவம்சம் கூறுவது தமிழ்நாட்டில் பௌத்தம் பெற்றிருந்த செல்வாக்கைக் காட்டுகின்றது எனலாம். கி.பி5ஆம் நூற்றண்டிலிருந்து முக்கிய தேரவாத பௌத்தத் துறவிகள் தமிழ்நாட்டில் தோன்றினர். இவர்களில் புத்ததத்த (Buddhatta), புத்தகோஸ (Buddha ulosa) தர்மபால (Dharmapala), என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது சமய நடவடிக்கைகள் தமிழ் நாட்டை மட்டுமன்றி இலங்கையையும் பெரிதும் பாதித்தன. இதனால் இக்காலத்தில் தமிழ்ப் பௌத்தம் இலங்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது.

கி.பி 6ஆம், 7ஆம் நூற்றாண்டுகளிலிருந்து தமிழ்நாட்டின் சமய வரலாற்றில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. களப்பிரரைத்தொடர்ந்து பல்லவ வம்சம் ஆட்சியைக் கைப்பற்றிய போது சமண, பௌத்தமதங்களிற்கு எதிராக பக்தி இயக்கம் தோன்றியது. இதனால் பௌத்தம் அழியாவிட்டாலும் அதன் முக்கியத்துவம் குறையத்தொடங்கியது. ஆயினும் தொடக்க காலத்தில் பல்லவ மன்னர் சிலர் பௌத்தராக இருந்ததனால் காஞ்சியை மையயமாகக் கொண்டு இம்மதம் வளர்ச்சியடைந்தது. இதனால் காஞ்சிபுரம் பல மதங்களைக் கொண்ட தலைநகராக மாறியது. இந் நகரின் சிற்சில பாகங்கள் புத்தகாஞ்சி, ஜினகாஞ்சி, விஸ்ணுகாஞ்சி, சிவகாஞ்சி எனப் பெயர் பெறலாயின. இவ்விடத்தில் இருந்த பௌத்த விகாரைகள் பற்றியும், பௌத்தத்தின் சிறப்புப் பற்றியும் கூறும் சீன யாத்திரிகரான "யுவான்சுவாங்" யோக தத்துவத்தை நன்கு அறிந்திருந்த 300 ஈழநாட்டுப் பிக்குகளைத் தான் சந்தித்ததாகக் கூறுகின்றார்(புஷ்பரட்ணம் 1988:108).

இதனால் நாகபட்டினம், காவிரிப்பூம்பட்டினம் போல் காஞ்சிபுரமும் முக்கிய பௌத்த மையமாக எழுச்சியடைந்தது. இங்கிருந்து பிற பண்பாடுகள் இலங்கையில் பரவியது போன்று மகாஜானக் கருத்துக்களும் பரவின. அத்துடன் தமிழ் நாட்டில் பௌத்தத்திற்கு எதிராகதோன்றிய இயக்கத்தால் கூடியளவு பௌத்தர்கள் இலங்கைக்கு வந்தனர். அதே போல் தமிழ் நாட்டில் பௌத்தத்திற்கு ஏற்பட்ட ஆபத்தைக் கண்டு, அம்மதத்தைக் காக்க இலங்கைப் பௌத்த அறிஞர்களும் தமிழ் நாடு சென்றனர்.இதற்கு ஆதரவாக தமிழ்நாட்டில் இலங்கைப்பிக்குகளுக்கும், சைவர்களுக்கும் இடையில் வாதங்கள் நடைபெற்றிருக்க வேண்டும்.திருவாதவூரர் புரணம், பெரியபுராணம், குருபரம்பரை, திருமலை ஆகிய நூல்களில் இந்தவாதங்கள் பற்றி கதைகள் உண்டு (வேங்கடசாமி 1950:53). இதனால் மாணிக்கவாசகருக்கும் இலங்கைப் பிக்குவிற்கும் இடையே நடந்த விவாதம் உண்மையாக இருக்கலாம்.

பல்லவரைத் தொடர்ந்து சோழர் காலத்தில் பௌத்தமதம் தமிழ்நாட்டில் அதிகம் வளரவில்லை. இக்காலத்தில் ஏற்பட்ட இந்துமத மறுமலர்ச்சி காரணமாகச் சமணத்தை விட பௌத்தம் வீழ்ச்சியடைந்தது. ஆயினும் முற்றாக மறையவில்லை என்பதை சோழர்கால கல்வெட்டுக்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களும் உறுதிப்படுத்துகின்றன. 11ஆம் நூற்றாண்டிலிருந்து சோழரின் ஆதிக்கம் இலங்கையில் ஏற்பட்டதனால் பௌத்தமதத் தொடர்புகளும் ஏற்பட்டன. திருக்கோணமலை மாவட்டத்தில் மட்டும்25 தமிழ்க் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன (வேலுப்பிள்ளை 1971:339). இவற்றில்16 கல்வெட்டுகள் பௌத்தமதத் தொடர்புடையவை. இது ஒன்றே சோழர் காலத்தில் பௌத்தமதத் தொடர்பு காணப்பட்டதற்குச் சிறந்த சான்றாகும். இது இலங்கையில் வாழ்ந்த தமிழர்களும் பௌத்த மதத்தைப்பின்பற்ற ஒரு காரணமாக இருந்தது. இதை உறுதிப்படுத்துவதில் பெருங்கற்கால மட்பாண்டச் சாசனங்கள், கல்வெட்டுகள், பாளி இலக்கியங்களில் வரும் செய்திகள் சான்றுகளாக அமைகின்றன.

## பெருங்கற்கால மட்பாண்ட சாசனங்கள்:-

இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் குறிப்பாகத் தமிழகத்திலும் நாகரீக வரலாறு திராவிடமக்களுக்குரிய பெருங்கற்கால மக்களுடன் தோன்றுவதை அண்மைக்காலச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. தென்னிந்தியாவில் கி.மு1000 ஆண்டளவில் தோன்றிய இப்பண்பாடு, இலங்கையில் கி.மு700 அளவில் அங்கிருந்து பரவியிருக்கலாம் என்பது இது சம்பந்தமான ஆய்வை நடாத்திய பேராசிரியர் சிற்றம்பலத்தின் கருத்தாகும் (சிற்றம்பலம் 1983:57). இப்பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தான் மக்கள் நீர்ப்பாசனம், மந்தைவளர்ப்பு, விவசாயம், இரும்பின் உபயோகம், கறுப்பு சிவப்பு மடபாண்டங்களின் உபயோகம், குறிப்பிட்ட சவஅடக்க முறைகள் என்பவற்றைப் பின்பற்றிய நாகரிக வாழ்க்கை முறையை அறிந்திருந்தனர் என்பது புலனாகின்றது. இந்தப் பெருங்கற்காலப் பாண்பாட்டு மக்களிடையே இந்து மதத்திற்குரிய வழிபாட்டு மரபுகளும் இருந்தன என்பதற்கு பல வகையான சுடுமண் அமைப்புக்கள், சிற்பங்கள், சிலைகள், குறியீடுகள் போன்றன சான்றுகளாய் உள்ளன. ஆனால் இப்பண்பாட்டு மக்கள்தான் காலப்போக்கில் பௌத்தமதம் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் பரவியபோது பௌத்தமதத்தைத் தழுவினர் என்பதை இப்பண்பாட்டு மையங்களுடன் தொடர்புடைய மேற்படைகள் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டு வழிவந்த மக்கள் தமிழ்மொழி பேசுபவர்களாக இருந்தனர். என்பதைக் கொடுமணல், அழகன்குளம், விழுப்புரம், காவிரிப்பூம்பட்டினம், அரிக்கமேடு போன்ற இடங்களில் கிடைத்துள்ள எழுத்துப்பொறித்த மட்பாண்டங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவை தமிழ்மொழிக்கேயுரிய இ (%), ற ([illegible], ன ([illegible], ள ([illegible]), ழ ([illegible]), ம ([illegible]) போன்ற எழுத்துக்களைக் கொண்டதால் இவற்றை தமிழி அல்லது தமிழ்ப்பிராமி என அழைத்தனர் (புஷ்பரட்ணம் 1988:10). இவ்வாறான மட்பாண்டச் சாதனங்கள் தமிழகத்தை அடுத்து இலங்கையில் அநுராதபுரம், பூநகரி, ஆனைக்கோட்டை, கந்தரோடை போன்ற இடங்களில் கிடைத்துள்ளன. இந்த ஒற்றுமை தமிழகத்தைப் போன்று ஈழத்திலும் பெருங்கற்காலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டு வழிவந்த தமிழ்மக்களின் ஒரு பிரிவினர் பௌத்தமதத்தைப் பின்பற்றி இருக்கலாம் என்பதற்குச் சான்றாகும்.

## கல்வெட்டுக்கள்:-

இலங்கையில் பௌத்த மதம் தொடர்பான நம்பகமான சான்றுகளாக பிராமிக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இற்றைக்கு 2000 பிராமிக்கல்வெட்டுக்கள் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வளவு எண்ணிக்கையுடைய கல்வெட்டுக்கள் இலங்கையைத்தவிர தென்னாசியாவில் வேறெங்கும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். கல்வெட்டுக்கள் பாளி இலக்கியங்களைப் போன்று தொடர்ச்சியான இலங்கை வரலாற்றைக் கூறாவிடினும், குறிப்பிட்ட வரலாற்றுச் சம்பவம் இடம்பெற்ற காலத்தில் எழுதப்பட்டனவாகையால் நம்பகத்தன்மை வாய்ந்ததாகவும், உள்ளதை உள்ளபடியே கூறுவனவாகவும் உள்ளன. கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ள எழுத்து, மொழி, மதம், சமூகம், சாதிப்பிரிவுகள், ஊர்பெயர்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராயும்போது கல்வெட்டுக்களில் பௌத்தமதம் பற்றியும், பௌத்த சங்கக் குருமார்களிற்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றியும் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

கி.மு 3ஆம் நூற்றாண்டில் இருந்து புழக்கத்திற்கு வந்ததாகக் கருதப்படும் இலங்கைப் பிராமி கல்வெட்டுக்கள் சங்க இலக்கியங்களோடும், தமிழகப் பிராமிக் கல்வெட்டுகளோடும் தொடர்புபடுத்தக்கூடிய ஆய், வேள்,பருமக (பெருமகன்), பருமகள் (பெருமகள்), மருமகன், சலஹ (சகலன்), பரத (பரதவர், பரவர்), உதி,உதிய (உதியன்), குடி போன்ற சமூகம், வம்சம், பட்டம், தனிநபர் சார்ந்த பெயர்களும் சிறந்தஎடுத்துக்காட்டுகளாகும். இப் பெயர்களிற் பல பிராகிருதமயப்படுத்தப்பட்ட தமிழ்ப் பெயர்களாக உள்ளன. (மேற்படி:13) இதற்குப் பௌத்த மதத்திற்கு மாறிய, ஆதரவு கொடுத்த தமிழர்கள் அம்மத மொழியான பிராகிருதத்தைக் கல்வெட்டு மொழியாகப் பயன்படுத்தியது காரணமாகும். இதற்கு தமிழநாட்டிலும் இலங்கையிலும் கிடைத்த பிராமிக் கல்வெட்டுக்கள், மட்பாண்ட எழுத்துக்கள் என்பவற்றிலுள்ள தமிழ், மற்றும் பிராகிருத, தமிழ் மயப்படுத்தப்பட்ட பெயர்களிற்கிடையிலான ஒற்றுமை சிறந்த எடுத்துக்காட்டாகும் (மேற்படி). எனவே தமிழர்களும் பௌத்த மதத்திற்குத் தொண்டாற்றியுள்ளனர் என்பது மிகத்தெளிவே எனலாம்.

அம்பாறை மாவட்டத்தில் குடுவில் என்ற இடத்தில் கிடைத்த கி.மு. 2ஆம் நூற்றாண்டிற்குரிய கல்வெட்டு ஒன்று தீகவாபி என்ற இடத்தில் வாழ்ந்த திஸய என்ற தமிழ் வணிகன் பௌத்த சங்கத்திற்கு அளித்த தானம் பற்றிக்கூறுகின்றது (Paranavithana 1970: 480). இது தமிழ் வணிகர்கள் தமது வணிகத் தந்திரமாகக் கூட பௌத்தத்தைப் பின்பற்றியிருக்கின்றார்கள் என எண்ணவைக்கின்றது. அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த மகாவம்சம் கூறும் முதல் தமிழ் மன்னர்களாக அடையாளம் காணப்படும் சேன, குத்தக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்கள் தமிழகத்தில் சங்ககாலத்தில் புழக்கத்தில் இருந்தமைக்குச் சான்றுகள் இல்லாவிடினும், இலங்கையில் கி.மு 3-2 ஆம் நூற்றாண்டிற்குரிய கல்வெட்டுக்களில் வரும் சேன (Ibid:64,246,609),குத்தக (Ibid:43,143,177,617,649,828,842) பெயர்கள் தமிழ்மன்னர்களின் ஆட்சியில் இருந்தது என்பதைக் காட்டுகின்றது.

இலங்கையில் செருவல என்ற இடத்தில் கிடைத்த கி.மு 2ஆம் நூற்றாண்டிற்குரிய கல்வெட்டில் சுட என்ற பெயரில் உள்ள தமிழன் பௌத்த மதத்திற்குத் தானம் அளித்ததாகக் கூறுகின்றது (seneviratne 1985: 52). மேலும் இதே காலகட்டத்திற்குரிய சில கல்வெட்டுக்களில் இச்சொல் ஆய், மாற போன்ற தமிழ்ப் பெயர்களுடன் வருகின்றது (Paranavithana 1970:968) எனவே தமிழர்கள் பௌத்தமதத்தை ஆதரித்துள்ளனர் எனக்கூறலாம். இலங்கையில் வசித்த தமழ் வியாபாரத் தலைவர்களினால் பௌத்த பிக்குமார்களுக்கு வழங்கப்பட்ட குகைகளில் பிராகிருத எழுத்துக்களில் எழுதப்பட்ட மூன்று கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டன. இதில் இராண்டாம் நூற்றாண்டுக்கு உரியது எனக் கொள்ளப்படுகின்ற சாசனம் ஒன்று அனுராதபுரத்திலிருந்து கண்டெடுக்கப் பட்டுள்ளது. அதில் தமிழ் வர்த்தகர் ஒருவரைக் கொண்ட தமிழ் வகுப்பினர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைவிட ஏனைய இரு கல்வெட்டுக்கள் வவுனியா மாவட்டத்தில் பெரிய புளியங்குளத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட்டன (லயன் 2000:37). இவற்றில் ஒன்றில் தமிழ் வர்த்தகர் ஒருவரான இல்லத்தலைவன் விசாகன் என்பவரால் சீரமைக்கப்பட்ட குகை எனவும், மற்றையதில் தமிழ்க் குடும்பத் தலைவனான விசாகன் என்பவனால் கட்டப்பட்ட மாடிப்படிகள் எனவும் தற்கால மொழியில் பொருள்படுகின்றன. இதிலிருந்து தமிழ் மக்களின்தலைவராக விசாகன் என்பவர் இருந்துள்ளார் என்பது தெளிவாகின்றது. இக்குகைகள் சீராக்கப்பட்டு, பௌத்த பிக்குமார்களுக்கு வழங்கப்பட்டுள்ளன (மேற்படி 37). எனவே இது தமிழர்களும் பௌத்தத்ததை ஆதரித்துத் தமிழ் பௌத்தம் பேணப்பட்டு வந்துள்ளது என்பதையே காட்டுகின்றது எனலாம்.



கதிர்காம கிரிவிகாரையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் ஐந்தாவது தமிழ்மன்னனான தாதியன் பௌத்த விகாரை ஒன்றிற்கு வழங்கிய வந்த நன்கொடை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது (மேற்படி:15). இதிலிருந்து தமிழ் மன்னர்களுடைய ஆட்சி உருகுண வரை வியாபித்திருந்தமையும் தமிழர்களும் பௌத்தர்களாயிருந்தமையும் தெரியவருகின்றன. அடுத்துப் புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியரான சி.டபிள்யூ. நிக்கலஸ்அவர்கள், இரண்டு கல் வெட்டுக்களில் பாரிந்தன், இளைய பாரிந்தன் ஆகிய ஆட்சியாளர்கள் பௌத்தமத ஆச்சிரமங்களுக்கு வழங்கிய நன்கொடைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்கிறார். அறகமவிலுள்ள இக் கல்வெட்டுக்களில் ஒன்று பாரிந்தனாலும், மற்றயது இளய பாரிந்தனாலும் எழுதப்பட்டிருக்கிறது. இது தமிழ் மன்னர்கள் பௌத்தர்களாயிருந்தனர் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது (மேற்படி). இளைய பாரிந்தனின் அரசியாகிய சபா இராஜின் சுமார் பத்து ஏக்கர் வயல் நிலம் மற்றும், ஆடை அணிகலன்கள் உட்பட இன்னும் பெறுமதி வாய்ந்த பொருட்களையும் வழங்கியதாகக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் இளைய பாரிந்தனின் பெயர் லபரிதேவன் என்றும், மன்னனின் பெயருக்கு முன்னால் "புத்ததாஸ" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. "புத்ததாஸ" என்பது அரச குலப்பெயர் எனக் கூறப்படுகின்றது (மேற்படி). எனவேஇம்மன்னர்கள் பௌத்தத்தைப் பின்பற்றியிருக்காத விடத்து தமிழர்களாயிருந்த இவர்களுக்கு இப்பெயர்கள் சூட்டப்பட்டிருக்க நியாயமில்லை எனக்கூறலாம்.அனுராதபுரத்திலுள்ள குமாரகணத்துப்பேரூர்க் கல்வெட்டுக்கள் இரண்டு நகரத்தின் இந்து அழிபாடுகளிடையே கண்டுபிடிக்கப்பட்டன (இந்திரபால 1968:19). இதில் முதலாவது கல்வெட்டில் "ஸிரிசங்கபோதி மாராயனுடைய 5ஆவது ஆட்சியாண்டு மார்கழி மாதம் முன் ஐந்தாம் பக்கம் எனத்தரப்பட்டுள்ளது. இங்கு "ஸிரிஸங்கபோதி" எனத்தரப்பட்டுள்ளது மன்னனின் பெயரன்று அது மன்னனுடைய விருதுப்பெயர் மட்டுமே. பிற்பட்ட அனுராதபுர காலத்திலும் அதற்குப் பின்னரும் சிங்கள மன்னர்கள் "ஸிரிஸங்கபோதி", "அபைய ஸலாமேக" என்ற விருதுகளை அல்லது சிம்மாசனப் பெயர்களை மாறிமாறித் தரித்துக்கொண்டமை தெரியவருகின்றது (மேற்படி:19). இக்கல்வெட்டு 4ஆம் அக்ரபோதி காலமாக இருக்கலாம் எனவும் ஊகிக்கப்படுகின்றது. இக்கல்வெட்டுகளில் இரண்டாம் கல்வெட்டின் காலம் ஸிரிசங்கபோதி மாராயனுடைய 7ஆவது ஆட்சி ஆண்டு எனக் குறிப்பிடப்படுகின்றது. இதில் ஓர் குறிப்பிட்ட சமயத் தலத்திலே தினமும் ஒரு திருவமுதும், ஒரு நந்தா விளக்கும் வைப்பதற்குச் செய்யப்பட்ட ஒழுங்குகளைப் பதிவுசெய்துள்ளனர். ஆனால் சமயத்தின் பெயர் தரப்படவில்லை. குமாரகணம் என்பது இந்துக்கோயிலில்களின் பரிபாலனத்துக்குப் பொறுப்பாகக் கடமையாற்றிய ஓர் குழுவாகும். மேலும் திருவமுது வைக்கும் வழக்கம் பௌத்த கோயில்களில் இருந்ததாகக் கூறமுடியாது. இது இந்துக் கோயிலிலே காணப்பட்ட வழக்கமாகும். இக்காரணங்களால் இக்கல்வெட்டில் குறிக்கப்பட்ட ஒழுங்கு ஓர் இந்துக் கோயிலிலே செய்யப்பட்ட ஒழுங்குகள் என்று கொள்ளுதல் பொருத்தமாகும் (மேற்படி :21).எனவே அனுராதபுரத்தில் தமிழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியிருப்புக்களும் இருந்துள்ளன. ஆரம்ப காலங்களில் இவர்கள் குறிப்பிட்ட ஒரு மதத்தை பின்பற்றியிருக்கவில்லை எனக்கூறுவதன் மூலம் தமிழ்ப் பௌத்தம் இருந்துள்ளது என்பதை எடுத்துக்காட்டலாம் எனின் தவறாகாது.

## பாளி இலக்கியங்கள்:-

பாளி இலக்கியங்கள் இலங்கை வரலாற்றை முதன்மைப் படுத்திக் கூறுவதற்காகவே எழுதப்பட்டன எனலாம். புத்தருக்குப் பின் பௌத்த மதம் தளைத்தோங்கும் புனித பூமியாக இலங்கையைக் காட்டவேண்டும் என்ற நோக்கிலேயே பாளி இலக்கியங்கள் எழுச்சிபெற்றதைக் காணலாம். இவை இலங்கையை ஆட்சிபுரிபவர்கள் எவ்வினத்தினராக இருப்பினும் பௌத்தனாக இருக்க வேண்டும் என்பதையே முதன்மைப் படுத்திக் கூறுகின்றன. எனவே பௌத்தத்தை குறிப்பிட்ட இனத்திற்கு உரியதாகக் கூறவில்லை என்பதில் ஐயமில்லை. பாளி இலக்கியங்கள் தமிழர்களை எதிரிகளாகச் சுட்டிக்காட்டினாலும் பௌத்தமத செல்வாக்கை கூறவேண்டி இருப்பதனால் தமிழ்நாட்டவருக்கும், தமிழர்களுக்கும் இடையிலான பௌத்தமதத் தொடர்பை மறைக்க முடியாது சுட்டிக்காட்டவேண்டிய தேவை ஏற்படுவதைக் காணலாம். தீபவம்சம் பௌத்தமத வருகைபற்றி குறிப்பிடுகையில் இனவாரியாக எதுவும குறிப்பிடாதமை இலங்கையில் ஆதிதிராவிடக் குடிகளும் பௌத்தத்தை தளுவியுள்ளார்கள் என்பதைக் காட்டுகின்றது.

அனுராதபுரத்தில் சூரதிஸ்ஸ மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் சேன (sena), குத்தக (Guttaka) என்போர் மன்னனை பெரும் படையுடன் வந்து வெற்றிகொண்டு 22 வருடங்கள் (கி.மு 177-155) நீதிதவறாது ஆட்சி செய்தனர் என்று பாளி இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் கூறுகின்றது (M.V.XXI:10-11). இவர்கள் குதிரை வர்த்தகம் செய்பவனின் பிள்ளைகள் எனப் பாளி நூல்கள் கூறுவதால் இவர்கள் அரச சார்பின்றிப் படையெடுத்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. எது எவ்வாறாயினும் தமிழர்களது ஆட்சியிருந்துள்ளது என்பது மறுக்கமுடியாததே. எனவே பாளி இலக்கியங்கள் இலங்கையை ஆட்சி புரிபவர்கள் பௌத்தமதத்தை பின்பற்றியவர்களாக இருக்கவேண்டும் எனக் குறிப்பிடும் போது இவர்கள் தமிழர்களாய் இருந்தும் பௌத்தத்தை பின்பற்றியிருக்கலாம் என எண்ண வைக்கின்றது.

அடுத்து சோழ உயர்குடியில் பிறந்த எல்லாளன் (Elara-எல்லாற) என்ற தமிழன் ஆட்சியிலிருந்த அசேல மன்னனை வெற்றிகொண்டு 44 ஆண்டுகள் (கி.மு. 145-101) தொடர்ச்சியாக ஆட்சிபுரிந்தான். இலங்கை அரசியல் வரலாற்றில் நீண்டகாலம் ஆட்சிபுரிந்த முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னன் என்ற பெருமை இவனுக்குரியது. இவன் தனது ஆட்சியில் பௌத்த மதத்திற்கு ஆதரவு கொடுத்த போதிலும் பழைய மத நம்பிக்கையைக் கைவிடவில்லை என மகாவம்சம் கூறுகின்றது (M.V.XXI:34). இங்கு பழைய மதநம்பிக்கைகள் என மகாவம்சம் கூறுவது இந்து மதமே என எண்ணத் தோன்றுகின்றது. இருப்பினும் தமிழ் மன்னனாயிருந்தும் எல்லாளன் பௌத்தமதத்தை ஆதரித்தான் என்பது மறுப்பதற்கில்லை.

வட்டகாமினியின் ஆட்சிக்காலத்தில் (கி.மு 107) ஏழு தமிழர்கள் படையெடுத்து மாதோட்டத்தில் வந்திறங்கினர். வட்டகாமினி, திஸ்ஸ என்ற பிராமணனின் உதவியுடன் தமிழர்களுக்கு எதிராகப்போராடினான் எனவும் மகாவம்சம் கூறுகின்றது (M.V.XXXIII:37-41). படையெடுத்து வந்தவர்களில் ஒருவன் வட்டகாமினியின் மனைவியுடனும், இன்னொருவன் புத்தரது பிச்சாபாத்திரத்துடனும் மறுகரைக்குச் திரும்பிச் சென்றனர். ஏனைய ஐந்து தமிழர்களான புலகத்தா, பாகியா, பணையமாற, பிளையமாற தாடிக போன்றோர் மாறிமாறி பதினேழு வருடம் ஏழு மாதங்கள் (கி.மு.102-87) ஆட்சிபுரந்தனர் (M,V,XXXIII:55-61).

இவர்களைத் தொடர்ந்து வந்த மாகதிஸ்ஸன் ஆட்சியில் பல குழப்பங்கள் ஏற்பட்டமையால் இவன் மனைவி அனுலாதேவி வடுக (Vatuka) என்ற தமிழனை அரசனாக்கியதாகவும் (கி.மு.47) பின் இவனைக் கொன்றுவிட்டு நீலிய (Niliya) என்றதமிழனை அரசனாக்கினாள் (கி.மு 47) எனக் கூறப்படுகின்றது. இவையாவும் தமிழர் ஆட்சியை எடுத்துக்காட்டும், அதேவேளை இவர்கள் பௌத்தமதத்தையும் பின்பற்றியிருக்கலாம் என்பதையும் ஊகிக்க வைக்கிறது. ஏனெனில் கி.மு.237 இற்கும் கி.மு. 47 இற்கும் இடைப்பட்ட அநுராதபுர அரசியல் வரலாற்றைப் பார்க்கும் போது ஏறத்தாள 21 மன்னர்கள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களுள் 10 தமிழ் மன்னர்கள் 82 வருடங்கள் 2 மாதம் ஆட்சி புரிந்துள்ளனர் எனினும் பௌத்தமதத்தைப் பின்பற்றியவர்களே இலங்கை ஆட்சிக்கு உரியவர்கள் எனக்கூறும் பாளி இலக்கியங்கள் இவற்றை மறைத்திருக்கலாம். ஆனால் அவை மறைக்காதவிடத்து இவர்கள் ஏதோ ஒரு வகையில் பௌத்தமதத்தைப் பின்பற்றியவர்களாகவோ அல்லது ஆதரித்தவர்களாகவோ இருந்துள்ளார்கள் எனின் தவறாகாது

கோவர்ணன் (கோதாகாபயன்) தனது ஆட்சிக் காலத்தின் போது (கி.பி 254-266) தேரவாத பௌத்தக் கொள்கைக்கு மாறானவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கி அபயகிரி விகாரையிலிருந்த 60 மகாயான பிக்குகளைக் கைதுசெய்து மறுகரைக்கு (தமிழ்நாட்டிற்கு) அனுப்பினான். (M.V.XXXVI:111-112). இதையறிந்த சங்கமித்திரர் அவர்களை அழைத்து மகாஜானக் கோட்பாடுகளைப் போதித்தார். இதையறிந்த மகாவிகாரைப் பிக்குகள் அரசனிடம் முறையிட, அவன் சங்கமித்திரையையும், ஈனஞான பிக்குகளின் தலைவரான சங்கபாலரையும் அழைத்து விவாதம் நடத்தினான். பின் சங்கமித்திரையை ஏற்றுக்கொண்டு தன் பிள்ளைகளான ஜெட்டதிஸ்ஸன், மகாசேனன் ஆகிய இருவருக்கும் கல்விகற்க நியமித்தான். இவர்களில் மூத்தமகன் ஜெட்டதிஸ்ஸன் சங்கமித்திரருடன் பகைமை பாராட்டியதால், அவனது பட்டாபிஷேகத்தின் போது சங்கமித்திரர் தமிழ்நாடு சென்று பின்பு மகாசேனன் பதவியேற்றதும் இலங்கை வந்து மாகஜான கருத்துக்களை பரப்பினார் (M.V. XXXVI:115-122).இது இலங்கையில் மகாஜானக் கருத்துக்கள் பரவியமைக்குக் காரணமாய் அமைந்த அதேவேளை சங்கமித்தையின் தமிழ்நாட்டுத் தொடர்பு தமிழ்பௌத்தம் இலங்கையில் ஏற்பட்டிருந்தது என்பதையும் மறைமுகமாகச் சுட்டுகின்றது எனலாம்.

நான்காவது அக்கபோதி மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் பொத்தகுட்டன் என்பவர் அக்கபோதியின் முதலமைச்சராகவும், ஆலோசகராகவும் இருந்தார். அத்துடன் பொத்தசாத்தன், மகாகந்தன் ஆகிய இருவர் மன்னனின் முக்கிய அமைச்சர்களாகவும் இருந்தனர் என சூளவம்சம் கூறுகின்றது (லயனல் 2000:18). இவர்கள் தமிழர்களாக இருந்தும் பௌத்தமதத்தைச் சார்ந்தவர்கள் எனவும் பொத்தகுட்டன் "மாடடம்பிய" எனும் பிரிவேனாவைக் கட்டுவித்து அபேவெவ வாவியையும், புக்ககல்ல என்ற ஊரையும், நித்தில வீதி எனும் ஊரையும் காணிக்கையாகக் கொடுத்தார் எனவும் கூறப்படுவது தமிழ்ப் பௌத்த செல்வாக்கைக் காட்டுகிறது (மேற்படி). மகாவம்சம், ஒரு தனவந்தர் வெவ்வேறு இடங்களில் விகாரைகளைக் கட்டுவதற்காக மூன்று கிராமங்களைத் தேர்ந்தெடுத்தார் எனவும் பொத்தசாத்தன் என்னும் மதிநுட்பமுடைய சேனாதிபதி ஜேதவன விகாரையில் மன்னனின் பெயரில் பிரிவேனா ஒன்றைக் கட்டிமுடித்தார் எனவும், மகாகந்தன் எனும்தமிழ்த்தலைவரும் தனது பெயரில் பிரிவேனா ஒன்றைக் கட்டியெழுப்பினார் எனவும் கூறுகிறது (M.V.XXXXI:19-24). இவையாவும் தமிழர்கள் பௌத்தத்தை ஆதரித்தமையே எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைதவிர மன்னர்கள் பல அறிஞர்களைச் சோழ நாட்டிற்கு அனுப்பி சிறந்த சீலமுள்ள பண்பாடுகளைப் போற்றுகின்ற 3 பாடங்களையும் மனனம் செய்த புகழ்பெற்ற பிக்குமார்களை வரவழைத்து இலங்கையின் இரு சாசனங்களையும் ஒன்றிணைத்ததாக மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. இது சமகாலத்தில் சோழநாட்டில் தமிழ்ப்பௌத்தம் செல்வாக்குப் பெற்றிருந்தால் தமிழ் பௌத்த பிக்குமார்கள் இலங்கை வந்து தமிழ் பௌத்தக் கருத்துக்களைப் போதித்துள்ளமையைக் காட்டுகின்றது. எனவே பாளி இலக்கியங்கள் தமிழ்ப்பௌத்த வருகையையும், அதன் சிறப்பையும் கூற முற்படும் போது தமிழ்ப்பௌத்தத் தொடர்பை மறைக்கமுடியவில்லை என்றே கூறலாம்.

## முடிவுரை:-

இலங்கையின் தமிழ் பௌத்த வரலாற்றை இதுவரை ஆராய்ந்த பலரும் இந்திய பௌத்த மத செல்வாக்கை ஆங்காங்கே சுட்டிக்காட்டியுள்ளனர். ஆயினும் இந்தியப் பொதுமைக்குட்பட்டு, வளர்ந்த தென்னிந்தியப் பௌத்த மதத்தின் பிரதேச ரீதியான தனித்துவத்தை ஆராய்ந்து அவற்றை இலங்கை பௌத்தமதத்துடன் ஒப்பிட்டு ஆராய்வதில் அதிக அக்கறை காட்டவில்லை. மாறாக பௌத்தமத வரலாற்றை முக்கியப்படுத்திக் கூறும் பாளி இலக்கியங்களில் இடம்பெற்ற பாரம்பரியமான இலங்கை - வட இந்திய உறவிற்கு முக்கியம் கொடுத்து, இலங்கைப் பௌத்த மதத்தை பெருமளவிற்கு வடஇந்திய, பௌத்தத்தின் பின்னணியில் நோக்கியுள்ளனர். இலங்கையில் சமீபகாலத் தொல்லியல், மானிடவியல்,சமூகவியல் ரீதியான ஆய்வுகள் இலங்கையில் ஆதிக்குடிகள் பல்வேறு காரணங்களுக்காகத் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறி உள்ளார்கள் என்பதை நிருபித்து உள்ளன. இவற்றை நோக்குகின்றபோது இம்மக்களது புலப்பெயர்ச்சியுடனேயே தென்னிந்திய மதங்களுக்கும் அவற்றிற்குரிய பண்பாட்டுக் கலைமரபுகளுக்கும் இலங்கையில் அறிமுகமாகியது எனக்கூறுவதற்கு இடமுண்டு. பிற்காலத்தில் இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் இடையே இருந்த அரசியல், வர்த்தக, பண்பாட்டு உறவால் தென்னிந்தியாவில் ஏற்பட்ட பௌத்தமத வளர்ச்சியும், அவற்றுடனான கலைப்பண்பாட்டு அம்சங்களும் இலங்கையிலும் பரவி இருக்க வேண்டும். இது போன்றே வட இந்தியாவில் ஏற்பட்ட பௌத்த மத மாற்றங்களும் இலங்கையில் புகுந்திருக்கலாம், ஆயினும் இம்மதம் வட இந்தியாவிலிருந்து நேரடியாக இலங்கைக்குப்பரவியதைவிட தென்னிந்தியப் பிராந்தியங்களிற்குப் பரவி, அவை அப்பிரதேச பௌத்த மதத்திற்குரிய தனித்துவங்களைப் பெற்று பின்னர் இலங்கைக்குப்பரவியதற்கான சான்றுகளே காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இலங்கையில் தோன்றி வளர்ந்த பௌத்தமதம் அதற்கான ஆரம்ப ஊக்குவிப்புக்களை தென்னிந்தியாவிலிருந்து பெற்றுப் பிற்காலத்தில் பிரதேச தனித்துவத்துடன் வளர்ந்தது எனக்கூறலாம்.

அனுராதபுர அரசியல் வரலாற்றை ஆழமாக ஆராய்ந்தால் தமிழர்களும், சிங்களவர்களும் மாறி, மாறி ஆட்சிக்குரியவர்களாக இருந்தமையினை அவதானிக்க முடிகின்றது. இதனால் பௌத்தமதமும் அதனோடு தொடர்புடைய கலைபண்பாட்டம்சங்களும் ஆழும் வர்க்கத்தின் ஆதரவினால் வளர்ச்சி பெறமுடிந்தது எனக் கூறலாம். தமிழ்மன்னனர்களைச் சிங்கள மன்னர்கள் வெற்றிகொண்டபோது இங்கிருந்த தமிழர்கள் வெளியேறியதற்கோ, அல்லது வெளியேற்றப் பட்டதற்கோ சான்றுகளில்லை. மாறாக அவர்களும் இந்நாட்டு மக்களுடன் இணைந்து வாழ்ந்துள்ளனர். ஆட்சியைக் கைப்பற்றிய சிங்கள மன்னர்கள் கூடப் பலசந்தர்பங்களில் தமிழ்நாடு சென்று தமிழர் படையுடன் வந்து ஆட்சியைக் கைப்பற்றியுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் அநுராதபுரத்திலிருந்த தமிழர்களே ஆட்சிக்குத் தகுதியுடைய சிங்கள மன்னர்களைத் தெரிவு செய்துள்ளனர். கி.பி.6ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கத்தின் செல்வாக்கிற்கு உட்பட்ட தமிழ்நாட்டு வம்சங்கள் இந்துப்பண்பாட்டை வளர்ப்பதற்கு ஆதரவாக இருந்தபோதும் இலங்கையில் பௌத்த மதத்திற்குச் சார்பாக இருந்த அரசவம்சங்களை ஆட்சியில் அமர்த்துவதில் முக்கிய பங்குவகித்தன. கி.பி.8ஆம் நூற்றாண்டின் பின்னர் சிங்களம் என்ற புதிய மொழி பேச்சுமொழியாக வளர்ந்தது. இதுவேபௌத்தத்திற்கான மொழியாகவும் வளர்ச்சியடைத் தொடங்கியதனால் தமிழ்ப்பௌத்தமும் இலங்கையில் வீழ்ச்சியடைந்து. இதனால் காலப்போக்கில் பௌத்தமதம் குறிப்பிட்ட ஒரு இனத்திற்குரிய மதமென்ற கருத்தும் ஏற்படக்காரணமாகியது. இந்தநிலை தமிழ் பௌத்தம் என்ற ஒன்று இருந்துள்ளதா? என்றகேள்விக்கு இடமாகியது எனின் தவறாகாது. இலங்கையில் தமிழ்ப் பௌத்தத்திற்குரிய சான்றாதாரங்கள் இன்னும் காணப்படுவதனால் எதிர்காலத்தில் இக்கண்ணோட்டத்துடன் ஆய்வை மேற்கொள்வோர் இவற்றில் கவனமெடுப்பது சாலவும் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் பட்டியல்

Bechert, Heinz, ``The Beginnings of Buddhist Historgaphy in Ceylon'' ***Ancient Ceylon.*** No.3 (Colombo: 1969).

Geiger, W., (Eng.tr.) (***Mahavamsa,*** (Colombo:1960).

Geige,W., (Eng.tr) ***Culavamsa***, (London:1973).

Paranavitana, S., ***Early Brahmi Inscription of Ceylon***, plate:1, (Colmbo:1970).

Seniviratne,S, ``The Bharatas: Acase of Community Integration in Early Historc Srilanka'' ***James Thevathasan Rutnam Feshchrilt***, (Ratmalana:1985).

இந்திரபாலா,கா,''அனுராதபுரத்திலுள்ள குமாரகணத்துப் பேருரார் கல்வெட்டுகள்", ***சிந்தனை,*** மலர்.2, இதழ்.1, (ஏப்பரல் :பேரதனை:1968).

இந்திரபாலா, கா, "தமிழரும் பௌத்தரும்" ***வசந்தம் ஆண்டுமலர்,*** மலர்.1, இதழ். 4, (நெல்லியடி :1975).

சிற்றம்பலம், சி.க., "பிராமிக் கல்வெட்டுக்களும் தமிழும்" ***சிந்தனை,*** தொகுதி.1, இதழ்.1, (ப.ஆ.) சிற்றம்பலம், சி.க., (திருநெல்வேலி:1983).

புஷ்பரட்ணம்,ப, "பௌத்த சிற்பங்களுடாக அறியப்படும் - இலங்கை ஆந்திர உறவுகள்" ***சிந்தனை*** (மறுபிரசுரம்), தொகுதி lll, இதழ்.ll - lll, (யூலை, ஆகஸ்ட்:1985).

புஷ்பரட்ணம், பரமு, "இலங்கை சிற்பங்களில் தென்னிந்தியக்கலையின் செல்வாக்கு - அனுராதபுரக்காலம்" ***முது கலைமானிப் பட்டத்திற்காக யாழ் பல்கலைக் கழகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை,*** (இலங்கை:1988).

லயனல், சரத்., ***புராதன இலங்கையின் தமிழ் சிங்கள உறவுகள்*** (தமிழாக்கம்) றம்சியா, பாருக்., (நுகேகொட:2000).

வேங்கடசாமி, சீனி, மயிலை., ***பௌத்தமும் தமிழும்*** (கொழும்பு:1950).

வேலுப்பிள்ளை, ஆ., ***சாசனமும் தமிழும்,*** (கண்டி:1971).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழர் வரலாற்றில் அம்பாந்தோட்டை - அண்மைக்காலத் தொல்லியற் கண்டுபிடிப்புக்களை அடிப்படையாகக்கொண்ட ஆய்வு

செல்வி க.சிவப்பிரியா
இறுதிவருடம்
வரலாறு சிறப்புக்கலை

## அறிமுகம்

இலங்கைத்தீவின் வரலாற்றுப் பரப்பிலே சிங்கள மக்களைப்போல் தமிழருக்கும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு குறையாத தொன்மை வாய்ந்த வரலாறும் பண்பாட்டுப் பாரம்பரியமும் உண்டு என்பதை அண்மைக்காலத் தொல்லியற் கண்டு பிடிப்புக்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. இருந்தபோதிலும் சிங்கள மக்களோடு ஒப்பிடுகையில் தமிழரின் பண்டைய கால எழுத்து, மொழி, பண்பாடு என வரலாற்றின் பல-பரிணாமங்கள் இன்று வரை ஒரு தெளிவற்ற நிலையிலேயே இருந்து வருகின்றன. இதற்கு, சிங்கள மக்களுக்கு பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த பாளி இலக்கிய வரலாற்று மரபு இருப்பது போல தமிழருக்கு இல்லாதிருப்பது துரதிஷ்டவசமாகும்.

இலங்கையைப் பொறுத்தவரை தொல்லியல் சின்னங்களை வரலாற்று ஆய்வுக்கு பயன்படுத்தும் மரபு பிரித்தானியர் ஆட்சியோடு ஏற்பட்டது எனக் கூறலாம். இதற்கு அக்கால நிர்வாகத்தில் உயர் பதவி வகித்த பெல், கோகாட், முல்லர், பாக்கர் போன்றோர் புராதன இராசதானிகள், நகரங்கள், வர்த்தகமையங்கள், துறைமுகங்கள் அமைந்திருந்த இடங்களில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். இவர்களது ஆய்வுகள் பாளி இலக்கியங்கள் கூறும் வரலாற்றை உண்மைப்படுத்தவே பெரிதும் பயன்பட்டன. எனவே இவ்வாய்வுகளும் தமிழர் வரலாற்று உண்மைகளை வெளிக்கொணர அதிகம் உதவவில்லை. ஆனால் அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகள் இதுவரை வரலாற்றுக்கால தொல்லியல் சின்னங்களும், அதனுடன் தொடர்புடைய பௌத்த மத வழிபாட்டிடங்களையும், முதன்மைப்படுத்தும் அதேவேளை பண்டைய காலத் தமிழரின் வரலாற்றை அறியவும் உதவுகின்றன. அவற்றின் மூலம் கிடைத்த முடிவுகள் இலங்கைத் தமிழர்களது வரலாறு, பாரம்பரியம், பூர்வீகம் அவர்களது வாழ்வியற் பின்னணிகள் என்பவற்றை வெளிக்காட்ட உதவின.

இப்பின்னணியில் கடந்த காலங்களில், தென்னிலங்கையில், குறிப்பாக அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகளை அடிப்படை மூலாதாரமாகக் கொண்டு பண்டைகாலத்தில் இப்பிரதேசத்துடன் தமிழருக்குள்ள உறவையும், தொடர்பையும் ஆராய்வதே இதன் நோக்கமெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமைவிடம்

உலக நாடுகளின் வரலாற்றை உற்றுநோக்கும்போது அவற்றின் வரலாற்றில் அமைவிடமும் பௌதீக உறுப்புக்களின் தன்மைகளும் முக்கிய காரணிகளாக இருந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதேபோல் இலங்கையும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் அந்நிய நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளுக்கு அதன் அமைவிடம் முக்கிய காரணியாகும். தென்னாசியாவின் தென்பகுதியில் அதுவும் தமிழ்நாட்டுக்கு அண்மையாக இந்து சமுத்திரத்தின் மத்தியில் இது அமைந்துள்ளமை புவியியல் ரீதியாக தென்னாசியத் துணைக்கண்டத்தின் ஒரு பகுதியாக இதனை மாற்றியுள்ளது. இதனால் இலங்கையில் உருவாகிய சிங்கள தமிழ்ப்பண்பாடுகள் தென்னிந்திய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளப் பண்பாடுகளை ஒத்துள்ளமைக்கு இலங்கை தென்னிந்தியாவிற்கு மிக அண்மையாக இருப்பதே காரணமாகும் (புஷ்பரட்ணம் 1988:2-3). இப்பின்னணியில் இலங்கையின் தென்பகுதியிலுள்ள அம்பாந்தோட்டையும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் அரசியல், வர்த்தகம், அயல் நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகளுக்கு அதன் அமைவிடம் முக்கிய காரணியாக விளங்கியுள்ளது.

அம்பாந்தோட்டைப் பிரதேசமானது இலங்கையின் மொத்த நிலப்பரப்பு 65525 சதுர கிலோ மீற்றரில் (5q.km)2579 சதுரகிலோ மீற்றர் (5q.km)நிலப்பரப்பைக் கொண்டுள்ளது (Somasekaran 1997:34). இது மகாவலி கங்கைக்கு தென்மேற்கே மலையரட்டை, களுகங்கை இரண்டுக்கும் தெற்கே உள்ள பகுதிகளை உள்ளடக்கி இருக்கிறது. இவ்வாறாக அம்பாந்தோட்டையின் அமைவிடம் கடல்சார்ந்த வர்த்தகத்திற்கு சாதகமாக அமைந்திருப்பது தான் மாந்தை, திருகோணமலை, கந்தரோடை முதலிய இடங்களைப்போல் வரலாற்றுச் சிறப்புப்பெற முக்கிய காரணியாகும். இதை இப்பிராந்தியத்தில் கிடைத்த உரோம, கிரேக்க, இந்திய, அரேபிய, சீன நாணயங்கள், மட்பாண்டங்கள், கண்ணாடிப் பொருட்கள் என்பன தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன (புஷ்பரட்ணம் 2001:163).

பண்டைய கால இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டுப் போர்களின் போதும், அந்நியர் படையெழுச்சிகள் நிகழ்ந்தபோதும் இப்பிரதேசத்தில் இயற்கைத் தாவரமான பற்றைகள், முட்புதர்கள், ஆறுகள் முதலானவை பயன்படுத்தப்பட்டன. வரலாற்றுக்காலத்தில் தமிழகத்திலிருந்து அடிக்கடி படையெடுப்புக்கள் நடத்தப்பட்டபோது அந்நியப் படையினர் மாந்தைத் துறைமுகத்திலிருந்து மல்வத்து ஓயாக் கரையாக அநுராதபுரத்தை அடைந்த வேளைகளில் அநுராதபுரத்திலிருந்து தப்பி ஓடிய அரசர்களுக்கு தெற்கேயிருந்த (அம்பாந்தோட்டையில் இருந்த) காடுகளும், மலைகளுமே புகலிடமாக அமைந்தன. எனவே அமைவிடம் காரணமாக அரசியல், வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக அம்பாந்தோட்டை அக்காலத்தில் விளங்கியது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுப் பின்னணி

ஒரு நாட்டின் வரலாறு என்பது அந்த நாட்டுடன் தொடர்புடையதாகக் கிடைக்கப்பெறும் வரலாற்றுச் சான்றுகள் மூலம் கட்டியெழுப்பப்படவேண்டிய ஒன்றாகும். பழைய மரபுகள், வரலாற்றுக் கதைகள் என்பவற்றை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளும் அதே வேளையில் புதிய தரவுகளையும் விஞ்ஞான பூர்வமான முடிவுகளையும் முக்கியப்படுத்துவதும் அவசியமாகும். இப்பின்னணியில் இலங்கை வரலாறு பெருமளவு பௌத்த சிங்கள மக்களது வரலாறாகவே நிரைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு பௌத்த மதம் இலங்கையின் வரலாற்றுக் காலத்தின் ஆரம்பமென கொள்ளப்படும் தேவநம்பிய தீசனின் (கி.மு.247-210) ஆட்சிக்காலத்தில் இங்கு புகுத்தப்பட்ட அநுராதபுரத்தில் உள்ள பௌத்த விகாரைகளில் இம் மதத்தின் வரலாறு சம்பந்தமான நிகழ்வுகளைக் கோவைப்படுத்தும் மரபும் தோன்றி வளர்ந்தது.

இவற்றோடு முக்கிய அரசியல் நிகழ்வுகளும் பிறவும் இணைக்கப்பட்டன. காலகதியில் பௌத்த மதக் கண்ணோட்டத்தில் அமைந்திருந்த இக் கருவூலங்களை மையமாகக் கொண்டு பாளி நூல்களாகிய தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் ஆகியனவும் சிங்கள நூல்களும் எழுச்சிபெற்றன. பௌத்தமத வரலாற்றினைக் கூறவந்த இவை நாளடைவில் இம்மதத்தைத் தழுவிய மக்களது வரலாற்றையும் நாட்டினது வரலாற்றையும் தம்மோடு இணைத்துக் கொண்டன. இதனால் பிற்காலத்தில் பௌத்தமதம் சிங்கள மக்களுக்குரிய மதமாக இருந்ததால் பாளி இலக்கியங்கள் கூறும் பௌத்தமத வரலாறானது பௌத்தம், சிங்கள மக்கள், நாடு ஆகிய மூன்றும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட வரலாறாகவே பிற்கால வரலாற்று ஆசிரியர்களாலும் பார்க்கப்பட்டது (சிற்றம்பலம் 1994:2)

மேற்கூறிய அணுகுமுறையினால் தமிழ் மக்களின் வரலாறு இடம்பெறாது போனது மட்டுமன்றி இந்நாட்டிற்கு நாகரிகத்தினை இட்டு வந்தவர்கள் இன்றைய சிங்கள மூதாதையினர், தமிழர்கள் இவர்களுக்குப் பின்னர்தான் இங்கு வந்தவர்கள் என்ற கருத்து நீண்டகாலமாகவே இருந்து வந்தது. இந்நிலையில் ஏற்பட்ட தொல்லியல் ஆய்வானது வரலாற்றுக்கால தொல்லியலுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டு பெரும்பான்மை மக்களாகிய சிங்கள பௌத்த மக்களின் சான்றுகள் காணப்படும் விகாரைகள், பிறகட்டிடங்கள், சிற்பங்கள், ஓவியங்கள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றுக்கே முன்னுரிமை கொடுத்தது. இதனால் தமிழ் மக்களின் வரலாறு அவர்தம் பண்பாடு பற்றி உரியமுறையில் மதிப்பீடு செய்ய முடியாமல்ப்போய்விட்டது. ஆயினும் சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வுகள் இலங்கை நாகரிகத்தின் தோற்றம் பற்றியும் இத்தகைய நாகரிக வளர்ச்சியில் தமிழ் மொழி பேசுவோர் ஆற்றியுள்ள பங்களிப்புப்பற்றியும் பல புதிய தகவல்களைத் தந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறப்பட்ட பின்னணியில் கடந்த கால் நூற்றாண்டாக இலங்கைத் தொல்லியற்துறையால் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆய்வில் 1990களில் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள பாளி நூல்கள் குறிக்கும் உரோகண இராச்சியத்தின் தலைநகரான மகாகம என அழைக்கப்பட்ட இன்றைய திஸ்ஸ மகாராம பகுதியிலுள்ள அக்குறுகொடாவிலும், சித்துள்பவ ஆகிய இடங்களிலும் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன (Bopearachchi 1999:12) இவ்வாய்வில் தொல்பொருள் சின்னங்கள், பிராமிக்கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்பன கிடைக்கப்பெற்றன. இச்சான்றாதாரங்களைக் கொண்டு அம்பாந்தோட்டையில் வாழ்ந்த தமிழர்களின் வரலாற்றை நிரைப்படுத்த முடிகின்றது எனலாம்.

## பாளி இலக்கியங்களும் அம்பாந்தோட்டையும்

இலங்கையின் வரலாற்றினை அறிந்து கொள்வதில் பாளி மொழியில் தோன்றிய இலக்கியங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. வட இந்தியாவில் இருந்து கி.மு. 6ஆம் நூற்றாண்டளவில் இலங்கைக்கு முதன் முதலாக வந்ததாகக் கூறப்படும் ஆரியரது குடியேற்றங்கள் புவியியற் காரணிகளை ஒட்டியே அமைந்தன என்று பாளி நூல்கள் கூறுகின்றன. விஜயன் வந்து இறங்கியதாகக் கூறப்படும் தம்பபன்னியில் (தம்பனாநுவர) அவன் தங்கி அரசை நடத்தியதாக மகாவம்சம் கூறுகின்றது.

அநுராதகாம, உபதிசகாம, உஜ்ஜேனி, உருவெலா, விஜிதபுரம் முதலான குடியேற்றங்களை அவனது அமைச்சர்கள் அமைத்ததாக அதே நூல் கூறுகின்றது (M.V.VII:43-44).இம் முதற் குடியேற்றம் பயிர்ச்செய்கைக்குரிய நிலவளம், மழைவீழ்ச்சி, காலநிலை, நில அமைப்பு முதலான அம்சங்களைக் கருத்தில் கொண்டே இக்குடியேற்றங்கள் நடைபெற்றுள்ளது. இவ்வாறே தென்னிலங்கையில் அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் உள்ள வளவகங்கை, கிரிண்டிஓயா, மாணிக்ககங்கை ஆகிய நதிகளால் வளமபடுத்தப்பட்ட பகுதியிலேயே ஆரியரின் அடுத்த குடியேற்றம் அமைந்ததாக மகாவம்சம் கூறுகின்றது (M.V.VIII:12). இவ்விரண்டு முக்கிய குடியேற்றங்களுமே நெடுங்காலம் குடிசனச்செறிவு மிக்க பகுதிகளாக விளங்கின என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அநுராதபுரத்தில் தேவநம்பியதீசன் ஆட்சி செய்த அதே காலப்பகுதியில் அம்பாந்தோட்டையில் (உரோகணப்பகுதியில்) இச் சிற்றரசுகள் காணப்பட்டதை பாளி நூல்கள் உறுதிப்படுத்துகின்றன. இச் சிற்றரசுகள் கதிர்காமம், சண்டணாகம ஆகிய இடங்களில் காணப்பட்டன. இப்பிரதேசத்தில் ஆட்சி செய்தவர்களை மகாவம்சம் சத்திரியவம்சத்தவர் என அழைக்கிறது (M.V.XIX:4). ஆயினும் அம்பாந்தோட்டைப் பிரதேசம் துட்டகாமினியின் வரலாற்றுடனேயே முதன்முதலாக அரசியல் முக்கியத்துவம் பெறுவதை பாளி நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன. துட்டகாமினியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையான தீஸன் பல சிற்றரசுகளைக் கொண்ட உருகுணையை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து அதன் அரசியல் ஒற்றுமையை நிலைநாட்டினான் என்றும் மகாவலி கங்கைக்கு அப்பால் ஆட்சி செய்த தமிழரை எதிர்க்கும் சக்திகளிடையே இருந்த பிரிவினைகளை அகற்றி அவர்களுடன் போர் செய்வதற்கான ஆயத்தங்களை செய்ததாகவும் மகாவம்சம் கூறுகின்றது (M.V.XXIV: 12-14). இந்த வகையில் இலங்கையின் வரலாற்றில் இப்பிரதேசம் நாட்டின் விடுதலைக்கான இயக்கங்களை உருவாக்க பயன்பட்டமையை பாளி நூல்கள் எடுத்துக்காட்டுகின்றன எனலாம்.

## தொல்பொருட்களும் அம்பாந்தோட்டையும்

இலங்கையில் தமிழ் மக்களின் குடியேற்றம் பற்றிய ஆய்வானது பல்வேறு காரணங்களால் சிரமத்திற்குட்பட்டுள்ளது. முக்கியமாகப் பண்டைய வரலாற்றைப் பற்றிப்பார்க்கும்போது மூலாதாரங்களின் பற்றாக்குறை பற்றிய பிரச்சினையையும் எதிர்நோக்குகிறோம். பாளி சிங்கள இலக்கியங்கள் நம்பகரமானதும் பெருமளவுக்குப் போதுமானதுமான விதத்தில் அரசியலும் ஓரளவுக்கு சமயமும் சம்பந்தமான தொடர்ச்சியான வரலாற்றை வியக்கத்தக்க விதத்தில் அளித்துள்ள போதிலும், இலங்கைத்தமிழர் பற்றிய ஆய்வுக்கு அவற்றின் பங்களிப்பும் சொற்பமேயாகும். சிங்கள அரசியலில் அல்லது சமய விவகாரங்களில் தமிழரின் நடவடிக்கைகள் பாதிப்பை ஏற்படுத்தியபோது தான் தமிழர் பற்றி இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

தமிழ் வரலாற்று நூல்களைப் பொறுத்தமட்டில் தற்போது கிடைக்கும் இலக்கியச் சான்றுகள் கி.பி.13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழ் இராச்சியம் உருவாக்கப்பட்டு ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளின் பின் எழுந்தவையே. இவற்றில் கி.பி 13ஆம் நூற்றாண்டிற்கு முந்திய காலப்பகுதி பற்றிக் கூறும் பகுதிகள், ஐதீகங்கள் நிறைந்தவையாய் விளங்குவதால் இவை முழுமையாக நம்பத்தகுந்தவையல்ல. தென்னிந்தியத் தமிழ் நூல்கள் இலங்கையில் ஏற்பட்ட தமிழரின் நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடத்தக்க குறிப்புகள் செய்திகள் எதையும் கொண்டிருக்கவில்லை. இவ்விடயம் தொடர்பாகத் தொல்பொருட் சான்றுகள் ஊக்கமளிப்பனவாக இருந்த போதிலும் அவையும் போதுமானவை அல்ல (சிற்றம்பலம் 2000:4-5). எனினும் கிடைக்கும் தொல்பொருட்சான்றுகளைக் கொண்டு தமிழர்கள் தொடர்பான கருத்துக்களை அறிஞர்கள் முன்வைத்தனர்.

இப்பின்னணியில் இலங்கையின் தென்கிழக்கு, தெற்குப்பகுதிகளில் மேற்கொண்ட அகழ்வாய்வுகள் தமிழர்களது ஆதிக்குடியேற்றம் தொடர்பான சான்றுகளைத் தந்திருக்கின்றன. சிறப்பாக தென்கிழக்கிலமைந்த ஆரியக்குடியேற்றத்தின் மையம் எனப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள அக்குறுகொடவிலும் (பண்டைய மகாகமவும் தற்போதைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திஸ்ஸ மகாராமவும்) தமிழர்கள் தொடர்பான தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன. இப்பிரதேசங்களில் கிடைத்த தொல்பொருட்சான்றுகளாக பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய அரிய கல்மணிகள், மட்பாண்டங்கள், சுடுமண் உருவங்கள், அச்சுக்கள், அலங்கார மனித மிருக மற்றும் தாவரங்களுடன் கூடிய கல்மணிகள், பிராமிக் கல்வெட்டுக்கள், உள்நாட்டு வெளிநாட்டு நாணயங்கள் போன்றன சிறப்பாக குறிப்பிடத்தக்கன. இத்தகைய தொல்பொருட் சின்னங்களைக் கொண்டு பொபி ஆராய்ச்சி (Bopearachchi 1999:40-50) தனது கருத்துக்களை தெரிவித்திருக்கின்றார்.

## அக்குறுகொடவில் கிடைத்த நாணயங்கள்



Utiran

Tajapiyan

Mahasat(t)an

Kapatikajapaan

இவ்வாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் மூலம் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்சான்றுகள் இப்பிரதேசம் ஆரம்பத்தில் பெருங்கற்கால மக்களின் குடியிருப்பு மையமாக விளங்கியதை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த வகையில் சிங்கள மக்களின் முதாதையினரால் ஆரம்பிக்கப்பட்டதாக நம்பப்படும் குடியேற்ற மையங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் வட இந்தியாவில் அன்றித் தென்னிந்தியாவிலிருந்தே இலங்கையின் நாகரிக கர்த்தாக்களாக தற்கால சிங்கள - தமிழ் மக்களின் முதாதையினர் வந்ததை உறுதிப்படுத்தியுள்ளன.

மேலும் இங்கு கிடைத்த மட்பாண்டங்களில் வரும் பல குறியீடுகளின் தொடர்ச்சியைப் பிராமிக் கல்வெட்டுக்களிலும், நாணயங்களிலும் காணமுடிகின்றது. அக்குறியீடுகளில் சுவஷ்திகா பீடத்துடன் கூடிய சுவஷ்திகா சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. அதில் அவதானிக்கப்பட வேண்டிய அம்சம் பீடத்துடன் கூடிய சுவஷ்திகா பல கல்வெட்டுக்களில் மீன் சின்னத்தையும் அருகில் கொண்டிருப்பதோடு சில கல்வெட்டுக்களில் மீனைக் குறிக்கும் 'மஜிம' என்ற பெயரும் காணப்படுகிறது (Paranavithana 1970, Nos:- 557, 562, 564, 569,556, 561, 558, 565, 567). இக்குறியீடுகளுடன் கூடிய கல்வெட்டுக்களில் வருபவர்கள் முன்பொருகாலத்தில் இந்தியாவிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியேறிய தமிழர்கள் எனவும் இவர்கள் சிங்கள மன்னர்களுக்கு கட்டுப்படாமல் சுதந்திரமாக ஆட்சிபுரிந்த தமிழர்கள் எனவும் கூறப்படுகின்றது. (புஷ்பரட்ணம் 2003:101). இப்பின்னணியில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கிடைத்த தொல்பொருட்களை தமிழர்களுடன் தொடர்புபடுத்திப் பார்க்க முடிகிறது.

## தமிழர் குடியேற்றங்களும் – அம்பாந்தோட்டையும்

இலங்கையில் கிடைத்த தொல்பொருட்சான்றுகளைக் கொண்டே தமிழர் குடியேற்றங்களும் அம்பாந்தோட்டையும் என்பது பற்றிப் பார்க்க வேண்டியுள்ளது. தொல்பொருள் அகழ்வுச் சான்றுகளைக் கொண்டு தமிழர்களது குடியேற்றம் தொடர்பான கருத்துக்களை அறிஞர்கள் முன்வைத்தனர். ஒரு சில அறிஞர்கள் ஆரிய இனத்தவர் இங்கு குடியேறுவதற்கு முன்னர் தமிழர்கள் இலங்கையில் குடியேறி விட்டனர் என வாதிட, இன்னும் சிலர் கி.மு 3 ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி 10 ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தான் தமிழர்களின் குடியேற்றங்கள் இங்கு காணப்பட்டன எனவும் வாதிட்டனர். எவ்வாறாயினும் கிடைக்கும் மிகக் குறைவான சான்றுகள் அடிப்படையில் நோக்கும்போது வாணிப நலன்கள், அரசியல் ஆதிக்கப்படர்ச்சி இலங்கை இராணுவத்தில் பணியாற்றுவதற்கான வாய்ப்புக்கள் ஆகியனவே கிறிஸ்து சகாப்த காலத்தில் தமிழரை தமிழகத்திலிருந்து இலங்கைக்கு ஈர்த்த பிரதான காரணிகளாகும்.

எனினும் இத்தகைய நடவடிக்கைகள் மூலம் இக்காலத்தில் நிரந்தரமானதும் பரந்த அளவிலானதுமான பரந்த தமிழ்க் குடியேற்றங்கள் இங்கு காணப்படவில்லை. இதனால் கிறிஸ்து சகாப்த காலத்திற்கு முன்னர் உள்ள காலப்பகுதியிலோ அன்றி கிறிஸ்து சகாப்தத்தை அண்டியுள்ள நூற்றாண்டுகளிலோ இலங்கையில் தமிழர் குடியேற்றங்கள் காணப்பட்டதற்கான நம்பகரமான சான்றுகள் பாளி நூல்களில் காணப்படவில்லை. தமிழர்கள் இலங்கை வாசிகளிலிருந்து வேறானவர்கள் தனித்துவமானவர்கள் என்பதை உணர்த்தும் (தமிழக தமிழரைக் குறிக்கும்) “தமேட” என்ற பதம் தான் (கிறிஸ்துவுக்கு, முந்திய) இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. ஆனால் தொல்லியல் சான்றுகள் மட்டுமே கி.மு.2 ஆம், கி.பி. 3 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் தமிழர் குடியேற்றங்கள் காணப்பட்டதை எடுத்துக்காட்டுகின்றன (சிற்றம்பலம் 2000:5).

இப்பின்னணியில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தமிழர்களது குடியேற்றம் தொடர்பான சான்றுகளைத் தந்திருக்கின்றது. பண்டைய நாளில் அநுராதபுரம் சிங்கள மன்னர்களின் மைய அரசாக இருந்தபோது இப்பிராந்தியம் சிறு இராசதானியாக மட்டுமன்றி ஒரு முக்கிய வர்த்தக மையமாக இருந்ததற்கு பாளி நூல்களிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டுக்களில் வெளிநாட்டார் குறிப்புக்களிலும் பல சான்றுகள் உண்டு. இங்கு சிற்றரசர்களாக இருந்து ஆட்சி புரிந்தவர்களில் பெரும் பாலானவர்கள் பின்னர் இலங்கை மன்னர்களாக வந்ததற்கும் பல சான்றுகள் உண்டு (புஷ்பரட்ணம் 2001:35)

இந்தவகையில் இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இலங்கையின் நாகரிகத்தை உருவாக்கி வளர்த்தவர்கள் தென்னிந்தியாவைப் போன்று பெருங்கற்கால கலாசாரத்தை உருவாக்கிய மக்கட் கூட்டத்தினரே என்பதை எடுத்துக்காட்டியுள்ளன. அநுராதபுரம், கந்தரோடை, மாந்தை, அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள திஸ்ஸமகாராம ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளிலும் இதனுடன் இணைந்த பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளிலிருந்தும் பெறப்பட்ட கலாசார சின்னங்களும் இவை தென்னகப் பெருங்கற்காலத்தின் படர்ச்சியே என்பதை உறுதி செய்துள்ளன.

இவ்வாய்வுகள் பாளி நூல்கள் குறிக்கும் யக்ஷர்களும் நாகர்களும் இலங்கையின் கற்கால மக்கள் என்பதையும் இவர்களது கலாசாரத்தின் மேலே தான் பெருங்கற்கால கலாசாரம் காலூன்றி இலங்கையின் வரலாற்றுக்கால நாகரிகமாக மலர்ந்தது என்பதை உறுதிசெய்துள்ளன. வரலாற்றுக் காலத்தில் இம்மக்கள் பௌத்தத்தின் தாயகமாகிய வட இந்தியாவுடன் கலாசார ரீதியிலும் வாணிபரீதியிலும் கொண்டிருந்த தொடர்பினை உறுதிப்படுத்தும் எச்சங்களாக வட இந்திய சில மட்பாண்ட வகைகள், எலும்பு ஊசிகள், நாணயங்கள் ஆகியனவும் காணப்படுகின்றன. இதனால் இத்தகைய தொடர்புகளை (கலாசார தொடர்புகள்) பாளி நூலோர் வட இந்திய குடியேற்றம் எனக் கருதி விஜயன் பற்றிய ஐதீகத்தை வளர்த்தனர் என்பதும் உறுதியாயிற்று (சிற்றம்பலம் 2000:12,13).

இவ்வாறு சிங்கள மக்களின் மூதாதையினரால் ஆரம்பிக்கப்பட்டதாக நம்பப்படும் குடியேற்ற மையங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் வட இந்தியாவிலன்றித் தென்னிந்தியாவிலிருந்தே இலங்கையின் நாகரிக கர்த்தாக்களான தற்கால சிங்கள - தமிழ் மக்களின் மூதாதையினர் வந்ததை உறுதிப்படுத்தியுள்ளன. பாளி நூல்கள் வரண்ட வலயப் பகுதியில் ஏற்பட்டிருந்த குடியேற்றங்கள் பற்றியே கூறுகின்றன. ஆனால் நாட்டின் மேற்கு சிறப்பாக தெற்குப்பகுதியிலுள்ள அம்பாந்தோட்டைப் பிரதேசம் நதிகளையும் இவற்றின் கழிமுகத்திலமைந்த துறைமுகங்களையும் மையமாக வைத்து குடியேற்றங்கள் காணப்பட்டதை இப்பகுதியில் ஆய்வுகளை மேற்கொண்ட "பொபிஆராச்சி" உறுதிப்படுத்தியுள்ளார். இவரது ஆய்வின் மூலமாகத் தெதுறு ஓயாநதியிலுள்ள சலாவத்தோட்ட (சிலாபம்), களனிகங்கையிலுள்ள வத்தளை களுகங்கையில் உள்ள பீமதித்த (பென்தோட்டை), ஜின் கங்கையில் உள்ள ஜிம்ம (ஜின்தோட்ட), பொல்வத்த கங்கையிலுள்ள மகாவலு, (வெலிகம) நில்வளகங்கையிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நிலாவலதித்த,) வளவகங்கையில் உள்ள கோதபவட்ட (கொடவாயா - அம்பாந்தோட்டை மாவட்டம்) ஆகிய துறைமுகங்களில் வரலாற்றுக் காலத்திலும் (சில இடங்களில் வரலாற்று உதய காலத்திலும், பரவியிருந்த,) பெருங்கற்காலக் கலாசாரத்தின் எச்சங்கள் இனங்காணப்பட்டன. கறுப்பு - சிவப்பு நிறமட்பாண்டங்கள் மட்டுமன்றி இவற்றுடன் இணைந்த இக்கலாசாரத்துக்குரிய பல்வகைக் கற்களால் ஆன மணிகள், பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள், முத்திரைகள் ஆகியனவும் கிடைத்துள்ளன. இத்தகைய போக்கிலேதான் தென்னிந்தியாவிலும் அதாவது ஆறுகளின் கழிமுகங்களிலும் துறைமுகங்கள் காணப்பட்டதை எடுத்துக்காட்டியுள்ள பொபி ஆராச்சி அம்பாந்தோட்டையில் கிடைத்த பல வகையான மணி வகைகள் இப்பகுதியிலிருந்தே இலங்கையை இவை அடைந்ததை உறுதி செய்துள்ளன எனவும் எடுத்துக்காட்டியுள்ளார் (சிற்றம்பலம் 2000:16)

இலங்கையில் வாழ்ந்து வரும் சிங்கள மக்களின் மூதாதையினர் கி.மு.6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்களின் வழித்தோன்றல்கள் எனவும், தமிழர்கள் பிற்காலத்தில் தமிழ் நாட்டில் இருந்து வர்த்தகர்களாக, படையெடுப்பாளர்களாக வந்து குடியேறிய சிறுபிரிவினர் எனவும் கட்டிக்காக்கப்பட்ட இரண்டாயிரம் ஆண்டுகாலப் பாரம்பரிய வரலாற்று நம்பிக்கையை அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகளின் மூலம் சிங்கள அறிஞர்களே மறு ஆய்வு செய்ய முற்பட்டுள்ளனர். இதுவரை கிடைத்த நுண்கற்கால (Mesolithic Culture), பெருங்கற்கால (Mega lithi culture) சான்றுகள் கி.மு 28000 ஆண்டுகளில் இருந்து தென்னிந்தியா குறிப்பாக தமிழகத்திலிருந்து மக்கள் காலத்திற்குக்காலம் புலம்பெயர்ந்திருக்கலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன (Seneviratne 1984). இந்தவகையில் தமிழக பெருங்கற்கால பண்பாட்டுச் சின்னங்களும், இலங்கை பெருங்கற்கால சின்னங்களுக்குமிடையே உள்ள ஒற்றுமைத்தன்மைபற்றிப் பார்க்கவேண்டியது அவசியமாகும்.

அம்பாந்தோட்டையில் கிடைத்த பெருங்கற்கால சின்னமான மட்பாண்டங்கள் தென்னகத்திலிருந்தே குறிப்பாக தமிழகத்திலிருந்தே இவை இங்கு பரவியதை எடுத்துக்காட்டுகின்றன. சிறப்பாக அக்குறு கொடவில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்கள் தமிழகத்திலுள்ள ஆதிச்சநல்லூர், அமிர்தமங்கலம், சானூர், அரிக்கமேடு, திருக்காம்புலியூர், கேரள மாநிலத்திலுள்ள போர்க்களம், கர்நாடக மாநிலத்திலுள்ள பிரமகிரி ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களை தோற்ற அமைப்பில் நினைவூட்டுகின்றன. இத்தகைய ஒற்றுமை இரு பிரதேசங்களிலும் கண்டெடுக்கப்பட்ட பானைகள், கூம்பு வடிவான மூடிகள், தாங்கிகள் ஆகியவற்றுக்கிடையேயும் காணப்படுகின்றன. இவற்றில் காணப்படும் குறியீடுகள் (Graffiti symbols) தென்னகத்திலுள்ள மண்பாண்டங்களிலுள்ள குறியீடுகளை ஒத்துக்காணப்படுகின்றன. இத்தகைய குறியீடுகள் வரலாற்றுக்காலத்திற்குரிய இலங்கையின் ஆதிப்பிராமி கல்வெட்டுக்களில் மட்டுமன்றி நாணயங்களிலும் காணப்படுவதானது அம்பாந்தோட்டையிலும் பெருங்கற்கால மக்களே இலங்கையின் வரலாற்றுக்கால நாகரிகத்தையும் வளர்த்தெடுத்தவர்கள் என்பது உறுதியாயிற்று (சிற்றம்பலம் 2000:18).



Dr. K. Indrapala Archaeology Museum
Department of History
University of Jaffna
Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இங்கு கிடைத்த தொல்பொருள் எச்சங்கள் பெருங்கற்கால கலாசாரத்தின் மூலகர்த்தாக்கள் தென்னிந்தியத் தமிழரே என்பதை உறுதி செய்துள்ளன. (சிற்றம்பலம் 2000:19). எனவே இலங்கையில் தமிழர் குடியேற்றம் தென்னிந்திய பெருங்கற்கால கலாசாரத்தின் படர்ச்சியே என்பது தெரிகின்றது. இதனை "சுதர்சன செனிவரத்தினா" என்பவர் 1996 இல் வெளியிட்ட தனது கட்டுரையில் பின்வருமாறு உறுதிப்படுத்தியிருப்பது அவதானிக்கத்தக்கது.

"வரலாற்றுதய காலத்துக்குரிய குடியிருப்புக்கள், ஈமச்சின்னங்கள் காணப்படும் மையங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வானது தென்னிந்திய இரும்புக்கால கலாசாரத்தின் தொழில் நுட்ப கலாசார அம்சங்களின் தென் எல்லையாக இலங்கை விளங்கியதை எடுத்துக்காட்டுகின்றன. இவ்விடங்களில் காணப்படும் கருவிகள் இங்கே நெல்லோடு கூடிய விவசாயம், மிருகங்களின் பயன்பாடு, குதிரையின் உபயோகம், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இரும்பு, செம்பு ஆகியவற்றில் ஆயுதங்களைச் செய்தல், பல்வேறு கல்லின வகைகளில் மணிகளை உற்பத்தி செய்தல், கிராமங்களை அமைத்தல் கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள் ஆகியவற்றின் உற்பத்தி, இம் மட்பாண்டங்களில் காணப்படும் குறியீடுகள் ஆகியவை தென்னிந்தியாவில் இருந்துதான் இலங்கைக்கு இவை அறிமுகமாகின என்பதை உறுதிசெய்கின்றன."

இந்நிலையில் தமிழர் குடியேற்றங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் அம்பாந்தோட்டையிலும் ஏற்பட்டன எனக் கூற முடிகின்றது. இங்கு மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகள் தமிழர் குடியேற்றங்கள் மையங்கள், அவற்றுடன் இணைத்த சின்னங்கள் ஆகியவற்றுடன் நெருங்கிக் காணப்படும் பழைய பிராமிக் கல்வெட்டுக்களைத் தாங்கி நிற்கும் குகைகள், வரலாற்றுதய கால மக்களின் சந்ததியினரே புதிய கலாசார படர்க்கைக்காலம் வரை நீடித்திருந்ததை எடுத்துக்காட்டுகின்றன.

## முடிவுரை

இலங்கை வரலாற்றிலே தமிழர்களும் பண்டைக்காலம் முதல் குறிக்கப்பட்ட ஒரு பிரதேசத்தில் மட்டுமன்றி இலங்கையின் பல பாகங்களிலும் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. இந்தவகையில் தமிழர் குடியேற்றங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் அம்பாந்தோட்டையிலும் ஏற்பட்டன எனக் கூற முடிகின்றது. இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகள் தமிழர் குடியேற்றங்கள் இருந்ததையும், இப்பிராந்தியத்தில் இருந்த அதிகாரம் மிக்க தலைவர்கள், சிற்றரசுகள், இனக்குழுத்தலைவர்கள், வர்த்தகர்கள் என்போர் இருந்ததையும் எடுத்துக்காட்டுகின்றன. இந்நிலையில் அம்பாந்தோட்டைப் பிரதேசத்திற்கும், தமிழர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்திருக்கின்ற தென்று கூறக் கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் பட்டியல்

Bopearachchi, o ., Ruhuna and Aucient Civilization and Revisited, Nugugoda : 1999.

Geiger. W., ***Mahavamsam,*** The ceylon Government Information Department, Colombo. 1950.

Paranavithana. S., ***Inscriptions of Ceylon: Early Brahmi Inscriptions,*** The Department of Archaeology Ceylon, Colombo:1970.

Seneviratne, S, 1985, The baratas, Acase of Community in tegration in Early Historic SriLanka in fest schrift 185 James,Colombo : 1985)

Somasekaram. T., Arjuna's Atlas of Sri Lanka Co.L.td Dehiwala, Sri Lanka : 1997.

சிற்றம்பலம் சி.க.,"1994, ***ஈழத்தமிழர் வரலாறு,*** கி.பி 1000வரை தொகுதி I, சாவகச்சேரி இந்துக் கல்லூரி : 1994.

சிற்றம்பலம் சி.க., ***பண்டைய ஈழத்தில் தமிழர் ஒரு பன்முகப்பார்வை*** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்: 2000.

புஷ்பரட்ணம், ப., ***தென்னிலங்கையில் கிடைத்த பண்டைய தமிழ் நாணயங்களின் வரலாற்றுப்பின்னணி,*** நாவாவின் ஆராய்ச்சி : 1999.

புஷ்பரட்ணம். ப., ***இலங்கைத் தமிழரின் பண்டைய கால நாணயங்கள்*** யாழ்ப்பாணம் : 1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று நோக்கில் குருந்தலூர் வட்டாரம்

செல்வன்.மா.பத்மராஜ்
இறுதிவருடம்
வரலாறு சிறப்புக்கலை.

வரலாறு என்பது மனித சமுதாயத்தின் கடந்தகால நடைமுறைகளை எடுத்துகாட்டி நிகழ்காலசமூக்தின் வழக்கங்கள் வழக்காறுகளுடன் தொடர்புபடுத்தி இருகால எல்லைகளுக்குள்ளும் உள்ள இடைவெளியை கொண்டு உறவாட செய்வதாகும். உலகில் உள்ள நாடுகள் எல்லா வற்றிலுமே வரலாற்றை பாதுகாக்கும் கருவிகளாக திகழ்ந்து வந்தவை ஐதிகங்களும், கட்டுக்கதைகளும், மரவுகளுமே, இந்த நடைமுறையை அடிப்படையாகக் கொண்டே இலங்கையிலும் வரலாறுபின்னப்பட்டுள்ளது. எனினும் அது சிங்கள பௌத்த மேலாதிக்கத்தையும், தனித்துவத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் வரலாற்று மெய்த்தன்மைகள் உடைக்கப்பட்டவையாகவும் தமிழர்க்கும் அவர்களது வரலாற்றுக்கும் சமாதி வைப்பதாகவும் உள்ளமை பெரும் குறைபாடகும்.

எனினும் 1960களின் பின்னரான நடுநிலை வாய்ந்த ஆய்வுகளே தமிழரது வரலாற்றினை வெளிகொணர்வதாக உள்ளன. அவ்வாறு நடுநிலையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட இடங்கள் இன்னும் பல உள்ளன. இலங்கையில் சிங்கள மக்கள் வாழ்ந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் கண்டுபிடிப்புகளும் போல தமிழ்ப் பகுதிகளில் நிகழ்த்தப்படவில்லை. இவ்வாறான பகுதிகள் பல தமிழர் செறிந்து வாழும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார்ப் பகுதிகளில் ஏராளமாக உள்ளன.

முல்லைத்தீவு மாவட்டமானது வன்னிபெருநிலப்பரப்பில் தனிச்சிறப்பு வாய்ந்ததொரு பிரதேசமாக உள்ளது. அவ்வாறே இருந்தும் வந்தது. இம் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களினின்றும் பெறப்பட்ட தொல்லியல் சான்றுகள் இதனை உறுதி செய்வனவாய் உள்ளன. இவ் வகையில் தொல்லியல் செழுமை மிக்க இடங்களுள் குருந்தலூரும் ஒன்றாகும்

வன்னிப்பிராந்தியத்தை பொறுத்தவரையில் அதன் வரலாறு மிகவும் பழமை வாய்ந்தது. இப்பிராந்தியத்தில் நாகமன்னர்கள், தனிச்சிற்றரசர்கள், ஆரியசக்கரவர்திகள் மற்றும் சிங்கள ஆட்சியாள்களும் கூட செல்வாக்கு செலுத்தியிருந்தமையை காணக்கூடியதாக உள்ளது. வன்னியை தமிழ்வன்னி, சிங்களவன்னி, எனப்பிரித்து ஆராய்ந்த ஆய்வாளர்களும் உள்ளனர்.

இப்பிராந்திய வரலாற்றை கூறுவனாய் பெரிதும் ஐதீகங்களும் மரபுகளும் உள்ள போதிலும் சில தமிழ் வரலாற்றாய்வாளர்கள் ஆங்காங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டுசென்றவற்றை வைத்துப்பார்க்கையில் வன்னிப்பிராந்தியத்தின் முல்லைத்தீவு மாவட்டம் கொண்டிருந்த சிறப்பியல்புகளை அறியலாம். இதனை வையாபாடல், மட்டக்களப்புமான்மியம் முதலியவற்றின் ஊடாகவும் அறியமுடிகின்றது. இதனை விட குருந்தனூர் பகுதி வழமானதொரு வரலாற்றை கொண்டுள்ளது. என்பதை தொல்பொருள் சான்றுகள் ஊடாகவும் காணமுடிகிறது.

குருந்தனூர் பல்வேறு இடங்களில் குருந்தி, குருந்தனூர், குருங்கம குருகம் பியங்கல முதலிய பல்தரப்பட்ட பெயர்களால் அழைக்கப்படுகிறது. குருந்தனூரின் வராற்றை ஆராய்வதற்கு அதன் அமைவிடமுக்கியத்துவமும் அவசியமாகும்.

இப்பிரதேசமானது முல்லைத்தீவிலிருந்து ஏழத்தாழ பத்து மைல் தூரத்தில் அமைந்துள்ளது. சங்ககால நூல்கள் கூறும் ஐவகை நிலங்களையும் நினைவுபடுத்துவதாக இது உள்ளது. இதன் மத்தியில் உள்ள மலையின் கிழக்கு, மேற்கு திசைகளில் இரு சிறுமலைகளும், பல மேட்டுநிலங்களும் ஏராளமான குளங்களும், வாய்க்கால்களும் வட திசையில் பெரிய காடும் உள்ளது. அயல் பிரதேசங்களாக விளங்குபவை கற்காலம் தொட்டு வரலாறு சொல்லும் பிரதேசங்களான தென்னமரவடி பெரியபுளியங்குளம், ஒலுமடு மன்னகுளம் முதலிய பகுதிகளும் அயல் மாவட்டங்களாக கிளிநொச்சி, வவுனியா, மன்னார் யாழ்ப்பாணம் போன்றவையும் விளங்குகின்றன. மேற்கூறிய இம்மாவட்டங்களுடனும் இலங்கையின் ஏனைய பகுதிகளுடனும் பௌதீக கலாசார தொடர்புகள் கொண்டதாக குருந்தனூர் விளங்குகின்றது.

இலங்கையின் வரலாறு இந்திய வரலாற்று பாரம்பரியத்துடன் பின்னிப்பிணைந்ததொன்றாகவே கடுதப்படுகின்றது. இற்றைக்கு முப்பதாயிரம் வருடங்களிற்கு முன்பே இலங்கையில் ஆதிக்குடிகள் வாழ்ந்ததற்கான சான்றுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த காலப்பகுதியிலே தமிழகத்தின் தொன்மை வரலாறும் ஆரம்பித்ததாக பேராசிரியர் க.சிற்றம்பலம், பேராசிரியர் க.இந்திரபாலா போன்றோர் குறிப்பிடுகின்றனர். இந்நிலையில் தென்னிந்திய குடியிருப்பு பரம்பல்களின் தொடர்ச்சியே இலங்கையின் ஆதிக்குடியிருப்புக்கள் எனவும் அறிஞர் சிலர் குறிப்பிடுவர். இதன் மூலம் தமிழ் சிங்கள மூதாதையர்கள் ஒரே இனக்குழு மத்தியில் இருந்தே தோற்றம்பெற்றதாக இன்று பல மானுடவியல் தொல்லியல் ஆய்வாளர்களால் வலியுறுத்தப்படுகின்றது.

இப்பின்னணியில் குருந்தூர் மலைப்பகுதியை மையமாகக்கொண்ட இக்கிராமத்திலும் வரலாற்றுத் தொன்மைமிக்க குடிகள் இருந்திருக்க அதிக வாய்ப்பிருக்கின்றது. எனினும் அதுபற்றிய முழுமையான விளக்கங்களைப் பெறுவதற்கான தடயங்கள் குறைவாகவே உள்ளன. எனினும் இப்பிரதேசத்தைச் சூழ அமைந்துள்ள ஒட்டிசுட்டான், நெடுங்கேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னமரவடி, புளியங்குளம், முள்ளியவளை என மிகவும் புராதனமான நகரங்களின் சிறப்பும் தொன்மையும் இப் பிரதேச வரலாற்றிலே நகர்த்திச் செல்ல உதவுகின்றன. இதேவேளை குருந்தனூர் பிரதேச வயல்வெளிகளில் சில இடங்களில் குழிகள் வெட்டும்போது எடுக்கப்பட்ட மட்பாண்டங்களும், சில நாணயங்களும் புராதனமான வரலாற்றினை உடையது இவ்விடம் என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகளாக அமைகின்றன.

மேலும் முல்லைத்தீவின் நந்திக்கடல்ப்பகுதி, நாயாற்றுப்பகுதி, சுண்டுக்குளப்பகுதி முதலியன பல பகுதிகளிலும் கடல் நீரேரிகள் உள்ளன. இதனைவிட முத்தையன்கட்டு, ஒட்டிசுட்டான், ஒதியமலை, நெடுங்கேணி மன்னாகண்டல், கற்சிலை, மடு, குமிழமுனை, கருபட்டமுறிப்பு, புதுக்குடியிருப்பு, முள்ளிவாய்க்கால் முதலான பகுதிகளில் கிடைத்த சான்றுகளைக்கொண்டு முல்லைத்தீவு மாவட்டமும் பழங்கற்காலம் முதல் மனிதர்கள் வாழ்ந்துள்ள மையங்களில் ஒன்றாகக் குறிப்பிடமுடியும்.

இடைக்கற்காலப் பண்பாட்டுக்கு உரிய குறுணிக் கற்கருவிகள் இரணைமடுப்படுக்கையில் பெருமளவில் மீட்கப்பட்டுள்ளன. (சிற்றம்பலம். சி.க.1991) இவ் இடத்தில் நோக்க வேண்டியது யாதெனில் இக்கருவிகள் செய்யக்கூடிய பகுதிகளில்தான் இடைக்கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர். (தெரணியாகல, 1956) இத்தகைய கோணவடிவமற்ற கற்கருவிகளை உற்பத்திசெய்யக் கூடிய இடமாக முல்லைத்தீவு மாவட்டம் இருப்பதால் குருந்நூர் பகுதியிலும் இடைகற்கால மக்கள் வாழ்ந்திருக்க சாத்தியம் உண்டு.

பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய தொல்லியல் சின்னங்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்ட பிரதேசங்களாக மட்டகளப்பு, யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, பொன்பரப்பி முதலியவற்றை கூறலாம். அத்துடன் குருந்தனூரை அண்டிய பகுதிகளிலும் இத்தகைய பெருங்கற்கால பண்பாட்டிற்குரிய மட்பாண்டங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை நாயாற்றின் தொடராக உள்ள மணல் பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளன. இதனூடாக குந்தனூரும் பழமையான பெருங்கற்கால பண்பாட்டை உடைய பகுதி என்பதை உணர்ந்துகொள்ள முடிகிறது.

மேலும் குருந்தனூரைச் சுற்றியுள்ள பல இடங்களினின்றும் இத்தகைய மட்பாண்டங்கள் மீட்கப்பட்டுள்ளன. (சி.தெய்வேந்திரம் பிள்ளை.1978) இதனைவிட இப்பிரதேச மக்களின் வாழ்க்கை நியமங்களில் பின்பற்றப்பட்டுவரும் சில பழக்கவழக்கங்கள் சங்ககால மக்களின் பழக்கவழக்கங்களினை ஒத்தவையாகக் காணப்படுகின்றன. உதாரணமாக 'கல்யாணநாவல்' என்ற சொற்பதத்தைக் கூறலாம் திணைப்புலம் காத்தல், வேட்டையாடுதல், திமில்பருத்தகாளைகளை வளர்த்தல் முதலான செயல்கள் இடம்பெற்றுவருகின்றன. இவற்றைக் கொண்டு நோக்குகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிந்தியாவின் பெருங்கற்கால இறுதிப்பகுதியான சங்ககாலத்தில் வாழ்ந்த மக்களுடன் இப்பிரதேச (குருந்தனூர்) மக்கள் கொண்டிருந்த தொடர்பு வெளிப்படுகிறது.

வன்னிப்பகுதியின் காட்டுப்பகுதிகளிலும் சிறுசிறு மலைப்பகுதிகளிலும் மற்றும் மேட்டுநிலங்களிலும் பழங்குடியிருப்புக்கள் இருந்த இடங்களிலும் பல கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை பிராமி, பிரகிருதம், கிரந்தம் முதலிய எழுத்துக்கள் கொண்டவை. எனினும் இவை முழுமையாக வாசிக்கப்படவில்லை. பெரிய புளியங்குளம், மணற்கேணி, ஓதியமலை, குருந்தனூர் உட்பட முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் 59 கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக எச். பாக்கர், இந்திரபாலா போன்றோர் குறிப்பிடுகின்றனர். எனினும் இவை முழுமையாக வாசிக்கப்படவில்லை.

குருந்தலூர்ப் பகுதியில் மீட்கப்பட்ட சுடுமண் பொருட்களிலிருந்து வாசிக்கப்பட்ட பெயர்களாக ஈழ, உதய, கோ, வேந்த, தாமிர கோவேத என்பன குறிப்பிடப்படுகின்றன. இவற்றை ஒத்த எழுத்துடைய தொல்பொருட்கள் ஆமைகோட்டை, பூநகரி, அக்கரையன், கந்தரோடை, இரணைமடு முதலியனவும் விளங்குகின்றன. இங்கெல்லாம் பிராமிய எழுத்துக்களை அறிந்த மக்கள் வாழ்ந்திருப்பதால் பிராமிக்கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்ககூடிய சந்தர்ப்பம் குருந்தனூர் பிரதேசத்தில் உண்டு. எனவே ஆழமான ஆய்வுகள் தேவை.

குறுந்தனூர் மலையின் உயர்ந்த பகுதியில் சிவன் கோயில் இருந்த பகுதியாக கருதப்படும் இடத்தில் புராதன தன்மை கொண்ட கற்றூண்கள் காணப்படுகின்றன. இம் மலையின் தென்திசையில் உள்ள விளாத்திக்காட்டுப்பகுதியில் கல்வெட்டிற்குரிய தடயங்கள் உள்ளன. இவை ஆராயப்படும் இடத்து பல உண்மைகள் வெளிவர வாய்ப்புண்டு.

தொல்லியல் மூலாதாரங்களுள் நாணயங்கள் சிறப்பானதொரு பங்கை ஆற்றுவனவாய் உள்ளன. இப்பிரதேசத்திலிருந்து நூற்றுக்கணக்கான நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்த நாணயங்களை ஆராயுமிடத்து பல சிறப்பான உண்மைகளை வெளிக்கொணர முடியும். மேலும் நாணயங்களினூடு தொடர் பண்பாட்டு வளர்ச்சியையும் அறிய முடியும்.

பூநகரி, அக்கராயன,கோணாவில், இரணைமடு, முல்லைத்தீவு போன்ற தமிழ்பிரதேசங்களில் பெறப்பட்ட சுடுமண்சோழ, பாண்டிய மற்றும் இன்னோரன்ன நாணயங்களை குமிழமுனை, அலம்பில், குருந்தனூர் முதலிய இடங்களிலும் பெறவாய்ப்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வரலாற்றை அறிய துணைபுரியும் இலக்கிய ஆதாரங்களாக தொன்மை வாய்ந்தவையாக சிங்கள பாளி இலக்கியங்கள் விளங்குகின்றன.இவை பௌத்த சிங்கள முதலாண்மையை கூறி நிற்கின்ற போதும் சில இடங்களில் தமிழர்களது பூர்வீகம் பற்றிய செய்திகளையும் தருகின்றனவனாய் உள்ளன.

அவ்வகையில் மகாவம்சம், சூளவம்சம், சிங்கள அட்டகதா, ராயாவலிய, பூயாவலிய போன்ற நூல்களில் ஏதாவதொரு இடத்திலாவது குருந்தனூர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளமை சிறப்பான ஒன்றாகும்.

மகாவம்சத்தில் மிகப்பெரிய வர்ணணைகளை கொண்ட எல்லாளன் - துட்டகைமுனு போரின் போது கூட குருந்தூர்ப்பகுதி வீரர்கள் பங்கு கொண்டிருக்கலாம் எனும் ஐயம் எழாமலில்லை. ஏனெனில் இங்கு சிறந்தவீரர்கள் வாழ்ந்ததாக சூளவம்சத்தில் கூறப்படுகிறது. இதனைவிட இராயாவலியவில் பியங்கல(குருந்தனூர்) பகுதியில் வாழ்ந்த நாகமன்னர்களது படை உதவியை காலத்திற்குகாலம் சிங்கள மன்னர்கள் பெற்றமைபற்றி குறிப்பிடப்படுகிறது.

பௌத்தத்திற்கு முதன்மை கொடுக்கும் இவ் இலக்கியங்கள் குருந்தனூரை பௌத்தபூமியாக காட்டவும் முயல்கின்றன. கி.மு 1ம் நூற்றாண்டிலிருந்து அபயகிரி விகாரை பிக்குகள் வாழ்ந்து கல்வி கற்ற இடமாக குருந்தனூரை குறிப்பிடுகின்றனர். புத்தரின் இரண்டாம் ஈழ வியத்தில் ஈழ வியத்தில் நாகராட்சி இடம்பெற்ற பகுதியாக குருந்தனூரை கருதுவோரும் உள்ளனர்.

பாளி, சிங்கள இலக்கியங்கள் ஒருபுறமிருக்க "கொட்டுக்கிணற்றுப்பிள்ளையார் என்ற வரலாற்று நூல் கூறும் சில தகவல்களை நோக்குவோம் எனின் இதில் மிகப்பழைய காலத்தில் குருந்தனூர் மேல்மலைக்கோட்டை, சிவன் கோவில் ஆகியவற்றை அமைத்த மன்னனாக நாகராசன் என்பவனை குறிப்பிடப்படுகிறது. இவனே தண்ணிமுறிப்புக்குளத்தையும் கட்டியவனாக குறிப்பிடப்படுகிறான். எனினும் இவன் நாகர் குலத்தைவனா? என்ற வாதப்பிரதிவாதங்கள் எழாமலும் இல்லை.

கி.மு. 1ம் நூற்றாண்டில் கல்லாடநாக என்பவனால் குருண்டவாச என்னும் விகார இங்கு அமைக்கப்பட்டிருந்ததாகவும் அதற்கு முன்னரே நாகராசன் என்பவன் அமைத்த சிவன் கோயிலொன்று இங்கு இருந்ததாகவும் மகாவம்சம் கூறுகிறது.

பாளி, சிங்கள இலக்கியங்களை நுணுகி ஆராயும்போது மேலோட்டமாக குருந்தனூர் பகுதியை சிங்கள பூமியாக காட்டமுனைந்தாலும் தமிழ்மக்கள் அல்லத தென்னிந்திய மக்களுடன் தொடர்புடைய ஒரு கூட்டத்தினர் இப்பகுதியில் வாழ்ந்தமையை கூறிச்செல்வது கவனிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தொன்மையான திராவிடக் கட்டடகலை மரபிற்குட்பட்ட கற்கோயில் ஒன்று மலையின் உச்சியில் காணப்படுகிறது. இதில் ஒரேயொரு மண்டபமும் நெரே கருவறையும் உள்ளன. இங்கு ஒரு சிலை தலை வெட்டப்பட்ட நிலையிலும் இடுப்பின் கீழ்ப்பகுதி புதைக்கப்பட்ட நிலையிலும் உள்ளது. கழுத்தில் மாலை உள்ளது. ஆலயத்திற்குநேரே பின்பக்கமாக தீர்த்தக்கேணி உள்ளது. இது இவ்வாலாயத்தின் பண்டைய சிறப்பை விளக்குவதாய் உள்ளது. (கள ஆய்வு)

மேலும் சிலா் ஆனையை அடக்கிய அரியாத்தை வாழந்த இடமாக குருந்தனூரையும் குறிப்பிடுவா். இந்த ஐதீகத்தை விட்டு சிந்திப்போமானால் மிகப்பழங்காலம் தொடக்கம் பணிக்கா் எனப்பட்ட யானைப்போா் அடித்த யானையை வா்த்தகப் பொருளாகப் பயன்படுத்திய ஒரு கூட்டம் வாழ்ந்துள்ளமையை உணரமுடியும். அத்துடன் யானை கட்டி வளா்க்கக்கூடிய இடமாக குருந்தனூா் விளங்கியிருக்கலாம் என்ற ஐதீகம் எழாமலில்லை.

இப்பிரதேச மக்களிடம் வழங்கியவரும் ஐதீகங்களில் ஒன்று இங்கு பஞ்ச விநாயகா் கோயில் இருந்ததாக தெரிவிக்கிறது. அவற்றில் ஒன்று குருந்தனூா் பிரதேசத்தில் அமைந்திருக்கவேண்டும் இதற்கு சான்றாக இங்கு அரிய பழமை வாய்ந்த விநாயகா் சிலை ஒன்று இருந்தமைப்பற்றி தான் அறிந்ததாக எச்.பெல் குறிப்பிடுகிறாா்.

மேலும் இடப்பெயா் ஆய்வின் மூலம் நாம் இப்பிராந்தியத்தின் மொழியியல் சிறப்பினையும் அது பண்டைத்தமிழகத்துடன் கொண்டிருந்த தொடா்புகளையும் பற்றி அறிய முடிகிறது.

எது எவ்வாறிருப்பினும் இலங்கையின் ஆதிக்குடிப்பரம்பலை உடைய மாவட்டங்களுள் குருந்தனூா் அடங்கிய முல்லைத்தீவும் ஒன்றாகிறது. இது மறுக்க முடியாத உண்மை. இவ்வகையில் தொன்மைச்சிறப்பு மிக்க குருந்தனூாின் செழிப்பும் வனப்பும் இன்றும் அதன் பண்டைய நிலையை எடுத்துக்காட்டுவனவாய் உள்ளன. எனினும் பிற்காலத்தில் மக்கள் ஏன் இப்பகுதியை கைவிட்டாா்கள் என்பதற்கு தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை சிலா் குருந்தனூருக்கு அண்மையில் இருந்ததண்ணி முறிப்புக்குளம் உடைப்பெடுத்ததால் இது நிகழ்ந்தது எனவும் இன்னும் சிலா் இங்கு வாழந்த மக்கள் வறுமைத்துன்பம் காரணமாக அகன்றனா் எனவும் கூறுகின்றனா்.

இந்துமதம் சாா் விக்கிரங்கள் கிடைத்துள்ளது போல் பௌத்தமதம் சாா் சின்னங்களும் ஏராளமாக கிடைத்துள்ளன. எனினும் நாகமன்னா் சாா் வரலாற்றுத் தொடா்பே முதன்மைபெறுகிறது. இன்றும் ஐயனாா், கணபதி, முருகன், போன்ற தெய்வங்களின் ஆலயங்களே அப்பகுதியிலேயே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. குருத்தனூாின் ஒரு பகுதியிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகாரை, பௌத்தமடம் என்பன காணப்பட்டுள்ளன. இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை சிங்கள மயமாக்களின் அடிப்படையில் அமைந்ததாக சில நூலாசிரியர்கள் கூறுகின்றனர் (க.வியயன்- 1991).

எனினும் ஒட்டுமொத்தமாக பார்க்கின்றபோது இலக்கியங்கள், தொல்பொருள்சான்றுகள், இடப்பெயர்கள் மக்களிடையே நிலவிவரும் ஐதீகங்கள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றை கொண்டு நோக்குகையில் இலங்கையின் வரலாற்று தொடக்ககாலத்திலிருந்தே வன்னிப்பகுதி தனக்கென ஒரு செல்வாக்கு பெற்றிருப்பதையும் அத்துடன் இணைந்து குருந்தனூர்ப்பகுதி மக்கள் குடியிருப்புக்களை கொண்ட செழிப்பான பிரதேசமாக விளங்கியதென்பதும் புலனாகிறது. தொல்லியல் செழுமை மிக்கதாக கருதப்படும் இப்பிரதேசத்தில் திட்டமிட்ட வரன்முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை கவலைக்குரியதும் தலைகுனிவிற்கும் உரியதான ஒரு விடயமாகும். எமது வரலாற்றை நாமே புறக்கணிப்பதும் நாமே எம்மை வலிந்து அழித்து கொள்வதற்கு ஒப்பாகிறது. இனிவரும் காலங்களிலாவது குருந்தனூர் பிரதேசத்தின் வரலாற்றை தெளிவாக முன்வைக்க ஆய்வாளர்கள் முன்வருவார்கள் என நம்புவோம்.

## நூற் பட்டியல்


தெய்வேந்திரம்பிள்ளை. சி.,(குமிழமருதன்)
01.04.1968 கொட்டுகிணற்றுப் பிள்ளையார், ***வீரகேசரிவாரவெளியீடு***,

தெய்வேந்திரம்பிள்ளை. சி.,(குமிழமருதன்)
1978 கொட்டுக்கிணற்றுப்பிள்ளையார், குமிழமுனை, முல்லைத்தீவு

தெய்வேந்திரம்பிள்ளை.சி., ***வற்றாப்பளைகண்ணகை அம்மன் கருணைமலர்***, கொட்டுக்கிணற்றுப்பிள்ளையார் வற்றாப்பளை ஆலய பரிபாலனசபை வெளியீடு, முல்லைத்தீவு:1992.

வியயன், ***மணலாறு***, தமிழ்த்தாய்பதிப்பகம், யாழ்ப்பாணம்:1991.

சிற்றம்பலம், சி.க., ***யாழ்ப்பாணத்தொன்மை வரலாறு***, யாழ் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்:1992.

சிற்றம்பலம், சி.க., ***ஈழத்து இந்து சமய வரலாறு***, பாகம்.1,
கி.பி 500 வரை, யாழ் பல்கலைக்கழக வெளியீடு, கொழும்பு:1996.

நடராசா.ச.செ., ***வன்னிப்பாரம்பரிய***, "கொம்பறை", கனடா
வன்னி நலன்புரிசங்க வெளியீடு:1998.

இந்திரபாலா.க., ***திராவிடக்கட்டடக்கலை***,1971.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரோமப் பேரரசின் வீழ்ச்சி - ஒரு பார்வை

செல்வி. தெ. பிரஷாந்தினி
மூன்றாம் வருடம்
வரலாறு சிறப்புக்கலை.

## அறிமுகம்:-

உலகின் பழம்பெரும் நாகரிகங்களுள் பண்டைக் கால ஐரோப்பிய நாகரிகங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அவற்றில் முதன்மை பெற்றுத் திகழ்வது உரோம நாகரிகமாகும். இந்நாகரிகம் ஐரோப்பிய வரலாற்றில் சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் பல வழிகளிலும் முன்னோடியாக விளங்கியது. உரோமாபுரியானது பல ஆண்டு முயற்சியின் பின் கி.மு753 இல் நிறுவப்பட்டது. அது மத்தியதரைக் கடலின் நடுவில் அமைந்துள்ள இத்தாலிய தீபகற்பத்தின் மத்தியில் ரைபர் நதி ஓரமாக அமைந்துள்ளது. இவ் உரோமாபுரியானது நகர அரசாக தோன்றி காலப்போக்கில் வளர்ச்சி பெற்று கிழக்கே மத்தியதரைக் கடல் வரையும், மேற்கே அத்திலாந்திக் சமுத்திரம் வரையும், வடக்கே பால்டிக் கடற்கரை வரையும், தெற்கே ஆபிரிக்கா வரையும் விரிந்து சென்று கி.மு 27 - கி.பி 180 வரையான காலகட்டத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. இத்தகைய சிறப்புக்கு வலிவும், பொலிவும் பெற்ற மன்னர்கள் ஆட்சி புரிந்தமையே காரணமாகும். உண்மையிலேயே இக் காலம் உரோம வரலாற்றில் பொற்காலம் ஆகும். இவ் உரோமாபுரியானது "ரோமுவால்" என்பவரால் நிறுவப்பட்டதால் உரோமாபுரி என பெயர் பெற்றது. இவ்வாறு சிறப்புடன் திகழ்ந்த உரோம் பற்றி அறிவதற்கு இக்கால மக்களின் வரலாற்று நூல்கள், இலக்கியங்கள், எச்சங்கள், தொல்லியல் அகழ்வுகள், நாணயங்கள், நடைமுறை வாழ்க்கை அனுபவங்கள், பிறநாட்டார் குறிப்புக்கள் என்பன உதவுகின்றன.

ஐரோப்பிய வரலாற்றில் மேன்மையுடன் விளங்கிய உரோமாபுரியானது, அக்காலகட்டத்தின் பல்வேறு காரணங்களால் சீர்குலைந்து, படிப்படியான வீழ்ச்சியை அடைந்தது. இப் பேரரசு வீழ்ச்சி அடைந்தமைக்கான காரணங்களாக தலைநகர் மாற்றம் பெற்றமை, வாரிசுரிமைச் சட்டம் பின்பற்றப்படாமை, மன்னராட்சி குடியாட்சிக்கு செல்லல், ஆட்சி செய்த மன்னர்களின் கொள்கை, ஆட்சியின் சீர்கேடு, இராணுவ ஆதிக்கம், பொருளாதார சமூக காரணங்கள், அடிமைகள், பல இன மக்கள், வாணிபத் துறையில் ஏற்பட்ட மாற்றம், மாறுபட்ட சமயக் கோட்பாடுகள், மாறுபட்ட சமயக் கருத்துக்கள், பேரரசின் வெளிநாட்டுப் படையெடுப்புக்கள் என்பன இனங் காணப்படுகின்றன. இருப்பினும் உரோமின் வீழ்ச்சிக்கு அடிப்படை காரணங்களாக அரசியல், பொருளாதார, சமூக காரணிகள் முன்வைக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் காரணிகள்

அந்த வகையில் முதலில் அரசியல் காரணங்களை நோக்கின், உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கு உடனடிக் காரணமாக தலைநகர் மாறியமையை குறிப்பிடலாம். போர்கள் காரணமாக படைதிரட்டப்பட்ட படைகளுக்கு வரி வசூலிக்கப்பட, மக்கள், கைவினைஞர்கள், விவசாயிகள், வரிச்சுமை தாங்க முடியாது இடம் விட்டு இடம் சென்றனர். இதனால் தலைநகரங்கள் மாற்றப்பட்டன. எல்லைப்புற இடைவிடாத ஊடுருவல்களும், படையெடுப்பு என்பவற்றாலும் கிழக்குப் பகுதி உரேரமானியப் பேரரசின் மையமாகியது. இறுதியில் கி.பி 330இல் உரோமானியப் பதிலாக கொன்ஸ்தாந்திநோபிள் தலைநகரமாக்கப்பட்டது. இதுவும் உரோமப் பேராசின் சீர்குலைவிற்கு காரணமாகும். கொன்ஸ்டான்ரைன் உரோமின் தலைநகரை மாற்றியமையாலேயே உரோம் பழைய பொலிவை இழந்தது

படிப்படியான வீழ்ச்சியில் சீர்குலைந்து வந்த உரோமானது கி.பி 5ஆம் நூற்றாண்டில் முற்று முழுதாக வீழ்ச்சியடைந்தது. இவ் வீழ்ச்சிக்குரிய ஒரு காரணியாக வாரிசுரிமைச் சட்டம் பின்பற்றப்படாமை என்னும் போது, அரசாட்சியில் ஒரு மன்னனுக்கு பின் யார் ஆட்சியை ஏற்பது என்ற தெளிவான சட்டம் இன்மையால் போர் ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட குழப்ப நிலமை காரணமாக உரோம் வீழ்ச்சியடைந்தது. உதாரணமாக மார்க்கஸ் அரேலியஸ் என்ற மன்னனுக்கு பின் 5 மன்னர்கள் செனட் சபையின் ஆதரவுடன் தங்களுக்குப் பின் யார் ஆட்சிக்கு வருவது என தாங்களே எழுதி வைத்தனர். மார்க்கஸ் அரேலியஸ் என்ற மன்னன் சற்று வித்தியாசமான முறையில் தனது மகனை அடுத்த வாரிசாக நியமித்தான் தீய சக்திக்கு பொறுப்பாக இருந்த இவன் ஆட்சியில் அமைதியின்மை, போர், குழப்பம் என்பன ஏற்பட தூர இடத்து படைகளும் தலைநகர் ஆணைக்கு கட்டுப்படவில்லை. இவ்வாறு வாரிசுரிமையை பின்பற்றாத அவர்களது அரசியலில் அது பற்றி குறிப்பிடவில்லை. அது பெருங்குறையாகும். 200 ஆண்டு கால அமைதியான ஆட்சிக்குப் பின் போட்டிப் பேரரசர்கள் உள்நாட்டுப் போரில் ஈடுபட்டனர். எனவே பேரரசு தொடர்ந்து குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது. பேரரசில் சுய ஆட்சிக்கு எவ்வித வாய்ப்பும் இல்லை. சக வல்லமை உள்ள அராசாங்கம் தங்களை பாதுகாக்கும் என்று கொள்ள முடியாமையால் உரோமப் பேராசின் வீழ்ச்சி தவிர்க்க முடியாதாயிற்று. கி.பி 3ஆம் நூற்றாண்டில் மைய அதிகாரம் பெற்றிருந்த பேரரசு ஆட்டம் கண்டது. அதன் விளைவாக அரசுகளின் அதிகாரம் பிரபுக்களின் கைகளில் போனது. அது அமைதியினை நிலை நாட்டவும், இராணுவத்தை கட்டுப்பாட்டில் கொண்டு வரவும் தவறிவிட்டது. இதனால் ஊழல் மிக்க கட்டுப்பாடில்லாத அரசு வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

உரோமப் பேரரசின் மன்னராட்சி குடியாட்சிக்கு சென்றமையாலும் உரோம் வீழ்ச்சியடைந்தது. மன்னராட்சியிலே மலர்ச்சி கண்ட பேரரசு, குடியரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியிலே (மக்களாட்சி) செனட் ஆட்சித் துறையின் அங்கமாகச் செயற்பட்டது. குடியரசு ஆட்சித் துறையின் அங்கமாகச் செயற்பட்டது. குடியரசு ஆட்சியிலே நிறைவான பிரதிநிதித்துவத்திற்கு இடம் இல்லாமையால் உயர்குடியானவனின் உறுதியற்ற ஆட்சியின்மை, சகிப்புத் தன்மை இன்மை என்பவற்றாலும் உரோம் வீழ்ச்சியடைந்தது. 1ஆம் டயக்கிளிஸ் மன்னன் ஆட்சியிலே சாதாரண மக்களின் நலன் காக்கப் படவில்லை. இக் காரணமும் உரோமின் வீழ்ச்சிக்கு அடிகோலியது. மேலும் போர்களாலும், படைப் பெருக்கத்தாலும் படைத் தளபதிகளின் செல்வாக்கு வளர்ந்தது. அந்த அளவிற்கு அரசர்களின் செல்வாக்கு குறைந்தது. படைத் தளபதிகளின் ஆதரவைப் பெற்று ஆள வேண்டிய நிலை அரசர்களிற்கு ஏற்பட்டது. படைத் தலைவர்களே பின்னர் பல சந்தர்ப்பங்களில் ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றினர். இதுவும் உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமாயிற்று.

உரோமப் பேரரசில் ஆட்சி செய்த மன்னர்களின் கொள்கையாலும், உரோம் வீழ்ச்சியடைந்தது. அதாவது உரோமில் ஆட்சி செய்த மன்னர்களிலே கொன்ஸ்டான்ரைன் போன்ற சில மன்னர்கள் தவிர சிலர் திறமை அற்றவர்களாகவும் வலிமை அற்றவர்களாகவும் காணப்பட்ட போதும் மதி மயங்கி கேளிக்கைகளிலும் ஈடுபட்டனர். இம்மன்னர்கள் ஆட்சி செய்வதை விட ஆட்சியின் சீர்கேடுகளுக்கே அதிக அக்கறை காட்டினர் இதனால் உரோமப் பேரரசு வீழ்ச்சி அடைந்தது. உரோமப் பேரரசில் திறமை மிக்க மன்னர்கள் வலிமையான அரசினை அமைக்க பெரும் பகுதியிடங்களைக் கைப்பற்றி பேரரசை விஸ்தரித்து விட்டுச் சென்றனர். ஆனால் திறமையற்ற மன்னர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் கட்டுப்பாடில்லாத அரசு, திட்டமற்ற ஆட்சி என்பவற்றாலும் உரோமப் பேரரசு வீழ்ச்சியடைந்தது. இவ்வாறு பரந்து விரிந்த பேரரசை அவர்கள் ஒழுங்காக நிர்வகிக்கவில்லை. பல மாநில ஆளுநர்கள் ஜேர்மனியர்களாக இருந்ததால் அவர்கள் ஆட்சியில் ஒழுங்கற்றவர்களாக நடந்து கொண்டார்கள். இவ் ஆட்சியின் சீர்கேடும் உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாயிற்று.

உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கு இராணுவத்தின் வலிமையின்மையும் ஒரு காரணமாகும். மன்னன் சம்மோடலின் தீய குணங்கள் அவனை கொலை செய்ய வழிவகுத்தது. இவர்கள் தலைநகருக்கு பயந்து நடக்கவில்லை. இக்காலத்தில் இராணுவ வீரரிடம் ஆட்சிப் பொறுப்பு கொடுக்கப்பட அந்தச் சலுகை நாட்டின் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் மீறியது. வீரர்கள் திருமணம் செய்தார்கள். இதனால் உரோம் வீழ்ச்சியடைந்தது. ஆரம்பத்தில் உரோமாபுரி வீரர்கள் ஆற்றல், வலிமை கொண்டர்கள். பேராற்றல் படைத்தவர்கள். இதில் நாளடைவில் மாற்றம் ஏற்பட்டது. மற்றும் இராணுவத்தில் நாகரிகமற்றவர்களும் சேரலானார்கள். அவர்கள் தங்கள் மக்களிற்கு உண்மையுள்ளவர்களாக நடந்து கொண்ட போதும் பேரரசிற்கு உண்மை உள்ளவர்களாக நடந்து கொள்ள முடியவில்லை. நன்றி கெட்ட வகையில் அவர்கள் நடந்து கொண்டார்கள். அதனால் இராணுவம் போரிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையை இழந்தது. இவ்வாறான அரசியல் காரணங்களால் உரோமப் பேரரசு வீழ்ச்சியடைந்தது எனலாம்.

## பொருளாதாரக்காரணிகள்

இனி, உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்கான பொருளாதார காரணிகளை நோக்கின், உரோமப் பேரரசின் இடைவிடாத போரின் காரணமாக மன்னர்கள், மக்கள் போரில் கூடியளவு கவனம் செலுத்தியமையால், விவசாயம் தொழில் பெருக்கத்தில் அதிக நாட்டம் செலுத்தவில்லை. சிசிலி, ஐரோப்பா போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதியை எதிர்பார்த்தமையால் இவர்கள் ஏற்றுமதியில் அக்கறை காட்டவில்லை. உள்நாட்டு உற்பத்தியில் அக்கறை செலுத்தாத இவர்கள் நாட்டின் எல்லைகளை விஸ்தரித்தார்கள். எல்லை விரிவடைந்த அளவுக்கு உற்பத்தி விரிவடையாததால் இறக்குமதியில் ஈடுபட்டனர். இவர்கள் ஈட்டிய செல்வம் எல்லாம் போர் செலவுக்கே பயன்பட்டன.

பேரரசில் பொலிவற்றதாக காணப்பட்ட பொருளாதார நிலை கி.பி 5ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தொடர்ந்து வந்தது. உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட அம்மக்கள் உற்பத்தி பற்றாக்குறையால் மிகவும் பாதிக்கப்பட்டனர். உரோமாபுரி மக்களின் முக்கிய தொழில் கடன் கொடுப்பதாகும். மக்கள் போரிட்டு கொள்ளைப் பொருளில் வாழ்க்கை நடாத்தி வந்தனர். நாளடைவில் போர்கள் குறையவே அவர்களின் வாழ்வும் பாதிக்கப்பட்டது. எனவே உரோமப் பேரரசு பணப்பற்றாக் குறையால் சீர்குலைந்தது.

இத்தாலியிலும் அதனை சுற்றியிருந்த மாநிலங்களிலும் கி.பி 3ஆம் நூற்றாண்டு முதல் நிலவளம் குன்றி விட்டதாகவும், கனிய வளங்களை கொண்ட சுரங்கங்கள் வற்றி விட்டதாகவும் ஒரு சிலர் கருதுகின்றனர். தட்ப வெட்ப நிலையிலும் மாறுதல் ஏற்பட்டதென்பர். இவை யாவும் உண்மையென தோன்றவில்லை. ஆனால் கி.பி 3ஆம் நூற்றாண்டு முதல் விவசாய உற்பத்தி குன்றியது. அதற்கு காரணம் தட்ப, வெட்பக்காரணம் அல்ல. அடிமைகளை வைத்து பழைய கருவிகளையும், முறைகளையும் கொண்டு விவசாயம் செய்தமையே காரணமாகும். அரசியல் குழப்பங்கள் விவசாயத்தை பாதித்தன. மேன்மேலும் ஆழமாக தோண்டுவதற்கு தேவையான கருவிகளும் தொழில் நுட்பமும் அக்காலத்தில் இல்லாமையில் சுரங்க உற்பத்தி குன்றியது. இத்கைய காரணங்களாலும் உரோமப் பேரரசு வீழ்ச்சியடைந்தது எனலாம்.

உரோமப் பேரரசில், பண்ணை தொழிற்கூடங்களில் எல்லா வகையான வேலைகளும் அடிமைகளை கொண்டே செய்யப்பட்ட போதும், ஓரளவு மனிதர்களாக நடாத்தப்பட்ட போதும் அவர்களுக்கு உணவு, உடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதியளவு தரப்படாது ஆடு, மாடுகள் போல் நடாத்தப்பட்டனர். வேலைசெய்யாவிடில் தண்டனையும் வழங்கப்பட்டது. இவர்களின் வேலை செலவற்றதனால், வேலை திறமை மிகவும் குறைவானதாகும். விருப்பு, முயச்சியற்று வேலை செய்த இவர்கள் கடனுக்கு வேலை செய்தமையால் நிலம் நன்றாக உழப்படல், பயிர் நன்றாக இருந்தல், வருமானம் போதியளவானதா என்பதில் அக்கறை காட்டாமல் எஜமானுக்கு எவ்வளவு நட்டத்தை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு நட்டத்தை ஏற்படுத்தினர்.

இத்தகைய அடிமைகளை வைத்துக் கொண்டு புதிய கருவிகளையும் புதிய முறைகளையும் கையாண்டு விவசாய உற்பத்தி செய்ய முடியாததாயிற்று. உதாரணமாக பழைய கனத்த கலப்பைக்கு பதிலாக, புதிய லேசான கலப்பை உரோமில் கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால் அதனை கையாளும் அக்கறையும், திறமையும் அடிமைகளிடம் இல்லை. எனவே சுதந்திர விவசாய குடிகள் மட்டுமே இதனை பயன்படுத்தினர். மாவரைக்கும் நீர்ச்சக்கரம் (Water Wheel) கண்டுபிடிக்கப்பட்டாலும், இத்தாலி, சிசிலி போன்றவற்றில் பழைய முறைப்படி அடிமைகள் கை இயந்திரங்களில் மா அரைத்தனர். இத்தகைய விவசாய முறைகளினால் உற்பத்தி குன்றியது. நிலங்கள் வளமிழந்து தொழில் உற்பத்தியும் குன்றியது. இதனால் பொருளாதார ரீதியில் உரோம நாகரிகமும். அதன் பேரரசும் வீழ்ச்சி கண்டது.

## சமூகக் காரணிகள்

இனி, சமூக ரீதியான உரோமப் பேரரசின் வீழ்ச்சியை நோக்கின், அடிமைகள் பெருந்தொகையில் காணப்பட்டமை வீழ்ச்சிக்குரிய மற்றொரு காரணமாகும். போர்க் கைதிகள், அடிமைகளாக பயன்படுத்தப்பட்டனர். அடிமைகள் குறைந்த கூலிக்கு கிடைத்தமையால், அவர்கள் எல்லாத் துறைகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர். நாளடைவில் உரோமாபுரியின் மக்களும் அதனால் பாதிக்கப்பட்டனர். எனவே அவர்களது இயல்புகள் குணங்கள் மாற்றம் பெற்றன. பேரரசின் எழிலுக்கும், அதன் ஏற்றத்திற்கும் பாடுபட்ட மக்கள் அதன் வீழ்ச்சிக்கும் வழிவகுக்கும் நிலை ஏற்பட்டது. உள்நாட்டுப் போர் அதற்குரிய முக்கிய காரணியாகும். மேலும் போர்க் காலத்தில் கைது செய்யப்பட்ட அடிமைகள், செல்வந்தர்களின் சுகவாழ்வுக்காக பயன்பட்டனர். அடிமைகளாக இருந்த இவர்கள் காட்டுமிராண்டிகள் படையெடுத்து வந்த போது அவர்களுக்கெதிராக செயற்படுவதற்கு பதிலாக தமது செல்வாக்கின் மூலம் சமூகத்தை சீரழிக்க உதவினர். ஸ்பாட்டா கஸ் மன்னன் தலமையில் கிளர்ச்சி செய்து உரோமின் அழிவுக்கு காரணமாயினர்.

மலேரியா, பிளேக், கொள்ளை நோய் அடிக்கடி தோன்றியதாலும் உரோமாபுரியின் மக்கள் தொகை குன்றி வீழ்ச்சி ஏற்பட்டது என்பர் சிலர். மக்கள் நெருக்கம் அதிகரிப்பும், சுகாதாரம் அற்ற வீடுகளும், தெருக்களுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல வித நோய்கள் உரோம நகரில் பரவுவதற்குக் காரணமாயிருந்தன. கி.பி 167இல் உரோமப் பேரரசு முழுவதிலும் பிளேக்நோய் பரவி ஆயிரக்கணக்கான மக்கள் மடிவதற்கு காரணமாக இருந்தது. இலக்கியம், எட்டுரியா போன்ற மாநிலங்களில் நதிகளின் கழிமுகங்களிலும் நீர் தேங்கிக் கிடந்த வேறுபல இடங்களிலும் மலேரியா நோய் அடிக்கடி ஏற்பட்டது. இருப்பினும் இத்தகைய நோய்களால் ஏற்பட்ட அழிவுக்கு ஈடு செய்யும் வகையில் மக்கட் தொகை பெருகி வந்ததே ஒழிய குறையவில்லை. எனவே உரோமின் வீழ்ச்சிக்கு நோய்களை உதாரணமாக காட்டுவது பொருந்தாது. எல்லா நாடுகளிலும் அப்பொழுதும், இப்பொழுதும் ஏற்படுவதைப் போலவே இந்நோய் உரோமாபுரியிலும் மற்ற மாநிலங்களிலும் ஏற்பட்டமையைக் காணலாம்.

உரோமானிய சமுதாயத்தின் மேல்மட்டத்தில் குடும்ப ஒழுக்கங்கள் கெட்டு மணஉறவுகள் கேலிக்கூத்தாகி போலி ஆடம்பரங்கள் மிகுந்து ஆளும் வகுப்பினரின் திறமையும் தகுதியும் வீழ்ச்சியுற்றன. பிற்காலத்தில் உரோமானியப் பேரரசுகளின் வரலாறு இதை நன்கு புலப்படுத்துகின்றது. உயர் குடும்பங்களில் நாகரிகம் என்ற போர்வையில் தீய ஒழுக்கங்களும், பாவச் செயல்களும் மலிந்தன. இது குடும்ப வாழ்வை மட்டுமன்றி உரோமின் ஆட்சியையும் வெகுவாக பாதித்தது என்பதில் ஐயமில்லை. வாரிசுரிமை பற்றிய பூசல்களும், போர்களும், சதிகளுக்கும், கொலைகளுக்கும் இந்நிலை காரணமாயிற்று. அரசியலில் மட்டுமன்றி இலக்கிய துறைகளில் கூட கி.பி 1ஆம் நூற்றாண்டுக்கு பிறகு சிறந்த மனிதர்கள் அருகிப் போனதற்கு இக்காரணம் அடிப்படை என்று கருதப்படுகின்றது.

உரோமாபுரியில் பல நாட்டவர்கள் குடியேறியமையால் பல இனமக்கள் அங்கு காணப்பட்டமை வீழ்ச்சிக்குரிய காரணமாகும். நாகரிகமற்ற இவர்கள் எண்ணிக்கை பெருக பெருக உரோமர்களின் எண்ணிக்கை குறைந்தது. அதனால் உரோமனியர்கள் குறைந்தளவே காணப்பட்டார்கள். இதனாலேயே வரலாற்று ஆசிரியர் "பேரரசு மனிதர்கள் உரோமானியர்கள் இல்லாததால் அழிந்தது" (The Empire Perished for want of men) என்று குறிப்பிடப்படுகின்றது. எனவே பல இனத்தவர்களது படையெடுப்புக்களும் உரோமின் வீழ்ச்சிக்குரிய காரணமாயிற்று.

## மாறுபட்ட சமயக் கோட்டுபாடுகள்

மாறுபட்ட சமயக் கோட்பாடுகளினால் உரோமாபுரியானது வீழ்ச்சியடைந்தது எனும் போது பழம் பெருமையிலிருந்து மாறுபட்ட புதிய தத்துவ நெறிகளிற்கு உரோமர்கள் தலை வணங்கினர். ஜித்த கோரணிசம், ஸ்தாயிசம் போன்ற தத்தவ நெறிகளில் அதிக நாட்டம் செலுத்தினர். இத்தகைய நிலை உரோமின் அழிவிற்கு வழிவகுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரோமானியரிடையே வேறுபட்ட சமயக் கருத்துக்கள் நிலவின. ஆரம்பத்தில் மன்னர்கள் சமயப் பொறை உடையவர்களாயிருந்தனர். மார்க்கங், நீரோ, அரிலியங், டயோக்ளீஷியன் போன்றவர்கள் கிறிஸ்தவர்களை வெறுத்தனர். அனால் கொன்ஸ்ரான்டைன் என்ற மன்னன் கிறீஸ்தவர்களிற்கு ஆதரவளித்து கிறிஸ்தவமதத்தினை அரச மதமாக்கினான் ஆனாலும் உரோமப் பண்பாடு "நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக" குறைந்து காணப்பட்டது. அது தீங்கான பாதையில் சென்று கொண்டிருக்க உரோமப் பேரரசு பாதிக்கப்பட்டது. திருச்சபையின் ஏற்றம், அதனுடைய வலிமை பேரரசின் வீழ்ச்சிக்கு விஷக் கிருமியாகச் செயற்பட்டது. எனவே இத்தகைய காரணியாலும் உரோமப் பேரரசு வீழ்ச்சியைத் தழுவலாயிற்று.

## உடனடிக்காரணம்

இவ்வாறு படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்த உரோமாபுரியினை கோத்துக்களும், வோண்டல்களும் படையெடுத்து அழித்தனர். பால்க்கன் தீபகற்பத்தில் குடியேறி வாழ்வதற்குக் கோத்துக்களை (Goths) ஏற்கனவே அனுமதித்திருந்த உரோமானியர்கள். தம்மோடு செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறி சொல்லொணாத்கொடுமைகளிற்கும், வறுமைக்கும் தம்மை ஆளாக்கிய உரோமானியர் மீது கோபம் கொண்டு படையெடுத்துச் சென்று கி.பி 378இல் ஏட்ரியாநோபிள் நகரிற்கருகில் உரோமானியப் படைகளை வென்று பேரரசையும் கொன்றனர். அடுத்த பேரரசர் ஏராளமான பொன்னும், பொருளும் கொடுத்து அவர்களோடு சமாதானம் செய்து கொண்டார். இதிலிருந்து உரோமப் பேரரசின் நிலை நன்கு விளங்குகின்றது.

நாகரிகமற்றவர்களான பிராங்குகள், கோத்துக்கள், விசிகோத்துக்கள், ஆங்கிலோ சாக்சன்கள், ஹீணர்கள் போன்ற நாகரிகமற்ற காட்டு மிராண்டித்தனமான மக்களின் படையெடுப்புக்கள் அடிக்கடி நடைபெற்றன. இது 3ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்து நடைபெற்று வந்தது. அந்த நாட்டின் வளமும் நலமும் தகுதியான சீதோசண நிலையும் அவர்களை பெரிதும் ஈர்த்தன. எனவே "அந் நாகரிகமற்றவர்கள் பேரரசை அழிக்க வேண்டுமென்று படையெடுக்கவில்லை அதை அனுபவிக்க வேண்டுமென்று படையெடுத்தார்கள்" என்று கருதப்படுகின்றது. எனினும் அவர்கள் பின்பற்றிய வழிமுறைகள் அழிவை தேடிதந்தன. உரோமானிய மன்னர்களால் அவர்களின் தாக்குதலுக்கு தாக்குப் பிடிக்க முடியவில்லை. முடிவில் உரோமப் பேரரசின் மேற்கில் முற்றிலும் அழிவைக் கொண்டு வந்தன. உள்ளுக்குள்ளேயே புரையோடிக் கிடந்த உரோமப் பேரரசின் அழிவை வெளிப்படையாக அவர்கள் கொண்டு வந்தனர் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

இதே கோத்துக்கள் தாம் கி.பி 410 இல் உரோம் நகரையும் கைப்பற்றி சூறையாடினர். இத்தாலியிலும் உரோமிலும் இருந்த அடிமைகளும், மற்ற ஏழைகளும் கோத்துக்களுக்கு உதவினர். மூன்று நாட்கள் உரோம் நகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிந்தது, இறுதியாக உரோமப் பேரரசை அழித்தவர்கள் வாண்டல்கள் (vandals) இவர்கள் ஸ்பெயினில் உரோமானியரின் ஆட்சியை ஒழிந்து, பின்னர் வடஆபிரிக்காவுக்கு சென்று காக்த்தேஜீக்கு அண்மையில் ஓர் அரசை அமைத்துச் சிறிது காலம் இருந்த பின் மீண்டும் கடல் கடந்து இத்தாலிக்குள் வந்து கி.பி 476இல் உரோம நகரைக் கைப்பற்றி இடித்துத் தகர்த்தனர்.

எனவே ஐரோப்பிய வரலாற்றில் சிறப்புடன் மேன்மை பெற்று விளங்கிய உரோமாபுரி, ஐரோப்பா ஆசியா, ஆபிரிக்கா ஆகிய முக்கண்டங்களையும் ஆண்டுபெருமை பெற்றது. ஆனாலும் அது பல்வேறுபட்ட காரணங்களால் வீழ்ச்சியை தழுவிய போதும் இறுதியில் முற்றாக வீழ்ச்சி அடைந்ததனால் அதன் மாடமாளிகைகள், அழகிய தெருக்கள், சதுக்கங்கள், சிலைகள், விளையாட்டு அரங்குகள், குளியல் மண்டபங்கள், நூல் நிலையங்களும் அழிந்தன. அத்துடன் பேரரசின் பண்பாட்டு விழுமியங்களும் அழிந்தன. வலுவும் பொலிவும் பெற்ற உரோம் மூன்று நாட்கள் தீயில் எரிந்து சாம்பலாயிற்று.

## நூற் பட்டியல்


ஜோசப். செ., **நாகரிக வரலாறு,** சென்னை: 1974.

ஆலாலசுந்தரம், இரா.,**ரோமாபுரி வரலாறு,** தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்: 1972.

சத்தியசீலன், ச., **நாகரிகங்களுக்கு ஓர் அறிமுகம்,** யாழ்ப்பாணம்: 1994 அகிலம் வெளியீடு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கமும் ஐதீகங்களும் - ஒரு பார்வை

செல்வன். இ. ஸ்ரீதரன்
மூன்றாம் வருடம்
வரலாறு சிறப்புக்கலை.

பண்பாடு என்பது ஓரிடத்தில் குறிப்பிட்ட மக்களிடையே காணப்படும் சமூக, சமய, பொருளாதார, கலை, கலாசார அம்சங்களை உள்ளடக்கிய ஒரு வளர்ச்சிப் போக்கினைக் குறிப்பிட்டு நிற்கின்றது. ஐதீகம் என்பது ஓரிடத்தின் பெயர், பெயர்க்காரணம், மரபுகள் போன்றவற்றை அடியொற்றி நீண்டகாலமாக செவிவழியாகப் பின்பற்றப்படுவதாகும். ஐதீகம் என்பது வரலாறு அல்ல. ஆனால் வரலாற்றைக் கட்டியெழுப்பும் மூலாதாரமாக ஆகிவிடுகின்றது. இவற்றின் அடிப்படையில் தென்னிந்தியாவின் பண்பாட்டு உருவாக்கம் தொடர்பான ஐதீகங்களை நோக்குகையில் பல்வேறு அம்சங்களை வெளிக்கொணரமுடியும். இலக்கியங்களில் ஆங்காங்கே எடுத்துக் கூறப்பட்டுள்ள மரபுக்கதைகள், இன்றும் தென்னிந்திய மக்களிடையே நிலவும் ஐதீகக்கதைகள், ஐதீகங்களைப் பற்றிய அறிஞர்களின் கருத்துக்கள் போன்றவற்றினூடாக தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கத்தில் ஐதீகங்கள் பெறும் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்த முடியும். ஒழுகலாறு தொடர்பான நெறிகள், விழுமியங்கள், வழக்காறுகள் என பல்வேறு கூறுபாடுகளைக் கொண்டதாகப் பண்பாடு காணப்படுகின்றது. அந்தவகையில் தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கமானது பல்வேறு கூறுபாடுகளைக் கொண்டு எழுச்சி பெற்றுள்ள போதும் அவற்றில் ஐதீகங்களின் முக்கியத்துவம் அளவிடற்கரியதாக உள்ளது. தென்னிந்தியப் பண்பாட்டு உருவாக்கமும் ஐதீகமும் பற்றி நாம் பின்வரும் அம்சங்களினூடாக எடுத்து நோக்க முடியும். உலக நாடுகளில் ஐதீகங்களின் முக்கியத்துவமும், அவற்றின் தென்னிந்திய வருகையும், தென்னிந்திய பௌதீக அலகுகளுடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகங்கள், அரச வம்சங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகங்கள், மதங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகங்கள், சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகங்கள், முதலான முக்கிய அம்சங்கள் ஊடாக தென்னிந்தியப் பண்பாடானது உருவாக்கம் பெற்றுள்ளமையை நோக்க முடியும்.

பண்பாடு, ஐதீகம் என்பவற்றின் தோற்றம், பொதுவாக உலக நாடுகளில் ஐதீகங்கள் பெறும் பங்கு, தென்னிந்தியாவிற்கான அவற்றின் வருகை பற்றிய கதைகள், பிரளயம் (நீர்ப்பிரளயம்) பற்றிய கதைகள், பபிலோனியாவின், கில்காமெஸ் கதை இவற்றின் பின்னணியில் தமிழகத்தில் வைகைக் கரையுடைந்த கதை, குமரியைக் கடல்கொண்டகதை மற்றும் கந்தளாய்க்குளம் உருவான கதை போன்றவற்றினூடாக தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கத்தில் ஐதீகங்கள் பெறும் பங்கினை நோக்கமுடியும். புவிச்சரிதவியலாளரின் காலப்பிரிவுகளான பஸ்தோசின், கொலோசீன் கால



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகள் முக்கியமானவையாகக் கொள்ளப்படுகின்றன. பஸ்தோசின் காலம் ஏறக்குறைய இற்றைக்கு மூன்று மில்லியன் வருடங்கட்கு முன்னர் தோன்றி இற்றைக்கு 10,000 ஆண்டுகட்கு முன்வரை நீடித்தது. இதன் முடிவில் தோன்றியதே இன்றும் நீடித்திருக்கும் கொலோசீன் காலமாகும். இக்கால ஆரம்பத்தில்தான் இடைவெப்பவலயப் பிரதேசத்தில் நான்கு பனி யுகங்களும், அதன் இடைப்பனி யுகங்களும் நிகழ்ந்தபோது அயனவலயப் பகுதிகளில் இதற்குச் சமமான முறையில் ஏககாலத்தில் ஜலப்பிரளயம் (நீர்ப்பிரளயம்), இடையிட்ட நீர்ப்பிரளயம் என்பன காணப்பட்டன. இத்தகைய புவிச்சரிதவியல் நிகழ்வுக்கான எச்சங்களாக ஆற்றுப்படிவுகளும், கடற்படிவுகளும் காணப்படுகின்றன. மனிதன் குரங்கு நிலையிலிருந்து படிப்படியாக தனது தற்காலத் தோற்றத்தினை இற்றைக்கு 40,000 வருடங்களுக்கு முன்னர் அடைந்த வரலாறு பற்றிய எச்சங்கள் ஆய்வுகளால் முன்வைக்கப்பட்டுள்ளன. மனிதனின் தோற்றவரலாற்றிலிருந்து பண்பாடு, ஐதீகம் என்பனவும் தோன்றி வளர்ச்சி பெற்றுள்ளன எனலாம்.

மனித நாகரிக வரலாறு நதிக்கரைகளை மையப்படுத்தியதாக தோற்றம் பெற்ற வேளையில் நகரக்கட்டுமானங்களைக் கொண்ட சமுத்திரவியற் பண்பாடு உருவாக்கம்பெற்றது. நகர வாழ்வு முறையினூடாகப் பரிணாமமடைந்த நாகரிக வாழ்வே மனுக்குலத்தின் சமயவாழ்விலும், நம்பிக்கை மரபுகளிலும் பெரும்பங்காற்றியிருந்தன. நகரங்களின் தோற்ற வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கிய அதே பொருளியல் ஈட்டமே அம்மக்கள் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தியிருந்த சமயவாழ்வு, சமயநெறிமுறைகள் முதலான பண்பாட்டு உருவாக்கத்திற்கும் அடிப்படையாக விளங்கியது எனலாம். அந்தவகையில் நைல்நதிப்பள்ளத்தாக்கு மக்களது மறுபிறப்பு நம்பிக்கையிலும், சுமேரிய மக்களது (யூப்பிரட்டீஸ் - தைக்கிறீஸ் பள்ளத்தாக்கு) வெள்ளப்பெருக்கு - ஊழிக்காலம் பற்றிய நம்பிக்கையிலும் குவாங்கோ நதிப்பள்ளத்தாக்கு மக்களது விண்ணுலகம் பற்றிய நம்பிக்கையிலும் நகரவாழ்வின் செழிப்பு நிலை பெருஞ் செல்வாக்கினை ஏற்படுத்தியிருந்தது. நிலத்தின் வளமும் வாழ்வின் செழிப்பும் இணையும்போது அடிப்படை நம்பிக்கைகளுடன் மக்கள் வாழ்வில் சடங்குமுறைகளும் (ஐதீகம்), வழிபாட்டு முறைகளும் இணைந்தமையை இங்கு காண்கின்றோம். இவ்வாறே, பண்டைய பாரசீக நாகரிகத்தின் மஸ்டா - அஷ்ரிமான் ஐதீகமும், ஜப்பானையும் ஜப்பானிய மக்கள் இனத்தையும் இசனகியும் - இசநாகியும் இணைந்து உண்டாக்கியதாக கூறப்படும் ஜப்பானிய மரபுக்கதைகளும் குறிப்பிடத்தக்கவையே. மேலும் சமுத்திரவியல் பண்பாடு கொண்ட அனைத்து நாகரிகங்களிலும் நாக வழிபாடு முக்கியத்துவம் பெற்றிருந்தமையும் நோக்கத்தக்கது. பண்டைய உலக நாகரிக மக்களின் தென்னிந்திய வர்த்தகத் தொடர்புகள் முதலானவற்றின் பின்னணியில் இத்தகைய ஐதீகங்கள், மரபுக்கதைகள் தென்னிந்தியாவை வந்தடைந்து ஓர் பண்பாட்டு உருவாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கலாம் என பல அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக நாகரிக ஐதீகங்களில் பபிலோனியாவின் கில்காமேஷ் ஐதீகம் முக்கியத்துவமானது. இதிகாச புராணங்களில் நம்பிக்கையும் விருப்பமும் கொண்டிருந்த பபிலோனியர் மனிதனின் இவ்வுலக வாழ்க்கையையும், அண்டத்தோடு அவனுக்குள்ள தொடர்பினையும் இவற்றில் விளக்கினர். கில்காமேஷ் எனப்படும் புராணமன்னரை மையப்படுத்தியதாக இவ்ஐதீகக்கதை உருவாக்கப்பட்டிருந்தது. பக்தியைக் காட்டிலும் பய உணர்வே பபிலோனியர் வழிபாட்டில் அதிகம் காணப்பட்டமையின் வெளிப்பாடு கில்காமேஷ் ஐதீகத்திலிருந்து தெரியவருகின்றது. இத்தகைய ஐதீகம் பபிலோனியரின் தென்னிந்திய தொடர்பாடலினால் கொண்டுவரப்பட்டிருத்தல் வேண்டும்.

பலகோடி ஆண்டுகளின் முன் நிகழ்ந்த பெருநில அதிர்வினால் கோந்து வளநாடு பல பாகங்களாக பிரிவடைந்ததாகவும், அப்பாகங்களில் ஒன்றே லெமூரியா எனப்பட்டதாகவும், அதுவே பின்னர் பண்டைத்தமிழ் இலக்கியங்களில் குமரிக்கண்டம் எனப்பட்டதாகவும் தெரிய வருகிறது. சிலப்பதிகாரம் ஆதிகாலத்தில் குமரிக்கண்டம் எனப்பட்ட பெருநிலப்பரப்பு இருந்தமையையும் அது பின்னர் கடலுள் ஆழ்ந்து விட்டமையையும்,

“ப.்.றுழியாற்றுடன் பன்பலையடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள---” எனக்குறிப்பிடுகின்றது.

இவ்வாறே காவிரிப்பூம்பட்டினத்தைக் கடல் கொண்ட கதையை மணிமேகலை பின்வருமாறு குறிப்பிடுகின்றது. “----இங்கு வருடம் தோறும் இந்திரனுக்கு விழா எடுப்பது வழக்கம். ஒருமுறை மன்னனின் மகன் கப்பலில் சென்று மூழ்கியதை அறிந்ததும் அம்மன்னன் கடற்கரையடைந்து மகனைத் தேடித்திரிந்தமையால் நகரிலே இந்திரனுக்கு விழாச் செய்தல் நின்றுவிட்டது. அதனால் பொறுக்காமல் மணிமேகலா தெய்வம் இந்நகரைக் கடல்கொள்ளுக என்று சபிக்க கடல் நகரை மூடியது----” என்ற கருத்தும் நீர்ப்பிரளயக் கதைகளுடன் தொடர்புற்றிருப்பதைக்காணலாம். இவை தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கத்தில் ஐதீகங்கள் பெறும் முக்கியத்துவத்தினையே குறிப்பிடுகின்றன எனலாம்.

நீர்ப்பிரளயக் கதையுடன் தொடர்புடையதாய் இலங்கையில் கந்தளாய்க் குளத்தின் தோற்றம் குறிப்பிடப்படுகிறது. கண் + தளை என்ற இருபதங்கள் இணைந்து கண்தளாய் என்றாகி இன்று கந்தளாய் என வழங்கப்படுவதாக தட்ஷண கைலாய மான்மியம் கூறுகின்றது. தமிழ்மரபில் கந்தளாய்க் குளத்தினைப் பற்றிய பல கதை மரபுகள் நிலவுகின்றன. இந்து மரபில் அம்மனின் கண் - கந்தளாய் என்றும், திருக்கோணேஸ்வர தலவரலாற்றுடன் மரபுவழி தொடர்புடையதாகவும் கந்தளாய் குறிப்பிடப்படுகிறது. எனவே மனிதன் தனக்கு அப்பாற்பட்ட மேலான சக்தியை வழிபாடு செய்ததோடு தனது வழித்தோன்றல்களும் அவற்றைப் பின்பற்றும் வண்ணம் ஐதீகம் பேணப்பட்டது எனலாம். இவ்விடத்தில் சிந்தனை வகுத்த வழி நூலில் நல்லபெருமாள் கூறியிருப்பதும் நோக்கத்தக்கது. அதாவது “இன்று மனிதனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பில் அடங்கிய எந்த விஷயமும் திடீரென்று அவன் பெற்றதல்ல. யுக யுகங்களாக அவனுடைய மூதாதையர்கள் எத்தனையோ முயற்சிகளுக்கும், வேதனைகளுக்கும் பின்பு பெற்றவை "எனக் குறிப்பிட்டுள்ளமை நோக்கற்பாலது. மேலும் "ஐதீக கதைகளின் உருவகங்களும், உருவாக்கக் கதாபாத்திரங்களும், நிகழ்ச்சிகளும் நாகரிகத்தின் தெய்வீக மதிப்பையும் புனிதத்தையும் கொண்டுள்ள களஞ்சியமாகத் திகழ்கின்றன, என்றும் மக்களின் பழக்கவழக்கங்களை ஒரு குறிப்பிட்ட நல்ல வழியிலும் அறிவோடு இயைந்ததாகவும் கொண்டு செல்ல அவை உதவுகின்றன" என ஆர்.கே.முகர்சி என்பவர் குறிப்பிடுகின்றார். இக்கருத்துக்களை அடியொற்றியதாக தென்னிந்தியாவில் பண்பாட்டு உருவாக்கம் பற்றிய ஐதீகங்களை வரலாற்றுக்கு முற்பட்ட கற் காலத்திலிருந்து அறியமுடிகின்றது. கற்கால ஈமத்தாழிகள் முதலான சிதைவுகள், தென்னிந்தியப்பண்பாடு பற்றிய ஊகங்களாக, ஐதீகமாக அறியக்கிடைக்கின்றன. இவற்றைக்கொண்டு தென்னிந்தியாவின் பண்பாட்டு உருவாக்க அடிக்கல் கற்காலத்திலேயே நாட்டப்பட்டது எனப் பல அறிஞர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

எனவே மேற்கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் தென்னிந்தியாவில் பண்பாட்டு உருவாக்கமும் ஐதீகங்களும் ஏற்பட உலகநாகரிகங்களில் ஐதீகங்கள், அவற்றின் தோற்றப்பாடுகள், நீர்ப்பிரளயம் என்பனபற்றிய கருத்துக்களையும், அவை தென்னிந்தியாவில் கொண்டுவரப் பட்டு பின்பற்றப்பட்ட தன்மையை நோக்கிய நாம் அடுத்து தென்னிந்திய பௌதீக உறுப்புக்களில் புகுத்தப்பட்டுள்ள ஐதீகங்களையும் அவை தென்னிந்திய பண்பாடு உருவாக எவ்வகையில் காரணமாயின என்பதையும் எடுத்துக்கூற முடியும்.

தென்னிந்தியாவின் தனித்துவமான புவியியற்சூழ்நிலைகள் இங்கு பண்பாடு உருவாக்கம்பெறவும் அதன் அடிப்படையில் ஐதீக கதைமரபுகள் சிறப்படையவும் காரணமாயிற்று எனலாம். வடஇந்திய முனிவரான அகத்தியர் தென்னிந்தியாவிற்கு வருகைதந்து காந்தகசோழனுடன் கொண்ட நட்பினால் அவனது வேண்டுகோளுக்கு இணங்க தான் வைத்திருந்த நீக்குடத்திலிருந்து காவேரியைப் பெருகச் செய்தார் என்றும், மற்றொரு கதைமரபில் அகத்தியரின் கமண்டலத்தை விநாயகர் காகவடிவில் வந்து வீழ்த்தி காவேரியை உருவாக்கியதாகவும் ஐதீகக்கதைகள் கூறப்படுகின்றன. மேலும் இந்துக்களின் புனித நதிகளாக காவேரி, கிருஷ்ணா, கோதாவரி ஆறுகள் கொள்ளப்படுவதும், கன்னியாகுமரித்தீர்த்தச்சிறப்பு, காவேரி நீராடல்சிறப்பு என்பனவும் ஐதீகம் சார்ந்தவையாகவே கூறப்படுகின்றன. மேலும் இறைவனின் பெயரில் தென்னிந்திய பௌதீக உறுப்புக்கள் கூறப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. மகாதேவ மலைத்தொடர், கிருஷ்ணைஆறு, வீமாஆறு(இதிகாசம்) இந்திராவதிநதி(புராணம்) மற்றும் காவேரி-"தென்னகத்தின் கங்கை" என்று குறிப்பிடப்படுவதும் நோக்கற்பாலது. மேலும் கல்யானை கரும்பு உண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை, விந்திய மலை மீதான ஐதீகங்கள், நீலகிரிமலைத்தொடரில் இன்றும் வாழும் வேடர் கூட்டத்தினரின் பண்பாட்டம்சங்கள் என்பன தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கத்தில் ஐதீகமும் பெறுமிடத்தினை தென்னிந்திய பௌதீக உறுப்புக்கள் குறிப்பிட்டு நிற்குமாற்றினையே வெளிப்படுத்துகின்றன எனலாம்.

தென்னிந்தியாவைக் காலத்திற்குக்காலம் ஆட்சி புரிந்த அரச வம்சங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகங்கள் தென்னிந்தியப் பண்பாட்டு உருவாக்கத்திற்கு உதவியிருந்தமையை அடுத்து நோக்கலாம். தென்னிந்தியாவில் பாண்டியர் தலைநகரமான தென்மதுரைப் பண்பாடு வடக்கே யமுனைக் கரையிலுள்ள மதுராவின் பண்பாட்டிலிருந்து உருவாக்கப் பட்டிருக்கலாம் என்ற கருத்து இன்று பல அறிஞர்களிடையே நிலவுகின்றது. வடஇந்திய முனிவரான அகத்தியரே தெய்வ அம்சம் மிக்க பாண்டிய அரசர்களின் குரு என்றும், பாண்டியர் வளர்த்த தமிழ் மொழிக்கு அகத்தியரே இலக்கணம் வகுத்தார் என்றும், பரமசிவனும் பார்வதியுமே பாண்டியரின் முதல் அரசனும் அரசியும் ஆவர் என்றும், முன்வைக்கப்படும் ஐதீக கதைமரபுகள் தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கத்தில் பாண்டிய அரசவம்சம் வகிக்கும் முக்கியத்துவத்தினையே காட்டிநிற்கின்றன.

இவ்விடத்தில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தனது நூலில் குறிப்பிட்டுள்ள கருத்து ஒன்றை எடுத்து நோக்குவது பொருத்தப்பாடு உடையதாகும். அதாவது "----பாண்டிநாடு ஆதி ஈழவரலாற்றில் செல்வாக்கை நிலை நாட்டியிருந்தது. ----தென்னகத்தைப் பொறுத்த மட்டில் பாண்டிய வம்சத்தினர் மகாபாரதப் புகழ் பாண்டவர்கள் வழி வந்தவர்களே என்ற ஐதீகம் வலுவடைந்து காணப்படுகின்றது. பாண்டி நாட்டில் பாண்டவர்போன்று சகோதரரது கூட்டாட்சிமுறை நிலவியதற்கும், (பஞ்சவர் ஆட்சிமுறை - இது இலங்கையிலும் நிலவியிருந்தது.) இக் கூட்டாட்சி முறையில் பாண்டவர் தருமரைத் தலைவராகக் கொண்டு ஆட்சிசெய்தது போன்று பாண்டியரும் தம்முள் ஒருவரைத் தலைவராகக் கொண்டு ஆட்சி நடாத்தியதற்கு பல்வேறு சான்றுகள் கிடைக்கப்பெறுகின்றன----" எனக் கூறப்பட்டுள்ள கருத்து நோக்கத்தக்கது.

பல்லவ அரச வம்சத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகத்தினை நோக்குகையில் பல்வேறு ஐதீகக்கதைகள் கூறப்படுகின்றன. சி.இராசநாயகம் எனும் இலங்கை அறிஞர் பல்லவர்களை ஈழநாட்டிலிருந்து தொண்டை மண்டலம் சேர்ந்த தமிழர்கள் எனக்குறிப்பிடுகின்றார். அவர் பல்லவரின் தோற்றம் பற்றிய ஐதீகக் கதையொன்றினைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "சோழநாட்டு மன்னன் கிள்ளிவளவனுக்கும் இலங்கைக்கு அண்மையிலிருந்த மணிபல்லவம் எனும் தீவிலிருந்த நாக கன்னிகைக்கும் ஓர் ஆண்மகன் பிறந்தான். மணிபல்லவத்தில் தாயுடன் இருந்த அவ் ஆண்மகன் தந்தையைத்தேடி தமிழகத்திற்கு வரும் வழியில் கப்பல் உடைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைகளால் கரைசேர்க்கப்பட்டான் என்றும், அவனது காலில் தொண்டிக்கொடி சுற்றப்பட்டிருந்தது என்றும் ஆகவே மக்கள் அவனை இளந்திரையன் (கடல் அலைகளில் இருந்து வெளிக்கிளம்பும் திரையின் வழி வந்தவன்) என்றும், தொண்டமான் (தொண்டிக் கொடி சுற்றியவன்) என்றும் அழைத்தனர். கிள்ளிவளவன் தனது மைந்தனுக்கு தொண்டைமண்டலப் பகுதியைக் கொடுத்தான் என்றும், தொண்டை மண்டலத்தின் ஆதி மன்னனாகிய தொண்டைமான் இளந்திரையன் இவனே என்றும், இளந்திரையனின் மரபினர் பல்லவர்கள் என மணிபல்லவத்தின் பெயரால் அழைக்கப்பட்டனர் என்றும் கதையுண்டு." என இராசநாயகம் குறிப்பிடுகின்றார்.

மேலும் ஒருகதைமரபில் பல்லவம் என்றால் துளிர் என அர்த்தப்படும் வகையில் உபகதையொன்று இடம்பெற்றுள்ளது. அஸ்வத்தாமாவிடம் ஒரு வனத்திலே தேவ ஸ்திரீ ஒருத்தி ஒரு பிள்ளையைப் பெற்றாள் என்றும், அதைத்துளிர்ப்படுக்கையிலே போட்டுவிட்டு தேவலோகம் போய்விட்டாள் என்றும், அந்தப்பிள்ளைதான் துளிரில் வளர்ந்ததால் "பல்லவன்"எனப் பெயர்பெற்று அரசனாக ஆட்சிக்கு வந்தான் என்று கதை கூறப்படுகின்றது. மற்றொரு கதை பல்லப்பையிலிருந்த உதயமானவர்களே பல்லவர்கள் என்று கூறப்படுகிறது. தென்னகத்தில் திரையர் சமூகம் இளந்திரயன் வழிவந்தவர்கள் என்றும், காடவர் சமூகம் - பல்லவர் காடுவெட்டிகளாதலால் இப்பெயர் ஏற்பட்டதாகவும் கதை மரபுகள் உண்டு. எனவே பல்லவ அரசவம்சத்தினர்பற்றிய ஐதீகங்கள் தமிழக பண்பாட்டு உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது எனலாம்.

கொய்சாளஅரச வம்சத்தினை நோக்குகையில் கொய்சாளர் என்பது பொய்+சள என்ற சொற்களின் இணைப்பேயாகும். பொய் என்றால் பன்றி, சள என்றால் கொல்லுதல் எனவே பன்றியைக் கொன்றவர்கள் கொய்சாளர்கள் என ஐதீக கதைமரபு கூறப்படுகிறது. இவ்வாறே சிங்களவர் என்பதும் சீ+சள என சிங்கத்தைக் கொன்றவர்கள் என பொருள் எடுத்தாளப்படுகின்றது. எனவேதான் அரசவம்சங்களின் தோற்றங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகங்கள் தென்னிந்தியாவில் பண்பாடு உருவாக்கம் பெற காரணியாயிற்று எனக் கூறக்கூடியதாக உள்ளது எனலாம்.

மதங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகங்கள் தென்னிந்திய பண்பாடு உருவாக்கம் பெற காரணியாயிற்று எனலாம். குறிப்பாக தென்னிந்திய பண்பாடு பெரும்பாலும் இந்துமதம் சார்ந்த இந்துப்பண்பாடாக உருவாக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். உலக சமயங்கள் இயற்கை வழிபாட்டுடன் தோற்றம் பெற்றவை. எல்லாச் சமூகங்களும் தமது பண்பாடு கலாசாரப் பாரம்பரியங்களுக்கு ஏற்ப சமயக்கொள்கைகளை உருவாக்கியும் பின்பற்றியும் வருகின்றன. மனித அறிவின் வளர்ச்சியுடன் அதாவது கோட்பாட்டு ரீதியான சிந்தனை ஆற்றலின் ஆரம்ப நிலையுடன் சமயத்தின் தோற்றம் கருக்கட்டுகின்றது எனலாம். இந்துநதிப்பள்ளத்தாக்கு நகரவாழ்வினில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம்பெற்ற வைதிக சமய மரபுகள் பரந்து சென்று பிராந்திய சூழலுக்கேற்ப வளர்ச்சிபெற்று தென்னிந்தியாவினில் இந்துமதமாக மக்கள் வாழ்வில் பரிணமித்தது எனலாம்.

இத்தகைய இந்துசமய மரபுகளின் பின்னணியில் தென்னிந்திய இந்துமத ஐதீகங்களில் கங்கையின்வருகை, பச்சைக்கூட்டுடன் கைலாயம் போனகதை, நரியைப் பரியாக்கிய கதை, பிட்டுக்கு மண்சுமந்த கதை, அருச்சுனன் தபசு போன்றவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். புராண கதைப்படி பகீரதன் எனும் மன்னன் தவமிருந்து, ஆகாயத்திலுள்ள கங்கையை சிவபிரானின் தலையிலிருந்து பூமிக்கு வரச்செய்தான், எனக்கூறப்படுகின்றது. தென்னிந்திய வரலாற்றில் கங்கை வருகை பற்றி கூறுவோர் கங்கையே பீஸ்மரை ஈன்றவள் எனக்குறிப்பிடுகின்றனர். மேலும் தெய்வமாகக் கொள்ளப்படும் கங்கையை தமிழகத்தில் ஒருபகுதி பெண்ணுருவாகவும் எஞ்சியபகுதி மீனுருவாகவும் (பாண்டியரின் சின்னம் - மீன்) காட்சியளிப்பதாக கூறப்படுகிறது. இத்தெய்வத்தை வழிபட்டால் செல்வம், குழந்தைப்பேறு, புண்ணியம் கிடைக்கும் என்ற ஐதீகம் நெடுங்காலமாக தமிழகமக்களிடம் நிலவுகின்றது. காவேரி "தென்னகத்தின் கங்கை" எனக் கூறப்படுவதும், பிற்கால சோழ மன்னனான இராஜேந்திர சோழன் கங்கை நீரைக்கொணர்வித்து சோழகங்கம் (தடாகம்), கங்கைகொண்ட சோழபுரம், கங்கை கொண்ட சோழ ஈச்சரம் என்பவற்றை நம்பிக்கை அடிப்படையில் ஏற்படுத்தினான் என்ற வரலாற்றுச் செய்தியும் கங்கை வருகையின் முக்கியத்துவத்தினையும் அவ் ஐதீகம் தென்னகத்துப் பண்பாட்டு உருவாக்கத்தில் வகிக்கும் இடத்தினையும் சுட்டி நிற்கின்றது எனலாம்.

புராணங்கள் புகழ்ந்துரைக்கும் கைலாயம் என்பது இமய மலையைச் சார்ந்த ஒரு மலையாகும். திபெத் நாட்டிலுள்ள இம்மலை இந்துக்களின் புண்ணியத்தலமாக விளங்குகின்றது. இலிங்க வடிவில் உள்ள இம்மலையை இந்துக்கள் மட்டுமன்றி பௌத்தர்களும் புனிதம் நிறைந்ததாகக்கருதி வழிபடுகின்றனர். தமிழகத்து நாயனாரான திருநாவுக்கரசர் கைலைக்காட்சி காணவிரும்பி கைலாயம் செல்வதற்காக நடந்து சென்றதாகவும் இறைவன் அவரை இடைமறித்து கைலைக் காட்சியைக் காட்டியதாகவும் ஐதீகக்கதை கூறப்படுகின்றது. கைலைக்காட்சியை கண்ட நாவுக்கரசரும் "---கண்டேன் அவர்திருப்பாதம் கண்டுஅறியாதன கண்டேன்" என கைலாயத்தைப் புகழ்கின்றார். கிராமியக் கலைகளில் ஒன்றான காத்தவராயன் சிந்துநடைக்கூத்தில் "பச்சைக்கூட்டுடன் கைலாயம் போனகதை" என்பதும் ஐதீகக்கதையாகவே உள்ளது. எனவே இக்கதைமரபுகளும் தமிழக பண்பாடு உருவாக்கத்தில் பங்காற்றியுள்ளன எனலாம்.

மாணிக்கவாசகர் வாழ்க்கை வரலாற்றில் எடுத்துக் கூறப்படும் நரியைப் பரியாக்கியமை, பிட்டுக்கு மண்சுமந்த கதை என்பன ஐதீகக்கதைகளாக அமைந்துள்ளதுடன் தமிழகப்பண்பாட்டு உருவாக்கத்தில் பங்காற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளமையையும் காணலாம். பாண்டி நாட்டில் அரிமர்த்தன பாண்டியனின் அமைச்சராக மாணிக்கவாசகர் (திருவாதவூரர்) இருந்தவேளையில் மன்னனது குதிரைப்படைக்கு குதிரைகள் தேவைப்பட்டன. அவ்வேளையில் "சோழநாட்டில் திருப்பெருந்துறையை அடுத்த கடற்கரைப் பட்டணத்திலே மிலேச்ச நாட்டு ஆரியர்கள் குதிரைகளைக் கொண்டுவந்து இறக்கியிருக்கின்றனர்" என ஒற்றன் தெரிவித்தான். உடனே மன்னன் மணிவாசகரைப் பொன்கொடுத்து திருப்பெருந்துறைக்கு அனுப்பினான். அங்கு ஓர் பூஞ்சோலையில் ஓர் குருவிடம் (சிவபெருமானே குருவாக நின்றார்) அறிவுரை கேட்டு புனிதராக அவரால் ஆட்கொள்ளப்பட்டார். கொண்டு சென்ற பொன் யாவும் இறைபணியில் செலவு செய்தார். இதனையறிந்த பாண்டியமன்னன் விரைவில் குதிரையுடன் வருக என திருமுகம் அனுப்பி வைக்க அவர் அதனை இறைவனிடம் தெரிவிக்க இறைவன் ஆவணி மூலநாள் குதிரைகளை தானே கொண்டுவருவதாக கூற மணிவாசகரும் மன்னனிடம் சென்று குதிரை வரும் செய்தியை அறிவித்தார். தனது அடியாருக்கு அருள்புரிய எண்ணிய சிவபிரான் மிழலை நாட்டு நரிகளை பரிகளாக உருமாற்றி தனது தொண்டர்களை குதிரை வியாபாரிகளாக மாற்றி தானே அவர்களின் தலைவனாக உருமாறி குதிரைகள் படைசூழ மதுரை வந்து சேர்ந்தான். இதனையே மணிவாசகர்,

"மன்னன் பரிமிசை வந்தவள்ளல்

பெருந்துறை மேய தென்னவன்" எனக் குறிப்பிடுகின்றார். பாண்டிய மன்னன் மகிழ்வுற்று வணிகர் கூட்டத்திற்கு பரிசுகள் கொடுத்து அனுப்பி வைத்ததுடன் மணிவாசகரையும் கௌரவித்தான். ஆனால் அன்றிரவு புதுப்பரிகளெல்லாம் மீண்டும் நரிகளாக உருமாறி அப்பந்திகளில் தமக்கு முன்னரே இருந்த குதிரைகளைக் கடித்துக்குதறிக் கொன்றன. வீதிகளில் ஊளையிட்டுச் சென்றன. இதனையறிந்த மன்னன் துன்பமும் வியப்பும் கொண்டு மணிவாசகரை துன்புறுத்தும்படியும், அவரை வைகை யாற்றங்கரையில் சுடுமணலில் நிறுத்துமாறும் பணித்தான். அவ்வேளையில் மணிவாசகர் இறைவனை வேண்ட இறைவனும் பெரும்மழை பொழிவித்து வைகையாற்றைப் பெருக்கெடுத்தோடச் செய்து தனது அடியாரைக் காத்தருளினார் என் இவ் ஐதீக கதை கூறப்படுகின்றது.

வைகையாறு பெருக்கெடுத்து ஓடியதால் ஆற்றுக்கரைகள் உடைப்புற்றன. அவற்றை அடைப்பிக்கும்படி குடிகளை மன்னன் பணித்தான். அவ் உடைப்பினை அடைக்க பிட்டுவாணிச்சி ஒருத்தி கூலிக்கு ஆள் கிடையாது இறைவனை வேண்டவே சிவபிரான் கூலியாளாக தோன்றி அவளிடம் பிட்டினைக் கூலியாகப் பெற்று "நான் உனது பங்கினை அடைக்கிறேன்" எனக் கூறிச் சென்று ஆடியும் பாடியும் வேலை செய்யாது நேரம் கடத்தினான். பின் மண்ணையே தலையணையாகக் கொண்டு நித்திரை செய்யலானான். அனைவரது ஆற்றடைப்பு பங்கும் அடைபட்டு முடிந்தும் பிட்டு வாணிச்சியின் பங்கு அடைவுறாதிருப்பதைக் கண்ணுற்ற பாண்டிய மன்னன், அப்பகுதிக்குரிய கூலியாள் (சிவபிரான்) நித்திரை செய்வதைக் கண்டு கோபமுற்று பிரம்பு ஒன்றினால் அவனின் முதுகின் மேல் அடித்தான். ஆனால் அந்த அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாண்டிய மன்னன் மீதும் அமைச்சர்கள் முதுகிலும் படலாயிற்று. அதேவேளையில் கூலியாளாக நின்ற சிவபிரான் ஒரு கூடை மண்ணை மட்டும் பிட்டுவாணிச்சிக்குரிய ஆற்றடைப்புப் பகுதியில் கொட்டிவிட அவ் அடைப்பும் அடைபட்டது. சிவபிரானும் மறைந்தருளினார். இதனையறிந்த மணிவாசகர் சிவபிரானின் பக்தியை எண்ணி பதிகம் பாடினார்.

"மண்பான் மதுரையிற் பிட்டமுது செய்தருளி
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணி கொண்ட" என்ற அவரது பாடல் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறாக நரியைப்பரியாக்கிய கதை, பிட்டுக்கு மண் சுமந்த கதை என்பன, ஐதீகக்கதைகளாகக் கூறப்பட்டுள்ள போதும் அவை தென்னிந்தியப் பண்பாட்டு உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றியுள்ளன எனலாம். இக்கதைகள் தமிழகத்து இடங்களை மையப்படுத்தியதாகக் கூறப்படுவது, எந்தளவிற்கு தமிழக பண்பாட்டினை உருவாக்க ஏதுவாக அவை அமைந்துள்ளன என்பதனை வெளிப்படுத்தியுள்ளமை நோக்கத்தக்கது ஆகும்.

இவற்றை விட சந்திரகுப்த மௌரியன் (வடநாட்டுமன்னன்) ஸ்ரவணப் பெல்கொல்லாவில் மரணித்த கதையும் ஐதீகக் கதையாகவே கூறப்படுகிறது. அதாவது வட இந்திய மன்னனான சந்திரகுப்த மௌரியன் சமண சமயத்தைத் தழுவி தனது இறுதிக்காலத்தை மைசூருக்கு அருகிலுள்ள "சிரவண பெல்கோலா"வில் கழித்து இறந்ததாக கூறப்படும் கதையிலிருந்து வட இந்தியாவிலிருந்து பண்பாடு, ஐதீகங்கள் தென்னிந்தியாவிற்கு கொண்டுவரப்பட்டு வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என எண்ணத் தோன்றுகின்றது. எனவே மதங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகங்கள் தென்னிந்தியப் பண்பாடு உருவாக்கம்பெற ஏதுவாயிற்று எனலாம்.

சமூகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகக் கதைகளை நோக்கின் தென்னகத்தில் பண்டைய காலந்தொட்டு வாழ்ந்துவரும் பல்வேறு சமூகங்களிடையே ஐதீகங்கள் பின்பற்றப்பட்டு வந்துள்ளதுடன் அவை பண்பாடு உருவாக்கம் பெறவும் ஊன்று கோலாக அமைந்தவற்றைக் குறிப்பிடமுடியும். லிங்காயுத்துக்கள், வீரசைவர், ஐயப்ப அடியார்கள், பரதவர்குலம், நாடார், இராவண சமூகத்தினர், ஆரியர் என பல்வேறு சமூகத்தினரிடையே நிலவியிருந்த ஐதீகக்கதைகளை இங்கு குறிப்பிட்டுக் கூறமுடியும்.

தமிழகத்தில் வீரர்கட்கு கல் நாட்டி வழிபடும் வழக்கம் தொல்காப்பியர் காலத்திலிருந்து வந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர்,

"காட்சி கால்கோள் நீர்படை நடுகல்
சீர்தகு சிறப்பின் பெரும்படை வாழ்த்தல் என்று
இரு மூன்று வகையின் கல்லொடு புணர"

எனக் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திராவிடரே லிங்க வழிபாட்டுக்குரியவர்கள். நாகரிகமற்ற திராவிடர்கள் தாம் பிறப்பதற்கு காரணமாக இருந்த தாய்தந்தையரை வழிபட எண்ணி, தந்தை உறுப்பையும், தாய் உறுப்பையும் இணைத்து வழிபாடு செய்தபோது இலிங்க வழிபாடு தோற்றம்பெற்றது. இவ்வாறு லிங்கத்தை வழிபடும் சமூகத்தினரே லிங்காயுத்துக்கள் எனப்பட்டனர். லிங்கக் குறியோனிப் பண்பாடு என்பது வழிபாட்டு முறையாக, நம்பிக்கையுடான தத்துவமாக மாற்றியமைக்கப்பட்டது. அவை முறையே புருஷ-பிரகுருதிக் கோட்பாடாக மக்கள் சமய வாழ்வில் இடம்பெறலாயிற்று. சிந்துவெளியில் கிடைத்த சிவலிங்கக் கற்கள் லிங்காயுதரின் தோற்றம், தொன்மையைக் காட்டும் அதேவேளை, அங்கிருந்து தென்னகத்திற்கு இவ்வழிபாட்டுமுறை கொண்டுவரப்பட்டு பண்பாடு உருவாக்கம் பெற்றிருக்கலாம் என்ற எண்ணப்பாட்டினையும் வெளிப் படுத்துவதைக் காணலாம். உரோம், கிரேக்கம், எகிப்து, பாரசீகப்பண்டைய நாகரிகங்களிலும் இவ்வழிபாடு பின்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புராணங்கள் காஞ்சிபுரத்தில் உமையும், திருவெண்ணாமலையில் திருமால் - பிரமனும், திருச்செங்காட்டாங் குடியில் (தஞ்சாவூர்) கணபதியும், திருச்செந்தூரில் முருகனும் இராமேஸ்வரத்தில் இராமனும் சிவலிங்கத்தை வழிபட்டதாகக் கூறியுள்ளமை, சிவலிங்க வழிபாட்டின் உயர்ந்த தெய்வீகத்தன்மையையும் லிங்காயுத சமூகத்தினர் தென்னிந்தியப்பண்பாடு உருவாக்கம் பெற காரணகர்த்தாக்களாக விளங்கியிருந்தமையும் குறிப்பிடுவதனைக் காணலாம்.

லிங்காயுதத்தைச்சார்ந்த மற்றொரு பிரிவு வீரசைவம் வீரம் எனும் ஆகமத்தில் கூறப்பட்டுள்ள சைவ நெறியே வீரசைவமாகும். இது சைவத்திலிருந்து பிறந்ததாயினும் தனி இயல்புடைய சமயக் கொள்கை. வீரசைவத்தினைச் சார்ந்தோர் வீர சைவர் என்ற சமூகத்தினராவர். லிங்க உருவில் உள்ள சிவனை வீரசைவர் தம் கைத்தலத்தில் வைத்து வழிபடுவர். பசவன்னர் என்பவர் இவர்களைப் "புராதனர்" எனக் குறிப்பிடுகின்றார். எனவேதான் தென்னகப் பண்பாட்டு உருவாக்கத்தில் வீரசைவசமூகத்தினரும் முக்கிய பங்காற்றினர் எனக் கூறமுடிகின்றது. உடம்பில் எப்போதும் இலிங்கத்தை அணிந்து இருப்பதனால் உடம்பிலுள்ள எல்லா மாசுக்களும் எரிக்கப்பட்டு விடும் என்பது இச்சமயத்தவரின் நம்பிக்கை. தமிழ்நாடெங்கும் இச்சமூகத்தினர் பரவியிருந்தனர். கும்பகோணம், மதுரை, காஞ்சி, தஞ்சை, திருச்சி ஆகிய இடங்களில் வீரசைவ மடங்களைக் காணமுடியும். எனவே தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கத்தில் வீரசைவசமூகத்தினரும், அவர்தம் ஐதீகங்களும் பெரும் பங்காற்றின எனலாம்.

மலையாளத்தில் ஆரியங்காவு, சபரிமலை வழியில் இருக்கின்றது. ஆரியனுடைய காடு என்பது அதனது அர்த்தம். இங்கு ஆர்யன் என்பது சபரிமலை ஐயனைக் குறிக்கின்றது. ஆர்யன்தான் தமிழில் "ஐயன்" ஆயிற்று. இதனை மரியாதையின் பொருட்டு ஐயனார், ஐயப்பன் என்றும் கூறப்படுகின்றது. திராவிடர்களின் கிராமதேவதையாக ஐயப்பன் கொள்ளப்படுகின்றான். இவரது பக்தர்களே "ஐயப்ப அடியார்கள்" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தினராவர். ஐயப்பனின் தோற்றம்பற்றியும் பல்வேறு ஐதீகங்கள் கூறப்படுகின்றன. ஐயன் ஆகிய கிருஷ்ணருக்கும், அப்பனாகிய சிவபிரானுக்கும் பிறந்தவனாகையால் ஐயப்பன் என பெயர் பெற்றான் எனவும், இவ் ஐயப்பன் ஓர் அரசனிடம் வளர்ந்து வரும்போது தனது தாயின் தீராப்பிணி தீர்க்க புலிப்பால் எடுக்கக் காடேகியகதையும் ஐதீகமாக கூறப்படுகின்றன. ஐயனாரைத்தம் குலதெய்வமாகக் கொண்டு தோற்றம்பெற்ற ஐயப்ப அடியார்கள் தமிழகத்தில் பண்பாடு உருவாக்கம்பெற காரணமாயிருந்தனர் என்றே கூறலாம். இன்றும் தமிழகத்தில் பழமைப் பண்பாடு பேணும் ஐயப்ப அடியார்களைக் காணமுடிகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியாவில் ஆதிகாலத்தில் கடற்தொழில்களில் ஈடுபட்ட மக்கள் கூட்டத்தினரிலிருந்து பரதவர்குலம் தோற்றம்பெற்றது. சங்ககாலத்தில் நெய்தல் நிலத்திற்குரிய சமூகத்தினராக பரதவர்கள் காணப்பட்டனர். தென்னிந்திய பரதவர் சந்திரனுடைய இயக்கத்தைக் கவனித்து பழைய காலத்தில் சந்திரமானமாக காலத்தை அளந்தனர். இவர்கள் கடற்தொழில் வாணிபம், படகு வேலை போன்றவற்றில் ஈடுபட்டனர். இப்பரதவரிலிருந்தே மேற்கே ஆபிரிக்கா, அராபியா முதலிய நாடுகளுக்கும் கிழக்கே மலாயா, சீனா முதலிய இடங்களுக்கும் பண்டங்களை நாவாய்களில் ஏற்றிக் கொண்டு சென்று வணிகம் செய்த மாலுமிகள் தோன்றினர் எனலாம். பிறநாட்டு ஐதீகங்கள், பண்பாடு என்பவற்றை தமிழகத்திற்கு கொணர்ந்து பண்பாடு உருவாக்கம் பெறவைத்த பெரும்பங்காளிகளாக பரதவ சமூகத்தினர் காணப்படுகின்றனர். எனலாம்.

நாடார் சமூகம் பற்றி "வலங்கையர்கதை" நூல் குறிப்பிடுகின்றது. "வெட்டி" எனும் வேலை முறையை எதிர்த்த ஏழு சகோதரர்களில் அறுவரைக் கொன்று ஒருவரை நாடுகடத்தியதாகவும், தென்பாண்டி நாட்டிற்கு வந்த அவனால் நாடார் சமூகம் தோற்றுவிக்கப்பட்டு பண்பாடு உருவாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. (நாடார் - நாடுகடத்தப்பட்டவன்) இவ்வாறே இராவண சமூகத்தினர் பற்றிய ஐதீகக் கதைகளும் கூறப்படுகின்றன. எனவே தென்னிந்தியாவில் தோற்றம் பெற்ற பல்வேறு சமூகத்தினரின் தோற்றப்பாடு பற்றிய ஐதீகங்களின் பின்னணியில் தென்னிந்தியப் பண்பாடு உருவாக்கம் பெற்றது எனலாம்.

சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகங்களுள் ஆரியர் வருகையும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள அகத்தியர் கதைமரபுகளும் முக்கியத்துவம் பெறுவதனால் அவற்றையும் தெளிவாக நோக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. இந்தோ - ஆரிய சமூகத்தினரால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட புதிய கருவிப்பாவனையுடன் இணைந்த சடங்குமுறைகள் தென்னிந்தியப் பண்பாட்டை உருவாக்கின. உண்மையில் ஆரியரின் தென்னிந்திய வருகையுடன் தான் பண்பாடு என்பது தமிழகத்தில் புதிய கட்டுமானத்துடன் உருவாக்கப்பட்டது எனலாம். அவற்றுள்ளும் அகத்தியர் கதை மரபே சிறப்பிடம் பெறுவதனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தியர் பற்றிய கதை மரபுகள் பல வடிவங்களில் தீபகற்ப இந்தியாவில் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. காகம் கமண்டலத்தைக் கவிழ்த்த கதை, விந்திய மலையை அகத்தியர் அடக்கிய கதை, மகோதரன்-குண்டோதரன் ஆகிய அரக்கர்களை அழித்த கதை, உலகம் சமநிலை பெற்றுக்கொள்வதற்காக அகத்தியர் கைலையிலிருந்து தெற்கே வந்த கதை என அவற்றுள் சிலவற்றை திருவிளையாடற்புராணத்திலும், திருக்கைலாய புராணத்திலும் கூறப்பட்டிருப்பதனைக் காணலாம். இந்துக்களின் வைதீக மரபில் இம்மரபுகள் இன்று பெரிதும் போற்றப்படுவதனையும் காணலாம். மேலும் அகத்தீஸ்வரம் என்றொரு கோவில் தொண்டை மண்டலத்தில் நிர்மாணிக்கப் பட்டிருப்பதும், இந்துக்களின் பரிவார தெய்வங்களில் அகத்தியர் ஒருவராக இணைக்கப்பட்டு இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இருக்குவேதம் அகத்தியரைக் குடத்திலிருந்து தோன்றியவராகவும், ஆரியரிலிருந்து விலக்கப்பட்டு தெற்கே தட்சணபதம் சென்றவராகவும் அகத்தியரை ஐதீகக்கதையாகக் கூறுகின்றது. தென்னிந்தியப் பண்பாட்டு உருவாக்கத்தில் அகத்தியரின் பங்கு அளப்பெரியது என அகத்தியரைச்சார்ந்த மரபுக்கதைகள் ஊடாக அறிய முடிவதனால் அகத்தியர் கதைகள் ஆராயப்பட வேண்டியனவாக உள்ளன. வேத இலக்கிய கருத்துப்படி ஆரியர் குடியேறிய பின்பே தென்னிந்தியப் பண்பாடு உருவாக்கப்பட்டதாக கூறவேண்டியுள்ளது. படையெடுத்தும், பண்பாட்டு அடிப்படையில் கலப்புத் திருமணம் மூலமாகவும் ஆரியப்பண்பாடு தீபகற்ப இந்தியாவில் பரப்பப்பட்டபோதும் இவர்களின் முன்பே தென்னிந்திய மக்களிடம் வளர்ச்சி பெறாத பண்பாடு இருந்திருத்தல் வேண்டும் என்பதும் ஊகிக்க வேண்டிய அம்சமாகின்றது எனலாம்.

இதிகாச புராணங்களில் அகத்தியர் கதைமரபுகள் கூறப்பட்டுள்ளன. அகத்தியர் தென்னிந்தியாவில் விதர்ப்ப நாட்டு இளவரசி லோபமுத்திரையை மணந்தமையும், அவள் பொருட்டு வாதாபியை வென்று செல்வம் பெற்று விதர்ப்ப நாடு சென்ற கதையும், கொடிய பேயை அழித்து உலகினை (தென்னிந்தியாவை) மக்கள் வாழும் இடமாக்கிய கதையும், பாலை நிலமாகிய தண்டகாரணியம் எனும் விந்தியமலைக்குத் தெற்கேயான பகுதியை அகத்தியரே மழை பெய்யுமாறு செய்து மக்கள் வாழும் செழிப்புடைய நிலமாக்கினார் என்றும், அதன்பின்னரே ஆரியக் கூட்டங்களின் வருகை இடம்பெற்றதாகவும் இதிகாசபுராணங்கள் குறிப்பிடுகின்றன.

அகத்தியர் கதைமரபுகளை எடுத்து ஆராயும் இன்றைய ஆய்வாளர்கள் ஆரியரின் இனக்குறிப்பின் சின்னமே ஆரியர் என்றும், அவரது பெயரின் அடிப்படையில் தென்னிந்தியப் பண்பாட்டின் உருவாக்கம் - ஓர் ஐதீகமாக உருவாக அகத்தியரின் மரபுக்கதைகள் காரணமாயிற்று எனக் கொள்கின்றனர். ஆரியர் வருகையே தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கத்திற்கான பிரதான காரணம். குறிப்பாக பிராமணரின் குடிப்பெயர்வாகவே தீபகற்ப இந்தியப் பண்பாட்டு உருவாக்கம் தொடர்பான ஐதீகங்கள் எழுந்தது எனலாம். எனினும் தமிழ்ப்பண்பாட்டின் வளர்ச்சியில் அகத்தியருக்கு முதலிடம் அளிப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த முயற்சிகள் ஆய்வாளர் சிலரிடையே எதிர்ப்பைக் கிளப்பியுள்ளன. எது எவ்வாறு இருப்பினும் அகத்தியர் கதைமரபுகளின் அடிப்படையில் ஆரியரின் வருகையின் பின்னரே நிறைவான பண்பாடு தென்னிந்தியாவில் உருவாக்கப்பட்டதனை பல ஐதீகக் கதைகளும் வெளிப்படுத்தியுள்ளன எனலாம்.

இந்து நாகரிகத்தின் (பண்பாடு - ஐதீகம்) உள்ளீட்டினை நோக்கும்போது அது தனியே ஒரு குழுவினராலோ, சமூகத்தினாலோ அல்லது தனித்துவமான ஒரு பண்பாட்டுக்குரிய குழுமம் அல்லது குழுக்களாலோ ஆக்கப்பட்டதல்ல என்பது தெளிவாகும். பதிலாக பல குழுமங்களினதும் பல இலட்சினைகளை உடைய நாடோடி வாழ்வு முறைக்குரிய இனக்குழுக்களதும், மதப் பிரிவுகளதும் பல் பண்பாட்டுப் பகைப்புலங்கள் இணைவு பெற்றுக் கொண்ட ஒரு நீண்ட காலப் பரிணாமத்தின் விளைவே இந்துநாகரிகமாகும். இவ்வாறே தென்னிந்தியப் பண்பாட்டு உருவாக்கத்தில் ஐதீகத்தின் அடிப்படையில் பல்வேறு சமூகங்களும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன எனலாம்.

பொருளாதாரத்துடன் எடுத்துக்கூறப்படும் சில கதை மரபுகள் ஐதீகம் சார்ந்தவையாகவும் அவை தென்னிந்திய பண்பாடு உருவாக்கம் பெற காரணமாகவும் அமைந்தமையினைக் காணலாம். சமுத்திரவியல் - வாணிப பொருளீட்டலின் முனைப்புடன் நாகரிகத்தின் உள்ளீடுகள் இணையத் தொடங்கியவுடன் அதன் மேற்கட்டுமானம் புதுப் பொலிவு பெற ஆரம்பித்து விட்டது. கடல்வாணிபம் எழுச்சி கண்டதன் பின்னணியில் வரலாற்றில் சமுத்திரவியற் பண்பாடு பாரியதாக்கத்தினைச் செலுத்த ஆரம்பித்தது. நாகரிகத்தில் பிராந்திய ரீதியான பண்பாட்டுப் பகைப்புலங்கள் தோற்றம் பெறுவதற்கு சமுத்திரவியல் சார்ந்த வாணிப ஈட்டத்தின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட செல்வச் செழிப்பே காரணமாக அமைந்து கொண்டது. இந்த வகையில் பண்டைய எகிப்திய, கிரேக்க, உரோம நாகரிகங்களின் கடல்வாணிபத் தொடர்புகளால் தென்னிந்தியாவில் ஐதீகக் கதைகளும் பண்பாட்டம்சங்களும் பரவலடைந்து தென்னிந்தியப் பண்பாடு உருவாக்கப்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிடமுடிகின்றது.

மீகாமக்கலை பற்றி எகிப்திய, சுமேரிய, தென்னிந்தியப் புராதன காலத்தோர் அறிந்திருந்தனர். கடலில் மிதக்கும் பொருட்களைப் பயன்படுத்தி நீர்நிலைகளைக் கடக்க முற்பட்டனர். யானை, சிங்கம், குதிரை முக வடிவங்களில் மரக்கலங்களை வாணிபத்துக்காக பண்டைய காலத்தோர் பின்பற்றியிருந்தமை தெரியவருகின்றது. பரதர்களின் கடற்றொழில் பற்றி சிலப்பதிகாரம் குறிப்பிடுகையில் “கடல் புக்குயிர் கொண்டு வாழ்பவர் நின்னையர்---” என குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

சிலப்பதிகாரக்கதைகளில் மாநாய்கன் எனும் வணிகனுக்கு கண்ணகி மகளாகப் பிறந்தமையும், மாசாத்துவான் எனும் வணிகனுக்கு கோவலன் மகனாகப் பிறந்தமையும், கண்ணகியின் சிலம்பு விற்க கோவலன் மதுரை மாநகர் செல்லுதலும், வழியில் காவேரியை ஓடத்தின் துணை கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடத்தலும், பாண்டிய மன்னனுக்கு கண்ணகி சோழநாட்டு வளம் கூறியமையும் பொருளாதாரம் சார்ந்த ஐதீகப்பண்பாட்டம்சங்களாக கொள்ளத்தக்கவையே. மேலும் சிலப்பதிகாரம் கடலாடுகாதையில் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்புக் கூறப்பட்டுள்ளமையும் அதாவது "ஐரோப்பா, ஆபிரிக்கா, சீன நாடுகளிலிருந்து கப்பல்கள் புகார் நகரத்திற்கு வருவதுண்டு. எப்பொழுது பார்த்தாலும் துறைமுகத்தில் கப்பல்கள் நிறைந்து நிற்கும்'' என்ற குறிப்பும் நோக்கத்தக்கது.

மணிமேகலை நூலில் மணிபல்லவத்தில் மணிமேகலை - புத்தபீடிகையை வணங்கி கோமுகிப் பொய்கையில் அட்சய பாத்திரம் பெற்றகதையும், "----தண்டமஞ்சி தென்திசைக்குமரியாடியே வருவேன்'' என்றகுறிப்பும், சங்க நூல் ஒன்றில் "கௌரவர்கட்கும், பாண்டவர்கட்கும் இடையில் இடம்பெற்ற குருஷேத்திரப் போரில் இருபிரிவுக்கும் உணவு வழங்கியவன் சேர மன்னனான - சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்பவன் என்று கூறப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இது வடஇந்தியப் பண்பாடு தென்னிந்தியாவினுள் புகுத்தப்பட்ட தன்மையினையும், தொடர்பையும் காட்டுகின்றது எனலாம். எனவே பொருளாதார கதைகளுடன் புகுத்தப்பட்டுள்ள பல்வேறு ஐதீகங்கள் தென்னிந்தியப் பண்பாடு உருவாக்கம் பெற காரணமாயிருந்தன எனலாம்.

மேற்கூறப்பட்டுள்ள கருத்துக்களைக் கொண்டு நோக்குகையில் பண்பாடு, ஐதீகம் என்றால் என்ன? தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கமும், அதனுள் ஐதீகங்கள் பெறும் முக்கியத்துவமும் எத்தகையவை பண்பாடு ஐதீகம் என்பவற்றின் தோற்றப்பாடு, உலக நாடுகளில், அவை பெற்றிருந்த முக்கியத்துவம், அவை தென்னிந்தியாவிற்கு கொண்டு வரப்பட்ட வரன்முறை, குறிப்பாக நீர்ப்பிரளயக் கதைகள், மற்றும் தென்னிந்திய பௌதீக உறுப்புக்களில் புகுத்தப்பட்டுள்ள ஐதீகக் கதைகள் அரசவம்சங்களுடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகங்கள், மதங்களுடன் புகுத்தப்பட்ட ஐதீகங்கள் பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஐதீகங்கள் எனப்பலவாறாக நோக்கப்பட்டுள்ளது. இவ் ஐதீகங்கள் தென்னிந்திய பண்பாட்டினை உருவாக்க எவ்வெவ் வழிகளில் துணைநின்றன என்பது பற்றி ஓரளவிற்கேனும் இக்கட்டுரை உணர்த்தி நிற்கின்றது எனலாம்.

எனவே தொகுத்துக் கூறுமிடத்து இன்றைய நவீன உலகில் ஐதீகம், பண்பாடு முக்கியத்துவம் அற்ற ஓர் நிலைப்பாட்டினை எட்டிய போதிலும் மனிதநாகரிக வரலாற்றில் அவற்றின் முக்கியத்துவத்தினை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. ஏனெனில் ஐதீகம் சார்ந்த பண்பாட்டம்சங்களே வரலாறு என்பதை வளர்ச்சி பெறச்செய்தது என்று கூறமுடியும். அந்தவகையில் தென்னிந்திய பண்பாட்டு உருவாக்கமும் ஐதீகங்களும் என்ற இக்கட்டுரை மத, இன வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நோக்கப்படாது பொதுவான அம்சங்களை கொண்டதாக நோக்கப்பட்டுள்ளது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் பட்டியல்


ஆரோக்கியசாமி, மு., *தமிழ்நாட்டு வரலாறு,* சென்னை:1958.

பிள்ளை, கே.தே., *தென்னிந்திய வரலாறு,* சென்னை:1958

நீலகண்ட சாஸ்திரி, கே.ஏ, *தென்னிந்திய வரலாறு,* இலங்கை அரசாங்க அச்சகம்:1966.

உரோலின்சன், ஏ.சீ., *இந்தியா ஒரு பண்பாட்டு வரலாற்றுச் சுருக்கம்,* சென்னை:1961.

நல்லபெருமாள், சு., *சிந்தனை வகுத்தவழி,* சென்னை:1965.

கிருஷ்ணராஜா, செ., *இந்து நாகரிகம் பன்முகப்பார்வை,* யாழ் பல்கலைக்கழகம் :1998.

சுவாமி வேதாசலம்., *மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்,* தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்:1930.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று நோக்கில் எல்லாளன் துட்டகாமினி போராட்டம்

செல்வி. சி. ஹாமினி
இரண்டாம் வருடம்
வரலாறு சிறப்புக்கலை.

இலங்கையில் தொல்லியல், மானிடவியல், சமூகவியல் என்பன தொடர்பான ஆய்வுகள் விருத்தியடையாத நிலையில் மகாவம்சம், சூளவம்சம் முதலான பாளிநூல்கள் கூறும் வரலாறே, இலங்கையின் வரலாறு என நம்பப்பட்டது. மகாவிகாரையில் இருந்து பௌத்தத்தை போதித்த மகாநாம தேரரின் முக்கிய நோக்கங்களை இனங்கண்டு கொண்டால், மகாவம்சம் நடுநிலை நின்று இலங்கை வரலாற்றைத் தரும் நூலாகாது என்பது தெளிவாகும். அவ்வகையில் இலங்கை வரலாறு எழுதப்பட்ட காலத்தில் நீதிநெறி தவறாது ஆட்சி செய்த மாவீரன் எல்லாளன், சண்டைக்குச் சலிக்காத பெருவேந்தன் துட்டகைமுனு ஆகிய மன்னர்களைக் காவிய புருஷர்களாகக் கொண்டு மகாவம்ச ஆசிரியர் தந்த தவறான தகவல்களின் தொகுப்பே துட்டகாமினி காவியமாகும். மகாநாமதேரர் இந்நூலை இயற்றியதன் நோக்கத்தை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) தேரவாத பௌத்தத்திற்கு தொண்டாற்றிய சிங்கள மன்னர்களின் வரலாற்றைக் கூறுவது.
2) சிங்கள மன்னர்களும், மக்களும் இலங்கை நாட்டினர் தமிழ்மக்கள் வந்தேறு குடிகள், தமிழ் மன்னர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்து அநுராதபுரத்தை பிடித்து ஆண்ட ஆக்கிரமிப்பாளர்கள் எனவலியுறுத்தல்,
3) சிங்கள மக்களின் மூதாதையர்கள் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியர்கள், தமிழர்கள் தென்னிந்தியாவிலிருந்து குறிப்பாக தமிழகத்திலிருந்து வந்த திராவிடர்கள்.
4) தமிழர்கள் சிங்களவர்களுக்கும், பௌத்தமதத்திற்கும் எதிரானவர்கள். தமிழர்களின் அச்சுறுத்தலிலிருந்து நாட்டையும் பௌத்தமதத்தையும் காப்பாற்ற வேண்டும்.

இவற்றை மையமாகக் கொண்டே மகாநாம தேரர் மகாவம்சத்தை எழுதினார். இலங்கையில் அந்நியர் ஆட்சியகன்று பேரினவாதிகளான சிலரது கைகளில் இலங்கை ஆட்சி செய்யப்பட்ட போது இலங்கை மக்களைப்பிரித்து, பிளவுபடுத்தி, லாபம்தேட முனைந்த முனைப்பின் விளைவாக, இவ்வுணர்வுகளுக்கு அப்பால் அரசோச்சியமன்னர்களை வேண்டாத, விரும்பாத இனசாயத்தைப் பூசி தமிழ்-சிங்கள இனங்களின் பிரிவினைக்கு வித்திட்டார்கள். எல்லாளனுக்கும் துட்டகாமினிக்குமிடையே நடைபெற்ற யுத்தம், வேண்டுமென்றே தமிழ் -சிங்கள இனங்களிடையே நடைபெற்ற யுத்தமாக மகாவம்ச ஆசிரியரால் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. அவ்வகையில் அதன் போலியான உண்மைக்குப் புறம்பான, தகவல்களை ஆராய்ந்து இனங்காண்பது சிறப்பானதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவம்ச ஆசிரியரின் உணர்ச்சி ததும்பிய வசனங்கள், துட்டகாமினி எல்லாளன் போராட்டமானது, இனரீதியாக நடைபெற்ற போரல்ல என்பதை தெளிவுபடுத்துகின்றது. எங்கும் எப்போதும் ஒரு வரலாற்றை அறிவதற்குமுன் அவ்வரலாற்றாசிரியனின் வரலாற்றை விளங்கிக் கொள்வது அவசியமாகும். அக்கண்ணோட்டத்தில் நோக்கும் போது மகாவம்ச ஆசிரியரின் காலச்சூழலும் அவரது மனோநிலையும் இப்போருக்கு அடிப்படைக்காரணங்களாக அமைகின்றன. மகாநாமதேர் தேரவாத பௌத்தத்தை ஆதரிக்கும் சமய வாதி, பௌத்தர் அல்லாதோர் மட்டுமன்றி, மகாவிகாரையை ஆதரிக்காது வேறுபௌத்த நிறுவனங்களை ஆதரித்தவர்களையும் கூட விசுவாசமற்றவராகவே கருதினார். எனவே பௌத்த சிங்கள அபிசுவாசிகளின் செல்வாக்கிலிருந்து நாட்டையும் பௌத்த மதத்தையும் காப்பாற்றுவது அவரின் முக்கிய நோக்காக காணப்பட்டமையால் தமிழ்மன்னர்களையும், மக்களையும் ஆக்கிரமிப்பாளர்களாக அன்னியர்களாகச் கருதி மகாவம்சத்தைக் சித்தரித்தார்.

## தவறான மதம்

மகாவம்சம் எழுந்த கி.பி 6ஆம் நாற்றாண்டில் பக்தியிலக்கியங்கள் தமிழ்நாட்டில் உருவாகி, வளர்ச்சி பெற்று பௌத்த சமயத்தை வீழ்ச்சியடையச் செய்து சைவ, வைஸ்ணவ சமயங்களை வளர்ச்சியடையச் செய்தது. இதன் தாக்கம் இலங்கையிலும் ஏற்பட்டது. வணிககணங்களின் எழுச்சியினாலும், சைவ வைஸ்ணவ சமயங்களின் புத்துயிர்ப்பினாலும் ஏற்கனவே பௌத்த மதத்தை தழுவிய மக்கள் மீண்டும் சைவத்திற்கு மாறத்தொடங்கினர். இதனால் காலப்போக்கில் சிங்கள மக்களும் மதம்மாறக்கூடும் என்ற அச்சம் மகாவம்ச ஆசிரியருக்கு ஏற்பட்டிருக்க வேண்டும். இதனாலேயே மகாநாமதேரர் தான் வாழ்ந்த காலத்திற்கு முற்பட்டவரலாற்றை இனமத உணர்வுடன் நோக்கி தமிழ்மக்களையும், தமிழ்மன்னர்களையும் வேற்றுநாட்டவர்களாகக் காண்பிக்க முனைந்து இப்போராட்டத்தை ஒரு இனப்போராட்டமாக வடிவமைத்தார்.

மற்றும் ஒவ்வொரு அத்தியாயத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் ''விசுவாசிகளின் உண்மையான இன்பத்திற்கும் மனநிறைவுக்குமே இந்நூலையாத்துள்ளேன்'' எனவும் பௌத்தத்தை ஆதரிக்காத கொள்கையுடையவர்கள் "தவறான மதக்கொள்கை உடையவர்கள்" என்றும் "அவர்கள் மிருகங்களிற்கு ஒப்பானவர்கள்" என்றும் சித்தரித்துள்ளார்.

## வலிமையான அரச அமைப்பு.

மகாவம்ச ஆசிரியர் செப்புவது போல் போராட்டகாலத்தில் வலிமையான அரசுகள் எதுவும், இலங்கையிலோ, இந்தியாவிலோ காணப்படவில்லை. கி.மு 8ஆம்நூற்றாண்டிலிருந்து கிடைக்கப்பெறும் கல்வெட்டுக்கள் இதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்க சான்று பகருகின்றன. வடக்கில் மாத்திரமன்றி தெற்கிலும் தமிழ்ச்சிற்றரசுகள் இருந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது. மகாவம்சத்தின் முதன்மை அரசனாக சித்தரிக்கப்படும் துட்டகைமுனு, எல்லாளனுடன் அநுராதபுரத்தில் போர் தொடுப்பதற்கு முன்பு, 32 தமிழ்ச் சிற்றரசுகளுடன் போராடி வெற்றியீட்டியதாக மகாவம்சம் கூறுகின்றது. கி.பி 3ஆம் நூற்றாண்டுக்கு முன் தமிழ்மன்னர்களும் சிங்கள மன்னர்களும் அநுராதபுரத்தை மாறி மாறி ஆட்சி புரிந்தனர். அரசியல் வரலாற்றில் முதல் 200 ஆண்டுகாலம் இவ்வரசையாண்ட 22 மன்னர்களுள் 10 பேர் தமிழ் மன்னர்களாவர். இத்தமிழ்மன்னர்கள் 80ஆண்டுகளுக்கு மேல் அநுராதபுரத்தில் அரசோச்சினர்.

சேனன், குத்திகன், எல்லாளன் என்போரை அரச வம்சத்தைச் சாராதவர்கள் எனக் கூறும் மகாவம்சம், அதேவேளையில் இவர்கள் தென்னிந்தியா விலிருந்து படையெடுத்து வந்து சிங்கள அரசைக் கைப்பற்றிய அந்நிய ஆக்கிரமிப்பாளர் என வலியுறுத்துகிறது. இவர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களாயின், இலங்கையில் 66 ஆண்டுகள் அரசோச்சிய இவர்களைப் பற்றிய இலக்கிய கல்வெட்டுச்சான்றுகள் தமிழகத்தில் இருந்திருக்கும். சங்க இலக்கியங்களிலோ, கல்வெட்டுக்களிலோ இவர்களைப்பற்றிக் கூறப்படவில்லை. ஆனால் சமகாலத்தில் இலங்கையிலிருந்த கி.மு 3ஆம் 2ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில் இப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

சங்க காலத்தில் தமிழக எல்லையை தாண்டி அயல்நாடுகளுக்கு படையெடுத்துச் செல்லுமளவிற்கு அரசுருவாக்கம் ஏற்பட்டிருக்கவில்லை. மாறாக இனக் குழு நிலையிலிருந்து அரசு தோன்றுவதற்கு இடைக்கட்டமாக இருந்த தலைவர்களின் ஆட்சியும் சேர, சோழ, பாண்டிய சிற்றரசுகளின் ஆட்சியுமே காணப்பட்டன. இதையொத்த நிலையே இலங்கையிலும் காணப்பட்டது. இதனைப்பாளி இலக்கியங்களும் கி.பி 3ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களும் உறுதிப்படுத்துகின்றன. அரசவம்சத்தைச் சாராத குதிரை வணிகரின் மக்கள் தமிழகத்தில் படைதிரட்டி, இலங்கை மீது படையெடுத்து அநுராதபுரத்தைக் கைப்பற்றினர் என்பது பொருத்தமுள்ளதாகத் தெரியவில்லை. அதே போல் தமிழகத்தில் சிற்றரசனாகக் கூட இருக்காத எல்லாளன் இலங்கையை ஆக்கிரமித்தான் என்பதையும் நம்பமுடியவில்லை.

## வடஇந்திய காவிய மரபு

மகாநாம தேரர் வாழ்ந்த காலத்தில் வடஇந்தியாவிலிருந்து வந்த பௌத்தர்களின் தொடர்பால் வட இந்திய காவியமரபு இலங்கையிலும் பாதிப்பை ஏற்படுத்தியது. அதாவது மகாநாம தேரர் வாழ்ந்த கால இலக்கிய வளர்ச்சியின் பாதிப்பினையும், சமஸ்கிருத காவிய வளர்ச்சியின் செல்வாக்கினையும் மகாவம்சத்தில் அவர் கையாண்டிருப்பதை துட்டகாமினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவியப்பகுதி துல்லியமாக புலப்படுத்துகின்றது. தான் எடுத்துக்கொண்ட காவியத்தலைவன் ஒரு சிறப்பு வாய்ந்த வம்சத்தில் தோன்றியவன் என்பதையும், அவனை ஒரு தன்னிகரில்லாத் தலைவன் எனவும் துட்டகாமினியுடன் சம்பந்தப்பட்ட இன்னொரு முக்கிய பாத்திரமான அவனது தந்தையான காக்க வண்ண தீஸனின் சிறப்புக்கள் மறைக்கப்படுவதையும் காணலாம். குப்தர்காலத்தில் ஏற்பட்டிருந்த இக்காவிய வளர்ச்சியின் அலைகள் ஈழத்து இலக்கிய வளர்ச்சிலும் பாதிப்பினை ஏற்படுத்தியமைக்கு மகாவம்சத்தில் இடம்பெற்றுள்ள துட்டகாமினி காவியம் ஒரு சிறந்த உரைகல்லாகும்

மகாவம்சத்தில் மகாநாம தேரரினால் தெரிவு செய்யப்பட்டிருந்த காவியத்தலைவன், எல்லாத்துறைகளிலும் ஏனையபாத்திரங்களை விட தன்னிகரற்றவனாக சித்தரிக்கப்பட்ட வேண்டிய ஒரு நிலைகாணப்பட்டது. இதனால் ஏனைய மன்னர்களின் சமயத்துறைச்சாதனைகள் எல்லாம் துட்டகாமினியின் சாதனைகளாக எடுத்துக்காட்டவேணடிய நிலைக்கு மகாநாமதேரர் உள்ளாக்கப்பட்டார். துட்டகாமினியை தன்னிகரற்ற ஒரு காவிய நாயகனாக கொள்வதற்காக அவனது தம்பியான சத்தாதீஸனது ஆளுமையினையும், சாதனைகளையும் குறைத்துக்காட்டியது மட்டுமன்றி அவனை ஒருதரங்குறைந்த பாத்திரமாக்கியும் காட்டியுள்ளார். இவ்வாறாக துட்டகாமினியின் வாழ்க்கை வரலாறானது, மகாவம்சத்தில் பல குறைபாடுகளையுடையதாகக் காணப்படுகின்றது.

## பக்கச் சார்பான கண்ணோட்டம்

கி.பி 3ஆம் நூற்றாண்டுக்கு முன் தமிழ் மன்னர்களும் சிங்களமன்னர்களும் அனுராதபுரத்தை மாறிமாறி ஆட்சிபுரிந்ததை பாளி இலக்கியங்கள் குறிப்பாக மகாவம்சம் என்ற நூல் கூறுகிறது. அரசியல் வரலாற்றின் முதல் 200ஆண்டுகாலம் இவ்வரசையாண்ட 22 மன்னர்களுள் 10பேர் தமிழ்மன்னர்கள் இவர்கள் 80 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளார்கள். இது அனுராதபுர அரசு தமிழ்மன்னர்களுக்கா, சிங்கள மன்னர்களுக்கா என்ற அதிகாரப் போட்டி நிலையைக் காட்டுகிறது. ஆனால் சிங்கள மன்னர்களின் வரலாற்றுச் சாதனைகளைப் பல்லாயிரம் செய்யுள்களில் கூறும் இந்நூல் தமிழ்மன்னர்களின் வரலாற்றை ஒரு சில செய்யுட்களில் மட்டும் கூறுகின்றது. குறிப்பாக 44 ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி புரிந்த எல்லாள மன்னனின் சாதனைகளை 21 செய்யுள்களில் கூறும் மகாவம்சம் 26 ஆண்டுகள் மட்டுமே ஆட்சி புரிந்த துட்டகாமினியின் வரலாற்றை 823 செய்யுட்களில் கூறுகின்றது. இதற்கு இந்நூல் எழுந்த காலப் பின்னணி, நூலாசிரியரின் இன, மத, உணர்வுகள் நோக்கம் என்பன காரணமாக அமைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கள, தமிழ் மொழி ஒற்றுமை

இலங்கையில் தமிழ் மொழி பல நூற்றாண்டுகள் வழக்கில் இருந்துவந்த காரணத்தினாலேயே தமிழ் மொழியறிவும், சிங்கள மொழியறிவும் கொண்ட மக்கட் சமுதாயம் ஒன்று பண்டைக்காலத்தில் உருவாகியிருந்தது. இச்சமுதாயத்திலிருந்த இருமொழியறிவு பெற்ற மக்கள் பற்றிக் கூறுவதற்கு ஆதாரம் எதுவுமில்லை. ஆயினும் தமிழ்மொழிக்கும், சிங்கள மொழிக்கும் ஏற்பட்ட தொடர்பையும், இத்தொடர்பால் சிங்கள மொழியில் தோன்றிய விளைவையும் நோக்கும்போது இருமொழியறிவு கொண்ட மக்கட் சமுதாயம் ஒன்று இருந்ததென்பதும், அச்சமுதாயம் மூலம் தமிழ் மொழியின் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவிற்கு சிங்கள மொழியில் பரவியதென்பதும் புலனாகிறது. தமிழ்ச்சொற்கள் பலவற்றையும் தமிழ்மொழி, அமைப்புக்களையும், சிங்கள மொழியிற் காண்கிறோம் (சுசீந்திரராஜா 1999.153.4) இது சிங்கள மொழியின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் தமிழ் மொழியே காரணம் என்பதை உறுதிப் படுத்துகிறது.

## நீதிதவறாத ஆட்சி

எல்லாளன் இன, மதவேறுபாடின்றியே 44 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனது நீதி தவறாத ஆட்சி பற்றிய கதைகள் மனுநீதிகண்ட சோழன் கதையில் இடம்பெறும் நிகழ்ச்சிகளை ஒத்திருப்பதாக ஆசிரியரே கூறுகின்றார். இவனது செங்கோன்மை மிக்க ஆட்சி பௌத்தமதத்திற்கு அவன் வழங்கிய ஆதரவு, இன மத பேதமற்ற கருணையுள்ளம் அனைத்து மக்கள் மத்தியிலும் பெருமதிப்பைப் பெற்றுக் கொடுத்தன. இலங்கை அரசியல் வரலாற்றில் நீண்டகாலம் ஆட்சி செய்ய அவனது படைப்பலம் மட்டுமே போதியதாகாது. மக்களின் நன்மதிப்பைப் பெற்று அவர்களின் சமயத்திற்கு ஆதரவுநல்கி ஆட்சிபுரிந்தமையாலேயே நீண்டகாலம் அவனது ஆட்சி நீடித்தது.

இப்போரை இனமதப்பூசலாக சித்தரித்துள்ள மகாவம்சமானது, எல்லாளனது தளபதிகளாக சத்த, தித்தல்ல, நாளிக என்ற சிங்கள பெயர்களை அடையாளப்படுத்தியுள்ளது. மற்றும் பலரும் இருபக்கங்களில் நின்று இன - மத வித்தியாசமின்றி போரிட்டமையால், தம் எதிரிகளை இனங்காணாது சொந்த அணியைச் சார்ந்தவர்களையே கொன்றார்கள், என மகாவம்ச ஆசிரியர் கூறியுள்ளார். துட்டகாமினியின் பல்லக்கைத் தூக்கிச் சென்றவர்களும் தமிழர்களாக சுட்டப்பட்டுள்ளனர். எல்லாளனின் மரணத்தின்பின் துட்டகாமினியுடன் போரிடுவதற்கு தென்னிந்தியாவிலிருந்து 60000 படைவீரர்களுடன் வந்திறங்கிய 'பலுக்க' என்ற தளபதியின் பெயரும் தமிழ்ப்பெயர் அடையாளத்தைக் கொண்டிருக்கவில்லை. எனவே இரு இனத்தவர்களின் பக்கமும் குறிப்பிடத்தக்க அளவு மறு இனத்தவர்கள் காணப்பட்டமையால், இது இனங்களின் பகையுணர்வுப் போராட்டமாக இருந்திருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துட்டகாமினியின் தந்தையே தமிழர்களுடன் போரிடக் கூடாது என பணித்துள்ளார். என மகாவம்ச ஆசிரியர் கூறியுள்ளார். அவ்வாறான இன மத சமத்துவமுடைய ஒரு மன்னனின் பிள்ளை இனத்துக்காக, பௌத்த மேன்மைக்காக எல்லாளனுடன் போரிட்டு வென்றான் என மகாவம்சம் கூறியுள்ளமை நயக்கத்தக்கதாகும். துட்டகாமினியின் தந்தையின் காலத்திலிருந்தே தமிழர்கள், சிங்களவர் என்ற இனபேதமின்றி மக்கள் வாழ்ந்ததை காக்க வண்ண தீஸனின் கூற்றாக வெளிக்காட்டிய ஆசிரியர், துட்டகாமினி சிங்கள மக்களைக் காப்பாற்றுவதற்காக, பௌத்த சமயத்தை வளம்படுத்துவதற்காக எல்லாளனுடன் போரிட்டான் எனக்கூறுவது நியாயமாகாது.

போரில் எல்லாளன் இறந்ததும் அவ்விடத்தில் நினைவுச் சின்னம் நிறுவி அவ்விடத்தால் செல்லும் வாகனங்களும், மக்களும் இறந்த மன்னனுக்கு மரியாதை செலுத்துமாறு கட்டளையிட்டான். இதை ஆராயும்போது துட்டகாமினி எல்லாளன் போரானது உண்மையில் ஒரு இனப்போராக அமைந்திருந்தால், எல்லாளன் இறந்தவுடன் அம்மன்னனுக்கு சமாதி கட்டி, மரியாதை செய்திருப்பான் என எண்ண முடியாது. அத்தகைய சமாதிக்கு மகாநாமதேரர் கூறியுள்ளது போல், பிற்பட்ட காலம் வரை எல்லோராலும் மரியாதை செய்யப்பட்டிருக்கும் எனவும் எதிர்பார்க்கமுடியாது.

இம்மகாவம்சமானது பௌத்த, சிங்கள இனத்தவர்களை முதன்மைப்படுத்த எழுதப்பட்ட பக்கச் சார்பான காவியம் என்பதை ஆசிரியரே பல இடங்களில் வெளிக்கொணர்ந்துள்ளார். 13 அத்தியாயங்களில் கூறப்பட்ட இத்துட்டகைமுனு எல்லாளன் போரானது வரலாற்று உண்மையுள்ள சம்பவமாயின், ஐந்நூறு துறவிகளைத் துட்டகாமினியுடன் போருக்குச் செல்ல அனுமதித்ததால், "பிக்குகள்" இராணுவ அணிவகுப்பை பார்வையிடக் கூடாது என்ற பௌத்த கோட்பாட்டிற்கு பௌத்த சம்மேளனம் முரணாக நடந்துள்ளது. இங்கு பிக்குகள் போரில் கலந்து கொண்டமை மகாவம்ச ஆசிரியரால் கற்பனை செய்யப்பட்ட தகவலாக இருக்கக் கூடும். இதனால் இவ்வாசிரியரின் முக்கிய கோட்பாடு என்னவெனில் ஒரு சம்பவத்தின் உண்மையை அன்றி, அதன் முக்கியத்துவத்தை பாதுகாப்பதேயாகும்.

மேலும் ஆசிரியர் ஒவ்வொரு அத்தியாயத்தின் முடிவிலும் "விசுவாசிகளின் உண்மையான இன்பத்திற்கும் மனநிறைவுக்குமே இந்நூலை யாத்துள்ளேன்" எனக்கூறியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். இதுமட்டுமன்றி இந்துசமயம் தவறான சமய நம்பிக்கை உடையது என்றகருத்தை தன்னூலில் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

மற்றும் கோபமும் துக்கமும் நிறைந்து காணப்பட்ட இளவரசன் கட்டிலில் கால்களை முடக்கிக் கொண்டு படுத்திருந்தபோது தாய் விகாரமகாதேவி, அவன் அவ்விதம் படுத்திருக்கும் காரணத்தைக கேட்க அதற்கு அவன், கட்டிலை நாட்டிற்கு ஒப்பிட்டு, "அங்கே ஆற்றின் மறுகரையில் தமிழர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றார்கள். எனவே எப்படி நான் என் உடம்பை நீட்டிப்படுக்க முடியும்?" என பதிலளிப்பதாக மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. எனவே சிங்கள - தமிழ் இனங்களின் பகையுணர்வைச் சித்தரிக்கும் முக்கிய நோக்கமாகவே இக்காவியம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பௌத்தத்தின் மகிமைக்காக இலங்கையை துட்டகாமினி ஒன்றுபடுத்தியபின், இம் மாபெருங்குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக எண்ணிலா அளவு மனித உயிர்களைக் கொல்லவேண்டி நேர்ந்தமை குறித்து துக்கப்பட்டான் என மகாவம்சம் கூறுகின்றது. இங்கு மகாவம்ச ஆசிரியர் ஒரு சங்கடமான நிலையை எதிர்நோக்க வேண்டியிருந்தமையால் தனக்குச் சாதகமான, ஓர் அருமையான தீர்வைக் கற்பனை செய்துள்ளார். பியாங்கு தீபத்தில் உள்ள அரகாத்துக்கள் அரசனின் நிலையைக் கேள்விப்பட்டதும், அவனுக்கு ஆறுதல் கூற எட்டு அரகாத்துக்களை அனுப்பியதாக மகாவம்சம் கூறுகின்றது. எல்லாளனுக்கு எதிராக அவன் செய்த போர்களில் இறந்தவர்களில் ஒருவன் மாத்திரமே மூன்று அடைக்கலங்களையும் ஐந்து நெறிகளையும் கடைப்பிடித்தவனாக இருந்தான் என்பது இவர்களது கருத்து. ஏனையோர் விசுவாசமற்றவர்களும், துர்நடத்தைக்காரருமாகையால், மிருகங்களை ஒத்தமதிப்பே கொடுக்கப்பட வேண்டியவர்கள் என ஆசிரியர் வலியுறுத்தியுள்ளார். தூய பௌத்தக் கொள்கையின் அடிப்படையில், மிருகக்குணம் உடையவன் என்ற காரணத்திற்கு கூட ஒருமனிதனை கொல்வது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். வரலாற்று ஏடுகள் தூயதர்மத்தைப் போதிக்கும் நூல்கள் அல்ல. அத்துடன் அவற்றில் தூய பௌத்தத்தை எதிர்பார்ப்பது மதக்கொள்கை, வரலாற்று ரீதியான அம்சங்கள் ஆகிய இருவேறுபாடான அம்சங்களைக் கலந்து சிக்கலை உருவாக்கியுள்ளது.

மற்றும் இம்மகாவம்சக் கருத்துக்களை நியாயப்படுத்தக் கூடிய சான்றுகள் மிகப்பழைய வரலாற்று நூலான தீபவம்சத்திலோ, பின்னர் எழுதப்பட்ட சூளவம்சம், பூஜாவலிய ஆகிய நூல்களிலோ குறிக்கப்படவில்லை. மகாவம்சமானது துட்டகாமினி - எல்லாளன் யுத்தத்தினை 13 அத்தியாயங்கள் கொண்ட ஒரு காவியப்பகுதியாக சித்தரித்துக் காட்ட, தீபவம்சம் ஒரு சிறுகுறிப்பையே தந்துள்ளது. இதில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு படையெடுத்த சேனன், குத்திகன் என்போர் தமிழரெனக் குறிப்பிடப்பட்டிருக்க எல்லாளன் அவ்வாறு கூறப்படாதது கவனிக்கத்தக்கதாகும். மகாவம்சத்தின்படி உயர்குலத்தில் பிறந்தவனும் சோழநாட்டிலிருந்து வந்தவனுமாகிய எல்லாளன் தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்தினான். முரணாக இவன் ஷத்திரிய குலத்தவன் என்று மகாவம்சம் கூறுவது கவனிக்கத்தக்கது.

துட்டகாமினியின் கதையை மகாவம்சத்தின் விபரணத்தில் இருந்து பெற்ற 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தீபவம்ச ஆசிரியர் அரகாத்துகள் துட்டகாமினிக்கு கொடுத்த ஆறுதல் செய்தியை எழுதாது தவிர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 'தன்முன்னைய பிறப்புகளில் தான் புரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்கிரியைகளால், தன் இறுதிப் பிறப்பில் மைத்திரிக புத்தராகப் பிறப்பவரின் வலதுகைச் சீடராக இருப்பதற்கு வேண்டிய தகைமைகளை அவன் பெற்றுள்ளதால், துட்டகாமினி வருந்தத் தேவையில்லை'. என்ற தேறுதல் செய்தியையே அரகாத்துகள் துட்டகைமுனுவிற்கு கொடுத்ததாக தீபவம்சம் கூறுகின்றது.

மற்றும் பூஜாவலிய எனும் நூலில் எல்லாளனைப் பற்றிக் கூறப்பட்ட நல்ல வார்த்தைகள் கூறப்படாமல் மறைக்கப்பட்டதோடு அவன் ஒரு அநீதியுள்ள ஆட்சியாளனாகவும், பௌத்த மடங்களையும், நிறுவனங்களையும் அழித்தவனாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளான். ஒரு மில்லியன் முப்பத்தி நான்காயிரம் தமிழர்களைக் கொன்றபின் துட்டகைமுனு முடிசூடியதாகவும், அரசனுக்கு உரிய பத்துக்குணாதிசயங்களுக்கும் ஏற்ப அவன் அரசாண்டதாகவும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. எனவே தீபவம்சம், மகாவம்சம், பூஜாவலிய என்ற மூன்று முக்கிய ஏடுகளும் துட்டகைமுனு - எல்லாளன் கதை தொடர்பான விபரங்களில் தம்முள் முரண்படுவதோடு இலங்கையின் வரலாற்றியலின் வளர்ச்சி பற்றியும், வரலாற்று ஆவணங்களில் புகுந்துள்ள முற்சாய்வுகள் பற்றியும் பல உண்மைகளைத் தெளிவாக்கியுள்ளன.

எல்லாளனைப் பிறநாட்டவன் எனச் சுட்டுவதற்காகவே மகாவம்ச ஆசிரியர் "பௌத்தகுருமாரைத் தானம் கொடுப்பதற்காக அழைக்கச் சென்றபோது எல்லாளனது தேர்ச்சில்லின் அச்சு பௌத்த தாது கோபுரத்தை முட்டியது. அதனால் அதைச்சுட்டி எல்லாளனுடைய அமைச்சர்கள் "அரசே உம்மால் எம்முடைய தீவிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது" எனக் கூறியுள்ளார்.

இதனால் எல்லாளனுடைய அமைச்சர்கள் சிங்களவர்களாக காணப்பட்டாலும் அவர்கள் பௌத்தத்தின் மீதும் சிங்கள இனத்தின் மீதும் பற்றுக்கொண்டவர்கள் என்ற தொனியிலேயே ஆசிரியர் இக்கருத்தை முன்வைத்துள்ளார். மற்றும் துட்டகைமுனுவின் தாயாரான விகாரமாதேவி எல்லாளனது தளபதியைக்கொண்டு எல்லாளனது குருதியைக் குடிக்க விருப்புக் கொண்டதாக அறியமுடிகிறது. இது ஒரு பெண்ணின், அன்பு, கருணை, அடக்கம் என்பவற்றுக்கு அப்பாற்பட்ட கற்பனை வடிவமாகும். எனவே மகாநாம தேரர் தன் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு உட்பட்ட வகையில் மகாவம்சத்தை வரைந்துள்ளமை புலனாகிறது.

சேனன், குத்திகன், எல்லாளன் என்போர் அரசவம்சத்தைச் சேர்ந்தவர்கள் என மகாவம்சம் கூறுகின்றது. இவர்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்களாயின், இலங்கையில் 66 ஆண்டுகள் அரசோச்சிய இவர்களைப் பற்றிய இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் தமிழகத்தில் இருந்திருக்கும். சங்க இலக்கியங்களோ, கல்வெட்டுக்களோ தமிழகத்தில் இவர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. சேன, குத்திக எனும் பெயர்கள் தென்னிந்தியக் கல்வெட்டுக்களில் இடம்பெற்றதாக தெரியவில்லை. ஆனால் சமகாலத்தில் இலங்கையில் இருந்த கி.மு 3ஆம், 2ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுக்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெயர்கள் இடம்பெற்றுள்ளன. எனவே இத்தமிழ் அரசர்களை தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர் எனக்கூறிய மகாவம்சக்கூற்று பொருத்தமற்றது.

எனவே துட்டகைமுனு - எல்லாளனுக்கிடையில் நடைபெற்ற போர் பலகாரணங்களை அடிப்படையாக வைத்து நடைபெற்றிருக்கலாம். தங்களுக்குள் ஏற்பட்ட பகைமைகாரணமாகவோ, அல்லது ஆட்சி எல்லைகளை விரிவுபடுத்துவதற்காகவோ அல்லது பரம்பரை ஆட்சியை மீட்டுக் கொள்வதற்காகவோ நடந்திருக்கலாம். ஆனால் இப்போருக்கு மகாநாமர் கூறுவது போல் "இனரீதியான மோதல்" என்ற கருத்து முரணாக அமைந்துள்ளது. இவர் தமது சொந்த விருப்பு வெறுப்புகளுக்குட்பட்ட வகையில் இக்காவியத்தை அமைத்துக் கொண்டதால் பலகுறைபாடுகளை உடையதாக அமைந்துள்ளது. இவர் சிங்களவராக இருந்தமையாலும், மகாவிகாரையை ஆதரித்த தேரவாத பௌத்த சமயத்தை பின்பற்றியவராகவும் காணப்பட்டமையால், அப்பாதிப்புக்களை துட்டகைமுனு காவிய மரபில் நிறையவே காணமுடிகிறது.

அதுமட்டுமல்லாது சிங்கள - தமிழ் மொழி ரீதியில் தாதுசேனன் காலத்தில் தோற்றம் பெற்றிருந்த சமூக எழுச்சியை தேரர் எடுத்துக்காட்டியிருப்பது, வரலாற்று எழுத்தியலில் பெரும்தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது. தாதுசேனன் காலத்தில் வாழ்ந்த மகாநாமதேரர் இயல்பாகவே அக்காலத்தில் ஏற்பட்ட இனரீதியான, மொழிரீதியான சமூகக் கொந்தளிப்புகளால் தாக்கப்பட்டநிலையில் மகாவம்சத்தை எழுதியபோது, துட்டகைமுனு காவியப்பகுதியில் அவ்வின வேற்றுமையை எடுத்துக் காட்டி எல்லாளன், துட்டகைமுனு போராட்டத்தினை ஓர் இனப் போராட்டமாக மதப்போராட்டமாக, சித்தரித்துள்ளார்.

இன்றும் கூட துட்டகைமுனு - எல்லாளன் பிரச்சனையானது இனத்துவேசத்திற்கு அடியிட்டு வருகிறது. S.பரணவிதான எல்லாளன் சமாதியை துட்டகாமினியின் சமாதி எனக்கூற K.M.D சில்வா அதனை எதிர்த்து "தக்கிண தூபி" அல்லது "எல்லாளன் சமாதி துட்டகைமுனுயின் கல்லறை அல்ல" என்ற தலைப்பில் 1957 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24ஆம் திகதி Ceylon observer ஞாயிற்றுப்பதிப்பில் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் 28.02.1980இல் ஜனாதிபதியும் அமைச்சரவையும் சேர்ந்து உத்தியோக பூர்வமான அறிக்கையை Ceylon daily News வாயிலாக வெளியிட்டனர். அதில் அவர்கள் எல்லாளன் அஸ்தியை துட்டகைமுனுவின் அஸ்தி என்றே குறிப்பிட்டிருந்தனர். இது இனத்துவேசமானது எந்தளவிற்கு மேலோங்கியிருக்கிறது என்பதைக்காட்டுகிறது.

எனவே சிங்கள பௌத்த மத வாதிகளால் காலத்தின் தேவைக்கேற்ப வரையப்பட்ட துட்டகைமுனு எல்லாளன் போராட்ட வரலாறடங்கிய மகாவம்ச நூலானது பொதுநிலை நிற்கக்கூடிய கல்விமான்களால் மீளவும் ஆராய்ந்து திருத்தியமைக்கப்பட்டால், இன்றளவும் காணப்படும் இனத்துவேஷம், மதவெறி என்பன நீங்கி சமாதான நடவடிக்கைகள் உதயமாகும் என்பதை எவரும் மறுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் பட்டியல்

கிருஸ்ணராஜா,செ., **இலங்கை வரலாறு,** பாகம். I, வரலாற்றுத்துறை, யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி:1999.

சிற்றம்பலம்,சி. க., **யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு,** யாழ் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி: 1993.

புஸ்பரட்னம், P., **தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு,** யாழ்ப்பாணம் : 2000.

செல்லத்துரை, U.M., **இலங்கைத் தமிழ் வரலாறும் இன்றைய நிலையும்,** மட்டக்களப்பு : 1999.

சிறி வீர, W.I., "துட்டகைமுனு - எல்லாளன் வரலாற்று நிகழ்வு ஒரு மறு மதிப்பீடு", **இனத்துவமும் சமூக முரண்பாடும்,** மட்டக்களப்பு : 1999.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று நோக்கில் ஈழத்தமிழர் பண்பாட்டு உருவாக்கமும் சோழரும்

**செல்வன். ஜெ. டொன் பொஸ்கோ**
**மூன்றாம் வருடம்**
**வரலாறு சிறப்புக்கலை.**

இலங்கை வரலாற்றிலே சோழர் ஆட்சிக்காலம் ஈழத்தமிழரின் நீண்டகால வரலாற்றில் ஒரு திருப்புமுனையான காலப்பகுதியாக விளங்குகின்றது. இலங்கை அரசியல் வரலாற்றிலே முதன்முறையாக தென்னிந்திய அரச வம்சங்களில் ஒன்று இலங்கை முழுவதையும் கைப்பற்றி அதனைத் தமது நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்து, ஏறத்தாழ 77ஆண்டுகள் தமது அரசியல், பொருளாதார, சமூக, நிர்வாக முறைகளை புகுத்தி ஆட்சி செய்ததன் மூலம் இலங்கை அரசியல், பொருளாதார, சமூக, சமய, கலைத்துறை மரபுகளில் பல மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்துள்ளது என்பதை இலக்கியங்கள், மெய்க்கீர்த்திகள், கல்வெட்டுக்கள் தொல்பொருட்கள் மூலம் அறிய முடிகின்றது.

கி.பி10ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தஞ்சாவூரை மையமாகக் கொண்டு கடல் சார்ந்த பேரரசினை அமைத்த சோழமன்னர் கடைப்பிடித்த வெளிநாட்டுக்கொள்கை, வர்த்தக நலன், மற்றும் மேலாதிக்க கொள்ளைகள் மட்டுமன்றி இலங்கை மன்னர்களின் வெளிநாட்டுக் கொள்கையும் வலிமையின்மை, உள்நாட்டு அரசியல் குழப்பங்கள் போன்ற காரணிகளும் சோழரை இலங்கை மீதும் படையெடுக்கத் தூண்டியது. அந்த வகையில் கி.பி 993 இல் சோழப்பேரரசன் 1ம் இராஜராஜசோழன் வட இலங்கையைக் கைப்பற்றினான். அவனுக்குப்பின் ஆட்சிப்பீடமேறிய 1ம் இராஜேந்திரசோழன் கி.பி 1017இல் முழு இலங்கையையும் கைப்பற்றி சோழரின் நேரடியான நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்தான். இராஜேந்திரசோழன் உரோகணைவரை சென்று 5ம் மகிந்தனை கைது செய்து இந்தியா கொண்டுசென்ற காலம் முதல், 1ம்விஜயபாகு கி.பி1070ல் விடுதலைப் போர் நிகழ்த்தி இராஜரட்டையை சோழர்பிடியிலிந்து விடுவிக்கும் வரை சோழராட்சியே இலங்கை முழுவதும் நிலவியதை சமகால வரலாற்று மூலங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. இலங்கை வரலாற்றில் இவ்வளவு நீண்டகாலம் அந்நியராதிக்கத்தின் கீழ் இலங்கை இருந்துதேயில்லை. மொழியியலில் மதத்தில், கலாசாரத்தில் மாறுபட்ட ஒரு சாதியினர் ஆட்சிப்பீடத்தில் அரைநூற்றாண்டிற்குமேல் இருந்ததால் இலங்கை வரலாற்றில் சோழர்காலம் என்று தனியொரு காலப்பகுதி தோன்றவும் ஈழத்தமிழர் மரபில் பல மாற்றங்கள் ஏற்படவும் வழிவகுத்துள்ளது.

அரசியல் ரீதியாக சோழராட்சியால் ஏற்பட்ட மாற்றங்களை நோக்கும்போது, ஏறத்தாழ 1300 ஆண்டுகள் இலங்கையின் தலைநகராக விளங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுராதபுரம் கைவிடப்பட்டு, புதியதலைநகராக பொலநறுவை தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்கு இராஜராஜ சோழனின் விருதுப் பெயரை நினைவுபடுத்தும் வகையில் "ஜனநாதமங்கலம்" எனப் பெயரிடப்பட்டு சோழரது மேலாதிக்கம் நிலைநிறுத்தப்பட்டது. சோழர் பாதுகாப்புக்கருதி இடம்மாற்றிக்கொண்ட பொலநறுவையே கி.பி 1215இல் கலிங்கமாகனின் ஆட்சிக் காலம்வரை இலங்கையின் முக்கிய தலைநகரமாக விளங்கியது. அதுமட்டுமல்ல சோழருக்குப்பின் ஆட்சிக்கு வந்த 1ம்விஜயபாகு, 1ம்பராக்கிரமபாகு, போன்ற சிங்கள மன்னர்கள் கூட மீண்டும் அநுராதபுரத்தை தலைநகராகத் தெரிவு செய்யாது பொலநறுவையையே சிங்கள அரசின் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய தலைநகர் மாற்றமானது, பிற்காலத்தில் தென்மேற்குப் புலப்பெயர்வின்போது தம்பதெனியா, யாப்பகூவ, கம்பளை, குருநாகல், கோட்டை என மாற்றமடையவும், கலிங்கமாகனின் படையெடுப்போடு வடக்கே தமிழர்கள் ஒன்று சேர்ந்து சுதந்திரமாகத் தமிழ் அரசை உருவாக்கவும் வழிகோலியது.

சோழர் ஆட்சிக்கு முன்னர் முழு இலங்கையும் ஒரு மைய அரசின் கீழ் நிர்வகிக்கப்பட்டதாக பாளி இலங்கியங்கள் கூறினாலும், பிற வரலாற்று மூலங்கள் அவற்றை உறுதிப்படுத்தவில்லை. ஆனால், முதன்முதலாக முழு இலங்கையும் சிறிது காலமாவது சோழர்காலத்தில் தான் ஒருமைய அரசின் கீழ் நிர்வகிக்கப் பட்டதற்கு நம்பகரமான கல்வெட்டு சான்றுகள் கிடைத்துள்ளன. மேலும், மத்தியில் முடிசூடி மாகாண அரசிற்கு அனுப்பி வைக்கும் முறையினை சோழர்களே அறிமுகம் செய்தனர். கந்தளாயில் கிடைத்த சோழர்காலக் கல்வெட்டில் இலங்கைச் சோழப்பிரதி நிதியான இலங்கேஸ்வரனால் நிர்வகிக்கபட்டமை எடுத்துக் காட்டப்படுகின்றது. முதன் முதலில் அந்நியத் தமிழனால் இலங்கை முழுவதும் ஆட்சி செய்யப்பட்டமை ஈழத்தமிழர் வாழ்வில் ஏற்பட்ட முக்கிய மாற்றமாகும்.

நிர்வாக ரீதியாகவும் சோழர் ஈழத்தமிழர் வாழ்வில் குறிப்பிட்டத்தக்க மாற்றங்கள் ஏற்பட வழிவகுத்தனர். தென்னிந்தியாவில் பெரும் பேரரசை அமைத்து சிறந்த முறையில் நிர்வாக வலைப்பின்னலை மேற்கொண்ட சோழர் இலங்கையிலும் அந்நிர்வாக முறையை அறிமுகப்படுத்தி சிறந்த நிர்வாகிகளாக விளங்கினர். இதுவரை காலமும் இலங்கை வரலாற்றில் பின்பற்றப்பட்டு வந்த சிங்கள நிர்வாக முறைக்குப் பதிலாக தமிழ் நிர்வாக முறையை அறிமுகப்படுத்தினார்கள். இந்த நிர்வாக முறையின்கீழ் முழு இலங்கையும் சோழரின் ஒருமண்டலமாகக் கணிப்பிடப்பட்டு, அதற்கு மும்முடிச் சோழமண்டலம் எனப்பெயரிடப்பட்டு, தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்ட சோழரின் 9வது மண்டலமாக இலங்கை சோழப் பிரதிநிதியால் ஆட்சிசெய்யப்பட்டது. சோழ நிர்வாகத்திற்கேற்ப இவ்வளவு காலமும் சிங்கள நிர்வாகத்தில் இருந்துவந்த "ரட்டை" என்ற நிர்வாகப்பிரிவு கைவிடப்பட்டு இலங்கை மண்டலங்கள், வளநாடுகள், கூற்றங்கள், சபைகள், பிரம்மதேயங்கள், ஊர்கள், சதுர்வேதிமங்கலங்கள் என நிர்வாக வசதிக்கேற்ப பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கபட்டது என்பதை சாசனச் சான்றுகள் ஊடாக அறியக் கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழர் ஆட்சிக்காலத்தில் பொலநறுவை நிகரிலிச் சோழவளநாடு எனவும், மாதோட்டம் அருண்மொழித்தேவ வளநாடு எனவும், திருகோணமலை பரகேசரிவளநாடு எனவும், இராஜராஜவளநாடு, இராஜேந்திரவளநாடு விக்கிரமசோழ வளநாடு என சோழ மன்னர்களின் விருதுப் பெயர்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட நிர்வாக முறை வகுக்கப் பட்டிருந்தது என்பதை சோழக்கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக "இராஜராஜன் சதுர்வேதிமங்கலம்" விஜயபாகு காலத்தில் "விஜயபாகு சதுர்வேதி மங்கலம்" என மாற்றப்பட்டு நிர்வாகப்பதவி "ஆதிபாத" என அழைக்கப்பட்டது. ஆபா, மாயா, யுவராஜன் போன்ற பதவிப் பெயர்கள் அரசியல் நிர்வாகத்தில் முக்கியம் பெற வழிவகுத்தன. சோழராட்சியால் ஏற்பட்ட முக்கியமான ஒரு விளைவு "உள்ளூர் ஆட்சி" நிர்வாகமுறையாகும். இது பிற்காலத்தில் மன்னர்கள் தமது ஆட்சிப்பரப்பை பிரித்து நிர்வகிப்பதற்கு காலாயமைந்தது. மேற்கூறப்பட்ட நிர்வாக முறைகள் அனைத்தும் அப்படியே இலங்கையில் பின்பற்றப்பட்டதா என்பதற்கு உறுதியான சான்றுகள் எவையும் இது வரையில் கிடைக்கவில்லை. ஆயினும் இதுவரை கிடைத்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்தில் பின்பற்றப்பட்ட நிர்வாக முறையையே இலங்கையிலும் பின்பற்றினர் என்பது தெளிவாகின்றது. எதிர்காலத்தில் கல்வெட்டுச்சான்றுகள், இலக்கிய ஆதாரங்கள் கிடைக்கும் போது இலங்கையில் சோழர் பின்பற்றிய நிர்வாக முறையும் ஏனைய பல விபரங்களும் தெரிய வரலாம்.

தமிழ்மொழி குறிப்பிட்ட ஓர் இடத்தினை பெற்ற காலம் என்றால் அது சோழராட்சிக் காலத்திலேயாகும். சோழர்காலத்தில் நிர்வாக மொழியாகத் தமிழ் முக்கியத்துவம் பெற்றதால் நிர்வாகம் தொடர்பான அனைத்து ஆவணங்களும் தமிழ்மொழியில், தமிழ் எழுத்தில் வெளியிடப்பட்டது. சோழர் ஆட்சிக்காலத்திற்கு முன்னர் நிர்வாகம் தொடர்பான கல்வெட்டுக்கள், சாசனங்கள், சிங்கள மொழியிலும் சிங்கள வரிவடிவத்திலுமே வெளியிடப்பட்டன. ஆனால் சோழர் காலத்தில் சிங்கள மொழி வடிவரிவடிவத்திற்குப் பதிலாக தமிழ் மொழியிலும் வரிவடிவத்திலுமே நிர்வாக ஆவணங்கள் வெளியிடப்பட்டன. இதற்கு எடுத்துக்காட்டாக 1ம் இராஜராஜனின் யாழ்ப்பாணக் கோட்டைக்கல் வெட்டு 1ம் இராஜேந்திரனின் மாதோட்டகல்வெட்டு, பாலமோட்டை, கந்தளாய், திருகோணமலை, ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் கண்டுபிடிக்கபட்ட சோழர்காலக் கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன.

சிறப்பாக சோழர் ஏற்படுத்திய இந்த மாற்றம் சோழர் ஆட்சியோடு மறைந்து போகாது சோழராட்சிக்குப் பின்னரும் செல்வாக்குப் பெற்றிருந்தமை, சோழராட்சியால் ஏற்பட்ட முக்கிய விளைவாகக் கொள்ளப்படுகின்றது. 1ம் விஜயபாகுவினால் நடனக்கலை நிகழ்த்தியதாக கூறும் கல்வெட்டு 1ம் பராக்கிமபாகுவின் நயினாதீவுக்கல்வெட்டு என்பவற்றின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. இவர்கள் சிங்கள மன்னர்களாக இருந்தும் நாட்டையும், அரசையும் பௌத்த மதத்தையும் பாதுகாப்பதற்குச் சோழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சிக்காலத்தில் செல்வாக்குப்பெற்றிருந்த தமிழ்ப்படை வீரர்களிடம் தங்கியிருக்கவேண்டி ஏற்பட்டதால் அச்சிங்கள மன்னர் ஆட்சியில் தமிழ் மொழியும் அரசமொழிகளில் ஒன்றாக முக்கியத்துவம் பெற்றிருந்தமையைக் காணமுடிகின்றது. திருகோணமலையில் மட்டும் சோழர் ஆட்சிக்குப் பின்னர் வெளியிடப்பட்ட 25 தமிழ்ச் சாசனங்கள் இதுவரையில் தொல்பொருள் ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் 1300 ஆண்டுகால வரலாற்றில் ஆட்சியாளர் எந்த இனத்தவராக இருந்தாலும் ஆட்சியில்இருப்பவர் பௌத்தராக, பௌத்தமதத்தை கடைப்பிடிப்பவராக இருக்க வேண்டியிருந்தது. ஏனெனில் இன உணர்வை விட மதஉணர்வே மேலோங்கிக் காணப்பட்டது. ஆனால் இந்த முறையை மாற்றியதில் சோழருக்கு மிகப்பெரிய பங்குண்டு அக்காலத்தில் அரசமதமாகக் கருதப்பட்ட பௌத்தமதம் அரச ஆதரவை இழந்து, அந்த இடத்தில் இந்துமதம் அரச மதம் என்ற நிலையை அடைந்திருந்தது. இந்த மாற்றம் சோழராட்சிக் காலத்தில் மட்டுமன்றி சோழராட்சி மறைந்த பின்னரும் செல்வாக்குகோடு இருந்தது என்பதற்கு விக்கிரமபாகு, கஜபாகு ஆகிய சிங்கள மன்னர்கள் இந்துக்களாக விளங்கிய காரணத்தால் பட்டாபிஷேகம் நடைபெறவில்லை. எனக் கல்வெட்டுக் கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது.

இலங்கை வரலாற்றில் இந்து மதம் வளர்ச்சியடைந்த சோழர் ஆட்சிக்காலம் முடிவடைந்த பின்னர் பௌத்த மதத்தை ஆதரிப்பதாக ஆட்சிக்கு வந்த 1ம் விஜயபாகு, 1ம் பராக்கிரமபாகு, 2ம் கஜபாகு, ஜெயபாகு போன்ற சிங்கள மன்னர்கள் பௌத்தராக இருந்தபோதும், சோழர் காலத்தில் கட்டப்பட்ட இந்துக் கோயில்களுக்கும், மதநிறுவனங்களுக்கும் ஆதரவு வழங்கியதோடு அதற்கு வேண்டிய மானியங்களை நிலமாகவும், பணமாகவும் வழங்கினர். எடுத்துக்காட்டாக 1ம் விஜயபாகு சிவனொளி பாதமலைக்கு செல்லும் யாத்திரிகளுக்கு மடம் கட்டிக் கொடுத்தமையும், 1ம் பராக்கிரமபாகு 13 கோயில்களை புனரமைத்தமை பற்றியும் சூளவம்சம் எடுத்துக்கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது.

மற்றும்இந்துக் கோயில்களை அமைக்கும் முறையையும் சோழர்களே இலங்கையில் அறிமுகப்படுத்தி வைத்தனர். வர்த்தகத்தையே நோக்காக கொண்டு பெரும் பேரரசை அமைத்த சோழர்கள் கடல் கடந்து சென்று மேற்கொண்ட வர்த்தகத்தின் மூலம் பெறப்பட்ட செல்வங்களைக் கொண்டு தமிழகத்தில் பல இந்து ஆலயங்களை அமைப்பதன் மூலம் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டனர். ஈழத்திலும் தம் ஆட்சியை உருவாக்கிய சோழர் இங்கும் பல இந்து ஆலயங்களை உருவாக்கினர். சோழப்பெரும் பேராசர்களின் விருதுப் பெயர்களைத் தாங்கிய இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் இராஜராஜஈஸ்வரம், உத்தம சோழ ஈஸ்வரம் போன்ற பல இந்து ஆலயங்கள் சோழர்காலத்தில் கட்டபட்டமையை சாசனங்கள் மூலம் அறிய முடிகின்றது. பொலநறுவையிலுள்ள அலஹர் பிரிவேனாப் பகுதியில், கலாச்சார முக்கோண தொல்பொருள் ஆய்வுக் குழுவினர் ஆராய்ச்சி நடாத்தியபோது சோழர் ஆட்சிக் காலத்தைச் சேர்ந்த இரண்டு இந்துசமய விக்கிரகங்களை கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துள்ளனர். நிலத்தை தோண்டியபோது பல இந்துக்கோயில்கள் இருந்தமையை சான்றுகள் காட்டுகின்றன. சிவலிங்கம், ரிஷபம், நந்தி, சூரியவிக்கிரகம், திவிஜராஜன், பரசுராமர் சிலைகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவை அனுராதபுர மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட பிராமணர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட சபை பிற்காலத்தில் புரோகிதர்கள் பங்குபற்றும் சபையாக மாற்றமடைந்தது என வரலாற்றாசிரியர் மென்டிஸ் கூறுவதும் சோழரின் தாக்கத்தினையே காட்டுகின்றது.

மேலும் பௌத்தமதம் தனது கடந்த கால முக்கியத்துவத்தினை இழந்தமையும் சோழர் ஆட்சியின் முக்கிய விளைவாகும். பொலநறுவை இலங்கையின் தலைநகராக இருந்தும் அங்கு பல இந்து ஆலயங்களை சோழர் அமைத்திருந்தும், பௌத்த சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் அந்த நகரத்தில் ஒரு பௌத்த ஆலயம் கூட சோழர் ஆட்சியில் அமைக்கப்படவில்லை. இது சோழராட்சியால் ஏற்பட்ட சீரழிவு என ஈழத்து பாளிநூல்கள் கூறுகின்றன. சூளவம்சம் இரத்தம் குடிக்கும் இராட்சதர்களான சோழர்கள் பௌத்த ஆலயங்களை அழித்தது மட்டுமன்றி பௌத்த மும்மணிகளுக்கு தீங்கு விளைவித்து அவற்றின் சொத்துக்களை சூறையாடியதாக வர்ணிக்கின்றது. ஆயினும் பொலநறுவையில் கிடைத்த கல்வெட்டை நோக்கும்போது நீண்டகாலமாக வழிபட்டுவந்த வெல்கம் விகாரை சோழர் காலத்தில் “"இராஜராஜ பெரும்பள்ளி” எனப்பெயரிடப்பட்டு அதற்குச் சில கிராமங்களை மானியமாக வழங்கப்பட்டதை குறிப்பிடுகின்றது. இதை பல சிங்கள வரலாற்றாசிரியர்களும், பாளி நூல்களும் சோழர் மதப் பொறையைக் கடைப்பிடித்தாக கூறுகின்றனர். இதற்கு அடிப்படைக் காரணம் பாண்டியரை நண்பர்களாகவும் சோழரை எதிரிகளாகவும் கருதும் ஒரு பண்பு நீண்டகாலமாக சிங்கள வரலாற்றாசிரியர்கள் மத்தியில் நிலவுவதேயாகும்.

பல்லவரோடு தமிழகத்தில் தோன்றி வளர்ந்த திராவிட கட்டடச் சிற்பக் கலைகள் சோழர் ஆட்சிக் காலத்தில் ஈழத்திலும் வளர்ச்சியடைந்துள்ள மையைக் காணமுடிகின்றது. சோழர் காலத்தில் ஈழத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த படைவீரர்கள், நிர்வாகிகள், கலைஞர்கள், வணிகர்கள் எனப்பல பிரிவினரும் குடியேறியமையால் தமிழகத்தைப் போல் ஈழத்திலும் சோழர்கால மரபைக்கொண்ட ஆலயங்கள், சிற்பங்கள் தோற்றம்பெற வழிவகுத்தன. இதற்குபொலநறுவையிலுள்ள 2ம், 5ம் சிவாலயங்கள் பதவியாவில் கண்டுபிடிக்கப்பட்ட5 சிவதேவாலயங்களின் அழிபாடுகள், கந்தளாய், மருதங்கேணி, மாதோட்டம், யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சோழர் கால ஆலயங்கள் தொடர்பான அழிபாடுகள் மூலம் அறியமுடிகின்றது. அதுமட்டுமல்ல யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையைச் சார்ந்த காலாநிதி பரமு.புஸ்பரட்ணம் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட மண்ணித் தலையிலுள்ள சிவன்கோயில் 1ம் பராந்தகன் காலக் கட்டிடக்கலை பாணியைத் தழுவி அமைக்கப்பட்டமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்கது. அத்துடன் நல்லூர் சட்டநாதேஸ்வரர் ஆலயமும் சோழர் காலத்துக்குரிய கட்டிடக்கலை அமைப்பைக் கொண்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

இக்காலக் கலைமரபு ஈழத்தமிழரின் கட்டிட சிற்பக்கலை மரபில் மட்டுமன்றி, சிங்கள மன்னர்களின் பாரம்பரிய கலைமரபிலும் குறிப்பிடத்தக்க மாறுதல்கள் ஏற்பட வழிகோலியது. ஏனெனில் சோழரின் நீண்டகால ஆட்சியினால் அவர்களின் காலப்படைப்புக்களில் பங்குகொண்ட சிங்களக் கலைஞர்கள் சோழராட்சி முடிவடைந்ததும் தமது பழையகலை மரபைக் கைவிட்டு சோழருக்குரிய திராவிடக்கலை மரபையே பௌத்தமதத்துக்குரிய தூபிகள், விகாரைகள், சிலையகம் போன்ற கட்டிடங்களை அமைப்பதற்குப் பயன்படுத்தினர். சோழர் கலைமரபை ஒட்டிய பௌத்தக் கட்டிடக்கலைக்கு பொலநறுவையிலுள்ள "இலங்காதிலகவிகாரை" ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். மேலும் தமிழகத்தில் தோன்றி வளர்ந்த நாகபட்டினக்கலைமரபை ஒட்டியே சோழர்காலத்தில் பல சிற்பங்கள் வெண்கலத்திலும், செம்பிலும் வடித்தார்கள். எடுத்துக்காட்டாக மண்ணித் தலையில் கிடைத்த விஷ்ணுவின் கருங்கற் சிற்பம், பொலநறுவையில் கிடைத்த சிவலிங்கங்கள், மற்றும் உருத்திரபுரம், மட்டுவில், நாகபடுவான் போன்ற இடங்களில் கண்டெடுக்கப் பட்ட விக்கிரகங்களைக் கூறலாம்.

ஈழத்தமிழருக்கென தனித்துவமான பிரதேசங்களை கோடிட்டுக் காட்டியவர்கள் சோழர்களே. இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசம் தமிழருக்குப் பாரம்பரிய நிலப்பரப்பு என்ற அடிப்படையில் சோழர்காலத்துடன் தான் சிறப்புப் பெற்றுள்ளது. சோழர் காலத்துக்கு முன்னர் வட இலங்கையிலும், கிழக்கிலங்கையிலும் தமிழர்கள் வாழ்ந்தாலும் சோழர்காலத்துடன் தான் இப்பிரதேசங்கள் தமிழருக்குரிய தனித்துவமான பிரதேசம் என்ற நிலை ஏற்பட்டது. அதாவது பொலநறுவை சோழர்களின் தலைநகரமாக விளங்கியபோதும் அவர்களின் படைத்தளமாகவும், நிர்வாக அலகாகவும், வர்த்தக மையமாகவும் வடக்கு கிழக்கிலுள்ள பிரதேசங்களே மைய கேந்திர நிலையமாக காணப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் இப்பிராந்தியங்களில் சோழர் காலத்துக்கு முன்னரே தமிழர்கள் செறிவாக வாழ்ந்தமையே ஆகும். இதற்கு பூநகரி, மாதோட்டம், திருகோணமலை, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம், பதவியா, கந்தளாய் போன்ற இடங்களில் கிடைத்த கல்வெட்டுக்கள், தொல்பொருட்கள், நாணயங்கள், ஆலய வழிபாடுகள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

எடுத்துக்காட்டாக சோழரின் ஆதிக்கம் பொலநறுவையில் ஏற்பட முன்னரே வட இலங்கையில் ஏற்பட்டது என்பதனை மாதோட்டத்தில் கிடைத்த சோழச்சாசனம் உறுதிப்படுத்துகின்றது. ஏனெனில் சோழர் காலத்தில் மாதோட்டம் இராஜராஜபுரம் எனவும், அங்குள்ள வீதியொன்று இராஜராஜப் பெரும் வீதி எனவும், இராஜராஜனின் பெயரில் இராமேஸ்வரம் என்ற ஒரு சிவாலயம் இங்கு அமைக்கப்பட்டதாக சோழச்சாசனம் கூறுகின்றது. இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்று நோக்கும்போது, சோழர்காலத்தில் பல சமூகப்பிரிவுகள் குடியேறியிருந்த ஒரு கேந்திர நிலையமாக மாதோட்டம் விளங்கியதை அறிய முடிகின்றது.

மேலும் சோழராட்சி முடிவடைந்த பின்னர் சிங்கள மன்னர்களான 1ம் விஜயபாகு, 1ம் பராக்கிரமபாகு, நிஸங்கமல்லன் போன்ற மன்னர்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் பல தமிழில் காணப்படுகின்றன. காரணம் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் சிங்கள மன்னர்களது அரசியல், நிர்வாகம், வர்த்தகம் தொடர்பான ஆவணங்கள் அப்பிரதேசத்திற்குரிய மொழியிலும், எழுத்திலும் பதியப்படவேண்டியிருந்தன. திருகோணமலையில் மட்டும் சோழர் ஆட்சிக்கு பின்னர் பொறிக்கப்பட்ட 25 தமிழ்ச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சோழர் ஆட்சிக்கு முன்னர் ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள் எவரும் தமிழில் கல்வெட்டுக்களை பொறித்ததாக இன்றுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடதக்கது.

சோழராட்சி ஈழத்தில் இடம் பெற்றதை தெளிவாகக் காட்டும் தொல்லியல் சான்றுகள் பல இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களிலே கூடுதலாகக் கண்டு பிடிக்கபட்டுள்ளன. சோழர்காலத்தில் அமைக்கப்பட்ட பல இந்து ஆலயங்களும் ஆலயங்களின் அழிபாடுகள், மற்றும் சிவலிங்கம், விஷ்ணு, அம்மன் போன்ற சுடுமண், கருங்கற் சிற்பங்கள் பலவும் தொல்லியல் ஆய்வின் போது, பூநகரி, மண்ணித்தலை, மாதோட்டம், மட்டுவில், உருத்திரபுரம், திருகோணமலை, கந்தளாய், பதவியா போன்ற இலங்கையின் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மற்றும் அல்லைப்பிட்டியில் சோழர் காலத்திற்குரிய "தங்கப்பதக்கம்" ஒன்றும் 1ம் இராஜராஜசோழனால் வெளியிடப்பட்ட "சேது" நாணயம் ஒன்றும் மாதோட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள மையும் குறிப்பிடத்தக்கது.

சோழராட்சிக்காலத்தில் தமிழகத்தில் காணப்பட்ட இடப்பெயர்கள் பல சமகாலத்தில் இலங்கையிலுள்ள வடக்கு கிழக்குபிரதேசங்களை குறிக்க பயன்படுத்தபட்டுள்மையைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக நல்லூர், ஆலங்கேணி, பல்லவராயன், மட்டுவில், சோழமண்டலம், ஈழஊர், கோணாவில், கோணமலை, பாலியாறு, புலையன்குடா, வெள்ளாங்குளம் போன்ற பெயர்கள் தமிழகத்தில் காணப்பட்ட இடப்பெயர்களை ஒத்துக் காணப்படுகின்றன. இது சோழராட்சியால் சோழர்காலத்தில் ஈழத்தின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தமிழ்க்குடியேற்றங்கள் ஏற்பட்டமையை காட்டுவதுடன் இன்றும் இப்பெயர்கள் பல தொடர்ந்தும் பின்பற்றப்பட்டு வருவதை அறியக்கூடியதாக உள்ளது. இதன்மூலம் வடக்கு, கிழக்கு இலங்கையின் பலபிரதேசங்கள் தமிழருக்குரிய தனித்துவமான பிரதேசங்களாக அன்று தொடக்கம் இன்று வரை தொடர்ந்து வருவதை சமகால நிகழ்வுகள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

தமிழகத்தின் "பொற்காலம்" என வர்ணிக்கப்படும் சோழர் ஆட்சியில் இலங்கையின் பொருளாதாரம் சீரழிக்கப்பட்டதாகவே சூளவம்சம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இக்கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளது. காரணம் இலங்கையின் 1300 ஆண்டுகால வரலாற்றின் முக்கிய பொருளாதாரமாக விளங்கிய நீர்பாசன நடவடிக்கைகள் தொடர்ந்தும் சோழர்காலத்தில் பேணப்பட்டு வந்துள்ளது என்பதைக் காட்ட கந்தளாயில் கிடைத்த கல்வெட்டு சான்றுபகர்கின்றது. இக்கல்வெட்டில் விக்கிரமசோழ வாய்க்கால் என்ற அமைப்புப்பற்றி அறிய முடிகின்றது. மற்றும் கோணேசர் கல்வெட்டின் மூலம் சோழ, திராவிட பொறிமுறை நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் இலங்கையிலும் பின்பற்றப்பட்டு ள்ளமையை அறியமுடிகின்றது. இது பின்வந்த சிங்கள மன்னர்கள் புதிய தொழில்நுட்பத்துடன் பின்பற்ற வழிகோலியது எனலாம். அதுமட்டுமல்ல ஈழத்தில் தென்னைப்பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்தியவர்களும் சோழரேயாவர். இதனை வீரராஜேந்திரனது திருமுக்கூடல் கல்வெட்டு சான்றுபகர்கின்றது.

பொருளாதார நடவடிக்கைகளிலே நீர்ப்பாசனத்தை விட வாணிபத் திற்கே சோழர்கள் முக்கிய இடம் கொடுத்துள்ளனர். இலங்கையிலுள்ள ஒவ்வொரு நகரத்திலும் நானாதேசிகர், வீரவலஞ்சியர், ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார் போன்ற வணிகக்கணங்களைச் சார்ந்தவர்கள் பெரியளவில் வெளிநாட்டு வாணிபத்தை மேற்கொண்டனர். மணிக்கிராமத்தார் என்ற வணிகக்கணம் சோழர்காலத்தில் செயற்பட்டமைக்கு 4ம் கஜபாகுவின் வதுளைத்தூண் கல்வெட்டு சான்றுபகர்கின்றது. பதவியா, பொலநறுவை போன்ற இடங்களில் காணப்படும் சோழர் காலத்திற்குரிய தமிழ்க் கல்வெட்டுகளில் தமிழ் வணிகர் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றது. சோழர் ஆட்சியில் சிறப்புப் பெற்றிருந்த வணிக கணங்கள் சோழர் ஆட்சியின் பின்னரும் சிறப்புப் பெற்று விளங்கின. இது பின்வந்த சிங்கள மன்னர்கள் வெளிநாட்டு வாணிபத்தில் அக்கறை கொள்ளத் தூண்டியது. 1ம் பராக்கிரமபாகு காலத்தில் "அந்தரக்க தூர" என்ற தனிப்பகுதி நிறுவப்பட்டு பிறநாட்டு வாணிபத்தில் பங்காற்றியுள்ளமையை நயினாதீவில் கண்டெடுக்கப்பட்ட 1ம் பராக்கிரமபாகுவின் கல்வெட்டு எடுத்துக்காட்டுகின்றது.

மேலும் வாணிப நடவடிக்கையின் பின்புலத்திலே நாணயங்களை வெளியிடுகின்ற மரபில் ஏற்பட்ட மாற்றங்களையும் நோக்க முடியும். கல்வெட்டுக்களை தமிழில் வெளியிட்ட சோழர் சர்வதேச வர்த்தகத்திற்காக நாணயங்களை வடமொழியில் வெளியிட்டதோடு, அவற்றை வெளியிடுகின்ற மன்னனின் உருவத்ததையும் நாணயத்தின் முன்பக்கத்தில் பொறித்துக் கொண்டனர். இம்முறையை முதன்முதலில் அறிமுகப்படுத்திய 1ம் இராஜராஜசோழனின் ஆட்சி இலங்கையில் இருந்ததனால் இம்மரபு இலங்கையிலும் அறிமுகமானது. இதனால் சோழராட்சியின் பின்னர் ஆட்சிக்கு வந்த 1ம் விஜயபாகு, 1ம் பராக்கிரமபாகு, நிஸங்கமல்லன், லீலாவதி போன்ற மன்னர்கள் வடமொழியில் நாணயங்களை வெளியிட்டதுடன் அவர்களின் உருவத்தையும் பொறித்து வெளியிடுவதற்கு சோழராட்சியே வழிவகுத்தது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழராட்சிக்கு முன்பே சமூகத்தில் இந்து, பௌத்தம் என மத அடிப்படையில் தமிழ், சிங்கள மக்கள் இனம், மதம், மொழி, பண்பாடு எனப் பிரிந்திருந்தாலும் சோழராட்சிக்காலத்திலேயே சமூக அடிப்படையில் பல பிரிவுகள் ஏற்பட்டு சமூக ஏற்றத்தாழ்வுகள் இடம்பெற வழிவகுத்தன. சோழராட்சியில் தமிழகத்திலிருந்து அரச அதிகாரிகள், படைவீரர்கள், வர்த்தகர்கள், கலைஞர்கள் எனப்பல சமூக அமைப்பினர் ஈழத்திலும் குடியேறியமையால் தென்னிந்தியப் பழக்கவழக்கங்கள், சாதிப்பிரிவுகள், தொழிற்பிரிவுகள் போன்றன ஈழத்திலும் ஏற்பட வழிவகுத்தது. இவை பிற்பட்ட சிங்களப் பண்பாட்டிலும் சில மாற்றங்களுடன் தாக்கங்கள் ஏற்பட்டமையை "கராவி", "துருவ", "சிலாமே" போன்ற சாதிப் பிரிவுகள் எடுத்துக்காட்டுகின்றன. அதுமட்டுமன்றி சோழர்களால் தமிழகத்தில் பின்பற்றப்பட்ட கோயில்களை நிறுவனமாகக் கொண்டு சமூகத்தை வழிநடத்தும் போக்கு இலங்கையிலும் ஏற்பட்டுள்ளமையை மாதோட்டம், பொலநறுவையில் கிடைத்த கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன.

சோழர்காலத்தில் ஈழத்தில் அதிகரித்த தமிழரின் செல்வாக்கு சிங்கள மன்னர்கள் காலத்திலும் தொடர்ந்து நீடித்தமையை காணக்கூடியதாக உள்ளது. சோழரின் நீண்டகால ஆட்சியில் படைவீரர்களோடு பலதரப்பட்ட மக்களும் ஈழத்தில் குடியேறினார்கள். அவ்வாறு குடியேறியவர்கள் சோழராட்சி வீழ்ச்சியடைந்ததும் மீண்டும் தமிழகத்திற்குச் சென்றதற்கு சான்றுகள் இதுவரையில் கிடைக்கவில்லை. மாறாக ஈழத்தில் அவர்கள் நிரந்தரமாகக் குடியேறியதுடன் காலப்போக்கில் வட இலங்கையில் தமிழரின் சனத்தொகை அதிகரிக்க வழிகோலியது. இதனைப் பேராசிரியர் அரசரட்ணம் குறிப்பிடுகையில் "சோழர்கள் தோற்றகடிக்கபட்டு சிங்கள அரசர்களின் அதிகாரம் மீணடும் நிலைநாட்டப்பட்ட போதும் தமிழர்களின் சனத்தொகையின் பெருக்கமும் அவர்களது செல்வந்தநிலையும் படைத்துறையிலும் நிர்வாகத் துறையிலும் அவர்கள் வகித்த செல்வாக்கான பதவிகளும் சோழர்காலத்தில் தமிழர்கள் பெற்றிருந்த முக்கியவத்துத்தினையே காட்டுகின்றது" என்று குறிப்பிட்டுள்ளார். இதனை சிங்கள பாளி இலக்கியங்களும் கூறுவதுடன் தமிழ், சிங்கள கல்வெட்டுகளும் உறுதிசெய்கின்றன. இதனால் ஈழத்தமிழர் நிலமானிய அமைப்பு முறையிலான ஒரு சமூகத்தினை ஈட்டிக்கொண்டு சுதந்திரமாக வாழத் தொடங்கியமையும் இச்சோழர் காலத்திலேயாகும்.

சோழராட்சிக் காலத்தில் பெருந்தொகையான தமிழ்ப்படைகள் ஈழம் வந்துள்ளதாக சூளவம்சம் கூறுகின்றது. 1ம் இராஜராஜன், 1ம் இராஜேந்திரன், வீரராஜேந்திரன் போன்ற சோழ மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் வேளைக்காரர், வலங்கை, இடங்கை, சிறுதனம், பிள்ளைத்தனம், வடுகர் போன்ற பல படைப்பிரிவுகள் இலங்கை வந்துள்ளமையை அறியமுடிகிறது. அதுமட்டுமல்ல சோழராட்சிக் காலத்தில் தமது மெய்க்காப்பு படையாக வேளைக்காரப்படையையே சோழப் பெருமன்னர்கள் நியமித்திருந்தனர். இவ்வேளைக்காரர் ஒரு வலிமைமிக்க சமூகத்தினர் எனவும் வலிமை படைத்தவரும் சமூகத்தின் உயர் நிலையில் வைக்கப்பட வேண்டியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் பலவாறாக வரலாற்றாசிரியர்களால் புகழப்படுகின்றனர். பேராசியர் நீலகண்ட சாஸ்திரி "வேளைக்காரர், அரசன் தனது உயிரை விடுகின்ற சமயத்திலும் அரசிற்குக் கீழ்ப்படிந்தவர்களாக சபதம் செய்த ஒரு படைப்பிரிவினர்" எனக் கூறியுள்ளார். சோழராட்சியில் மட்டுமல்ல, சோழர் ஆட்சியைத் தொடர்ந்து சிங்கள மன்னர்கள் ஆட்சிக் காலத்திலும் வேளைக்காரப் படையையே தமது மெய்க் காப்பு படையாகவும், தந்ததாதுவுக்கு பாதுகாப்பு படையாகவும் நியமித்திருந்தமையை சிங்கள, தமிழ்க் கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. இதனால் சிங்கள மன்னர்கள் ஆட்சிக்காலத்திலும் ஈழத்தமிழருக்கு எதிரான ஆட்சியை சிங்கள மன்னர்கள் மேற்கொள்ள முடியவில்லை. ஈழத்தமிழர்கள் சுதந்திரமாக வாழவும் அவர்களின் மதம், மொழி, எழுத்து, நிர்வாகம், பிரதேசங்கள் என்பனவற்றைத் தொடர்ந்தும் சிங்கள மன்னர்களே பாதுகாக்கவும் வழிகோலியது. இதை 1ம் விஜயபாகு, 1ம் பராக்கிரமபாகு போன்றோர்கள் வெளியிட்ட கல்வெட்டுக்களில் இருந்து அறிந்து கொள்ளமுடிகின்றது.

மேலும் சிங்கள நிர்வாகத்தில் தமிழர்கள் படைவீரர்களாகவும், நிர்வாகிகளாகவும் கடமையாற்றிய போதும் தம் இனம், மதம், சார்ந்த நடவடிக்கைகளில் சிங்கள மன்னர்கள் எதிராக செயற்படுவதை எதிர்த்துள்ளமையையும் காணமுடிகின்றது. 1ம் விஜயபாகு தமிழ்ப்படை வீரர்களை தமிழ்நாட்டின் மீது படையெடுக்குமாறு கட்டளையிட்டபோது வட இலங்கையிலிருந்த தமிழ்ப்படைவீரர்கள் பொலநறுவை அரசுமீது படையெடுத்து நகரைத் தீக்கிரையாக்கியதுடன் விஜயபாகுவின் சகோதரியின் இரு புதல்வர்களையும் சிறைப்பிடித்ததாகவும் இதனால் விஜயபாகு தென்னிலங்கைக்கு தப்பியோடியதாகவும் சூளவம்சம் கூறுகின்றது. இவற்றிலிருந்து சோழராட்சியின் பின்னரும் தமிழர்கள் வலுவோடு இருந்தையும் அவர்கள் இந்நாட்டிற்குரிய மக்களாக வாழ்ந்ததையும் அறிய முடிகின்றது. இதற்கு அடியிட்டுக் கொடுத்தவர்கள் சோழப்பேரரசர்களே எனலாம்.

எனவே தொகுத்து நோக்கும்போது இலங்கை வரலாற்றிலே நீண்டகாலம் ஆட்சி செய்த முதல் அந்நியர் என்ற வகையிலே சோழர் சிறப்புப் பெறுகின்றனர். இவர்களின் நீண்டகால ஆட்சியின், விளைவால் குறிப்பாக ஈழத்தமிழரின் அரசியல், பொருளாதார, நிர்வாக, சமூக, சமய, வர்த்தக, கலை, பண்பாட்டியல் மரபுகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட வழிகோலியது. ஈழத்தமிழர் தமது மண்ணோடு ஒட்டிய பாரம்பரிய வரலாற்றை தனித்துவப் போக்கோடு பேணிப்பாதுகாத்துக் கொள்ள சோழர் ஆட்சிக்காலம் ஒரு களமாக அமைந்துள்ளது. சுருங்கக் கூறின் இன்று வரை இலங்கைத் தமிழர் பண்பாட்டுக்கான வலுவான ஓர் அடிப்படையை, அரசியல், பொருளாதார, நிர்வாக வர்த்தக, சமய, சமூக கலை பண்பாட்டுத் துறைகளில் ஈட்டிக் கொடுக்க உதவியவர்கள் சோழப்பேரரசர்களே என்றால் அது மிகையாகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் பட்டியல்

கிருஷ்ணராசா, செ., - **இலங்கைவரலாறு**பாகம்.I, திருநெல்வேலி: 1999.

சிற்றம்பலம், சி. க., - **யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு,** யாழ்ப்பாண பல்கலைக்கழகம்: 1993.

புஷ்பரட்ணம், ப., - **பூநகரியும் தொல்பொருள் ஆய்வும்,** யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்: 1993.

பத்மநாதன், சி. - "இலங்கைத் தமிழ் வணிக கணங்களும், நகரங்களும்", **சிந்தனை,** தொகுதி.02, இதழ்.02, திருநெல்வேலி: 1984.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டு வரலாற்றில் தஞ்சைப் பிருஹதீஸ்வரர் கோயில் ஒரு நோக்கு

செல்வி. வ. பூமகள்
மூன்றாம் வருடம்
வரலாறு சிறப்புக்கலை.

இந்தியத்துணை கண்டத்தின் தென்பகுதியான தமிழகத்தின் வரலாற்றுக் காலப்பகுதிகளில் கி.பி 9-14 ஆம் நூற்றாண்டுகள் வரையான காலப்பகுதியாகச் சோழர்காலம் விளங்குகின்றது. பல்லவர்களை அடுத்துவந்த இச்சோழர்களின் காலப்பகுதியிலே அரசியல், பொருளாதாரம், சமூகம், கலை போன்ற பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கிய வகையில் திராவிட சமுதாயம் வளர்ச்சி பெற்றமை காரணமாக இதனை ஒரு "பொற்காலம்" என அறிஞர்கள் சிறப்பித்துள்ளனர். குறிப்பாக இக்காலத்தில் அரசன் மீதான அனுசரணையான மேலாண்மையைப் பெற்றுக்கொடுத்த நிறுவனமாக மதமும், மதத்தின் பெயரால் அரசும் ஒன்றுடன் ஒன்று சிறப்பை ஈட்டிக்கொண்டன. பொதுவாக இக்காலத்தில் சிறப்புபெற்ற இந்துமதம், கோயில்கள் வாயிலாகத் தனிப்புகழை ஈட்டிக்கொண்டது. ஏனெனில் சோழர்கள் முதன்முதலில் தமிழகம் முழுவதையும் ஒரு குடையின்கீழ் கொண்டு வந்ததுடன் கடல்கடந்த பல நாடுகளையும் கைப்பற்றி அரசை விஸ்தரித்தனர். இதனால் வெற்றி கொள்ளப்பட்ட நாடுகளிலிருந்து கிடைத்த செல்வச் செழிப்பையும், புகழ் நிலைப்பையும் கவனத்தில் கொண்டு பல மன்னர்கள் பெருமைமிகு கோயில்களை அமைத்துள்ளனர். அவற்றுள் சிறப்பாக முதலாம் இராஜராஜன் ஆற்றிய கோயில் பணியில் தஞ்சைப் பெரிய கோயில் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும். இக்கோயில் பற்றி இலக்கிய, சாசன மூலாதாரங்களைக் கொண்டு பின்வரும் விடயங்களை நோக்கலாம்.

## கோயிலின் தோற்றமும் திராவிட மரபில் அதன் பங்களிப்பும்:-

இராஜராஜனுடைய ஆட்சிக் காலத்தில் தஞ்சை மாநகரம் பல்வகைச் சிறப்புக்களையும் கொண்டிருந்த காரணத்தால் பிரமாண்டமான ஒரு சிவன் கோயிலின் தோற்றத்திற்கு வழிசமைத்தது. இராஜராஜன் தஞ்சைப் பெருங்கோயிலை தனது ஒன்பதாவது ஆட்சியாண்டில் கி.பி 1004இல் கட்டத் தொடங்கி இருத்தல் வேண்டும் என்று கல்வெட்டுசான்று கூறுகின்றது. அதாவது மேலைச்சாளுக்கிய மன்னனை வென்று இராஜராஜன் நாடு திரும்பிய பொழுது தஞ்சையிலுள்ள பரமசுவாமியின் திருவடிகளைத் தொழுதான் என்ற செய்தியை இவனின் இருபத்தியிரண்டாம் ஆண்டு திருமுக்கூடல் கல்வெட்டு சுட்டிநிற்கிறது. மேலும் இக்கோயிலின் கட்டிட நிறைவுப் பணி கி.பி1010 ஆம் ஆண்டில் இடம்பெற்றமையை இருபத்தாறாம் ஆண்டுக் கல்வெட்டு சுட்டுகின்றது. இக்கோயிலின் குடமுழுக்குவிழா போர்முதலிய தவிர்க்க முடியாத காரணங்களினால்இருபத்தைந்தாவது ஆண்டிலேயே நடைபெற்றது என்பதை "யாண்டு இருபத்தைஞ்சாவது நாள் ........" என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வெட்டு குறிக்கின்றது. சுருங்கக்கூறின் தஞ்சைப் பெருவுடையார் கோயிலைக் கட்டிமுடிக்க ஏறக்குறைய ஏழு ஆண்டுகள் பிடித்திருக்கும் என்பது புலனாகின்றது. இக்கோயிலைக் கட்டிய கல்தச்சன் வீரசோழன் குஞ்சர மல்லனான இராசராப் பெருந்தச்சனாவான். அவனுக்கு உதவியாக நித்திவிநோதப் பெருந்தச்சன், கண்டராதித்த பெருந்தச்சன் என்பவர்கள் இத்திருப்பணியில் ஈடுபட்டிருந்தனர் எனக் கல்வெட்டுச் சுட்டுகிறது. மேலும் தமிழகத்தில் எழுச்சி பெற்றிருந்த அரசவம்சங்கள் நாகரம், வேசரம், திராவிடம் என்ற கட்டடக்கலைப் பாணிகளுள் திராவிடக்கட்டிடக் கலைப் பாணியைப் பின்பற்றியிருக்க, தஞ்சைப் பெருங்கோயில் ஒரு படி மேல்ச்சென்று திராவிடக்கலைமரபின் உச்சத்தையே தொட்டது எனலாம் அதாவது இக்கோயிலானது திராவிடரின் கட்டட, சிற்ப, ஓவிய, நடன, நாடக, இசை போன்ற கலைகள் யாவற்றையும் ஒருங்கே கொண்டு பெரும்பங்களிப்புச் செய்தமை கண்கூடு.

## கட்டிட, சிற்பக்கலை ரீதியாக இக்கோயிலின் சிறப்புக்கள்:-

தஞ்சைப் பெரிய கோயிலின் கட்டடக்கலைச் சிறப்புப் பற்றி நோக்கினால் அங்கு பல தனித்துவமான பாணிகளைக் காணமுடியும். மாடக்கோயில் அமைப்பை ஒத்த இக்கோயில் 241.51M (793அடி) நீளத்தையும், 125.218M (397அடி) குறுக்களவையும், 66M (216அடி) உயரவிமானத்தையும் கொண்டதாகும். இக்கோயிலில் மாமண்டபம், அர்த்தமண்டபம், நந்தி ஆகிய அனைத்தும் கருவறையுடன் சேர்ந்த சிறப்புடையதாகும். இவற்றைச் சூழ்ந்து நான்குபுறத்திலும் திண்மையான மதிற்சுவர்கள் காணப்படுகின்றன. இவ்வமைப்பில் மேற்குமுனையிலுள்ள விமானம் சுற்றிலுமுள்ள கட்டடங்களைவிட நேர்த்தியும் சிறப்பும் உடையதாகக் காண்பவருடைய கண்களைக் கவர்ந்து விடுகின்றது. இவ்விமானம் அழகுமிக்க பிரமிட்டுப் போன்ற தோற்றமுடையது. இதனுடைய சிறப்புமிக்க கலையழகு உறுப்புகளின் எளிமையான அமைப்பிலே ஊற்றெடுக்கிறது. இந்த உறுப்புக்கள் மூன்றுவகையானவை. அவை சதுரமானதும் செங்குத்தானதுமான அடித்தளம், உயர்ந்து, கூம்பிய உடற்கட்டு, கலசத்துடன் கூடிய வளைமாடமாகிய சிகரம் என்பன. இவற்றின் செங்குத்தான அடித்தளப்பகுதி 24.75M (82அடி) உடைய சதுரப்பக்கங்களையும் 15.25M (50அடி) கொண்ட உயரத்தையும் கொண்டது. இதிலிருந்து 16 மாடங்களைக் கொண்ட பிரமிட்டுப் போன்ற உடற்கட்டு மேல்நோக்கிய வடிவில் குறுகிக் கொண்டு செல்வது சிறப்பம்சமாகும். இக்கோயில் கட்டிடக்கலை அமைப்பில் வானுற உயர்ந்த இயல்புடைய விமானத்தின் கட்டமைப்பிற்கு முத்தாய்ப்பு வைத்ததைப்போன்று இச்சிகரம் விளங்குவது அதன் மிகுதியான சிறப்பம்சம் எனலாம்.

மேலும் இக்கோயிலின் கட்டடக்கலைச் சிறப்பில் அதன் மேற்பரப்பு மொத்த வடிவத்துடன் பொருத்தமாவும், இயைபுடையதாகவும் விளங்குவதைக் குறிப்பிடலாம். இங்கு மிகவும் கீழ் மட்டத்திலுள்ள சுவர்களையும், நேரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளையும் அலங்கரிப்பதற்காக வகுக்கப்பட்டுள்ள திட்டம் சிறப்புமிக்கதாகும். இப்பகுதிகள் இரண்டு மாடங்களைக் கொண்டதாக விளங்கும் வகையில் மேலே தொங்கிக் கொண்டிருக்கின்ற கபோதகத்தால் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மேலும், கீழும் வரிசையாகச் சுவர் கடந்து நிற்கும் இரண்டு கட்டைகள் போன்ற கல்தூளங்கள் காணப்படுகின்றன. இவையனைத்தும் ஒன்றாகச் சேர்ந்துள்ள பகுதியில் புதியன படைக்கும் அறிவுத்திறன் பல வகையான சிற்ப வடிவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அச்சிற்பங்களில் இலை, கொடி போன்ற கலைக்கருக்களும் அவற்றினைத் தெளிவாகப் புலப்படுத்தும் முறைகளும் முக்கிய சிறப்பம்சமாகும். இச்சிற்ப அமைப்பு மேலைநாட்டினர் போற்றும் “அறிவு மரத்தைப்” போன்று தோன்றுவது குறிப்பிடத்தக்கதாகும். சுவர்களின் ஆழமான பிற்பகுதியினை இச்சிற்பங்கள் தான் அணிசெய்கின்றன எனலாம். இதற்கடுத்து கல்தளங்களால் பிரிக்கப்பட்ட அறைகளின் நடுவில் சமயக்கருத்துக்களை விளக்கும் வகையில் தமக்கான சிற்பச்சூழ்நிலைக்கு ஏற்றவகையில் அமைந்து வீறுடன் விளங்குகின்றன. விமானத்தை அழகு செய்யும் இச்சிற்பங்களில் புராணக்கதைகளில் வரும் நிகழ்ச்சிகள் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிறப்பான உயரிய கட்டட அமைப்பும், கருத்துப் பொதிந்த சிற்பங்களும் விமானத்தின் ஒவ்வொரு பக்கத்தின் முழுத்தோற்றத்தையும் பொலிவுறச் செய்கிறது எனின் மிகையாகாது.

தஞ்சைப் பெருங்கோயிலின் கட்டடக்கலை, சிற்பக்கலை, அறிவியல் தொழினுட்ப ஆற்றலை வெளிப்படுத்துவதாக விமானத்தின் ஒட்டுமொத்த அமைப்பும் விளங்குகின்றது. கட்டடத்தின் மேற்பரப்பிற்கு மேலே ஒடுங்கிச் செல்லும் விமானத்தின் பருத்த தோற்றத்தின் கலையழகு மிகுதிப்படும் வகையில் பல நேர்த்தியான வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விமானத்தின் மேற்பரப்பில் குறுகிச் செல்லும் அடுக்குகளை உடைய இடைநிலை தளமட்டக்கோடுகள், சிற்ப வேலைப்பாடு கொண்ட அலங்கரிக்கப்பட்ட சிறுகோயில்களை இடையில் வெட்டுமாறு அழகுறத் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளன. இதனால் பேரழகு வாய்ந்த கட்டடக்கலை நயம் நம் கருத்தைக் கவருகிறது. இவ்விமானத்தின் மேல்மட்டத்தில் முற்றிலும் வடிவில் வேறுபட்ட வட்ட வடிவமான கவிழ்ந்த சிகரம் உள்ளது. இதன் நான்கு பக்கங்களிலும் சிறகுகளைக் கொண்ட மாடக்குழிகள் உள்ளன. இதனால் இவ்விமானம் புறத்தோற்றத்திலும் வனப்புடையதாக விளங்குகிறது. பிரமிட்டுப் போன்ற கட்டமைப்பையுடைய இந்த விமானத்தை எழுப்பியவர்கள் நல்ல தொழினுட்ப அறிவுடன் கூடிய திட்டத்துடன் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய கட்டிட தொழினுட்ப முறையுடன் கூடியவேலைப்பாட்டினைப் படைப்பதில் மனிதர்கள் இன்றுவரை மீளவும் செய்ய வில்லை என்பது இக்கோயிலுக்கு கலைச்சிறப்பை மேலும் வலுவூட்டுகின்றது.

திராவிடர் கட்டடக்கலை அமைப்பிலே கருவறையின் மீது வானுற உயர்ந்த விமானத்தை அமைக்கும் முறை தஞ்சைப் பெருவுடையார் கோயிலுடனேயே சிறப்புப் பெற்றது எனலாம். இத்துடன் இக் கோயிலின் கருவறையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமண்டபமும் அந்தராளம் எனும் அர்த்த மண்டபத்துடன் இணைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அதிட்டானத்திலுள்ள தாமரைப் பிதுக்கம் முதன்முதலாக எட்டுப்பட்டைகளை உடையதாக முதன்முதலில் இங்கேயே மாற்றப்பட்டுள்ளது. தூண்களின் தலைப்பகுதியில் மாற்றங்களும் சிங்கவேலைப்பாடு மறைந்து பிதுக்கங்களும் இடம் பெற்றுள்ளன. தூணினுடைய காலின் மேலும் தலைப்புக்குக்கீழும் தாமரைக்கட்டு எனும் புதியபகுதி புகுத்தப்பட்டமையை இக்கோயிலில் சிறப்பாகச் சுட்டலாம்.

இக்கோயிலின் போதிகையின் அமைப்பானது தனித்துவமான கலை அம்ச வெளிப்பாட்டைக் கொண்டதாகும். போதிகையின் இரண்டு ஓரங்களும் கோணமாகவும் நடுமையம் பிதுக்கம் உடையதாகவும் திராவிடப்பாணியின் புதுச்சிறப்பைக் காட்டிநிற்கின்றன. இத்துடன் திருமேனிகளுக்கு அமைக்கப்படும் மாடக்குழிகளில் புராணக்கதைகளை அல்லது மனித வடிவங்களைச் சித்திரிக்கும் சிற்பங்கள் பேரளவில் அமைக்கப்பட்டுள்ளன. அதிட்டானத்திலும், கபோதத்திலும் மேற்பக்கம் யாளிகளின் வரிசை கொண்டதாகச் செதுக்கப்பட்டுள்ளது. கபோதத்தின் அடிப்பகுதியில் பூத கணங்களின் வடிவங்களும், வெளிப்புறம் கூடுகளின் வேலைப்பாடும், கொடிக்கருக்கு வேலையும் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. கூடுகளின் தலைப்பகுதியில் பிதுக்கங்கள் மறைந்து சிங்கமுகம் அல்லது மூன்று மடிப்புகளைக் கொண்ட வளைவுடன் கூடிய வேலைப்பாடு புதியதாகப் புகுத்தப்பட்டிருக்கிறது. பல்லவர் காலத்தைய சிற்ப வேலைப்பாடற்ற அரை வட்டங்களும் வளைவுகளும், போலன்றி சிற்பவேலைப்பாடற்ற வட்டங்கள் இக்கோயிலின் திராவிட கலைப்பண்பைப் புலப்படுத்துகின்றன.

தஞ்சைப் பெரிய கோயிலின் கட்டடக்கலை அம்சத்தில் மண்டபங்கள் சிறப்பானவை. கர்ப்பக்கிருகத்தை அடுத்து அமைந்துள்ள அர்த்தமண்டபம், மகாமண்டபம், முகமண்டபம் ஆகியன 30x18 (54.86) மீற்றர் என்ற பரப்பளவில் பரந்திருக்கின்றது. இம்மண்டபங்களை அழகிய தூண்கள் தாங்கி நிற்பது சிறந்த கட்டடக்கலையின் வெளிப்பாடாகும். பிற்காலத்தைய நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபங்களுக்கு முன்னோடியாக இச்சிறப்பான மண்டபங்கள் அமைந்ததென்றால் மிகையாகாது. இத்துடன் இக்கோயில் ஆகமவழிபாட்டின் ஒரு கூறாகிய ஸ்தூபி, விழுநீர்ப்போக்கு ஆகியவற்றின் பொருத்தமான நிலையங்களைக் கொண்டுள்ளது. சிறப்பாக விமானக்கலசத்தின் நிழல் திருச்சுற்றில் விழாதவாறு அமைந்துள்ளதோடு, விழுநீர்ப்போக்கு ஒரு ஆள் உயரத்தின் மேல் ஓடிவந்து விழுமாறும் அமைந்துள்ளது. கோயிலை வலம்வரும் பொழுது ஸ்தூபி, விழுநீர்ப் போக்கு ஆகியவற்றைத் தாண்டியோ, மிதித்தோ செல்லாதவகையில் சிறப்பாக கட்டப்பட்டுள்ளது.

பரிவாரத் தெய்வங்களுக்கு சிறுசிறு கோயில்களை அமைக்கும் வகையிலும் பெரியகோயில் சிறப்புடையதாகும். இக்கோயில் இரண்டு தட்டுச்சுவர் சுற்றாலையை உள்ளடக்கியது. இதன் உட்புறம் இரண்டு அடுக்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட மூடு மண்டலமும், முன்புறம் அளவில் பெரிதும் ஆனால் உயரங்குறைந்ததுமான கோபுர அமைப்பும் தனித்துவமானவை. மூடுமண்டலத்தில் இரண்டு அடுக்குகளைக் கொண்ட வரிசையாக அமைந்த 36 சிறுகோயில்கள் கலைவனப்புடையனவாகத் திகழுகின்றன. சுற்றாலையின் மூன்று புறமும் மூன்று தோரண வாயில்கள் உள்ளதுடன் முற்றத்தில் வேறுசில கோயில்களும் அழகுற அணிசெய்கின்றன. இவற்றுடன் சக்திக்குத் தனியான கோயிலும், வடமேற்குத் திசையிலுள்ள ஆறுமுகப் பெருமானின் தனியான கோயிலும் திராவிட கலைச்சிறப்பைச் சுட்டுகின்றன.

கட்டிடக்கலைக்கு மேலும் கலைவனப்பை அளிக்கும் சிற்பக்கலையானது பெரிய கோயிலில் சிறப்பாக இடம் பெற்றுள்ளது எனலாம். அதாவது கோயிலில் முழுவதுமாக சிற்பங்கள் செதுக்கப்படாது விட்டாலும் கூட திருவுண்ணாழிகையின் வெளிப்புறச் சுவர்களில் உள்ள மாடக்குழிகளில் தெய்வத்திருமேனிகள் பல சிற்பச்சிறப்புடன் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக்கோயிலிலுள்ள தட்சிணமேருவிடங்கன் எனப்படும் பெருவுடையார் எளிய சிற்ப வேலைப்பாடுடன் கூடிய லிங்கமாகும். மேலும் இக்கோயிலுக்கு ஒரே கல்லால் செய்யப்பட்ட 3.66m உயரமும், 5.95m குறுக்களவும், 2m அகலமும் கொண்டமைந்த பெரிய நந்தியின் கலைவடிவம் சிறப்பைச் சேர்க்கின்றது எனலாம். இந் நந்தியின் கண்கள் உறங்குகின்ற பாவனையில் உள்ளதெனினும் தன்னுடைய நாவினை நீளமாக வளைத்து மூக்கினுள் விட்டுத் துழாவுகின்ற பாவனையுடன் படைக்கப்பட்டுள்ளது. இதன் கழுத்தில் இரண்டு பட்டையில் வரிசை, வரிசையாகத் தொங்குகின்ற மணிகள், பின்புறத்தில் உள்ள வால்வளைவு போன்றன சிறந்த சிற்பவேலைப் பாடுடையன.

சிற்பக்கலை ரீதியான இக்கோயிலின் சிறப்புக்களில் வாயில்களின் அமைப்பு குறிப்பிட்டுக்கூறக்கூடியதாகும். இக் கோயிலின் உண்ணாழிகைக்குள் நுழைவதற்குள்ள வாயில்கள் மூன்று ஆகும். அவற்றுள் தெற்குத் திருவாயிலின் கீழ்ப் பகுதியில் பௌத்த சிற்பங்கள் சிற்பக்கலைக்குரிய தனிச்சிறப்பைக் கொண்டுள்ளன. இவை பெரும்பாலும் புத்தஜாதகக் கதைகளைச் சித்திரிக்கின்றன. போதிமரத்தின் கீழ் புத்தர் இருப்பதும், அவருடைய சீடர்கள் பணிவுடன் அறிவுரை கேட்பதும் ஒருபுறமாகவும், மறுபுறம் தேவ அரம்பையர் ஆடியும், பாடியும் வாழ்த்துவதாகவும் இச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இவைமட்டும்மன்றி இக்கோயிலின் வாயில்களில் காவல்புரியும் துவாரபாலகரின் சிலைகள் 5.49M உயரமும் கொண்டனவாகவும் 2.43m அகலம் கொண்டனவாகவும் அளவில் பெரிதாக செதுக்கப்பட்டுள்ளது. இவை இடதுகாலை ஊன்றி வலதுகாலை எடுத்து கையிலுள்ள கதையின் மீது சார்த்தியநிலையில் அமைதி தவழும் முகத்துடன் அழகாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அளவிலே பெரிய இக்கோயிலின் விமாமனத்திலும் சிற்பக்கலையை நாம் கண்டு கொள்ளலாம். தட்சணமேரு ஆகிய இவ்விமானம் 16 அடுக்குகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதுடன் உச்சியில் ஒரே கல்லாலான எண்கோண சிகரத்தைத்தாங்கி பல அழகிய சிற்பங்களை வெளிப்படுத்தி நிற்கின்றது. இவ்விமானத்தில் இலைகொடிகள், மரங்கள், யாளி, சிங்கம் போன்ற விலங்கள், பறவைகள், அலங்காரச் சிற்பங்கள், பாடலுக்கேற்ப ஆடுபவர்கள், புராணக்கதைகள் சிலவற்றை விளக்கும் கதாபாத்திரங்கள் முதலியன இடைவெளிகளை உள்ளடக்கியபடி அமைந்துள்ளன. குறிப்பிட்டுக் கூறுவதாயின் தென்பக்கத்தில் திருமால், விநாயகர், பிச்சாடனர், குலதேவர், தட்சணாமூர்த்தி, மார்க்கண்டேயர், நடராசர் சிலைகளும் சோழ வீரர்களுடைய சிலைகளும் மேற்குப் பக்கத்தில்; லிங்கோற்பவர், அர்த்தநாரீஸ்வரர் முதலிய சிற்பங்களும் வடக்குப்பக்கத்தில்; கங்காதரர், கலியாண சுந்தரர், மகிஷாசுரவர்தனித் முதலிய திருவுருவங்களும் வடபகுதியின் கீழ்ப்பக்கத்தில் ஐரோப்பியருடைய வடிவமும் சிற்பக் கலை அம்சங்களை வெளிக்காட்டுகின்றன. இவற்றைவிட புறச் சுவர்மாடங்களில் அழகிய வேலைப்பாடான பிச்சாடமூர்த்தியின் சிலை, சந்திரசேகரரின் கற்சிலை என்பனவும் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்றுகளாகும். பொதுவாக இக்கோயிலின் சிற்பங்கள் எல்லாம் புடைப்புச் சிற்பங்களாகவும், நேர்த்தியும் விறுவிறுப்பும். உடையனவாகவும், ஆகம நூல்களின் விதிமுறைகளுக்கு அமைவானவையாகவும் இடம் பெற்றமை சுட்டிக்காட்டத்தக்கதாகும். இக்கோயிற் சிற்பங்களில் தெய்வத்திருமேனிகளுக்கும் மனித வடிவங்களிற்கு மிடையே சிறப்பான வேறுபாடு உள்ளது. தெய்வத்திருமேனிகளில் மனிதப் பண்பை விஞ்சிய ஒருவித தெய்வீகக்களையும், மனித உடற்கூற்று அமைப்பிலிருந்து வேறுவட்ட சில புதுமைப்பண்புகளையும் காணலாம். இத்துடன் வெண்கல படிமமுறை வார்ப்புச் சிற்பங்களும் இக்கோயிலில் இடம் பெற்றிருந்தன. விரைவாகவும், செம்மையாகவும், நேர்த்தியாகவும் புதுமைப் பொலிவுடனும் சிலைகளை வார்க்கும் முறை இங்குள்ள சான்றுகளிலிருந்து அறியலாம். கனமான சிலைகள், உள்ளீடு இல்லாத சிலைகள், தடித்த பக்கங்களைக் கொண்ட சிறிதளவு உள்ளீடு இல்லாத சிலைகள் என்ற மூன்று வகையான சிலைகள் இக்கோயிலில் இடம் பெற்றுள்ளன. இருப்பு நிலைக்கும் இயக்க நிலைக்கும் இடையே ஒரு கணப்பொழுதினைப் படம் பிடித்துக்காட்டுவதைப் போன்ற சிலைகள் வடிவத்தின் வனப்பாலும், முகச்சாயலாலும், உடலுறுப்புகள் உணர்த்தும் முத்திரைகளாலும் உவகையூட்டுகின்றன. நடராசரின் படிம அமைப்பு முறையே இக்கோயிலில் இக்கலைக்குச் சிறந்த உதாரணமாகும்.

## சமூக நிறுவனமாக இக்கோவிலின் சிறப்புக்கள்:-

### 1. அரண்மனையாக அல்லது கோயிலாக:-

போர்களத்தில் மாவீரனாக விளங்கிய இராஜராஜன் தனது பல்லாயிரக்கணக்கான படைகளின் மனோசக்திக்கு ஆதாரமாக தஞ்சைப் பெருஞ்கோயிலை அமைத்தான் எனலாம். அளவிலே பிரமாண்டமானதாக அமைக்கப்பட்ட இக்கோயில் இந்துமதத்தின் உறைவிமாக விளங்கியதுடன் மன்னனினதும், படைவீரர்களினதும் சகல நடவடிக்கைகளுக்கும் ஆதாரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனையாகவும் விளங்கியது. கோயிலின் ஒவ்வொருபகுதிகளும் பாதுகாவலர்களான போர் வீரர்களால் கண்காணிக்கப்பட்டது. அரசனுக்கும் அவன் படைவீரர்களுக்கும் வேண்டிய நேரங்களில் சபைகளைக் கூட்டவோ, ஆலோசனைகளை வழங்கவோ இக்கோயிலின் பிரதான மண்டபங்கள், திருச்சுற்றுக்கள் வசதியளித்தன.

மன்னனின் படை அமைப்புக்கள் இக்கோயிலின் உறுப்பினர்களாகவும், பாதுகாவலர்களாகவும், அறப்பணியாளர்களாகவும் விளங்கினார்கள். இத்தகைய அரசியல் வசதிகள் பெற்ற இக்கோயில் நிர்வாகம் தொடர்பாக மன்னனுக்கும் மக்களுக்குமிடையேயான தொடர்பாடல் நிலையமாக விளங்கியது எனலாம். பொதுவாக கிராமங்கள் பலவற்றின் நிர்வாக இணைப்பு நிலையமாக இக்காலத்தில் இக்கோயில் பணியாற்றியது. மன்னனது ஆணைகளும், கட்டளைகளும் இக்கோயிலை மையமாக வைத்தே பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டன. குறிப்பாக கிராம நிர்வாகத்தை கவனிக்க மன்னர் விஜயம் செய்த காலங்களில் அன்றி ஏனைய காலங்கள் யாவிலும் அரசியல் முடிவுகளை அறிவிக்கும் தகவல் நிலையமாக அல்லது அரண்மனையாக இக்கோயில் பணியாற்றியது. சுருங்க்கக் கூறின் கோயில் 'கோ + இல்' எனபகுக்கப்பட்டு அரசன் வீற்றிருக்கும் இடமாக இங்கு காணப்பட்டது. மற்றொரு வகையில் கூறுவதானால் கோவில் இறைவன் உறையும் இடமாகக் கருதப்பட்டு அங்கு சமயப்பணி சிறப்பாக இடம் பெற்றது. சிவன் கோயிலாக இது விளங்குவதுடன் இந்துமதத்தை நிறுவனமுறையில் வளர்த்தெடுக்கின்ற ஒரு நிலையமாகவும், மன்னன்முதல் மக்கள் வரையான இந்து மதத்தவரை ஒற்றுமைப்படுத்துமிடமாகவும், மக்களின் சமயவாழ்வை மேம்படுத்துவதாகவும், சிறந்த சமயப்பண்பாடுகளை கட்டிக்காக்கும் இடமாகவும் சமயரீதியான நாள் வழிபாடுகளையும் விழாக்களையும் சிறப்பாக நடாத்திவரும் இடமாகவும் அக்காலத்தில் செயற்பட்டது.

**2. வங்கியாக, செல்வத்தின் உறைவிடமாக அல்லது திறைசேரியாக:-**
இராஜராஜன் மேற்கொண்ட வல்லடிப் போர்களால் வெல்லப்பட்ட நாடுகளிலிருந்து நிலவருவாய் அதிகம் கிடைத்தது. உதாரணமாக "இரட்டபாடி ஏழரை இலக்கம்" என்பது இரட்ட பாடியின் வருவாய்; அதனுடைய நிலவள பூமியின் அளவை என்பதைச் சுட்டுகிறது. குறிப்பாக சாளுக்கியப் போர்களில் இவன் பெருமளவு தங்கத்தையும், வெள்ளியையும் அபகரித்துக் கொண்டான். எனவே இவற்றை புழக்கத்தில் விட்டால் பணவீக்கம் ஏற்படும் என்று எண்ணிய மன்னன் தஞ்சைப் பெரிய கோயிலின் செழிப்பிற்காக 222 கிலோ தங்கம், 266 கிலோ வெள்ளி ஆகியவற்றை வழங்கினான். அரசனைப் பின்பற்றி படை அமைப்புக்கள் பலவும் தங்களுக்கு உரிமையான தங்கத்தை பெரிய கோயிலில் சேமித்து வைத்தனர். பொருளாதார வளர்ச்சிக்காக அதை விரும்பிக்கேட்ட கிராமங்களுக்கு வட்டிக்கு கொடுக்க ஏற்பாடு செய்திருந்தனர். குறிப்பாக படை அமைப்புக்கள் தமது தேவைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்த பின்பு எஞ்சியுள்ள தங்கத்தையும், வெள்ளியையும் தனிமனிதருக்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தவணைரீதியாக கடன் கொடுத்து உதவினர். மேலும் தஞ்சை நெல்கொழிக்கும் பூமியாக விளங்க அங்கு விளைந்த நெல்களைக் களஞ்சியப்படுத்தி மக்களுக்கு கடனாக வழங்குவதும் பல்வேறு நிர்வாகப் பிரிவுகளை உள்ளடக்கிய ஊர்மன்றங்களூடாக வரி அறிவீட்டை மேற்கொள்வதுமெனப் பணங்களைச் சேகரித்து இக்கோயில் அக்காலத்தில் சிறந்த வங்கியாகத் தொழிற்பட்டது.

**3. தொழில் வழங்கும் மையமாக:-**

ஊர்மக்களுக்குப் பலவகையான தொழில்களை வழங்கும் மையாமாக அக்காலத்தில் தஞ்சைப் பெருங்கோயில் சிறந்த பணியாற்றியுள்ளது. இக்கோயிலில் நாள் தோறும் 44 வகையான பணிகளைச் செய்து வந்த தொழிலாளர்கள் ஏறக்குறைய 935 பேராவர். அவர்களில் பண்டாரம் செய்வார், திருப்பரிசாகரம் செய்வார், நிலையாய தீட்சித்தாரர், கணக்கெழுதுவான், கீழ்க்கணக்கு, தளிச்சேரிப்பெண்டுகள், நட்டுவம் செய்வான், கொட்டுப்பாடித் தாளம் தட்டுவான், உடுக்கைவாசிப்பான் வீணை வாசிப்பான், தமிழ் பாடுவான், ஆரியம் பா பாடுவான் போன்ற தொழிலாளர்கள் குறிப்பிடக் கூடியவர்கள். இவ்வாறான பல தொழில்களிலும் பலர் வேலை செய்தனர். உதாரணமாக திருப்பரிசாகரம் செய்வான் தொழிலில் 166 பேர் வேலை செய்தனர். நடனமாதர்களாக நானூற்றுக்கு மேற்பட்டவர்களும் இசை ஆசிரியர், இசைகருயாளர் 500ற்கு மேற்பட்டவர்களும் இக்கோயிலில் பணிபுரிந்தனர். சுருங்கக்கூறின் கூடிப்பணிபுரியும் கூட்டு முயற்சிக்கு இக்கோயில் ஒரு பயிற்சிக் களமாக விளங்கியது. தச்சர், சிற்பிகள், கொல்லர், பூமாலைதொடுப்போர் போன்ற பல தொழிலாளர்களுக்கும் இக்கோயிலில் பணிபுரிவதற்காக மானியமாக நெல்வழங்கப்பட்டமை சான்றுகளில் உண்டு.

**4. ஆதுலர் சாலையாக அல்லது வைத்தியசாலையாக:-**

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் சமஸ்கிருதத்தினை சிறந்த முறையில் பயின்ற பல அந்தணர்கள் தொண்டாற்றியிருந்தனர். அவர்கள் வேதங்களையும், உபவேதங்களையும் நுணுகி ஆராய்ந்த வல்லுனர்களாக விளங்கினர். எனவே அவற்றில் கூறப்பட்ட மருத்துவரீதியான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு கோயிலிலேயே பொதுமக்களுக்காக மருத்துவப் பணியை ஆற்றியுள்ளனர். குறிப்பாக ஆயுள்வேத வைத்திய முறையிலுள்ள மருந்துகள், சிகிச்சை முறை என்பவற்றைப் பயன்படுத்தினர் நோய்களைக் குணப்படுத்தினர். வைத்தியசாலை ஒன்றிற்குத் தேவையான மண்டபவசதிகள் யாவும் இக்கோயில் கொண்டமைய மன்னன் முதல் படைவீரர், மக்கள் என சகல பிரிவினரும் இங்கு மருத்துவவசதியைப் பெற்றனர் எனலாம். இத்துடன் சமூகத்தால், உறவுகளால் கைவிடப்பட்ட பொதுமக்கள் அனைவரையும் இக்கோயில் பராமரித்து வந்துள்ளது.

**5. பல்கலைக்கழகமாக:-**

சோழர்காலத்தில கல்விப்பணியை மேற்கொண்ட கல்விச்சாலையாகவும் பெரியகோயில் திகழ்ந்தது. அந்தணர்களின் கல்வியும், ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்களின் கல்வியும் இக்கோயிலை மையப்படுத்தி புகட்டப்பட்டன. சமஸ்கிருதக்கல்வி சிறப்பாக அந்தணர்களுக்கு இக்கோயிலில் புகட்டப்பட்டது. மேலும் இந்து மதத்தவரின் சமய இலக்கிய ஆதாரங்களான தேவார திருப்பதிகங்கள் மன்னனால் எழுதுவிக்கப்பட்டு நிரல்படுத்தப்பட்டு வைக்கப்பட்டன. அரசின் பொருளாதார உதவியுடன் முறைக்காரர்களால் இவை தினசரி அட்டவணைப்படி ஓதப்பழக்கப்பட்டது. விசேட நாட்களுக்கான இலக்கியப்பகுதிகள் பல இங்கு சேமிக்கப்பட்டிருந்தன. பொதுவாக மக்கள் அறிவுவிருத்திக்காக தொல்புகழ் சமயக்கதைகள் போதனை செய்யப்பட்டும், பிரசங்கம் செய்யப்பட்டும் வந்தன. பல கல்விமான்கள் எழுதிய புராண இதிகாசங்கள், தேவார திருப்பதிகங்கள், மருத்துவ நூல்கள், அரசியல் சமூக வருவாய் சம்பந்தமான நூல்கள் இக்கோயிலில் பேணப்பட்டன.

**6. (கச்சேரி) பதிவாளர் அலுவலகமாக:-**

இராஜராஜனின் ஆட்சியின் போது கல்வெட்டு எழுதும் முறை மிகவும் நேர்த்தியும், நுட்பமும் கொண்டதாக விருத்தியுற்றது எனலாம். ஏனெனில் அரசன் முதல் சாதாரண குடியானவர் வரைக்குமான அரசியல், பொருளாதார, சமூக, சமய விடயங்கள் யாவும் இக்கல் வெட்டுகளில் பதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தஞ்சைப் பொருங்கோயிலில் சோழப்போரரசின் நிர்வாக முழுவிடயங்களும் பணியாளர்களினால் பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு பதியப்பட்டுள்ளன. சிறப்பாக ராஜராஜனின் திருமுக்கூடல் கல்வெட்டின் படி இக்கோயிலில் ஒவ்வொரு நிர்வாக அலகுகளிலுமுள்ள (வளநாடு, கூற்றம், கோட்டம்) குடும்பங்களின் எண்ணிக்கை, குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை, அவர்களின் சொத்துக்கள், மாதாந்த, வருடாந்த வருமானம், அரசனுக்கு வழங்கவேண்டிய மானியம், கடன் செலுத்த வேண்டிய தொகை, வட்டி வீதம், போன்ற பல தகவல்களையும் பதிவதற்காகப் பணியாளர்கள் இருந்துள்ளனர் என அறியலாம். பிறப்பு, இறப்பு முதற் கொண்டு இக்கோயிலில் அனைத்து நிர்வாக விடயங்களும், பிறவிடயங்களும் பதியப்பட்டன எனலாம்.

இராஜராஜன் போர்களத்தில் பெற்றிருந்த வெற்றிகளையும், நாட்டாட்சியில் சம்பாதித்த அரும் பெரும் சாதனைகளையும், மக்கள் நலன் கருதி ஆற்றிய பெரும் பணிகளையும் விஞ்சும் வகையில் திராவிடக்கலைமரபின் உச்சகட்டமாக விளங்கும் தஞ்சைப் பெருங்கோயில் சோழர்காலத்திலே கலையம்சரீதியான சிறப்புக்களைக் கொண்டு மட்டும் திகழாமல் நடை முறைச் சமுதாயத்திற்கு வேண்டிய அத்தியாவசியமான பணிகளை தன்னால் இயன்றவரை ஆற்றியுள்ளமை இங்கு காணக்கூடியதாக உள்ளது. இதனால் இக்கோயில் அமைப்பிலும்சரி, ஆற்றிய பணிகளிலும் சரி அறிஞர்களால் விதந்து போற்றப்படுகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் பட்டியல்

Balasubrmaniam, S.R., **Middle Chola's Temple,** Haryana Thomson prees:1975.

பாலசுப்பிரமணியம், மா.,**சோழர்களின் அரசியல் கலாசார வரலாறு,** பாகம்I, சென்னை: 1977.

திருநாவுக்கரசு,க.த., **முதலாம் இராசராச சோழன்,** இரண்டாம் பகுதி, திருச்சி:1973.

சதாசிவபண்டாரத்தார்,T.V., **பிற்காலச் சோழர் சரித்திரம்** பாகம்I, II, அண்ணாமலை பல்கலைக்கழகம்:1957.

நீலகண்டசாஸ்திரி,கே.எ., **சோழர்கள்,** பாகம் I,II, அண்ணாமலை பல்கலைக்கழகம்: 1989.

சோமசுந்தரம்பிள்ளை,ஜே.எம்.,**சோழர் கோயிற் பணிகள்**, அண்ணாமலை நகர்: 1964.

பரணீதரன்., **திருத்தலப் பெருமை (தஞ்சைக் கோயில்கள்),** கலைஞன் பதிப்பகம்: 1991.

இராசமாணிக்கனார்,மா., **சோழர் வரலாறு,** பாகம் I, II, பூரம்பப்பளிக் கேவுன்ஸ்: 1985.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியங்களில் இலங்கையின் ஆதிகால இடப்பெயர்கள்

செல்வி . சு. தயாபரி
இறுதிவருடம்
வரலாறு சிறப்புக்கலை.

## அறிமுகம் :-

ஒரு நாட்டினுடைய பண்டைக்கால வரலாறு, அதன் பண்பாடு போன்றவற்றையறிவதற்கு உதவும் வரலாற்று மூலாதாரங்களுள் இடப்பெயர்களும் குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவத்தைப் பெற்று நிற்கின்றன. இலங்கையின் இந்த இடப்பெயர்களின் வரலாற்று ரீதியான முக்கியத்துவத்தை ஆராய்வதற்கு முன்பு பொதுவாக இடப்பெயர்கள் எவ்வாறு எப்போது தோற்றம் பெற்றன என்பது பற்றியும், அவை தோற்றம் பெற்ற பின்னணிபற்றியும் அறிவது அவசியமாகின்றது. அவ்வகையில் நோக்கும் போது, நாகரிக வளர்ச்சியும், தேவைகளும், ஒழுங்குகளும் ஏற்பட்ட தன்மையானது நிலையான குடியிருப்பின்றி அலைந்து திரிந்த ஆதிகால மக்கள் மத்தியில் நிலையாக ஓரிடத்திலிருந்து தொழிற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. இத்தகைய ஒரு சூழ்நிலையே இடப்பெயர்களின் தோற்றத்திற்குக் களமமைத்துக் கொடுத்தது எனலாம். (பாலசுந்தரம்:1989:01)

நிலையான குடியிருப்பை ஏற்படுத்தி வாழத்தொடங்கிய ஆதிகால சமுதாயம் அக்காலச் சூழலுடன் இணைந்து வாழத் தலைப்பட்டதனடிப்படையில் தமது பிரதேசத்தை ஏனையவர்களுக்குச் சுட்டிக்காட்டி ஒன்றிலிருந்து மற்றொரு பிரதேசத்தைப் பிரித்துக் காட்ட வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொண்டது. இதனால் தாம் வாழும் பிரதேசத்தின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்காக அதற்குப் பெயரிட்டழைத்தனர். இதனால் ஒவ்வொரு ஊரும் வெவ்வேறு இடப்பெயரால் வழங்கப்பட்டது. இந்த அடிப்படையிலேயே இலங்கையின் இடப்பெயர்களும் பல்வேறு காரணங்கள் கருதிப் பல பெயர்களாலழைக்கப்படுகின்றன. இதனை இராமாயணக் காப்பியம், கந்தபுராணம், சங்க இலக்கியங்கள், நாயன்மார்கள், ஆழ்வார்களது பக்தியிலக்கியங்கள் போன்றவற்றின் மூலம் அறியமுடிகின்றது. மேலும், இவ்விலக்கியங்கள் இலங்கையின் இடப்பெயர்கள் பலவற்றில் திராவிட மொழிக் குடும்பத்துக்குரிய தமிழ்ப் பெயர்கள் காணப்படுவதனை உறுதிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறு வளர்ச்சியடைந்த தமிழ் இடப்பெயர்கள் இலங்கையில் பண்டைக்காலந்தொட்டே தமிழர்களும் குறிப்பிடத்தக்களவு செல்வாக்குச் செலுத்தியிருந்தனரென்பதைக் காட்டி நிற்கின்றன. இவ்வாறு இந்நாட்டின் வரலாற்றை அறியத்தரும் ஆதாரங்களில் ஒன்றாக விளங்கும் இடப்பெயர்களையும், அவற்றை அறிவித்து நிற்கும் இலக்கியங்களையும் சிறப்பாக மேலும் அவதானிக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியங்கள் காட்டும் இடப்பெயர்கள்

ஈழத்து இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, பாளி இலக்கியங்களான தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் போன்றவற்றை விட ஏனைய தமிழ், சிங்கள இலக்கியங்கள் யாவும் கி.பி 12ஆம் நூற்றாண்டின் பின் தோற்றம் பெற்றவையாகவே பெருமளவுக்குக் காணப்படுகின்றன. இருப்பினும், இந்நூல்கள் கி.பி 12ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட இடப்பெயர்கள் பற்றிக் கூறிநிற்கின்றன. இவற்றையடிப்படையாகக் கொண்டு நாம் இலங்கையின் இடப்பெயர்களை அறிய முடிகின்றது. இன்னும், தமிழரைவிடச் சிங்கள இனத்தவர்கள் அதிகளவு வரலாற்றுணர்வுடையவர்களாக இருந்ததால் சிங்களவர்களுடைய 2000 ஆண்டுகால பாரம்பரியத்தைத் தொடர்ச்சியாக எடுத்துக் கூறுபவையாக பௌத்த சமய இலக்கியங்கள் காணப்படுகின்றன. காலத்திற்குக் காலம் பௌத்த பிக்குகள் மகாவிகாரையின் வரலாற்றைக் கூறும் நோக்கத்தை மையமாக வைத்துப் பாளி மொழியில் இவற்றைப் பாடிவந்துள்ளனர். இப்பின்னணியில் அவற்றில் காணப்படும் இடப்பெயர்களும் பாளி, சிங்கள மொழிகளை அடியொற்றி எழுந்தவையாகவே சில வரலாற்றாசிரியர்களால் இனங்காணப்பட்டுள்ளன. ஆனால், இத்தகையதொரு முயற்சி தமிழரிடையே காணப்படாதமை துர்ப்பாக்கியமே (பாலசுந்தரம்:1989:09). இருப்பினும், இலங்கையில் தோன்றிய தமிழிலக்கியங்கள் கூறும் இடப்பெயர்களுடன் தமிழக இடப்பெயர்கள், மற்றும் தொல்பொருள்சான்றுகளை ஒப்பிடுவதன் மூலம் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்ட இடப்பெயராய்வு இங்கு முன்வைக்கப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த அடிப்படையில் முதற்கண் இலங்கைக்குத் தொன்று தொட்டு வழங்கப்பட்டுவரும் பிற பெயர்களை அவதானிப்போம்.

## இலங்கையின் மறுபெயர்கள்

இலங்கையினுடைய மறுபெயர்கள் பற்றி அவதானிக்கும் போது, வேறு எந்தவொரு நாடும் கொண்டிராதளவு மறுபெயர்களுடைய சிறப்புடையதாக இலங்கை காணப்படுகின்றதென்பது புலனாகின்றது. இரத்தினதுவீபம், இலங்கை, ஈழம், ஓபிர், ஒளிநாடு, சலாதீபம், சிங்களதீவகம், சிலோன், செரன்தீவு (சேரன் தீவு என்பதன் மரூஉ), தாமிரபரணி, தப்ரபேன், சிவபூமி, திருநாடு, நச்சதீபம், நித்திலதுபீபம், மத்துவீபம், மாணிக்கதீபம், மும்முடிச்சோழ மண்டலம், நாகதீபம், வாதுவீபம், ஸ்ரீலங்கா எனப்பல்வேறு பெயர்களால் எமது நாடு சுட்டப்படுகின்றது. சுருக்கம் கருதி இதிலுள்ள எல்லா இடப்பெயர்களையும் ஆராயாது பாளி, சிங்கள இலக்கியங்களிலும், தமிழலக்கியங்களிலும் பொதுவாக இடம்பெற்றுள்ள இடப்பெயர்கள் சிலவற்றை இங்கு ஆராய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை மிகப் பழங்காலம் தொட்டே "ஈழம்" என்ற பெயரால் வழங்கப்பட்டு வருகின்றது. இச் சொல் சிங்கள மொழிக்குரிய சொல்லென்பது சிங்களவரிடையே நீண்டகாலமாகக் கருதப்பட்டு வரும் கருத்தாகும். ஆனால், இப்பெயரை முழுமையாக ஆராய்ந்தால் இது ஒரு தமிழ்ச் சொல்லென்பது புலப்பட்டு நிற்கின்றது. பண்டைய தமிழிலக்கியங்கள், பழைய கல்வெட்டுக்கள், புராதன காசுகள் என்பவற்றின் மூலம் இதனை உறுதிப்படுத்த முடிகின்றது. இச்சொல்லை ஆராய்ந்தால் ஒலி வடிவிலும், பொருட்தன்மையிலும் தனித்துவமுடையதொரு சொல்லாகக் காணப்படுவது புலனாகின்றது. தமிழுக்குச் சிறப்பொலியாக உள்ளதுடன், ஏனைய உலக மொழிகள் எவற்றிற்கும் இல்லாத "ழ" கர ஒலியைத் தன்னகத்தே கொண்டதாக இது காணப்படுகின்றது. இச் சொல் ஒரு தூய தனித்தமிழ்ச் சொல்லென்பதை இனங்காண உதவுகின்றது. இதன் பொருளை நோக்கினால், பண்டைக்காலத்தில் மிக அதிகமான பொன்னையுடைய நாடாகவும், கள் இறக்கும் தொழிலைப் பெரும்பான்மையாக மேற்கொண்ட பூர்வீக குடிகள் எனக் கருதப்படும் (சின்னத்தம்பி:48) "சாணார்" என்ற இனத்தைக் கொண்டிருந்ததினாலும் பொன், கள் என்ற பொருளில் இது அழைக்கப்பட்டது புலனாகிறது. மக்களுக்குத் தேவையான சிறப்புடைய பொருளான பொன்னையும், கள்ளையும் மிகுதியாகத் தருகின்ற வளங்கொழிக்கும் பொன்னாடு எனக் கருதி "ஈழம்" என்ற இப்பெயர் வழங்கப்பட்டுள்ளதெனக் கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இனி இந்த ஈழம் என்ற சொல் வழங்கப்பட்ட காலத்தை நோக்கும் போது இது பண்டு தொட்டு வழங்கப்பட்டுவரும் ஒரு சொல்லென்பதை நிறுவக்கூடியதாகவுள்ளது. சங்ககாலத்திலிருந்து கி.பி 12ஆம் நூற்றாண்டுவரை பிற்காலச் சேர, சோழ, பாண்டியர் காலத்திலும் இச்சொல் தமிழகத்திலும் எமது நாட்டிற்குச் சூட்டப்பட்டு, வழங்கப்பட்டு வந்திருப்பதனை இலக்கியங்கள் வாயிலாகவும், சாசனங்கள் மூலமாகவும் அறியலாம் 'பட்டினப்பாலை' என்ற சங்க இலக்கியத்தில்

"ஈழத்துணவும் காழகத்து ஆக்கமும்" என இடம் பெறும் பாடல் வரி குறிப்பிடத்தக்கது.

அடுத்து, 1ஆம் இராஜேந்திர சோழனுடைய சாசனத்தில்,

"பெருங்கடல் ஈழத்தரசர் தம் முடியும்"

எனவும் 1ஆம் இராஜராஜன் காலத்தில் அவனுடைய சாசனத்தில்,

"முரட்டொழிற் சிங்களர் ஈழமண்டலமும்"

எனவும் இடம் பெற்றுள்ள அடிகள் இலங்கைக்கு "ஈழம்" என்ற பெயர் வழங்கப்பட்டதனைக் காட்டுகின்றன. திருப்பரங்குன்றத்துப் பிராமிக் கல்வெட்டில் "ஈழக்குடும்பிகன்" என்பவனுடைய பணிபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேபோல் பிற்காலப் பாண்டியக் கல்வெட்டொன்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழம் பற்றிய தகவல் உள்ளது (குணராசா 1996:2). இதனைவிட, ஈழத்தில் அனுராதபுரத்தில் கிடைத்த கி.பி1ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட கல்வெட்டில் "ஈழப்பரத" என்ற பெயர் குறிப்பிடப்பட்டடுள்ளமை இத்துடன் ஒப்புநோக்கத் தக்கது. இன்னும், கலாநிதி.ப.புஷ்பரட்ணம் என்பவரின் ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்ட இரு பிராமிச்சாசனத்தில் முதலாவது சேதத்திற்குள்ளாகி யிருப்பதால் அதனை ஒரு முழுமையான சாசனமாகக் கொள்ளமுடியா திருப்பினும் அதிலுள்ள முதலிரு எழுத்துக்களிற்கும் "ஈழ" என்ற ஒலிப்பெறுமானத்தைக் கொடுத்து "ஈழ" என வாசிப்பது பொருத்தமுடையதென அவரால் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவது சாசனம் "ஈலா" என்ற வாசகத்தையுடையது. இவையிரண்டும் ஈழத்தையே குறித்து நிற்கின்றன என்பது இதன் முடிவாகும். (குணராசா:1996:02)

"ஈழம்" என்ற இச்சொல் எமது நாட்டிற்கு வழங்கப்பட்டமைக்கான காரணத்தை ஆராய்ந்தால், இலங்கையில் விஜயன் வருவதற்கு முன்பிருந்த இயக்கர், நாகர் என்றழைக்கப்பட்ட மக்கள் கூட்டத்தினர் பேசிய மொழியைக் கொண்டு இலங்கை அழைக்கப்பட்டதாக முதலியார் செ.இராசநாயகம் குறிப்பிட்டுள்ளார். அவர் அதற்கு விளக்கமளிக்கையில், இலங்கையில் வசித்த இயக்கரும், நாகரும் இக்காலத்தில் பிழையாக "எலு" எனச் சுட்டப்படும் "ஈழு" என்கின்ற திருத்தமற்ற ஒரு பாஷையையே பேசி வந்தனர். அதனால் இலங்கைக்கு ஈழம், ஈழமண்டலம் என்ற பெயர்கள் உண்டாகின எனக் கூறியுள்ளார். ஆனால், இதனை மறுத்த ஆ.சின்னத்தம்பி என்பவர் "ஈழநாட்டு ஆராய்ச்சி வரலாறு" என்ற தமது நூலில் "ஈழு என்றொரு வேற்றுமொழி இங்கிருக்கவில்லை அதற்குரிய ஆதாரமும் இல்லை. பௌத்தமதத்துடன் இங்குவந்த பிக்குகள் இந்நாட்டு மக்களால் அப்போது பேசப்பட்ட தமிழ்மொழியைத் திருத்தமாக 'ஈழு' என உச்சரிக்காது 'ஈலு' எனக் கூறியுள்ளனர். அதுவே பின்பு எலு என வழங்கப்பட்டது. எனவே, 'ஈலு' என அவர்கள் குறித்த பெயர் தமிழ் மொழியைக் குறித்ததேயன்றி அதனால் நாட்டுக்கு அப்பெயர் ஏற்படவில்லை. 'ஈழு' என்றொரு வேற்றுமொழி இங்கிருந்திருக்குமானால் பழைய தமிழ்ச் சங்க இலக்கியங்களில் அது பேசப்பட்டிருக்கும். ஆனால், அவ்வாறு இடம் பெறவில்லை. அத்துடன், இந்தியாவில் வாழ்ந்த இயக்கர், நாகராலும் கூட இது பேசப்பட்டிருக்கும்" எனக் கூறியுள்ளார்.

மேலும், அவர் "ஈழு" எனும் சொல் தமிழ் மொழியின் சிறப் பொலியாகிய "ழ"கர ஒலியைக் கொண்டிருப்பதால் இச்சொல் தமிழ்மொழிலுள்ள ஓர் சொல்லென்பதனை மறுக்க முடியாது. எனவே, "ஈழு" என முதலியாரினால் குறிப்பிடப்பட்ட இச்சொல் தமிழ் மொழியன்றி வேறில்லை (சின்னத்தம்பி:50:52) எனக் குறிப்பிட்டிருக்கின்றார். இவர்களிருவருடைய கருத்துக்களையும் ஆராய்ந்தால், எவ்வாறயினும் அடிப்படையில் "ஈழம்" தனித்தமிழ் சொல்லாக இலங்கைக்கு வழங்கப்பட்ட பெயரென்பது அறியக்கிடக்கின்றது. எனெனில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலியார் இராசநாயகத்தின் கூற்றின்படி இயக்கர், நாகரால் பேசப்பட்டது "ஈழு" என்ற மொழி. அதனால் நாட்டுக்கு இப்பெயர் வந்ததென எடுத்துக் கொண்டாலும், தற்காலத்தைய தொல்பொருளாதாரங்களின்படி இயக்கர், நாகர் தமிழரின் பூர்வீகக்குடிகள், அவர்கள் இந்து சமயத்தினர் என்பது நிரூபணமாகியிருப்பதனை அவதானிக்கும்போது அவர்களால் பேசப்பட்ட "ஈழு" என்ற மொழி தமிழின் ஆரம்பவடிவமாக இருக்கலாம் எனக் கருதமுடிகின்றது. இதனையே, ஆ.சின்னத்தம்பி இந்த "ஈழு" என்பது தமிழ்ச் சொல்லெனக் குறிப்பிட்டுள்ளார். எனவே, இவ்விருவரினது கூற்றுக்களுமே ஏதோ ஒருவகையில் இலங்கைக்கு வழங்கப்பட்ட "ஈழம்" என்ற பெயர் மிகப் பழமை வாய்ந்த தமிழ்ச் சொல்லென்பதைப் புலப்படுத்தி நிற்கின்றன எனக் கூறின் அது தவறாகாது.

## இலங்கை / இலங்காபுரி / லங்கா:~

"இலங்கை" "இலங்காபுரி" போன்ற பெயர்களாலும் எமது நாடு அழைக்கப்படுகின்றது. இச்சொற்களைப் பாளி, சிங்கள இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு பிற்காலச் சிங்கள மக்கள் இவை சிங்களச் சொற்களென வலிந்து இனங்கண்டு அவற்றை "லங்கா"என உருமாற்றி இன்று "ஸ்ரீலங்கா" என வழங்குகின்றனரெனலாம். ஆனால், ஆராய்ந்து பார்க்கும் போது 'இலங்காபுரி' என்ற பழைய பெயரே இன்றைய லங்கா, இலங்கை என மாற்றப்பட்டுள்ளது (குணராசா:1996:01). "இலங்காபுரி" என்ற இச் சொல்லானது இராமாயணத்தின் உத்தரகாண்டத்தில் இடம்பெற்றுள்ளது. குபேரனுக்காக விஸ்வகர்மன் என்ற தேவதச்சனால் அமைக்கப்பெற்ற இலங்காபுரி பின்பு குபேரனால் இராவணனுக்குக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதனைவிடக் கம்பராமாயணத்தில் "இலங்கை" என்ற சொல்லைக் கம்பர் பயன்படுத்தி உள்ளாரென்பதும் குறிப்பிடத்தக்கது. இராம இராவணயுத்தத்தில் இராவணன் "வெறுங்கையோடு இலங்கை புக்கான்" என இடம்பெறும் பாடல் அடி குறிப்பிடத்தக்கது. இது போன்றே சங்கப்புலவர்கள் இலங்கையை 'தொன்மாவிலங்கை' எனக் குறிப்பிட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது. சில வரலாற்றாய்வாளர்கள் "ஈழம்" என்ற பெயரே ஆரியர் வருகையின் பின் வடமொழியாளரின் தொடர்பால் 'லங்கா' என வழங்கப்பட்டதெனக் கூறுகின்றனர். இதற்குக் கந்தப்புராணத்திலிருந்து ஆதாரம் காட்டுகின்றனர். தமிழ் மொழியில் 'ஈழம் + அஹா' என்பதே லங்கா எனத் திரிபடைந்ததெனவும் கூறிநிற்கின்றனர். உண்மையில் 'லங்கா' என்ற சொல்லினடியை ஆராய்ந்தால் இது ஒரு சிங்களச் சொல்லல்ல. மாறாக, இது "ஈழம்" என்ற தமிழ் மொழியின் வடமொழிக்குரிய மொழிபெயர்ப்பு என்றே கொள்ளப்பட வேண்டும் (சின்னத்தம்பி:56). இதுவே பல்வேறு வழிகளில் திரிக்கப்பட்டு சிறப்புப் பொருந்தியதென்ற பொருளில் "ஸ்ரீலங்கா" என இன்று வழங்கப்படுகின்ற தென்பதே உண்மையான கூற்றாக அமையும் எனக் கருதின் தவறில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாமிரபர்ணி:-

இலங்கைக்குரிய இன்னுமொருபெயராகத் தாமிரபர்ணி காணப்படுகின்றது. இலங்கையின் புகழ்மிக்க பெயராக மேலைத்தேய, கீழைத்தேய அறிஞர் பெருமக்களால் தமது ஆவணங்களில் இப்பெயர் குறிக்கப்பட்டுள்ளது. கி.பி 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வடமொழி நூலாகிய "திவ்வியாவதானம" என்ற நூல் தாமிரத்துவீபம் எனவும், மகதநாட்டவர்கள் தாமிரவருணி என்றும், கிரேக்கரும், உரோமரும், தாமிரபரணி, தப்புறுபேணி எனவும், சீனர் சைத்துபாணி (தம்பப்பாணி) எனவும் வழங்கினர். ஆனால், பாளி மொழியிலமைந்த மகாவம்சம் இலங்கையில் "விஜயன் வருகை" என்ற சம்பவத்துடன் இணைத்துத் "தம்பப்பன்னி" பற்றிக்கூறுகின்றது. அதாவது, மகாவம்சம் எழுந்த கி.பி 6ஆம் நூற்றாண்டிலேயே "தம்பபன்னி" என்ற பெயர் குறிப்பிடப்படுகின்றது. ஆனால், இலங்கையின் பிற வரலாற்றுநூல்களில் மட்டுமன்றி, இந்தியா, கிரேக்கம் முதலிய பிறநாட்டு இலக்கியங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்ற ஆதாரபூர்வமான குறிப்புக்களிலிருந்து கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தாமிரபரணி என்ற நிலப்பரப்பின் பெயரால் இலங்கை பிற நாடுகளில் அறிமுகமாகிய தென்பது தெளிவாகின்றது. கி.மு2ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஏராதோஸ்தீனிஸ், குளோடியஸ் , தொலமி ஆகிய வானவியல், புவியியலறிஞர்கள் அக்காலகட்டத்தில் வரைந்த தேசப்படங்களில் இலங்கைத்தீவு குறிக்கப்பட்டுள்ளது. ஏராதோஸ்தீனிஸ் தனது படத்தில் இலங்கையைத் "தப்ரோபேன்" எனக் குறிப்பிட்டுள்ளார். அவரது படத்தைப் பின்பற்றி வரைந்த தொலமியும் இலங்கைக்கு "தப்ரபேன்" என்ற பழைய பெயரையே குறித்துள்ளார்.

இதனை ஆராயும் போது, தென்னாட்டிலிருக்கும் பல இடப்பெயர்கள் இலங்கைத் தீவுக்கு இந்தியாவிலிருந்த மக்களால் சூட்டப்பட்டது போன்று தென்னாட்டிலுள்ள ஒரு ஆற்றின் பெயரால் இப்பெயர் இலங்கைக்கு வழங்கப்பட்டதெனக் கருதப்படுவது தெரிகின்றது. தென்னிந்தியாவில் தூத்துக்குடி ஆங்கிலத்தில் 'தூத்ரிக்கோன்' என வழங்கப்பட்டது போன்று அங்கிருந்து இலங்கைக்கு வழங்கப்பட்ட தாமிரபர்ணி கிரேக்கர் மூலம் 'தப்ரபேன்' எனக் குறிப்பிடப்பட்டதெனக் கூறின் மிகையன்று (தா்மகுலசிங்கம் 1999:பக்:01). இதுமட்டுமன்றி, கி.மு4 ஆம் நூற்றாண்டில் சந்திரகுப்பத மௌரியனுடைய அவையில் கிரேக்கத்தூதுவனாக விளங்கிய மெகஸ்தனிஸ் தனது நூலில் (இன்டிகா) இலங்கையைத் 'தப்பிரபாணம்' எனக் குறித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்னும், அசோகன் தான் கைப்பற்றிய நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட கூட்டம் ஒன்றைக் கூட்டியதாகவும், அதில் சோழர், பாண்டியர், சத்தியபுத்திரர் கேரளபுத்திரர், தாமிரபரணியர் போன்றோரை இணைத்துக் கொண்டதாகவும் தமது கல்வெட்டில் கூறியுள்ளார். எனவே, மகாவம்சசத்தில் கி.பி 6 ஆம் நூற்றாண்டில் இச்சொல் குறிப்பிடப்பட முன்பே இப்பெயர் பரவலாகப் பல்வேறு நாட்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் இலங்கைக்கு வழங்கப்பட்டுவிட்டதென்பதை மேற்குறிப்பிட்ட தரவுகள் உறுதிப்படுத்துகின்றன எனலாம். இவற்றின் மூலம் 'தாமிரபரணி' என்பது 'செம்பு' என்ற பொருளில் வழங்கப்பட்டு வந்த வடமொழிச் சொல் என்பதும், பாளி இலக்கியங்களின் அடிப்படையில் சிங்கள மக்களால் பின்பு சிங்களப்பெயராக மாற்றப்பட்டதும் புறந்தள்ளப்பட்டு இது தென்னிந்தியாவிலுள்ள ஆற்றின் பெயர் குறித்த ஒரு தமிழ்ச் சொல்லே என்பது அறியக்கிடக்கின்றது.

## சிங்களத்துவீபம்:-

மகாவம்சத்தில் விஜயன் 'சிங்ஹள' எனக் குறிப்பிடப்பட்டதன் அடிப்படையில், அதனையடுத்து எழுந்த சிங்கள இலக்கியங்களில் விஜயன் வந்திறங்கிய இடமாதலால் இலங்கை "சிங்களத்துவீபம்" என வழங்கப்பட்டது என்று பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், இதனை ஆராயுமிடத்து, சிங்கத்தின் வழித்தோன்றலான விஜயன் அரசு புரிந்தமையால் இது இவ்வாறு வழங்கப்பட்டதெனவும், "சிறீஈழம்" என்ற பழைய பெயர் சிறீழம், சிறிழம், சிங்கழம் என வழங்கப்பட்டதெனவும் 'சிம்ஹளம்' பட்டையையும் (கறுவாப்பட்டை) 'துவீபம்' தீவையும் குறித்ததால் இலங்கை இப்பெயர் பெற்றதெனவும், சிங்களம் என்ற சொல்லின் திரிபே 'ஈழம்' எனவும் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம். ஈழத்தின் முதல் நாகரிக கால மன்னனாக விஜயன் சித்திரிக்கப்பட்டமை அவனின் மூதாதையெனக் கருதப்படும் சிங்கத்தின் பெயரால் இப்பெயர் வழங்கப்பட்டமைக்குரிய காரணமாகின்றது. ஆனால், மகாபாரதத்தை இத்துடன் ஒப்பிட்டு நோக்குகையில் விஜயன் இலங்கை வருவதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே பாண்டவர் செய்த இராஜசூரிய வேள்வி காலத்தில் அவர்களுக்கு இலங்கை அரசர் இரத்தினங்கள், முத்துக்கள், மயிர்ச்சீலைகள், யானைகள் போன்றவற்றை அனுப்பினரெனவும், தமிழகத்தைச் சேர்ந்த இடங்களில் இதுவும் ஒன்று, பழைய காலத்தில் அங்கு காணப்பட்ட 56 தேசங்களில் இது அடங்குகின்றது, இங்கிருந்து குடியேறியவர்களே சிங்களவர் என்பதை அறிய முடிகின்றது. இது தமிழ், சிங்கள மக்களின் மூதாதையர் என்பதையும் இங்கிருந்து பாண்டியருக்கு விலையுயாந்த பொருட்கள் அனுபப்பட்டமையானது இலங்கை விஜயன் வருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே மிகநாகரிகமுடையதாக இருந்ததென்பதையும் காட்டிநிற்கின்றது.

மேலும், விஜயன் வருவதற்கு முன்பு இலங்கையிலிருந்ததாகக் கூறப்படும் குவேனியிடமிருந்து அவன் அரசாட்சியைக் கைப்பற்ற முயன்றான் எனவும், புத்தரின் மூன்றாவது விஜயம் இலங்கையில் நாக இளவரசர்களிடையே காணப்பட்ட சிம்மாசனம் பற்றிய பிணக்கைத் தீர்க்கும் நோக்குடன் அமைந்திருந்ததெனவும் கூறும் மகாவம்சம், அதேநூலில் விஜயனின் வருகையின் முன்பு இலங்கையில் அமானுஷ்யர்களே வாழ்ந்தனரெனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறிநிற்பது விந்தைக்குரியது. காரணம் அரசியலைக் கொண்டு நடத்துமளவிற்கு இலங்கையில் இயக்கர், நாகர் நாகரிகம் படைத்திருந்தனரென்பதை அறிந்தோ, அறியாமலோ கூறும் இதே மகாவம்சம் அவர்களை அமானுஷ்யர்களாகச் சித்திரிக்க முயல்வது நோக்கத்தக்கது. சேர் வில்லியம் ஜோன்ஸ், கிளப், பெக்கோ லொக்கி, பென்னற் போன்ற வரலாற்றாசிரியர்கள் "விஜயன் வருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே இந்நாட்டில் இந்தியக்குடியேற்றவாசிகள் இருந்துள்ளனர். இவர்களெல்லோரும் இந்துக்களே" எனக் குறிபபிட்டுள்ளமையானது (தணிகாசலம்:1992:5) இயக்கர், நாகர் திராவிடரென்பதைக் காட்டுவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இத்தகைய கருத்துக்களை மழுங்கடிக்கும் வகையில் சிங்கத்தின் வழித்தோன்றலான சிங்களன் (விஜயன்) ஆட்சி செய்ததால் இலங்கை "சிங்களத்துவீபம்" என அழைக்கப்படுவதாக சிங்கள இலக்கியங்கள் மூலம் அறிகின்றோம். இது ஆராயப்பட வேண்டியதாகும். ஏனெனில், சிங்கத்தின் வழித்தோன்றலாக மானிடன் அமைவதென்பது மிகவும் கேலிக்குரியதொரு விடயமாகும். மிருகத்தினுடைய வழித்தோன்றலாக மானிடனை இவ்வாறு சித்திரித்தமை அறிவீனமான செயலாகவே கருதப்பட வேண்டும். இது இவ்வாறு அமையும் போது "விஜயன்" என்ற ஒருவன் பற்றிய வரலாறு கேள்விக்குரியதாகவே அமைகின்றது. ஏனெனில், விஜயனைத் தனிச்சிங்களவனாகவும் (இனம்), இலங்கையைத் தனிச்சிங்கள நாடாகவும் காட்டுவதற்காகப் புனையப்பட்ட கதையெனவே இதனைக் கூறவேண்டும் விஜயன் என்பவன் இருந்திருந்தால் கூட அவன் மிருகத்தின் வழித் தோன்றலாக நிச்சயம் இருந்திருக்க முடியாது. எனவே, இவற்றையடிப்படையாக வைத்து நோக்கும் போது, "சிங்களன்" என்ற ஒருவன் இல்லாதபோது இன உணர்வைக் கற்பிப்பதற்காகச் சிங்கள இலக்கியங்களால் வலிந்து கூறப்படும் பெயர்களில் சிங்களத்துவீபமும் ஒன்றென்பதே இங்கு புலப்பட்டு நிற்கும் உண்மையாகும். இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் கி.மு 700 காலப்பகுதியிலேயே "சிங்ஹல" என்ற சொல் பல இடங்களில் காணப்படுவது நோக்கத்தக்கது. இதிலிருந்து விஜயன் காலத்திற்கு முன்பே இப்பெயர் வழங்கப்பட்டதென்பது தெளிவு. "சிங்ஹல" என்ற சொல்லைப் பின்பு சிங்கள நூல்கள் தமக்கேற்ற வகையில் சில சம்பவங்களுடன் இணைத்துத் திரிவுபடுத்திக் கூறியுள்ளமையானது வேண்டுமென்றே புனையப்பட்டதென்பதை அறிவதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகின்றது.

## பாளி, சிங்கள இலக்கியங்கள் சுட்டும் இலங்கையின் இடப்பெயர்கள்:-

பாளி, சிங்கள இலக்கியங்களில் நாகதீப, மகாதித்த, ஜம்புகோள, பியங்குதீப, காரைதீப, ஊராதொட்ட என்பன போன்ற இடப்பெயர்கள் காணப்படுகின்றன. இவற்றில் 'நாகதீப' இலங்கையின் வடபகுதியையும், அதற்கண்மையிலுள்ள ஒரு தீவையும், 'மகாதித்த' இன்றைய மன்னாரையும், ஜம்புகோள காங்கேசன் துறையையும், 'பியங்குதீப' புங்குடுதீவையும், "காரைதீபம்" காரை நகரையும் குறித்து நிற்கின்றதென்பது வரலாற்றாசிரியர்கள் பலருடைய கருத்தாகும். இவற்றை ஆராய்வதன் மூலம் இப்பெயர்கள் வழங்கப்பட்ட காரணம், அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் பெற்ற காலம் போன்ற இன்னோரன்ன பல விடயங்களை விளக்கிக்கொள்ளலாம்.

## நாகதீப:-

ஆரம்பத்தில் 'நாகதீப' என்பது எந்த இடத்தைக் குறித்து நின்றதென எவருக்கும் சரியாகத் தெரியாததால் அதனைச் சாதகமாகக் கொண்டு பலரும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர் (செ. கிருஷ்ணராசா:1998:22). ஆனால், இலங்கையின் வடபகுதி "நாகதீபம்" என மகாவம்சம் போன்ற பாளி இலக்கியங்களும், வல்லிபுரப் பொற்சாசனமும் கூறிநிற்கின்றன. இதனை அவதானிக்கும் போது இன்று தீவை மட்டும் குறிக்கப்பயன்படுவது போலல்லாது அநுராதபுரத்திற்கு மேற்பட்ட வடபகுதி முழுவதையும் குறித்து நிற்கின்றது என்பதை அறியலாம். பிற்கால சிங்கள அரசியற் பிரிவுகளான இராஜரட்டை, உத்தரபத போன்றன இப்பகுதியையே குறித்து நின்றன என்பது பேராசிரியர் சிற்றம்பலத்தின் கருத்தாகும். (1993:37). இதனை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் "வரலாற்றுக் காலத்தில் நாகதீபம் இலங்கையின் இன்றைய வடமாகாணத்தைக் குறித்தது" என்ற டபிள்யூ. கெய்கர் என்பவருடைய கூற்றும், "மகாவிலாச்சியாவிற்கு (மதவாச்சி) வடக்கே உள்ள பகுதியையே நாகதீபம் குறித்தது" என்ற செலிக்மனின் கூற்றும், "இலங்கையின் வடபகுதியே வரலாற்றுக்கால நாகதீபம்" என்ற பாக்கரின் கூற்றும் அமைந்துள்ளன (குணராசா1996:06). இதுவே, தொலமியின் குறிப்பில் 'நாகதீபோய்' எனவும் (கி.பி 2ஆம் நூற்றாண்டு), தமிழ் இலக்கியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றில் "நாக நாடு" எனவும், சிங்கள நூல்களில் "நாகதிவயின" எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது இங்கு "நாகர்" என்ற இனமக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து நாக வழிபாடு செய்தமையே இப்பெயர் ஏற்படக்காரணமானது என்பது இராசநாயகமுதலியார், பேராசிரியர்.சி.க சிற்றம்பலம் போன்றோரது கருத்தாகும். (சிற்றம்பலம் 1993:39) 'நாக' என்ற பெயர் வரலாற்றுக் காலத்தில் மகல்லநாக, சூளநாக, குட்டநாக, அபயநாக, சிறீநாக என்ற மன்னர்களின் பெயர்களில் தொடர்ந்ததுடன், மிகப்பழைய பிராமிக்கல்வெட்டுக்களிலும் ஆண், பெண் இருபாலரையும் குறிக்கப்பயன்பட்டதென்பதை அவதானிக்கும் போது இப்பெயர் ஆதியில் முக்கிய இடம் பெற்றதை அறியலாம். இதனையே பின்பு பெருங்கற்கால மக்களும் பின்பற்றியதன் அடிப்படையில் இப்பகுதியில் அக்காலத்தின் பின்பும் இப்பெயர் தொடர்ந்து வழக்கிலிருந்தது. எனலாம். (சிற்றம்பலம்:1993:40)

## மகாதித்த:-

மாந்தை, மகாதித்த, மாதோட்டம் எனப்பலவாறாக இன்றைய மன்னார்ப்பகுதி பழைய காலத்தில் அழைக்கப்பட்டது. பழையகாலந்தொட்டு சிறந்த வர்த்தக மையமாகவும், சிறந்த துறைமுகமாகவும், முத்துக்கள் நிறையப் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசமாகவும் இது சிறப்புப் பெற்றிருந்தது. (மா) பெரிய (தித்த) இறங்குதுறை என்பது இதன் பொருளாகும் (சிற்றம்பலம்:1993:34). மேலும், "பெரிய தோட்டம்" என்ற பொருள் பட "மாதோட்டம்" எனவும் இப்பிரதேசம் வழங்கப்படுகின்றது (சிற்றம்பலம்:1993:34). இலங்கையின் வடபகுதியிலுள்ள இப்பிரதேசம் பற்றிப் பாளி இலக்கியங்கள் குறிப்பிட்டு நிற்கும் போதிலும், கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலேயே இப்பெயர் இப்பகுதிக்குப் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களால் பல்வேறு காலகட்டங்களில் குறிப்பிடப் பட்டுவிட்டதென்பது தெளிவாகின்றது. எடுத்துக்காட்டாக, இராமாயணத்தின் உத்திர காண்டப்பகுதியில் இராவணனுடைய மனைவியும், அவளது தகப்பன் மயனும் மாதோட்டத்தைத் தமது பூர்வீகப் பிரதேசமாகக் கொண்டிருந்தனர் என்ற வரலாறு கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் மாதோட்டம் என்ற நகரின் பெயர் இந்த இதிகாசத்தில் கிறீஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே வழங்கப்பட்டது தெரிகின்றது. அடுத்து, கி.பி.1ஆம் நூற்றாண்டில் தொலமி, பிளினி போன்றோரால் இது வரலாற்று நகராக எடுத்துக் கூறப்பட்டது. இந்த மாந்தையின் வரலாறு கிறிஸ்துவின் பிறப்பிற்கு முற்பட்டதெனக் காட்டி நிற்கின்றன.

மேலும் சங்க இலக்கியங்களிலும் இப்பெயர் கூறப்பட்டுள்ளது. குறுந்தொகையில் ஓரிடத்தில்,

"முனா அதியானையின் குருகின் கானலாம்
பெருந்தோட்ட மன்ன ரார்ப்பிசை வரூஉம்
குட்டுவன் மாந்தை யன்ன" என்ற வரிகள்

மாந்தை ஒரு காலத்தில் குட்டுவனின் ஆதிக்கத்தின் கீழிருந்ததென்பதை அறியத்தருகின்றன. அகப்பாட்டில்,

"நன்னகர் முற்றத் தொள்ளார் பண் திறை
கொணர்ந்த பாடு செய் நன்கலம்"

எனவும் சுந்தரர் தேவாரத்தில்,

"அங்கம் ஒழி அந்நாள் அரவமமரர் தொழுதேத்த
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில் -----"

எனவும்,மணிவாசகரின் திருவாசகத்தில்

"உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்றங்
கப்பழஞ் சொற் புதுக்குமெம் மச்சத்தால் '

எனவும் பலவாறு சிறப்பிக்கப்பட்டமை காலத்திற்குக் காலம் இப்பெயர் தமிழ் நூல்களில் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வந்ததெனவும், சிறந்த வளங்கொழிக்கும் துறையாக, வாணிபத்தலமாக, பிறதேசத்துடன் தொடர்பு கொள்ளும் வகையில் ஒரு பாலமாக இப்பிரதேசம் அமைந்திருந்ததென்பதையும் அறிவித்து நிற்பதுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெயரின் சிறப்பையும், இப்பிரதேசத்தின் சிறப்பையும்இனங்காட்டியுள்ள தெனலாம்.

## ஜம்புகொள:-

அக்காலத்தில் வட பகுதித் துறைமுகமாக அமைந்திருந்ததும், இன்று 'காங்கேசன்துறை' என அழைக்கப்படுவதுமான பிரதேசமே பாளி இலக்கியங்கள் குறிப்பிடும் 'ஜம்புகொளபட்டினம்' ஆகுமென்பது பலவர லாற்றாய்வாளரின் கருத்தாகும். மகாவம்சத்தில் இத்துறைமுகத்தினூடாகவே அசோகன் அனுப்பிய தூதுக்குழு இலங்கை வந்ததெனக் கூறப்பட்டடுள்ளது. இது வடஇந்திய, இலங்கைத் தொடர்பு இப்பிரசேத்தினூடாக ஏற்பட்டதென்பதைக் காட்ட மகாவசம்சம் கூறிநிற்கும் வரலாற்றுச்சம்பவமாகக் கொள்ளப்படுகின்றது. ஆனால், எல்லாவல "பட்டினம்" என்பதைத் தமிழ்ச் சொல்லாக ஏற்பதால் ஆரம்பத்திலிருந்தே தமிழகத்தின் முசுறி, தொண்டி, கொற்கை, புகார் போன்ற ஈழத்துத் தமிழ் மக்களின் வாணிப நடவடிக்கைகளின் மையமாக இப்பிரதேசமும் வளர்ச்சியடைந்ததெனக் கூறுவதன் மூலம் தமிழக, ஈழ தொடர்பைக் காட்டி நிற்கின்றார். (சி.க சிற்றம்பலம்:1993:46)

'ஜம்புகொள' என்ற சொல்லை அவதானிக்கும் போது, இதன் பதப்பிரயோகத்தை இரு சொற்களாக்கி (ஜம்பு+ கோவளம்) 'கோள' எனப் பாளி நூல்களில் வழங்கப்பட்டது இதிலிடம்பெறும் 'கோவளமே' என்பதை அவதானிக்க முடிகின்றது. இப்பெயர் தமிழகத்திலிருந்து இலங்கை வந்தவர்களால் ஏற்பட்டதென்பது பேராசிரியர் சிற்றம்பலத்தின் கருத்தாகும். இதில் 'ஜம்பு' என்ற சொல் செம்பு நிறத்தைக் குறிக்கும், 'சம்பு' என்ற தமிழ்ப் பெயரின் திரிபாகும். மேலும், நாவல் என்ற தமிழ் மொழி வடிவமே ஜம்பு என வழங்கப்பட்டதெனவும் கூறப்படுகின்றது. இன்னும் ஜம்பு என்பது சிவனைக் குறிக்கும் எனவும், அவரின் இருப்பிடமே ஜம்புகோவளம் எனவும், நாவல் மரங்கள் நிறைந்ததால் 'நாவலந்தீவு' என வழங்கப்பட்ட பிரதேசமே வடமொழியில் 'ஜம்புதீப' என வழங்கப்படுகின்றதெனவும், அதனால் இது சம்புத்துறை (சம்பு-நாவல்) வழங்கப்பட்டதாகவும் பல வரலாற்றாய்வாளர் கூறியுள்ளனர். இதன்படி இது தமிழ் மொழியின் திரிபடைந்த வடிவம் என்பதையும், இப்பிரதேசத்தில் தமிழர் வாழ்ந்தனர், தமிழகத்துத் தமிழரின் தொடர்பு காலத்துக்குக் காலம் இத்துறையினூடாக இலங்கையில் ஏற்பட்டதென்ற வரலாற்றுச் செய்திகளையும் புலப்படுத்தி நிற்கின்றது.

## பியங்குதீவு, காரைதீபம்:-

'பியங்குதீப' என மகாவச்சமும், 'புவங்குதீவு' என 'நம்பொத்த' என்ற சிங்கள நிகண்டும் குறிப்பிட்டு நிற்பது தற்போது 'புங்குடுதீவு' என வழங்கப்படும் பிரதேசத்தையே என்பது வரலாற்றாய்வாளர் சிலரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தாகும். 'புங்குடுதீவு' என்ற சொல்லே காலமாற்றத்தில் 'பியங்குதீபம்' என மாறியிருக்கலாம் என்று கூறி அதற்கு விளக்கமளிக்கும் வகையில் அதனைப் புங்கு உடுதீவு எனப் பிரித்துப் புங்கமரங்கள் நிறைந்த பிரதேசம் எனவும், நெய்தல் நிலக் கருப்பொருட்களில் புங்கமரமும் ஒன்றெனவும் பேராசியர் க.கணபதிப்பிள்ளை கூறுவது குறிப்பிடதக்கது. இது தமிழகத்தின் ஐந்திணை மரபை உணர்த்துவதாக தமிழ்பெயராகச் சுட்டப்படுவதற்குரிய சிறந்ததொரு சான்றாக அமைகின்றது. (கணபதிப்பிள்ளை:2001:62 )

அடுத்து, காரைதீபம் என்ற சொல்லை எடுத்துக்கொண்டால், 'அகிதஜாதகம்' என்ற வடமொழிநூலில் பார்ப்பன முனிவன் ஒருவன் காசியிலிருந்து புகாரில் தங்கி பின் இங்கு வந்து காரைச்செடிகளின் இலைகளை உண்டார் எனக் கூறப்படுகின்றது. அதனால் இது இப்பெயர் பெற்றிருக்கலாமெனக் கருதப்படுகின்றது. கி.பி 2ஆம் நூற்றாண்டளவில் அழிவுக்குள்ளான காவிரிப்பூம் பட்டணத்துடன் இணைத்து இந்த இடப்பெயர் கூறப்படுவதால் இப்பெயர் கி.பி2ஆம் நூற்றாண்டுக்கு முன்பே பிரபல்யமாக இருந்திருக்க வேண்டுமெனவும், இதுவே தற்போதைய காரைநகர் எனவும் அறியக்கிடக்கின்றது (கணபதிப்பிள்ளை: 2001 : 62).

### ஊராதொட்ட:-

இந்த இடம் பற்றிப் பாளி மொழியில் செய்திகள் காணப்படுகின்றன. இவற்றைவிடச் சிங்கள இலக்கியங்கள் இதனைப் பன்றியொன்று இதன் தரையில் வந்தடைந்தால் இது 'ஊராதொட்ட' (ஊரா என்றால் சிங்களத்தில் பன்றி) என வழங்கப்பட்டதாக ஒரு புராணச் செய்தியுடன் இணைத்துக் கூறுகின்றன. ஆனால் இது உண்மைக்குப் புறம்பானதொரு செய்தியாகும் 'மாமல்லபுரம்' என்பதை 'மாகவலிபுரம்' என மாற்றிப் புராணக்கதைகளில் வழங்கப்பட்டது. போல் 'ஊர்காவற்றுறை' என்ற தமிழ் வடிவமே வழக்கு மொழியில் 'ஊராத்துறை' என மாறியபோது அதனைச் சிங்கள நூலாசிரியர்கள் தமக்குச் சாதகமாக்கினர் என்பதே உண்மையாகும் (கணபதிப்பிள்ளை: 2001:63.) இந்த இடமே ஒல்லாந்தரால் 'Kayts' என அழைக்கப்பட்டு இன்று வழங்கப்படும் ஊர்காவற்றுறைப் பிரதேசமாகும்.

### பாளி, சிங்கள இலக்கியங்களில் காணப்படும் பொது, சிறப்பு விகுதிகளைக் கொண்ட இடப்பெயர்கள்:-

தீபவம்சம், மாகவம்சம், சூளவம்சம் போன்ற பாளி நூல்களையும், இராஜாவலிய, பூஜாவலிய, நிகாயசங்கிரக போன்ற சிங்கள நூர்ல்களையும் ஆராய்ந்தால் அவற்றில் இடப்பெயர்களில் காணப்படும் முன்னொட்டுச் சொற்களோ (Prefix) பின்னொட்டுச் சொற்களோ (Suffix) சிங்கள மொழிக்கேயுரிய தனித்துவத்துடன் திகழவில்லை மாறாக, அவை தமிழ், வடமொழி போன்ற மொழிகளுக்குரியவையாகவே காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றிலும் பெரும் பான்மையான சொற்கள் தமிழ்மொழி மூலத்தைக் கொண்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தவகையில் நோக்கும்போது, பாளி, சிங்கள இலக்கியங்களில் கம, குடி, கல, தித்த, வாபி, திட்டி, பிட்டி, புர, கர, பட்டின, பட்டண, நகர, மல, மலய, தோட்ட, கிரி, தீப, நாடு, ஊர, ஊரா, கல்லூர, குள, ஆறு, தர, வில, இட்டி, சிட்டி, பொல, பொக்கண எனப்பல்வேறு சொற்களைப் பொது விகுதியாகவும், சிறப்புவிகுதியாகவும் கொண்ட பல இடப்பெயர்கள் காணப்படுகின்றன. ஆனால், இவற்றைத் கல்வெட்டுக்கள் போன்ற பிற ஆதாரங்களுடன் ஒப்பிட்டு முழுமையாக ஆராய்ந்து கருத்துத் தெரிவித்த வரலாற்றாய்வாளர் பலர்; இவையெல்லாம் சிங்கள மொழிக்குரியனவாக அமையவில்லை. மாறாக, அவற்றுள் பெரும்பாலானவையாகத் தமிழ் மொழி மூலத்தைக் கொண்டவையாகவே அமைந்துள்ளன என்ற கருத்தை முன்வைத்துள்ளனர் ('கிரி' போன்ற சில சொற்களைத்தவிர - இவை வடமொழிக்குரியவை). எனவே, அவதானிக்கும்போது இன, மொழி, மத நிலைநிறுத்தலுக்காகப் பாளி, சிங்கள இலக்கியங்கள் மூலம் இவை வேண்டும் என்றே சிங்களச் சொற்களாகத் திரிவுபடுத்தப்பட்டவையென்பது புலனாகின்றது.

தொகுத்து நோக்குமிடத்து, இடப்பெயர்கள் பற்றிக் கூறியுள்ள இலக்கியங்களில் பாளி, சிங்கள இலக்கியங்கள் பெருமளவிற்குச் சிங்கள இனத்தையும், பௌத்த மதத்தையும் நிலை நிறுத்தும் பொருட்டு இடப்பெயர்களில் கூட விஜயன் பற்றிய உண்மைக்குப் புறம்பான கட்டுக்கதைகள், திரிபுகளை ஏற்படுத்த முனைந்துள்ளமையானது தமிழகத்திலும், ஈழத்திலும் கிடைக்கப்பெற்ற பிற இலக்கியங்கள் மூலமும், தொல்பொருள் ஆதாரங்கள் மூலமும் தகர்க்கப்பட்டுள்ளதென்பதை அறிய முடிகின்றது. இந்த அடிப்படையில் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள இலங்கையின் ஆதிகால இடப்பெயர்கள் இலங்கைத் தமிழ், சிங்கள மக்களது பூர்வீகம், அரசியல், பொருளாதார நடவடிக்கைகள், சமூக விழுமியங்கள், பண்பாட்டுப் பாரம்பரியங்கள், பிறதேசத்துத் தொடர்புகள் ஆகிய யாவற்றையும் அறியக்கூடியவகையில் எமக்குத் துணைநிற்கின்றன என்பதை அவதானிக்கலாம். மேலும், சிங்கள இனம் ஒரு கலப்பு இனம், சிங்கள மக்கள் இயக்கர், நாகர், தமிழர், கலிங்கர் ஆகியோரின் கலப்பால் தோன்றிய இனம், இம்மக்கள் எல்லோருமே திராவிட இனத்தவர்கள் என்ற உண்மை புலப்பட்டு நிற்கின்றது. (பாலசுந்தரம்:1989:66). இதனை மெய்ப்பிக்கும் வகையில் கலாநிதி Dr. S பரணவிதானாவின் University History of Ceylon) பல்கலைக்கழக வரலாறு என்ற நூலில் "இப்போது சிங்கள, தமிழ் முதலிய மொழிகளைப் பேசுவோர் இயக்கர், நாகரின் வழித்தோன்றல்களே" என்ற கூற்று அமைகின்றது. இத்தகைய கூற்றுக்கள், தரவுகளை இலக்கிய ஆதாரங்களில் காணப்படும், இடப்பெயர்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து இலங்கை தமிழ் சிங்கள மக்கள் பற்றிய முடிவை மேற்கொள்ளவும், இலங்கை பற்றி அறியவும் முடிகின்றது. இந்த வகையில் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள இலங்கையின் ஆதிகால இடப்பெயர்கள் வெறும் பெயரளவில் மட்டும் நின்று விடாது சிறந்த வரலாற்றாதாரங்களாகத் திகழ்கின்றன என்பது மறுப்பதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் பட்டியல்

Pushparatnam, P., Tamil place names As Gleaned from the Brahmi Inscriptions of Srilanjka.

Subramiam, S.V., 1984, The Place names in Early Tamil Litrature,All India conference of the place Namessociety of India, Mysore

கிருஷ்ணராசா,செ., 1998 தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழா் பண்பாட்டுத் தொன்மையும், பிறைநிலா வெளியீடு.

தணிகாசலம், கதிர்., 1992, இலங்கை வரலாறும் இலங்கை இடப் பெயர் ஆய்வும், சரவணாபதிகம், சொன்னை.

பாலசுந்தரம், இ., 1989, தமிழா இடப்பெயர்ஆய்வு -2(வடமராட்சி - தென்மராட்சி) வல்லிபுரம் இந்து கல்வி கலாசார மன்ற வெளியீடு.

புஷ்பரட்ணம், ப., 2001, பண்டைய இலங்கையில் தமிழும், தமிழரும் (பிராமிக்கல் வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு) கொழும்பு தமிழ்ச்சங்கம்.

குணராசா, க., 1996, ஈழத்தவர் வரலாறு (கி.மு 5ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 16ஆம் நூற்றாண்டு வரை) பூபாலசிங்கம்.

சின்னத்தம்பி, ஆ., ஈழநாட்டு ஆராய்ச்சி வரலாறு

சிற்றம்பலம், சி.க., 1993, யாழ்ப்பாணம் தொண்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.

கணபதிப்பிள்ளை, க., 2001, ஈழத்து வாழ்வும் வளமும், குமரன் புத்தஇல்லம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டுப் போர் (1338 - 1453)

திரு.க. அருந்தவராஜா
விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை.

ஐரோப்பாக் கண்டத்தில் நடைபெற்ற போர்களில் தேசிய இனப்போர் என்று சொல்லத்தக்க முதலாவது போராக இந்நூற்றாண்டுப் போரினைக் குறிப்பிடலாம். இப்போரானது இங்கிலாந்திற்கும், பிரான்சிற்குமிடையில் நடைபெற்ற போர்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த போராகவும், பேரழிவினை ஏற்படுத்திய போராகவும் கருதப்படுகின்றது. மேற்கூறப்பட்ட இரு நாடுகளிற்கு இடையிலும் கி.பி. 1338 தொடக்கம் 1453 வரை நான்கு கட்டங்களாக நூற்றாண்டுப் போர் நடைபெற்றது. முதலாவது கட்டம் 1338-1360 க்கிடையிலும், இரண்டாவது கட்டம் 1369-1399 க்குமிடையிலும், மூன்றாவது கட்டம் 1413-1422 க்கிடையிலும், நான்காவது கட்டம் 1423-1453 க்கிடையிலும், நடைபெற்றது. நூறு ஆண்டுகளிற்கு மேல் இப்போர் நடைபெற்றதினால் நூற்றாண்டுப்போர் எனப்படுகின்றது. இங்கிலாந்தின் ஐந்து மன்னர்களான எர்ட்வேட், இரண்டாம் ரிச்சேர்ட், நான்காம் ஹென்றி, ஐந்தாம் ஹென்றி, ஆறாம் ஹென்றி ஆகிய மன்னர்களின் காலங்களிலும், அதே போன்று பிரான்சின் ஐந்து மன்னர்களான ஆறாம் பிலிப், இரண்டாம் ஜோன், ஐந்தாம் சார்ள்ஸ், ஆறாம் சார்ள்ஸ், ஏழாம் சார்ள்ஸ் ஆகியோரின் காலங்களிலும் இப்போர் நடைபெற்றது. மேலும் இப்போரானது இங்கிலாந்தினால் ஆரம்பிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்போரிற்கு பல அரசியல், பொருளாதாரக் காரணிகள் பின்னணியாக இருந்தன. இப்போரின் விளைவுகள் ஐரோப்பிய நாடுகளில் மட்டுமன்றி உலகநாடுகளின் வரலாற்றிலும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

## போருக்கான காரணங்கள்:-

பிரான்சின் பல பகுதிகள் நீண்ட காலமாகவே இங்கிலாந்தின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தன. இப்பகுதிகள் பலவற்றுக்கு ஒவ்வொரு ஆண்டும் இங்கிலாந்து தனது படைகளைப் பல்வேறு நோக்கங்கள் கருதி காலத்துக்குக் காலம் அனுப்பி வந்தது. இவ்வாறு அனுப்பப்பட்ட படைகள் பிரான்சில் கொள்ளைகளில் ஈடுபட்டதுடன் யுத்தத்தில் ஈடுபட்டு நாட்டின் பல பகுதிகளையும் அழித்து வந்தன. மேலும் இப்படைகள் ஐரோப்பியப் படைகளிலும் பார்க்கத் திறமையானவையாகவும், கட்டுக்கோப்புடையவை யாகவும் காணப்பட்டன. இங்கிலாந்தின் தேசிய அமைப்பும் நாட்டுப் பற்றுமே இவ்வாறானதொரு நிலமைக்குக் காரணமெனலாம். ஆனால் இரண்டாம் பிலிப் பிரான்சில் அரசனாகியதும் அப்பகுதிகள் பலவற்றைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். இதனைத் தொடர்ந்து பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றிய பகுதிகளை இங்கிலாந்து மன்னா் மூன்றாம் எா்ட்வேட் மீளவும் கைப்பற்ற முற்பட்டார். அதுமட்டுமன்றி பிரான்சு முழுவதும் தமக்கே உரியதெனவும் உரிமைபாராட்ட முற்பட்டார். இதன் காரணமாக இவரின்காலப்பகுதியில் ஆங்கிலேயரின் பேரவா, ஸ்கொட்லாந்திலிருந்து பிரான்சுக்கு திருப்பப்பட்டதனை உணரமுடிகின்றது.

பிரான்சின் தென்மேற்குப் பகுதியில் அமைந்திருந்த கஸ்கனி (Gascony) என்ற நகரமும் கூட இப்போரினைத் தோற்றுவித்த காரணிகளிலொன்றாகக் கருதப்படுகின்றது. இந்நகரம் இங்கிலாந்தின் பரம்பரைச் சொத்தாக விளங்கி வந்தது. மூன்றாம் எா்ட்வேட் பழைய அஞ்சுவினப் பேரரசின் அழிவுச் சின்னமாகக் கருதப்பட்ட இப்பகுதியினைத் தமது உடமையாகக் கொண்டிருந்தமை பிரான்சிய மக்களின் கவனத்தைக் கவா்ந்தது. இதனால் இப்பகுதியினைக் கைப்பற்றுவதற்கு பிரான்சிய மன்னா் முற்பட்டார். இப்பின்னணியில் ஸ்காா்டியா்களை இங்கிலாந்துக்கு எதிராகப் போராடுமாறு பிரான்சிய மன்னா் தூண்டினாா். இப்பகுதியானது பெருமளவுக்கு மது உற்பத்தி செய்யப்பட்ட பகுதியாக இருந்தமையினால் இங்கிலாந்துக்குப் பெருமளவு இலாபம் கிடைத்து வந்தது. எனவே கஸ்கனியைக் கைப்பற்றுவதற்கு கி.பி 1333இல் பிரான்சிய மன்னா் ஆறாம் பிலிப் படையெடுத்தாா்.

பிரான்சின் வட பகுதியிலிருந்த பிளாண்டா்ஸ் (Flanders )என்ற பகுதியானது சிறப்புமிக்க வணிகத்தளமாகக் கருதப்பட்டது. இங்கு நகரமக்களாட்சி சிறப்பாக இயங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது. இங்கிருந்தே கம்பளித் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களை இங்கிலாந்து பெற்று வந்தமை ஒரு சிறப்பம்சமாகும். இதன் மூலம் இந்நாடு நல்ல வருவாயையும் பெற்று வந்தது. இதனால் வெறுப்புக் கொண்ட பிரான்சு மன்னா் தனது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பிளாண்டர்ஸ் பிரபுக்கு ஆணையிட்டு இவ் வாணிபத்தைத் தடை செய்தாா். பதிலாக இங்கிலாந்தும் தனது ஏற்றுமதியை நிறுத்தியதால் வாணிப நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. இத்தகைய சூழ்நிலை போரை ஊக்குவித்திருக்கும் என்பதில் வியப்பில்லை.

இங்கிலாந்து மன்னா் ஜோன் காலத்தில் இழக்கப்பட்ட பிரான்சுப் பகுதிகளை மீட்பதற்காகவும் இப்போா் நடைபெற்றது. நிலமானிய முறையில் கோமகன்கள் பெருமளவு செல்வாக்குடன் இருந்தமையால் ஐரோப்பாவில் இம்முறை நிலவிய இடங்களில் தமது உடமைகளை இவா்கள் பரவலாக வைத்திருந்தனா். இதன் காரணமாக அவா்கள் திருமண உறவுகளையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தனா். இப்பின்னணியில் இங்கிலாந்து மக்கள் பிரான்சிலும் தமது உடைமைகளைப் பெற்றிருந்தனா். அதாவது இங்கிலாந்தின் இரண்டாம் ஹென்றிக்கு கஸ்கனி (Gascony) பிரிட்டனி (Bretigny), நோா்மண்டி (Nomandy), அக்யூயென் (Aguienne) போன்ற சில பிரான்சுப் பகுதிகள் உடைமையாக இருந்தன. இவற்றின் சில பகுதிகள் இங்கிலாந்து மன்னா் ஜோன் காலத்தில் இழக்கப்பட்டன. ஆகவே அவற்றைப் பெறுவதற்கான முயற்சிகளும் கூட நூற்றாண்டுப் போரை தோற்றுவித்தன எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கொட்லாந்தை தன்னுடன் இணைத்துக் கொள்வதற்கு இங்கிலாந்து பல தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டது. இந் நடவடிக்கைக்கு எதிராகச் செயற்பட்ட பிரான்சு ஸ்கொட்லாந்தின் நடவடிக்கைகக்கு ஆதரவு நல்கியதுடன் இங்கிலாந்துக்கு எதிராகத் தேவையான உதவிகளையும் கூட வழங்கியது. எனவே ஸ்கொட்லாந்தின் உள்விவகாரங்களில் பிரான்சின்தலையீடும் இப்போருக்குரிய காரணங்களிலொன்றாகக் கருதப்படுகின்றது.

இங்கிலாந்தின் அயல்நாட்டு வாணிபமானது ஆங்கிலக் கால்வாய் ஊடாகவே பெருமளவிற்கு நடைபெற்று வந்தது. இவ்வழியில் ஆங்கிலேயர்களுக்கும் பிரான்சுக்காரர்களுக்குமிடையிலே அடிக்கடி மோதல்களும் ஏற்பட்டன. மேலும் பிரென்சு மாலுமிகள் ஆங்கிலேயருக்குச் சொந்தமான கப்பல்கள் பலவற்றைத் தாக்கியும் வந்தனர். இவ்வாறான நிகழ்வுகள் ஆங்கில அரசாங்கத்தைப் போரில் ஈடுபடுமாறு மக்களைக் கேட்பதற்குத் தூண்டிய செயலாக அமைந்தது. அது மட்டுமன்றி மீன் பிடிப்பதிலும் கூட இப்பகுதியில் இரு நாட்டு மாலுமிகளுக்கிடையிலும் நீண்ட காலமாகவே பலத்த போட்டி இருந்து வந்தது.

இங்கிலாந்திற்கும் பிரான்சுக்குமிடையிலே காணப்பட்ட இம்முரண்பாடானது ஏனைய நாடுகளையும் விசேடமாக ஸ்பெயின், நெதர்லாந்து போன்றவற்றையும் கூடப் பாதித்தது. உண்மையில் இப் போரானது பிரான்சின் கொடுங்கோன்மைக் கெதிரான எழுச்சியாக வெளிப்படையாகக் காணப்பட்டாலும் கூடப் போரின் போக்கினை அவதானிக்கின்ற போது அது நிலத்திற்காகவும் பொருளாதார வளர்ச்சிக்காகவும் எல்லாவற்றிக்கும் மேலாக தேசிய சுயகௌரவத்திற்காகவும் நூற்றாண்டுப் போர் நடை பெற்றதனை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

இப்போரானது பிரான்சுக்கு அழிவினைக் கொடுத்திருந்த அதே நேரம் யுத்தக் கைதிகளை ஒப்படைப்பதற்குப் பெற்ற பணத்தினாலும் போரின்போது கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களினாலும் இங்கிலாந்து வளம்பெற்றது. நிலமானியப் படைமுறைப் போரைவிட மிகப்பெரியதாகக் காணப்பட்ட தன்மையினாலேயே நூற்றாண்டுக்கு மேல் நிலைபெறக்கூடிய சூழலை இப்போர் உண்டாக்கியது.

## போரின் போக்கு – முதலாவதுகட்டம்:-

நான்கு கட்டங்களாக நடைபெற்ற இப்போராட்டமானது முதலாவது கட்டம் 1338இல் ஆரம்பித்து 1360இல் செய்யப்பட்ட பிரிட்னி உடன்பாட்டின்மூலம் (Treaty of Beetigny) தற்காலிகமாக முடிவுக்கு கொண்டு வந்தது.

பிரான்சிய மன்னர் நான்காம் பிலிப்புக்குப் பின்னர் அவரின் சகோதரர்கள் ஒருவருக்கும் வாரிசு இல்லாமையினால் பிரான்சின் அரியணை தொடர்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்பநிலையொன்று ஏற்பட்டது. இதன் காரணமாக நான்காம் பிலிப்பின் மருமகன் ஆறாம்பிலிப்புக்கு பிரபுக்களால் அரியணை வழங்கப்பட்டது. அதே நேரம் நான்காம் பிலிப்பின் மகளான இசெப்பெல்லாவின் மகன் முறையான மூன்றாம் எர்ட்வேட் 1337 இல் பிரான்சின் அரியணையை நாடி நின்றார். இத்தகையதொரு சூழ்நிலையானது இரு நாடுகட்கிடையிலும் பகைமையுணர்வினைத்தூண்டி முதலாம் கட்டப் போருக்கான ஏற்பாடுகளைச் செய்தது.

இப்போருக்கான ஆயத்த நடவடிக்கைகளை மூன்றாம் எர்ட்வேட் மேற்கொண்டார். பிளாண்டர்ஸ் (Flanders), கஸ்கனி போன்ற பகுதிகளில் படைகள் இவரால் குவிக்கப்பட்டன. பதிலுக்கு பிரான்சு மன்னரும் படைகளை அனுப்பினார். இவ்வாறு 1338இல் நூற்றாண்டுப்போர் ஆரம்பமாகியது.

இப்போரில் பிரான்சியப் படைகள் ஸ்ளுயிஸ் (Sluys) என்ற இடத்தில் ஆங்கிலப் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. நூற்றாண்டுப் போரின் சிறப்புமிக்க தொரு செயலாக இது கருதப்படுகின்றது. இப்போரில் ஆங்கிலேய வாணிக கப்பற்படை பெருவெற்றி பெற்றுக்கொண்டது. இப்போரின் பின்பாக மூன்றாம் எர்ட்வேட் தம்மை ஆங்கிலேய கடலின் தலைவராக உரிமை கொண்டாடினார். அவர் வெளியிட்ட தங்க நாணயமொன்றில் கப்பலொன்றில் அவர் முடிதரித்து நிற்பதுபோல் காட்டப்பட்டிருந்தது.

எர்ட்வேட்டும் பிலிப்பும் செய்து கொண்ட உடன்பாட்டினை மீறி 1346 இல் மீண்டும் போர் ஆரம்பிக்கப்பட்டது. இது கிறேசிப் போர் (Battle of crecy) எனப்படுகின்றது. எர்ட்வேட் தலைமையிலும் அவரது மகன் கறுப்பின இளவரசரின் தலைமையிலும் ஆங்கிலப் படைகள் போரிட்டன. ஆறாம் எர்ட்வேட்டின் தலைமையில் வந்த பிரான்சியப் படைகள் கிறேசி எனும் இடத்தில் நடைபெற்ற சண்டையில் தோற்கடிக்கப்பட்டன. பின்னர் கலேயிஸ் (Calais) என்ற துறைமுகம் கைப்பற்றப்பட்டது. எனவே கிறேசியை வெற்றி கொண்ட நிகழ்வானது மூன்றாம் எர்ட்வேட்டாலும் அவரது மகன் கறுப்பின இளவரசராலும் ஸ்தாபிக்கப்பட்டு ஆங்கிலேயர்களின் கைகளில் பல வருடங்களாக இருந்த கலேயிஸ் நகரைக் கைப்பற்ற உதவியது.

1355 காலப்பகுதியில் கறுப்பு இளவரசர் தலைமையிலான ஆங்கிலப்படைகள் பிரான்சின் பல நகரங்களைச் சூறையாடின. இதனைப் பிரான்சிய அரசர் ஜோன் எதிர்த்து பொயிடீர்ஸ் (Poitiers) என்ற இடத்தில் எதிர்தாக்குதல் நடத்தினார். இப்போரில் ஜோன் கைதியாக்கப்பட்டார். பிரெஞ்சுக் காரர்கள் இப்போரில் தாங்களாகவே சரணடைந்தனர். அதுமட்டுமன்றி ஜோனையும் சரணடையுமாறு அவர்கள் கூறினர். போரின் முடிவில் செய்யப்பட்ட பிரிட்னி உடன்படிக்கை (Treaty of Beetigny) மூலம் போர் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுடன்பாட்டின்படி பிரான்சு, இங்கிலாந்து தொடர்பாக சில முடிவுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. பிரான்சிய மன்னருக்கு மூன்றாம் எர்ட்வேட் கட்டுப்பட மாட்டார் எனவும் அதே நேரம் பிரான்சின் அரியணைக்கு இங்கிலாந்து மன்னர் உரிமை பாராட்டமாட்டார் எனவும் முடிவானது. அத்துடன் இங்கிலாந்து, கஸ்கனி, அக்யூயென், களேயிஸ் போன்ற பகுதிகளையும் நோர்மண்டி, மெயின், ஆஞ்சே' போன்ற பகுதிகளையும் பிரான்சிடம் கையளிப்பதென உறுதியளிக்கப்பட்டது. மேலும் ஸ்கொட்லாந்தின் பிரச்சினையில் பிரான்ஸ் தலையிடக்கூடாது எனவும் ஜோனை விடுவிப்பதற்கு பெருந்தொகைப் பணம் தரப்படவேண்டுமெனவும் முடிவாகியது.

கிறேசி, பொயிடீர்ஸ் ஆகிய இடங்களில் நடைபெற்ற போர்களில் தோல்வியடைந்த பிரான்சு நாட்டுப்படைகளில் அக்கால சமுதாய முறைகள் பிரதிபலிப்பதனை உணரலாம். இப்படையினர் நிலமானியப் படைமுறை கட்டமைப்புப்படி போருக்காக அழைக்கப்பட்ட ஒரு கும்பலாகவே காணப்பட்டனர். போரியல் சூழ்ச்சித்திறனும் கூட அவர்களிடம் பெருமளவுக்கு இருந்ததாகத் தெரியவில்லை.

## இரண்டாவது கட்டம்:-

நூற்றாண்டுப்போரின் அடுத்தகட்டம் 1369 இல் ஆரம்பமாகியது. பிரிட்னி உடன் படிக்கைமூலம் அக்யுயென் மக்கள் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தனர். இவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்து விடுதலை பெற்றுக்கொள்வதற்கு இம்மக்களுக்கு பிரான்சிய மன்னர் ஐந்தாம் சார்ள்ஸ் பல வழிகளில் உதவினார். இதன் காரணமாக 1369 இல் மீண்டும் போர் ஆரம்பமாகியது.

டுகேஸ்கிளின் என்பவர் உடன்பாட்டினை மீறி ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினார். இங்கிலாந்தின் படைகளுக்கு கறுப்பு இளவரசர், ஜோன்கன்ற் போன்றவர்கள் தலைமை தாங்கினர். டுகேஸ்கிளின் என்ற பிரான்சியத் தலைவர் ஒழுங்குமுறையற்ற நிலமானிய படைவீரர்களை நம்பி இருப்பதற்குப் பதிலாக உரிமை மிக்க படைவீரர்கள், கம்பனிகளை கூலிக்குப்பேசி போருக்குப் பயன்படுத்தினார். ஆங்கிலேயர் கட்டிய கற்கோட்டைகளைத் தகர்ப்பதன் ஊடாக இவர்களை பிரான்சில் இருந்து விரட்டலாம் என இவர் நம்பியிருந்தார். அக்யுயெனின் மேற்குக் கரையிலுள்ள லாரோஷெல்லே (Larochelle) எனுமிடத்தில் 1372 இல் நடைபெற்ற கடற்போரில் பிரான்ஸ் வெற்றியீட்டியது. இதன் படையினர் ஆங்கிலக் கால்வாயைக் கடந்து இங்கிலாந்தின் துறைமுகங்களைத் தாக்கினர். 1375 இல் மேற்கொள்ளப்பட்ட புருயெஸ் உடன்பாட்டின்படி (Treaty of Bruges) பிரான்சின் பகுதிகளுக்கு உரிமைகொண்டாடுவதில்லையென இங்கிலாந்து வாக்களித்தது.

நிலமானியபடை முறை சூழ்ச்சிகளுக்குப் பதிலாக டுகேஸ்கிளின் புதிய முறைகளைக் கையாண்டு தம் நாட்டு மக்கள் விடுதலை அடையுமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். இவ்வாறு இவர் புதிய முறைகளைக் கையாண்டமைக்கு காரணம். கிறேசி, பொயிடீர்ஸ் போர்களில் இவர்களின் நிலமானியப் படைமுறைகளின் செயற்பாடுகள் பயனற்றுப்போனதாலாகும். இங்கிலாந்து மன்னர் இரண்டாம் ரிச்சேர்ட்டின் காலத்திலும் நூற்றாண்டுப் போர் தொடர்ந்தாலும் கருங் கொள்ளை நோய், விவசாயிகளின்கிளர்ச்சி போன்றவற்றினால் பொருளாதாரம் சீர்குலைந்து இருந்ததால் இவர் போரில் ஈடுபடவிரும்பவில்லை.

## மூன்றாவது கட்டம்:-

1413 இல் ஐந்தாம் ஹென்றி இங்கிலாந்தின் அரசராக முடிசூட்டிக் கொண்டார். மூன்றாம் எர்ட்வேட் பிரான்சு நாட்டின் முடிக்கு உரிமை கொண்டாடியதால் இவர் புத்துயிர்ப்பு பெற்றார். இவரின் படைகள் ஹார்பிளயுர்(Harflur) துறைமுகத்தைக் கைப்பற்றின. தொடர்ந்து இரு நாட்டுப்படைகளுக்கு மிடையில் 1415இல் அகின்கோர்ட் (Agincourt) எனுமிடத்தில் கடும்போர் நடைபெற்றது. இப்போரில் பிரான்சின் பல நகரங்கள் ஆங்கிலப்படைகளால் கைப்பற்றப்பட்டன. 1420 இல் ட்ராய்ஸ் எனுமிடத்தில் செய்யப்பட்ட உடன்படிக்கையின்படி (Treaty of Troys) ஹென்றி பிரான்சின் அரியணைக்கு உரியவர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## நான்காவதுகட்டம்:-

இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஹென்றியின் இறப்புடன் நூற்றாண்டுப் போரின் நான்காவது கட்டம் ஆரம்பித்தது. இவர் இறந்ததைத் தொடர்ந்து இவரின் ஒன்பது மாதக்குழந்தையான ஆறாம் ஹென்றி ஆட்சிபீடமேறினார். இக்காலத்தில் டுகேஸ்கிளின் கையாண்டமுறைகளைப் பயின்று பிரெஞ்சுக்காரர்கள் ஆங்கிலேயர்களை எதிர்த்துப்போராடமுற்பட்டனர் இப்படைகளுக்கு டுனாய்ஸ் (Dunois) தலைமைதாங்கினார். ட்ராய்ஸ் உடன்பாட்டின்படி ஐந்தாம் ஹென்றிக்குரிய பிரான்ஸ் அவர் மகன் ஆறாம் ஹென்றிக்குச் சேருதல் வேண்டும். ஆனால் பிரான்சின் ஆறாம்சார்ள்சின் மகனான ஏழாம்சார்ள்ஸ் இவ் ஒப்பந்தத்தை ஏற்காமல் போகவே போர் ஆரம்பமானது. போரின் முடிவில் ஆங்கிலப்படைகள் வெற்றியீட்டின.

பிரான்சுக்கு இக்காலப்பகுதியில் ஒரு கூட்டாளி கிடைத்தாள். இவளது பெயர் ஜோன் ஒவ் ஆர்க் (Jan of Ark) என்பதாகும். இவள் பிரான்சில் தேசிய இன உணர்ச்சிகளையும் மரபுகளையும் ஊற்றெடுக்கச் செய்தாள். ஆன்மீகத் துறையில் இவள் சிறந்து விளங்கியதுடன் ஆங்கிலப் படைகளை பல இடங்களில் தோற்கடித்தாள். இறுதியில் 1431இல் கைது செய்யப்பட்டு ரோயின் (Rougn) எனும் இடத்திலுள்ள சந்தை வெளியில் வைத்துத் தீக்கிரையாக்கப்பட்டாள். தொடந்து 1436இல் ஏர்ராஸ் (Arras) எனுமிடத்தில் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்குமிடையிலே உடன்பாடு ஏற்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சின் மன்னர் ஏழாம் சார்ள்ஸ் 1436 இல் பரீஸை இங்கிலாந்திடமிருந்து கைப்பற்றினார். இறுதியாக 1453 இல் நடைபெற்ற காஸ்ரில்லான் போரில் (Battle of castillon) ஆங்கிலப் படைகள் பயங்கரமாகத் தோற்கடிக்கப்பட்டன. பிரான்சுக்கு வடக்கே இருந்த கலேயிஸ் துறைமுகம் தவிர பெரும்பாலான பகுதிகள் பிரான்சிடம் வந்தன. 1453ஆம் ஆண்டளவில் கஸ்கனி போர்க்களத்தில் ஆங்கிலேய ரல்பேர்ட்டும் (Talbot) அவரின் மகனும் இறந்ததன் மூலம் நூற்றாண்டுப்போர் முடிவுக்கு வந்தது.

## போரின் விளைவுகள்:~

இந் நூற்றாண்டுப் போரின் தாக்கத்தினை இங்கிலாந்து பிரான்சு போன்ற நாடுகளில் மட்டுமன்றி ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் உணர்ந்து கொள்ளமுடிகின்றது. நிலமானிய முறையில் ஓர் சரிவு ஏற்பட்டு பலரின் உயிர்கள், உடமைகள் என்பன அழிந்தன. ஆற்றல் மிக்க தேசிய தன்னுணர்ச்சியையும் நிலமானியப்படைமுறைப் பழக்க வழக்கங்களுக்கு மாறான மக்களாட்சிப் பண்பையும் இங்கிலாந்திற்கு வழங்கியது.

பிரான்சின் பொருளாதாரத்தில் பாரிய சரிவு ஏற்பட்டது. பிரான்சில் நூற்றாண்டுப்போர் நடைபெற்றதனால் பல நகரங்கள் பாதிக்கப்பட்டன. ஆங்கிலேயர்களால் நகரங்கள், கிராமங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இதனால் உற்பத்தி பாதிக்கப்பட்டதுடன் உணவுப்பற்றாக்குறை, பொருளாதாரச் சீரழிவுகள் என்பன ஏற்பட்டன.

இரு நாடுகளுக்கிடையிலும் யுத்தத்தின் காரணமாக அதிகளவு செலவுகள் ஏற்பட்டதால் பணவீக்கம் வளர்ச்சியடைந்து இரு நாடுகளையும் பாதித்தது. இராணுவச் செலவுகள், உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், குதிரைகள் பராமரிப்பு, ஆயுதச் செலவுகள் போன்றன அதிகரித்தன. முதல் நூற்றாண்டினை விட 15ம் நூற்றாண்டில் ஆயுதச் செலவுகள் அதிகரித்தன. இந்நூற்றாண்டில் ஆயுதங்கட்கான தொழில்நுட்பஅபிவிருத்தி, கோட்டை கட்டுதல், சுடுகருவிகள் குண்டு, வீச்சுக்கருவிகள் ஆகியவற்றுக்கான செலவுகள் அதிகரித்தன.

ரோஜாப்பூ யுத்தம் (Wars of Roses) நூற்றாண்டுப் போரின் விளைவாகவே ஏற்பட்டது. இப்போர் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் இங்கிலாந்தில் ரோஜாப்பூ அணிந்து போரிட்டயுத்தம் சென்ற் அல்பேன்சில் ஆரம்பமாகியது. இப்போரின் மூலம் ஆங்கிலேயப் பிரபுக்கள் இழந்த செல்வாக்கினைப் பெற்றுக்கொள்வதற்கு 1455இல் இருந்து இந்த யுத்தத்தினை ஆரம்பித்தனர். இதனால் பெரும் அழிவுகள் ஏற்பட்டன.

இப்போரின் முடிவில் பொதுவாக பிரான்ஸ் கைப்பற்றிக் கொண்ட சகல நிலங்களும் ஒன்றாக இணைக்கப்பட்டன. பிரான்சில் பிரபுக்களின் வலிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைக்கப்பட்டது. அரசர்கள் வரம்பில்லாத அதிகாரங்களை பெற்றதன் காரணமாக பிற்காலத்தில் பிரான்ஸ் ஒரு வல்லரசு நாடாக மாறுவதற்கு இப்போர் வழிவகுத்தது.

தியூடர் முடியாட்சி தோன்றுவதற்கான ஒரு காரணியாகவும் இந்நூற்றாண்டு போர் காணப்படுகின்றது. இப்போரினால் பல பிரபுக்கள் இறந்தனர். இதன் காரணமாக நடுத்தர, பாமரமக்களின் ஆதரவு பெற்ற வலிமையான தியூடர் முடியாட்சி இங்கிலாந்தில் ஏற்பட்டது.

இங்கிலாந்தின் அயல் உறவுக்கொள்கையில் கூட இந் நூற்றாண்டுப் போர் மாற்றத்தை உண்டாக்கியது. கடல் கடந்த நாடுகளில் குடியேற்றங்களை அமைத்து அதுவாணிப நடவடிக்கையில் கவனம் செலுத்த முற்பட்டது. குறிப்பாக அமெரிக்கக் குடியேற்றங்கள் இப்பின்னணியிலே ஏற்பட்டன.

இந் நூற்றாண்டு போரானது ஐரோப்பிய வரலாற்றில் இன்றும் பேசப்படுகின்ற போர்களிலொன்றாகக் கருதப்படுகின்றது. பிரான்சு- இங்கிலாந்து நாடுகட்கிடைலே பாரிய விளைவுகளையும் உண்டாக்கியது. நீண்ட வரலாற்றுக் காரணங்களைத் தன்னகத்தே கொண்டு காணப்பட்ட இந் நூற்றாண்டுப்போரானது நான்கு கட்டடங்களாக நடைபெற்றது. பல விளைவுகளை உண்டாக்கிய இது இரு நாட்டுக்கிடையில் அழிவுகளை உண்டாக்கியதே தவிர வேறு எதனையும் சாதிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் பட்டியல்

Trvelely, AN G. M .1945, Congmana Green and Co,
London, -Newyork - Toronto

Ecton , G. R , ( Editon) , (1969) , ***Renaissance And Re Formation 1300 - 1648***,
Macmilian Publishing Co, New York.

Herzstein (1975) ***Western Civilization***,
Houthton Miff Ein Company, Boston.

Malcolmvale (1988) " ***The Civilzation of Courts and Cities in the north***" , the oxford
Illustratee History of Medieval Europe,
(Editor Georgeholmes),
Oxford University Press.

James Hainey Robinson (1904), ***Reaclings in European History, U.S.A***

அனுமந்தன், கி.ர, (1972)இ ***பிரிட்டன் வரலாறு,*** (பாகம் 2)., தமிழ் நாட்டுப்பாட நூல் நிறுவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பதாண்டுப் போருக்கான காரணங்களும் அவற்றின் போக்கும் - ஒரு நோக்கு

செல்வி ச. சத்தியபாமா
மூன்றாம் வருடம்
வரலாறு சிறப்புக்கலை.

ஜேர்மனியில் கத்தோலிக்க சமயத்தவருக்கும் புரட்டஸ்தாந்து மதத்தின் ஒரு பிரிவினரான கல்வினீயக்கட்சியினருக்குமிடையே கி.பி. 1618 - 1648ற்குமிடையே நடைபெற்ற மிகக் கொடூரமான போரே முப்பதாண்டுப் போராகும். முப்பதாண்டுகள் இப்போர் நடைபெற்றமையால் இப்பெயர் பெறுகிறது. இந்தவகையில் இது 17 ஆம் நூற்றாண்டின் முதற்காற்பகுதியில் ஐரோப்பாவில் நிகழ்ந்த கடைசிப் போராகும். இப் போர் சமயம், அரசியல் ஆகிய இரு காரணங்களால் முக்கியத்துவம் பெறுகிறது. ஐரோப்பாவில் பல போர் முனைகளில் முக்கியமாக ஜேர்மனி ஸ்வீடன், பிரான்ஸ், ஆகிய நாடுகளில் இப்போர் நடைபெற்றது. இந்தப் போரில் கத்தோலிக்கர்களின் சார்பாக ஸ்பெயினும், ஆஸ்டிரியாவும் அதிகம் பங்கெடுத்துக் கொண்டன. கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக சமயப்புரட்சி செய்த புரட்டஸ்தாந்து மதத்தினை வன்முறை மூலம் ஒழிக்க வேண்டுமெனக் கத்தோலிக்க மதம் முயற்சித்தமையும், புனித உரோமப் பேரரசர் ஐரோப்பாவிலிருந்த சிற்றரசர்களை அடக்கி அப்பிரதேசங்களை தனது மேலாண்மையின் கீழ் கொண்டு வர முயற்சித்தல் ஆகிய இரு காரணிகளே ஐரோப்பிய வரலாற்றில் மிகக் கொடிய சண்டையாக விளங்கும் இப்போர் தோன்றுவதற்கான பின்னணிகளாக விளங்கியதெனக் கூறப்படுகிறது. இப்போர் நான்கு கட்டங்களாக நடைபெற்றுள்ளமையையும், இப்போரின் முடிவில் பல விளைவுகளையும் ஜேர்மனி எதிர்கொண்டமையையும் காணமுடிகிறது.

## காரணங்கள்:-

அந்த வகையில் இப்போர் ஏற்படுவதற்கான சமயக் காரணங்களை நோக்கின், ஜேர்மனிய சிற்றரசுகளின் பகுதியில் உள்ள மக்கள் சமய சுதந்திரம் வேண்டும் என 5ஆம் சாள்ஸிடம் கூறினர். அதை ஏற்ற சாள்ஸ் 1555இல் ஜேர்மனிய சிற்றரசுகளுடன் ஆக்ஸ்பர்க் உடன்பாடு ஒன்றைச் செய்து கொண்டார். அதன்படி லூதரின் சமயத்தைத் தழுவுவதற்கு மக்களுக்கு சுதந்திரம் அளிக்கப் பெற்றது. ஆனால் அவ் உடன்படிக்கையில் கல்வினீய சமயத்தைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இந்த உடன்படிக்கைக்கு முரணாக லூதரன்கள் கத்தோலிக்கர்களது கோயில் சொத்துக்களை ஆக்கிரமித்து வந்தனர். இந்த இரண்டு காரணங்களாலும் ஆக்ஸ்பர்க் சமாதான உடன்படிக்கை வேண்டிய பயனை அளிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க மதம் வளர்ச்சியடையத் தொடங்கியதும் புரட்டஸ்தாந்து மதத்தின் வலிமை மிகவும் குன்றியது. கத்தோலிக்க திருச்சபையினர் யேசுசபை, பிரண்ட்சபை போன்ற சங்கங்களை நிறுவிக் கத்தோலிக்க மதத்திற்கு மீண்டும் புத்துயிரளித்தனர். ஜேர்மனியில் கத்தோலிக்க மதத்தின் தலைவராக விளங்கிய பவேரிய நாட்டின் மன்னனான மாக்ஸிமில்லியன் தலைமையில் பவேரிய நாடு முழுவதும் கத்தோலிக்க மதம் பரப்பப்பட்டது. இவன் கத்தோலிக்க மதத்தில் சேர்வதற்கு மறுப்புத் தெரிவித்தோரை நாட்டைவிட்டு வெளியேற்றினான். மற்றும் புரட்டஸ்தாந்து மதம் நிறுவன மயப்படுத்தப்படாதமையால் சில சிற்றரசுகள் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றிக் கொண்டன. கத்தோலிக்க மதத்தின் திடீர் வளர்ச்சியைத் தடுப்பதற்காக மறுப்பாளர்கள் ஒன்றுகூடி "எவான் ஜெலிகல் யூனியன்" என்ற சங்கத்தை 1608இல் நிறுவினார். இதற்கெதிராக கத்தோலிக்கரால் "கத்தோலிக்க சங்கம்" நிறுவப்பட்டது. இவ்வாறான இரு பிரிவினரும் சங்கங்களை நிறுவித் தீவிரமாக மதப்பிரச்சாரங்களை மேற்கொண்டனர். இவ் இரு திறத்தாரின் போக்கும் யுத்தத்திற்கு இயல்பாகவே வழிகோலியது.

முப்பதாண்டுப் போருக்கு வழிவகுத்த வகையில் அரசியல் காரணங்களும் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த வகையில் உரோமானியப் பேரரசன் ரூடோல்பிற்குப் பின்னர் அவனது சகோதரனான மத்தியாஸ் என்பவன் பேரரசானான். இவன் பொஹீமியாவிற்கு மன்னனாகவும் ஏற்கனவே விளங்கியமையால் மிகுந்த வலிமை பெற்றிருந்தான். ஆனால் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த இம்மன்னனைப் பொஹீமியா மக்கள் விரும்பாமையால் ஸ்டிரியா நாட்டு மன்னனான பெர்டினான்ட் என்பவரைத் தங்கள் அரசராகத் தேர்ந்தெடுத்தார்கள். மத்தியாஸ் பல புரட்டஸ்தாந்துக் கோவில்களை அழித்தான். எனவே ஆத்திரமுற்ற பிரேக் நகரமக்கள் பேரரசனை எதிர்க்கத் தொடங்கினர். பொஹிமிய நாட்டின் முடியானது பல புரட்டஸ்தாந்து மன்னர்கள் கைக்கு மாறி இறுதியில் பேலடினேட்டின் மன்னனான பிரெடிரிக்கின் கைக்கு வந்து சேர்ந்தது.

உலகமெங்கும் இப்பொழுது நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. அத்தகைய விழா ஒன்று ஜேர்மனியில் 1617 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. அன்று லூத்தேர் போப்புக்கு எதிராகச் செய்த கிளர்ச்சியின் நூற்றாண்டு விழா ஜேர்மனியில் மூன்றில் இரண்டு பகுதி மறுப்போர் கூட்டத்தில் அப்போது சேர்ந்திருந்தது. புரட்டஸ்தாந்துக்கள் இதை ஒரு மாபெரும் வெற்றியாகக் கருதினார்கள். 1555 ஆம் ஆண்டு நடந்த ஆக்ஸ்பர்க் உடன்படிக்கைக்குப் பிறகு ஜேர்மனியில் சமாதானம் நிலவியது. நாடு வளம் பெற்றது. ஆகையால் மக்கள் குதூகலமாக இந்த விழாவில் கலந்து கொண்டார்கள். இக்காலத்தில் லூதரின் மதம் ஜெர்மனியில் உயிரற்று இருந்தது. கல்வீனியம் உயிர் பெற்ற மதமாக விளங்கியது. ஆரம்பத்தில் கல்வினீயக் கட்சியில் ஒரு சிறு பகுதியினர் மட்டுமே சேர்ந்திருந்தனர். அதற்குத் தலைவரானவர் பேலடினேட் மன்னர் பிரடிரிக் என்பவர். இவ் நூற்றாண்டு விழா நிகழ்வானது முப்பதாண்டுப் போர் ஏற்பட உடனடிக் காரணமாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொஹிமியாவின் தலைநகரான பிரேக் நகரிலிருந்த பேரரசரின் பிரதிநிதிகள் சிலரைப் பொஹிமியா மக்கள் பிடித்துத் தாக்கியதோடு அவர்களை அறுபது அடி ஆழமான அகழியினுள் தள்ளி கொன்றுவிட்டு ஒரு புரட்சி அரசை அமைத்துப் பேரரசை எதிர்த்தனர். இந்நிகழ்வும் முப்பதாண்டுப் போர் ஏற்பட வழிவகுத்தது.

## பொஹிமியா யுத்தம்:- (1618 - 1625)

முப்பதாண்டுப் போரானது பொஹிமியா என்ற இடத்திலேயே முதலில் தோன்றியது. பேரரசனுக்கெதிராக இங்கே புரட்சியொன்று ஏற்பட்டதால் அவற்றை ஒடுக்குவதில் பேரரசன் மத்தியாஸ் தீவிர முயற்சி எடுத்தார். ஆனால் அவர் இறந்து விடவே அவருக்குப்பின் ஸ்ரைரியாவின் சிற்றரசன் பேர்டினன்ட் புரட்சியை ஒடுக்க முயன்றான். கத்தோலிக்க மன்னர்களின் அணியொன்று ஜேர்மனியில் பவேரியாச் சிற்றரசன் மாக்ஸ்மில்லியன் தலைமையில் நிறுவப்பட்டிருந்தது. இம்மன்னன் பேரரசனுக்கு உதவிபுரிய முன்வந்து தில்லி என்ற படைத்தலைவரின் கீழ் ஒரு படை அனுப்பிவைத்தான். தில்லியன் தலைமையிலான பேரரசுப் படையும் பிரெடறிக் தலைமையிலான பொஹிமியாப் படைகளும் "வென் குன்று" என்னுமிடத்தில் சண்டையிட்டன. இச்சண்டையின் போது பிரெட்றிக்கிற்கு அயல்நாடுகளின் உதவி கிடைக்காமையால் பிரெட்றிக் தோல்வியுற்று நாட்டைவிட்டு வெளியேறி நெதர்லாந்துக்குச் சென்று அடைக்கலம் புகுந்தான். பேர்டினன்ட் பொஹிமியாவைக் கைப்பற்றி அங்குள்ள செல்வங்களைச் சூறையாடினான். அவனை எதிர்த்தோரை வாளுக்கு இரையாக்கி எஞ்சியோரை கட்டாயத்தின் பேரில் மதம் மாறச் செய்தான்.

பொஹிமியாவைக் கைப்பற்றிய பேர்டினன்ட் 1621 இல் றைன் நதிக்கரையிலமைந்த பிரெட்றிக்கிற்குச் சொந்தமான பெலாடினேட் என்ற பகுதியை கைப்பற்றி அதன் வடபகுதியை பவேரிய நாட்டு மாக்ஸிமில்லியனுக்குப் பரிசாக கொடுத்தான். பெலாடினேட்டின் தேர்வாளரான பிரெட்றிக்கை நீக்கியதோடு அவர் அரசியற் சமூகத்திலிருந்து விலக்கப்பட்டவரெனவும் அறிவித்தான். இந்நிலையில் புரட்டஸ்தாந்து மக்களுக்கு அயல்நாட்டு உதவிகள் கிடைக்காமையால் பெலாடினேட்டிலும் பலாத்காரமாகக் கத்தோலிக்க மதம் பரப்பப்பட்டது. இப்போரில் பிரெட்றிக்கிற்கு எதிராக தனக்கு உதவி செய்த பவேரிய மன்னன் மாக்ஸி, மில்லியனை பேரரசன் புனித உரோமானியப் பேரரசின் தேர்வாளர்களில் ஒருவராக நியமித்தான். இவ்வாறு முதற்பருவமாகிய பொஹிமியா பருவம் கி.பி 1625இல் முடிவுற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேனியர் யுத்தம்:- (1625-1629)

கத்தோலிக்க மதம் கட்டாயமாகப் புகுத்தப்படுவதை அறிந்த புரட்டஸ்தாந்து மத நாடுகளான இங்கிலாந்து, நெதர்லாந்து, சுவீடன், டென்மார்க் போன்றன பிரெட்றிக்கிற்கு உதவ முன்வந்தன. இந்த நிகழ்ச்சியுடன் இப்போரின் இரண்டாவது கட்டம் ஆரம்பமாவதைக் காணலாம். இருப்பினும் இங்கிலாந்து உள்நாட்டில் ஏற்பட்ட பிரைச்சனை காரணமாகவும், சுவீடன் ரஷ்யாவுடனும் போலந்துடனும் சண்டையிட்டுக் கொண்டிருந்தமையாலும் பிரெட்றிக்கிற்கு நேரடியாக உதவிபுரிய முடியவில்லை. எனவே டென்மார்க் மட்டுமே பேரரசுப்படைகளை எதிர்க்க முற்பட்டது. அக்காலத்து டென்மார்க் மன்னனான நான்காம் கிறிஸ்ரின் பலம்மிக்க ஸ்பெயின் மன்னனான 4ஆம்பிலிப் புரட்டஸ்தாந்து நாடுகளுக்கு எதிராகப் பல போர்களை நிகழ்த்தி வெற்றி பெற்றான். குறிப்பாக டச்சுக்களிடமிருந்து பிறேசிலை மீட்டதோடு கேடீஸ் துறைமுகத்தைத் தாக்கமுற்பட்ட ஆங்கிலப்படையை முறியடித்து பிரொடா என்ற நெதர்லாந்தின் முக்கியமான நகரையும், ஸ்பானியப்படை கைப்பற்றியது. இத்தகைய கத்தோலிக்கப் படையெடுப்பால் புரட்டஸ்தாந்து மதம் அழிந்துவிடுமோ என்று அஞ்சிய கிறிஸ்ரின் பிரிட்டனின் படை உதவியையும் ஜேர்மனிய புரட்டஸ்தாந்துகளின் மேலான ஆதரவையும் கொண்டு ஸ்பெயின் ஆதிக்கத்தை ஒழிப்பதன்மூலம் வட ஐரோப்பியச் சமவெளியைத் தனது மேலாண்மையின் கீழ் கொண்டுவரும் நோக்கில் 1925இல் ஜேர்மனியின்மீது படையெடுத்தான்.

இந்தநிலையில் தில்லிக்கு வேலன்ஸ்ரைன் என்ற பொஹிமியப் பிரபு உதவிபுரிய முன்வந்தமையால் புத்தூக்கம் கொண்ட ஸ்பானியப்படை டென்மார்க் படைகளோடு போரிட ஆயத்தமாகின. இந்த நிலையில் தில்லி (**Tilly**) வேலன்ஸ்ரைன் கூட்டுப்படைகளை லூட்டர் என்ற இடத்தில் மான்ஸ் பீல்ட் என்பவரின் தலைமையில் எதிர்த்த டேனிஷ்படை தோல்வியுற்றது. இதனால் வெற்றிபெற்ற ஸ்பானியப்படை மேலும் முன்னேறி வடமேற்கு ஜேர்மனிக்குச்சென்று அங்கிருந்த பெருந்தொகையான புரட்டஸ்தாந்து மக்களை வாளுக்கிரையாக்கியது. மற்றும் புரட்டஸ்தாந்து ஆதரவு நாடான பிராண்டன் பேர்க் கத்தோலிக்கப் பேரரசின் ஆணைக்குக் கட்டுப்பட்டு டென்மார்க் படைகளுக்கு எதிராகப் போரிட்டது. டேனிஷ் படையைப் பேரரசன் தோற்கடித்த பின் லூபாக் உடன்பாட்டினைச்செய்து திருச்சபையிடமிருந்து 1552ற்குப்பின்னர் கைப்பற்றிய பிஷப்புக்களை டென்மார்க் பேரரசனுக்கு கொடுக்கவும் ஜட்லண்ட் செல்ஸ்விக், கோல்ஸ்டீன் போன்ற பகுதிகளை டென்மார்க் வைத்துக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

## சுவீடனோடு சம்பந்தப்பட்ட யுத்தம்:- (1630 - 1635)

ஆக்ஸ்பர்க் சமாதானத்தின் பின் திருச்சபையிடமிருந்து கவரப்பட்ட சொத்துக்களை மீண்டும் ஒப்படைக்கும் வழக்கத்தைப் பேரரசன் "மீளப்பெறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணை'' என்பதன்மூலம் வெளிப்படுத்தினான். இந்த ஆணையானது கல்வினீயர்களை மட்டுமே பாதிக்கும் என்றிருந்த சுவீடன் லூதர்க்கட்சியையும் பாதிக்கும் என்று அறிந்தது. எனவே சுவீடன் மன்னனான குஸ்தாவஸ் அடோல்ப்ஸ் பால்டிக் கடற்பிராந்தியத்தைத் தனது மேலாண்மையின் கீழ்க் கொண்டுவருவதற்கான பல முயற்சிகளை மேற்கொண்டான். இத்தகைய சுவீடனின் தலையீடே இப்போருக்கான மூன்றாவது கட்டமாகும்.

குஸ்தாவஸ் பின்லாந்தையும் ஸ்தோனியாவையும் முதலில் கைப்பற்றினான். தொடர்ந்து போலந்தின் மீது படையெடுத்து லிவேனியாவைக் கைப்பற்றிய பின் வடஜேர்மனியைத் தாக்கினான். அதாவது ஹோப்ஸ் பேர்க் குடும்பத்தினரின் செல்வாக்கு பால்டிக் பிராந்தியத்தில் பெருகுவதைத் தடுக்கவும் ஜேர்மனியில் பரவியிருந்த புரட்டஸ்தாந்து மதத்தை அழிவிலிருந்து பாதுகாக்கவுமே இவன் இப் போரில் ஈடுபட்டான். இச்சந்தர்ப்பத்தில் ஹோப்ஸ்பேர்க் குடும்பத்தினரின் எதிரியான பிரான்சும் பார்வாடே ஒப்பந்தத்தின் மூலம் சுவீடனுக்கு உதவிபுரிய முன்வந்தது. மற்றும் பிரான்சுடன் பேர்க், சாக்சனி போன்ற நாடுகளின் உதவியினையும் சுவீடன் பெற்றுக் கொண்டது. இதன் பின்னணியில் 1631ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் லீப்சிக்கருகிலுள்ள "பிரீட்டன்பெல்ட்" என்ற இடத்தில் பேரரசுப்படையை எதிர்த்து வெற்றி கண்டான். தொடர்ந்து டேனியூப், மேய், ரைன் ஆற்றங்கரைகளில் இருந்த திருச்சபைக்குரிய இடங்களைத் தாக்கி வெற்றி பெற்றான். இவ் வெற்றியானது கத்தோலிக்கருக்கு பெரும் கலகத்தை ஏற்படுத்தியது. இந்நிலையில் பேரரசுப்படைத்தலைவன் தில்லி லெக் ஆற்றங்கரையில் நடைபெற்ற போரினால் இறந்தான். இவ்வெற்றியின் மூலம் பவேரியாவும் மூனிச் பிரதேசமும் குஸ்தாவஸ் வசமானது. இத்தகைய நிலைமையினால் ஏற்கனவே படைத்தலைவன் பதவியிலிருந்து விலக்கப்பட்ட வாலன்ஸ்ரைனின் உதவியை மீண்டும் பேரரசன் நாடவேண்டியிருந்தது.

1632ஆம் ஆண்டு வாலன்ஸ்ரைன் தலைமையிலான பேரரசுப்படையும் குஸ்தாவஸ் தலைமையிலான சுவீடிஸ்படையும், லட்சன் என்ற சந்தித்தது. இச்சண்டையில் குஸ்தாவஸ் வெற்றி பெற்றான். எனினும் உயிரிழந்தான். வாலன்ஸ்ரைன் மீது சந்தேகம் கொண்ட பேரரசர் அவனையும் 1634இல் கொலை செய்வித்தமையால் இருபக்கப்படைகளும் தலைமையற்று இருந்தன. இருப்பினும் ஒப்பிட்டு ரீதியில் சுவீடிஷ் படை மோசமான நிலையை அடைந்திருந்தது. இத்தகைய நிலையில் சுவீடிஸ் படையைப் பேரரசுப்படை 1634ஆம் ஆண்டு யூலைத்திங்கள் நார்ட்லிங்கன் என்னுமிடத்தில் தோற்கடித்தது. போரின் முடிவில் 1635 இல் பிரேக் என்னுமிடத்தில் நடைபெற்ற உடன்பாட்டின் மூலம் இருபக்கப் படைகளும் போர் நிறுத்தம் செய்து கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்சிய, அவுஸ்திரிய, ஸ்பானிய யுத்தம்:-
## (1635-1648)

இதுவரை சமயப் போராக இடம்பெற்ற இப்போர் இப்போது அரசியற் போராக மாற்றமடைந்தது. இப்போரின் நான்காவது கட்டமாக பிரான்ஸ் தலையிடத் தொடங்கியமை அரசியல் இலாபம் கருதியேயாகும். ஜேர்மனியிலிருந்த ஹோப்ஸ்பேர்க் வம்சம் வலிமை பெற்று விளங்குவதை பிரான்சின் அமைச்சரும் போர்-பான் வம்சத்தைச் சேர்ந்தவனும் ஆகிய ரிச்சல்யு விரும்பவில்லை. கத்தோலிக்க திருச்சபையின் கார்டினலுமான ரிச்சல்யு புரட்டஸ்தாந்தருக்கு பண உதவியையுஞ் செய்து படைத்துணையும் புரிந்து அவர்கள் வெற்றி பெறத்தக்கதாக உதவியளித்தார். இப்பொழுது நேரடியாகவே மறுப்பாளர் இயக்கத்திற்கு உதவி செய்ய முன்வந்து பேர்னாட்டின் தலைமையில் உருவான புரட்டஸ்தாந்துப்படை ஜேர்மனியில் பல வெற்றிகளை பெற்று ஸ்பெயினைத் தாக்கியது. இதுவரை ஒல்லாந்துடனும் ஜேர்மனியில் புரட்டஸ்தாந்து நாடுகளுடனும் சண்டையில் ஈடுபட்ட ஸ்பெயின் மன்னன் நான்காம் பிலிப் இப்போது பெல்ஜியம், நெதர்லாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் மீது தாக்குதல் நடத்தினான்.

பிரான்சை வலியிழக்கச் செய்வதற்காக ஸ்பெயின் ஒரு படையையும் 1637 இல் இன்னொரு படையையும் அனுப்பி வடபகுதியிலும் தென்பகுதியிலும் பல பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டமையால் கண்டே, கோமகன் டூரன்பிரபு ஆகிய தளபதிகளின் தலைமையில் ஒரு சுவீடிஷ் படையை ரிச்சல்யு தயாரித்து கிழக்கு ஜேர்மனியைத் தாக்கும்படி செய்தான். படையெடுப்பில் சுவீடனுக்குப் பல வெற்றிகள் கிடைத்தன. பிரான்சுப் படைகள் ரைன் நதிக்கரையிலும் பெல்ஜிய எல்லையிலும் போரிட்டன. டச்சுக்காரரும் நெதர்லாந்தை ஸ்பெயினிடமிருந்து மீட்கும் நோக்குடன் பிரான்சுக்கு உதவிபுரிந்தனர். பிரான்சுக்கும் ஸ்பெயினுக்குமிடையேயான ஆதிக்கப் போட்டி காரணமாக ஏற்பட்ட இப்போரில் ஸ்பெயினுக்கு எதிராகச் சில கிளர்ச்சிகள் நடைபெற்றன. கோட்டலோனியா, நேப்பிள்ஸ், போர்த்துக்கல் போன்ற நாடுகள் ஸ்பெயின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டன.

1637 இல் பேரரசன் 2ஆம் பேர்டினன்ட் காலமானதும், அவனுக்கு பின் 3ஆம் பேர்டினன்ட் ஆட்சிக்கு வந்தான். இவன் காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கியபோதும் ரிச்சல்யு ஹோம்ஸ்வம்ச நாடுகளை அறவே ஒழிக்க வேண்டும் என்ற கொள்கையை கடைப்பிடித்தமையால் 1642இல் அவன் இறந்த பின்னர் பதவிக்கு வந்த மசாரின் தொடர்ந்தும் இக்கொள்கையைக் கடைப்பிடித்தார். மசாரின் ரோக்ராய் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் ஸ்பானியப்படை படுதோல்வியுற்றது. மீண்டும் 1648 இல் லென்ஸ் என்ற இடத்தில் நடைபெற்ற இன்னொரு போரில் பிரென்சுப் படைகள் வெற்றியீட்டி ஸ்பெயினை வலுவிழக்கச் செய்தன. தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜேர்மனி படையெடுத்து பேரரசுப் படையைத் தோற்கடித்ததோடு பவேரியாவையும் பிரான்ஸ் கைப்பற்றியது 1648ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெஸ்பேலிய உடன்படிக்கை காரணமாக யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

## விளைவுகள்~

ஐரோப்பிய வரலாற்றில் முக்கிய இடம்பெறும் முப்பதாண்டுப் போரானது பல பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்தியது. அதாவது முப்பதாண்டுப்போரினால் ஜேர்மனிய மக்கள் நான்கில் மூன்று பங்கினர் இறந்தனர். இதனால் ஜேர்மனி பெருமளவு பாதிக்கப்பட்டது. மக்கள் வறுமையில் வாடினர். ஜேர்மானிய மக்கள் இப்போரினால் அடைந்த துன்பங்களுக்கு அளவே இல்லை. இதனால் பதினெட்டாவது நூற்றாண்டுவரையிலும் ஜேர்மனி வளர்ச்சி அடைய முடியவில்லை. ஜேர்மனியில் பிரிவினைச் சக்திகள் வலுப்பெற்று ஐக்கிய நாடாக ஜேர்மனி மாறுவது தடுக்கப்பட்டது. ஜேர்மனியில் எண்ணற்ற சிறிய சுதந்திரம் பெற்ற நாடுகள் உருவாகிவிட்டன. மற்ற ஐரோப்பிய நாடுகளில் தேசிய உணர்ச்சி ஏற்பட்டதைப் போன்று இங்கு உடனடியாக ஏற்படாதற்கு இதுவே காரணமாகும். ஆனால் பவேரியா, பிராண்டன்பேர்க் ஆகிய நாடுகள் ஜேர்மனியிலேயே தேசிய உணர்ச்சியையும் ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொண்டன. இரண்டு நுற்றாண்டுகள் காலம் கடந்து தான் ஜேர்மனியில் தேசிய வளர்ச்சி மிகவும் பயங்கரமாக வளர்ச்சியுற ஆரம்பித்தது.

பிரான்ஸ் யுத்தத்தின் பயனாகக் கூடிய கௌரவத்தை பெற்றதுடன் சக்தி மிக்க நாடாகவும் வளர்ந்தது. பிரான்சில் போர்-போர்ன் அரசபரம்பரையினர் இவ்விதமான வலிமை மிக்க அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு ரிச்சல்யு, மஸாரின் ஆகிய பிரதம அமைச்சர்கள் காரணமாக இருந்தனர். பிரான்சின் எல்லைகள் விரிவடைந்ததால் 14 ஆம் லூயி காலத்தில் பல போர்கள் மூண்டன. இதனால் ஸ்பெயினுக்கும் பிரான்சிற்குமிடையில் தொடர்ந்து பல போர்கள் நடைபெற்றன. மற்றும் பிரான்சின் படையெடுப்பில் இருந்து ஜேர்மனியை காக்கும் பொறுப்பு சிற்றரசுகளுக்கு தரப்பட்டது. இதனால் பிற்காலத்தில் உயர்வடைந்த ரஷ்யா, அவுஸ்திரேலியா, இத்தாலித் தீபகற்பம் ஆகியவற்றில் அது தனது ஆதிக்கத்தை ஏற்படுத்த முனைந்தது.

ஐரோப்பாவில் இது வரை காலமும் ஹாப்ஸ்பர்க் அரச பரம்பரையினர் தான் மிகவும் வலிமை மிக்கவர்களாகக் கருதப்பெற்றனர். ஆனால் அவர்களது வலிமையும் ஐரோப்பாவில் அவர்களது செல்வாக்கும் குறையத் தொடங்கிவிட்டது. ஸ்பானிய ஹாப்ஸ் பர்கினர் முப்பதாண்டுப்போரில் பல தோல்விகளைப் பெற்றதால் அவர்களுடைய புகழும் மங்கத் தொடங்கிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் ஜேர்மனிய சிற்றரச அவையில் சுவீடன் இடம் பெற்றது. இதனால் சுவீடனின் ஆதிக்கம் உயர்ந்தது. லூதரினியம், கல்வினீயம் கத்தோலிக்கம் ஆகியவை சமனாக ஏற்றுக்கொள்ளப்பட்டு சமய பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டது. இப்போரின் முடிவில் இழந்த செல்வாக்கை ஒவ்வொரு சமயத்தினரும் மீட்டுக் கொண்டனர். இப்போரினால் மக்களிடையே மனிதாபிமான கருத்துக்கள் பரவின. போரில் காயமடைந்தவர்களுக்கு மருத்துவ வசதி அளித்தல், கொலை, கொள்ளை போன்ற தவறான செயல்களை தடுத்தல் போரில் ஈடுபடாத மக்களை காப்பாற்றல் போன்ற நல்ல கோட்பாடுகள் மக்களிடையே பரவின. ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் இவ் உடன்படிக்கைக்கு பின்னர் சமமானவை என்ற கோட்பாடு வளர்ந்தது. இது தற்கால அரசுமுறை தோன்ற வழிவகுத்தது. இத்தகைய பல விளைவுகளை எதிர்நோக்கவேண்டிய நிலையை ஜேர்மனி பெற்றது. அத்தோடு உண்மையிலேயே ஐரோப்பாவில் எந்தநாடும் இத்தகைய இன்னல் அடைந்ததில்லை. வெஸ்பேலியா உடன்படிக்கையிலிருந்து ஏறக்குறைய ஐந்தாண்டுகாலம் ஜேர்மனி ஐரோப்பாவிலிருந்து மறைந்ததென்றே சொல்லவேண்டும்.

தொகுத்து நோக்குமிடத்து ஜேர்மனியின் முப்பதாண்டுப் போரின் தன்மையானது சமயம், அரசியல் காரணங்களால் ஏற்பட்டு, இப்போர் பொஹிமியா யுத்தம், தேனீயர் யுத்தம், சுவீடனோடு சம்பந்தப்பட்டயுத்தம், பிரான்சிய, அவுஸ்திரிய, ஸ்பானிய யுத்தம் என நான்கு கட்டங்களாக இப்போர் நடைபெற்று ஐரோப்பாவிற்கு பல விளைவுகளையும் பெற்றுக்கொடுத்தது. இப்போருக்கு பின்னரும் ஐரோப்பிய நாடுகளிடையே பல போர்கள் நடைபெற்றன. எனினும் வெஸ்பேலியா உடன்படிக்கைக்கு பின்னர் கத்தோலிக்கர்களும் புரட்டஸ்தாந்துகளும் ஒற்றுமையாகவே வாழ்ந்தனர். இதனாலேயே முப்பதாண்டுப் போரே முதல் அரசியல் போரும் கடைசி சமயப்போரும் ஆகும். எனவே பல காரணங்களால் ஐரோப்பிய வரலாற்றில் முப்பதாண்டுப் போர் முக்கியத்துவம் பெறுகின்றது. என்று கூறின் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் பட்டியல்

ஆரோக்கியசாமி, மு., *ஐரோப்பிய வரலாறு* I, சென்னை : 1960

அனுமந்தன், கி.ர., *பிரிட்டன் வரலாறு* I, சென்னை : 1963

இளையதம்பி, மு., *இலங்கை சரித்திரமும் ஐரோப்பிய சரித்திரமும்*, யாழ்ப்பாணம் : 1969

இராஜகோபால், N.K., *ஐரோப்பிய வரலாறு*
தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் : 1971



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய வரலாற்றில் நெதர்லாந்து விடுதலைப் போர் (1566-1648)

செல்வன். க. ராகவன்
மூன்றாம் வருடம்
வரலாறு சிறப்புக்கலை.

## அறிமுகம்:-

பல்வேறு இன மத மக்களும், பல மொழி பேசுபவர்களும், பல தொழில் புரிபவர்களும் வாழும் இடமாக விளங்கிய நெதர்லாந்து வட கடலில் ரைன்நதி முகத்துவாரத்தில் அமைந்து, வடக்கு, வடமேற்காக வடகடலையும் மேற்கு, தென்மேற்காக பெல்ஜியம் பிரான்ஸ் என்பவற்றையும், கிழக்கு தென்கிழக்குப்பக்கமாக ஜேர்மனியையும் எல்லைகளாக கொண்டமைந்துள்ளது. இந்நாடு கடல் மட்டத்திற்கு கீழ் உள்ளதால் "தாழ் நிலம்" என்று பொருள்பட நெதர்லாந்து எனப்படுகின்றது. இந்த நெதர்லாந்து நாடு கி.பி 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஸ்பானிய பேரரசர் 5ஆம் சாள்ஸின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அவர் மகன் 2ஆம் பிலிப் கி.பி 1555இல் ஸ்பானிய அரசராகி நெதர்லாந்தையும் பெற்றார். கத்தோலிக்கரான பிலிப் நெதர்லாந்தில் புரட்டஸ்தாந்து சமயம் பரவுவதைத் தடுக்க பல முயற்சிகளை மேற்கொண்டார். அதை நெதர்லாந்து பிரபுக்களும், மக்களும் எதிர்க்கவே நெதர்லாந்து விடுதலைப்போர் ஏற்பட்டது. அதன் முடிவில் ஸ்பெயினிடமிருந்து சுதந்திரம்பெற்ற டச்சுநாடு உருவாகியது. சிறியதாயினும் வன்மையுடன் விளங்கிய இவ்வரசு அடுத்துவரும் இரு நூற்றாண்டுகளுக்கு ஐரோப்பாவில் உள்ள முற்போக்கு நாடுகளில் ஒன்றாகவும் பெருஞ்செல்வாக்குடைய நாடுகளில் ஒன்றாகவும் விளங்கியது. டச்சு குடியரசு என்றும் ஒல்லாந்து என்றும் பிற்காலத்திலிருந்து ஹாலாந்து (Holland) என்றும் அழைக்கப்படும் இவ்வரசு ஐக்கிய நெதர்லாந்தாகவும் காணப்படுகின்றது.

நெதர்லாந்து நாட்டில் உள்ள 17 மாகாணங்களும் சமூக பண்பிலும் அரசியற் பண்பிலும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாகவே இருந்தன. வடபகுதியில் இருந்த 7 மாகாணங்களுக்கும் தென்பகுதியில் இருந்த 10 மாகாணங்களுக்குமிடையே நிலவிய இவ்வேறுபாடுகள் இறுதியில் நெதாலாந்தின் வரலாற்றையே பெரிதும் பாதித்தன எனலாம். அதாவது ஆட்சிமுறையில் வடபகுதி மாகாணங்கள் குடியாட்சி அமைப்பினவாகவும் தென்பகுதி மாகாணங்கள், பிரபுத்துவ ஆட்சியமைப்பினவாகவும் விளங்கின. மதரீதியில் வடபகுதி மாகாணங்களில் வாழ்ந்த மக்கள் புரட்டஸ்தாந்து மத பற்றாளர்களாகவும் தென்பகுதி மாகாணங்களில் வாழ்ந்த மக்கள் கத்தோலிக்க மத பற்றாளர்களாகவும் விளங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெதர்லாந்து நாட்டின் வரலாறு கி.மு 58 இல் யூலியசீசர் வென்று அடிமைப்படுத்தியதிலிருந்து தொடங்குகின்றது. உரோமானியர் ஆட்சியில் 250 ஆண்டுகள் இந்நாட்டில் அமைதி நிலவியது. பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டது உரோமானியர் ஆதிக்கம் கி.பி 300ஆம் ஆண்டளவில் குன்றலாயிற்று. பின் இந்நாட்டின்மீது ஜேர்மனிய குடும்பத்தவர் பலர் படையெடுத்து வந்தனர். வடக்கில் பிறிசியன்களும் (Frisions) கிழக்கில் சக்சன்களும் (Saocons) மேற்கிலும் தெற்கிலும் பிராங்குகளும் Franks குடியேறினர்.

இடைக்காலத்தில் இப்பிராங்குகளின் ஆதிக்கம் இங்கு ஏற்பட்டது. கி.பி 800ஆம் ஆண்டளவில் சார்லிமேன் பேரரசின் ஒரு பகுதியாக இது ஆயிற்று. கி.பி 9ஆம் 10ஆம் நூற்றாண்டுகளில் இங்கு பிரான்ஸ் ஜேர்மனி ஆகிய நாடுகளின் ஆதிக்கம் ஏற்பட்டது. பின்பு பிரான்சிற்கு சொந்தமான பேகன்டி பிரபுக்கள் இங்கு ஆதிக்கம் செலுத்தினர். பேகன்டி பிரபுவான 5ஆம் சாள்ஸ் ஸ்பெயின் அரசராக ஆனதும் (1519-1556) நெதர்லாந்தின் 17 மாகாணங்களும் ஸ்பானிய ஆட்சிக்குள் வந்தன. அதன்பின் அவர் மகன் 2ஆம் பிலப் ஸ்பெயின் அரசராகி (1556-1598) நெதர்லாந்தையும் பெற்றார். இவரின் காலத்தில் ஆரம்பித்த நெதர்லாந்து விடுதலைப்போர் 1598 இல் மன்னரான அவர் மகன் 3ஆம் பிலிப் காலத்திலும் தொடர்ந்தது. இறுதியில் 1648 இல் வெஸ்ட் பேலியா உடன்படிக்கை மூலம் டச்சுக்களின் சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டு நெதர்லாந்திற்கு ஸ்பெயின் விடுதலை அளித்தது.

17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட வணிக வளர்ச்சியால் ஐரோப்பாவில் வலிமைமிக்க நாடாக இது மாறியது. பல கடற்பயணங்களை மேற்கொண்டு ஆபிரிக்கா, தென்கிழக்காசியா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் குடியேற்றங்களையும் இவர்கள் ஏற்படுத்தினர். வணிகபோட்டி காரணமாக இங்கிலாந்துடனும் பிரான்சுடனும் போர் செய்யவேண்டி ஏற்பட்டபோதும் 3ஆம் வில்லியம் தன்நாட்டை அந்நியரிடமிருந்து காப்பாற்றினான்.

முதலாம் நெப்போலியன் காலத்தில் பிரான்சின் ஆதிக்கம் நெதர்லாந்தில் ஏற்பட்டது. நெப்போலியன் 1795 இல் நெதர்லாந்துமீது படையெடுத்து அதனைக் கைப்பற்றி பட்டாவியன் குடியரசை நிறுவினான். பின்னர் 1806 இல் இதற்கு ஹாலந்து அரசு (Kingdom of Holland) என பெயரிடப்பட்டது. டச்சுக்காரர் பிரான்சிற்கெதிராக போராடி 1813 இல் பிரான்சுப் படையை விரட்டியடித்தனர். நெப்போலியன் வீழ்ச்சிக்கு பின் கி.பி 1815 இல் ஏற்பட்ட வியன்னா உடன்படிக்கைப்படி நெதர்லாந்தும் பெல்ஜியமும் இணைக்கப்பட்டன. இதனை விரும்பாத பெல்ஜிய மக்கள் விடுதலைப்போரைத் தொடங்கி கி.பி 1830 இல் பிரிந்து சென்றனர்.

கி.பி 1880 தொடக்கம் 1914 வரையான காலத்தில் இந்நாடு மிக வேகமாக பொருளாதார துறையில் வளர்ச்சியடைந்தது. முதலாம் உலகப் போரில் இந்நாடு மிகவும் பாதிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரில் நடுநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகிப்பதாக அறிவித்தது. இருப்பினும் 1940 இல் ஜேர்மனி இதன்மீது படையெடுத்தது. ஜேர்மனிய ஆட்சியில் (1940-1945) இம்மக்கள் மிகவும் அல்லற்பட்டனர். அதன்பின்பும் விரைவாக பொருளாதார முன்னேற்றமடைந்தனர். இதன் தலைநகராக ஆம்சுடர்டாம் அமைந்துள்ளதெனினும் அரசு The Hague இல் இருந்தே செயற்படுகின்றது.

## போருக்கான பின்னணி! காரணிகள்:-

வரலாற்றில் முதலாவது விடுதலைப் போராட்டமாக கொள்ளப்படுகின்ற நெதர்லாந்து விடுதலைப் போராட்டத்திற்கு அரசியல் பொருளாதாரம் சமயம் ஆகியவை சார்ந்த பல்வேறு குறைபாடுகள் நீண்டகால காரணிகளாக அமைந்திருந்தன. இக்காரணிகளால் மக்கள் அதிருப்தியடைந்திருந்த வேளையில் ஸ்பெயின் பிரான்சிடையே நடைபெற்ற போருக்காகச் சென்ற ஸ்பானிய படைகள் நெதர்லாந்தில் தங்கியிருந்தமையும், மக்கள் சார்பாக பிரபுக்கள் விடுத்த அரசமைப்பு தொடர்பான கோரிக்கையை 2ஆம் பிலிப் ஏற்றுக்கொள்ளாமையும் உடனடிக்காரணிகளாக அமைந்துகொண்டன எனலாம்.

5ஆம் சாள்ஸின் மகன் 2ஆம் பிலிப் அரசனாவதற்கு முன்னரே நெதர்லாந்தில் கலகம் ஏற்படுவதற்கு பிரதானமாக இரண்டு காரணங்கள் இருந்தன. அதாவது அந்நாட்டின் அரசியல் முறையையும் மாகாண அதிபதிகளின் உரிமைகளையும் அலட்சியம் செய்து சுயேட்சையான மத்திய அரசாங்க முறையை நிறுவியமையும், சமய சார்பு தன்மையும் அவ்விரண்டு காரணிகளும் ஆகும். அப்படி இருந்தும் சாள்ஸ் சக்கரவர்த்தி அந்நாட்டில் நன்மதிப்புடையவராக இருந்தமையால் அந்நாட்டுமக்கள் அவர் காலத்தில் கலகத்தை உண்டுபண்ணவில்லை.

ஆனால் சாள்ஸ்-இன் மகன் 2ஆம் பிலிப்பு அவ்வித நன்மதிப்பை நெதர்லாந்து மக்களிடம் பெற்றுக்கொள்ளவில்லை. அங்குள்ள மாகாணங்களில் பேசப்பட்ட மொழி ஒன்றையாகுதல் அவர் தெரிந்திருக்கவில்லை. எனவே அவரை அயல் நாட்டவர் என டச்சுகாரர் கருதினர். உலக அனுபவம் இல்லாத அவரால் டச்சுக்களின் உணர்வைப் புரிந்துகொள்ள முடியவில்லை. குறிப்பாக தகப்பனிடம் காணப்பட்ட உபாயத்திறனெதுவும் இவரிடம் காணப்படவில்லை. இவர் கருத்திலும் நடைமுறையிலும் ஸ்பானியனாகவே காணப்பட்டார். பிலிப்பின் இவ்வாறான தன்னியல்பு பண்பாலும் இணக்கவிரோத மனப்பான்மையாலும் ஸ்பெயின் நெதர்லாந்துடன் போரிட நேரிட்டது. மேலும் 2ஆம் பிலிப் தன்னாட்சியின்கீழ் வரும் நாடுகள் யாவற்றிலும் அரசியல் துறையிலும் மதத்துறையிலும் தன்னாதிக்கத்தை நிறுவுவதையும் தன்னாட்சிக்குட்பட்ட நாடுகள் யாவற்றினதும் சுதந்திர கோரிக்கை சுயாட்சி வேட்கை முதலான கோட்பாடுகளை அறவே ஒழிப்பதையும் தனது நோக்காகக் கொண்டிருந்தான். அவற்றை செய்து முடிப்பது தன் பெருங்கடமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் எண்ணியிருந்தான். மேலும் இவ்வாறான பிலிப்பின் மாறுபட்ட குணங்களால் நெதர்லாந்து மக்கள் வெறுப்படைந்தனர்.

மேலும் சாள்ஸின் பின் ஆட்சிக்கு வந்த பிலிப் நெதர்லாந்தைச் சேர்ந்தவர்களை ஒதுக்கிவிட்டு ஸ்பெயினைச் சேர்ந்தவர்களையே முக்கிய பொறுப்புக்களில் அமர்த்தினார். அதுமட்டுமல்லாது ஸ்பெயினின் வளர்ச்சியிலேயே அவர் முற்று முழுதாக அக்கறை காட்டினார்.

பிலிப்பின் மதத்துறைக் கொள்கை காரணமாகவும் நெதர்லாந்தினருக்கு இன்னல்கள் தோன்றின. அதாவது நெதர்லாந்தின் வடபகுதி மாகாணங்களில் புரட்டஸ்தாந்துமதம் பரவியிருந்தது. கத்தோலிக்க பற்றாளரான பிலிப் புரட்டஸ்தாந்து சமயத்தை ஒழித்துவிட வேண்டுமென எண்ணினார். இதற்காக இன்குஷிசன் என்ற சமய நீதிமன்றை அமைத்து அதன் மூலம் நிலங்கள் பறிமுதல், ஆயுள் தண்டனை, தீயிட்டு கொழுத்தல் போன்ற தண்டனைகளை நெதர்லாந்துப் புரட்டஸ்தாந்துகளுக்கு அவர் வழங்கினார்.

அத்துடன் சமய நிர்வாக ஒழுங்கிலும் புதிய திட்டம் வகுக்கப்பட்டது. அதாவது நெதர்லாந்து மூன்று பிசப்மாரின் பகுதிகளாக பிரிக்கப்பட்டு அப்பகுதிகள் அந்நியநாட்டு பிசப்மாரின் மேற்பார்வையில் விடப்பட்டிருந்தன. அவ்விதமான அந்நியரின் செல்வாக்கு நீக்கப்பட வேண்டுமென மக்கள் விரும்பினர். இந்நிலையில் புரட்டஸ்டாண்டுகள், பிரபுக்கள், ஏதேச்சாதிகார, ஆட்சியை வெறுத்தவர்கள் ஆகிய பல்வேறு பகுதியினரில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியது.

ஸ்பானிய அரசின் பொருளாதார சுரண்டலும் இப்போருக்கான நீண்டகால பின்னணியாக கொள்ளப்படுகின்றது. அதாவது ஸ்பெயினின் வாணிப வளர்ச்சிக்காக நெதர்லாந்து வணிகர்மீது பல கட்டுப்பாடுகளையும் வரிகளையும் பிலிப் விதித்தார். ஸ்பானிய அரச பிரதிநிதியான ஆல்வா பிரபு வரித்திட்டம் ஒன்றையும் நெதர்லாந்தில் ஏற்படுத்தினார். அதன் பிரகாரம் எல்லாச் சொத்துக்களிலும் ஒருவீத வரியையும் நிலங்களை விற்பனை செய்வோர் ஐந்துவீத வரியையும் அசைவுள்ள ஆதனங்களை விற்றால் 10 வீத வரியையும் கொடுக்கவேண்டி இருந்தது. புத்திசாதுரியமற்ற வகையில் அமைக்கப்பட்டிருந்த அவ்வரிகளுக்குடன்படின் நாட்டுவருமானம் அனைத்தும் ஸ்பெயினால் கவரப்பட்டுவிடும் என்ற நிலை காணப்பட்டது. மேலும் இவ்வரிகளால் நாட்டில் வர்த்தகம் குன்றத்தொடங்கியது. கடைகள் படிப்படியாக மூடப்பட்டன. தொழிலாளர்கள் வேலையிழந்தனர். அதுமட்டுமல்லாது வரிகள் மூலம் பெறப்பட்ட வருவாய் ஸ்பெயினின் வளர்ச்சிக்காகவே செலவிடப்பட்டது. இவ்வாறு ஸ்பெயினுக்காக நெதர்லாந்து சுரண்டப்பட்டதால் மக்கள் அதிருப்தி அடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மக்கள் மன அதிருப்தி அடைவதற்கான பல நிகழ்வுகள் நடந்தேறிவந்த வேளையில், ஸ்பெயின் - பிரான்ஸ் இடையே நடைபெற்ற போருக்காக சென்ற ஸ்பானியப்படை நெதர்லாந்தில் தங்கியிருந்தமை உடனடிக்காரணியாக அமைந்ததென கொள்ளப்படுகின்றது. அதாவது கி.பி 1559 இல் போர் முடிவடைந்த போதிலும் ஸ்பானிய போர்ப்படை நெதர்லாந்தில் ஒருவருடகாலம் தங்கியிருந்தது. அப்போது அப்போர் வீரர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதுமட்டுமல்லாது, அவர்கள்மீது எதுவித கட்டுப்பாடோ ஒழுங்கோ பேணப்படவில்லை. இவர்கள் அங்கு இருக்குமளவும் மக்களுடைய சொத்துக்களுக்கும் உயிருக்கும் அபாயம் காணப்பட்டது. ஸ்பானிய படைக்கு ஆகும் செலவை நெதர்லாந்து ஏற்கவேண்டுமெனவும் பிலிப் ஆணையிட்டார். அதேசமயம் சமய ஒறுத்தல் கொள்கையும் தீவிரமாக்கப்பட்டது. பிலிப்பின் கொடுங்கோலாட்சிக்கு கத்தோலிக்கரிடமிருந்தும் எதிர்ப்பு கிளம்பியது. புரட்டஸ்டாண்டுகளுடன் அவர்களும் சேர்ந்து கிளர்ச்சி செய்ய தயாரானார்கள்.

இந்நிலையில் நெதர்லாந்திற்கான அரசபிரதிநிதியாக மார்க்கரெட்-ஐ பிலிப் நியமித்தார். அவர் திறமையற்றவராக இருந்தமையால் கிரேன்-வில்லி தலைமையிலான குழுவே நிர்வாகத்தை கவனித்தது. அக்குழு பிலிப்பின் கொடுங்கோலாட்சியை செயற்படுத்தியது. இதனால் நாட்டின் அரசியலமைப்பை மாற்றவேண்டும் என்றும், மக்கள் விருப்பத்திற்கேற்ப பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்றும் கோரிய விண்ணப்பமொன்றை 1566 இல் நெதர்லாந்துப் பிரபுக்கள் மார்க்கரெட்டிடம் அளித்தனர். ஆனால் பிலிப் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்நிலையில் சுதந்திரத்திற்காக போராட துணிந்த மக்கள் அதே ஆண்டே கிளர்ச்சியில் குதித்தனர்.

## விடுதலைப் போரின் போக்கு:~

கி.பி 1566 இல் ஏற்பட்ட கிளர்ச்சி சில ஆண்டுகளில் அடக்கப்பட்ட போதும் தொடர்ந்தும் மனந்தளராது சிறந்த தலைமைத்துவத்தின்கீழ் ஒரு விடுதலைப் போராட்டமாக முன்னெடுத்துச் சென்ற நெதர்லாந்தியர்கள் பல்வேறு இன்னல்களையும் இழப்புக்களையும் சந்தித்தபோதும் உறுதியுடன் போராடி 1648 இல் ஸ்பெயினிடமிருந்து விடுதலை பெற்றனர்.

பிலிப்பின் தீவிர மதக்கொள்கையால் பிரபுக்களும் மக்களும் கத்தோலிக்க திருச்சபைகளை தாக்கினர். 1566 இல் இடம்பெற்ற இந்நிகழ்ச்சியால் திருச்சபைச் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. ஆன்ர்வெர்ப்ட் நகரத்தில் இருந்த மிகப்பெரிய கிறீஸ்தவ ஆலயம் அழிக்கப்பட்டது. இவ்வாறான நிகழ்ச்சியே நெதர்லாந்து வரலாற்றில் "விக்கிரகங்களை உடைத்தெறி வெறிச்செயல்" (I Conodastic Fury) எனப்பட்டது.

கலகக்காரர்களை அடக்க தளபதி ஆல்வா பிரபுவை நெதர்லாந்திற்கு பிலிப் அனுப்பிவைத்தார். ஆல்வா பிரபுவின் தலைமையிலான ஸ்பானிய படைகள் நெதர்லாந்திலுள்ள பல நகரங்களிலும் நிறுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவாளிகளை தண்டிக்க 1568 இல் தொல்லை ஒழிப்பு மன்றத்தை ஆல்வா ஏற்படுத்தினார். கொடிய செயல்களில் ஈடுபட்டதால் இதனை "ஏத்தவெறிமன்றம்" ("Council of Blod") என டச்சுக்கள் அழைத்தனர். ஸ்பெயினுக்கெதிரான அரச துரோகிகளை தண்டிப்பதே இம் மன்றத்தின் பணி. எக்மன்ட், ஹாரன் என்ற இரண்டு டச்சு மாநில சபை உறுப்பினர்கள் இம்மன்றத்தால் மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டனர். இப்பயங்கர ஆட்சியின் விளைவாக ஏராளமான மக்கள் நெதர்லாந்தை விட்டு இங்கிலாந்து பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு ஓடினர். அப்போது ஓரேஞ்சு வில்லியமும் அவனது சகோதரனும் படைதிரட்டி நெதர்லாந்திற்கு படையெடுத்துச் செல்ல முயற்சித்தபோதும் ஆல்வாவின் சேனையால் இருவரும் தோற்கடிக்கப்பட்டனர்.

நாட்டைவிட்டோடிய நெதர்லாந்தியர்கள் பலர் ஒன்று கூடி ஸ்பானியக்கப்பல்களை கொள்ளையடிக்கத் தொடங்கினர். இவர்களையே கடற்பிச்சைக்காரர்கள் (Sea Beggars) என ஏளனமாக குறித்தனர். இக்கடற்பிச்சைக்காரர்கள் 1572 இல் ரைன், செல்டு நதிகளின் கடல்வாயில்களுக்குச் சென்று பிளிப், பிஸ்ளசிங்கு, எங்கூயிசன் முதலான முக்கிய அரண்களை கைப்பற்றினர். கடற்பிச்சைக்காரர்கள் ஆச்சரியமாக ஈட்டிய இவ்வெற்றியே நாற்பதுவருட யுத்தமொன்றிற்கு அடிப்படையாக அமைந்ததுடன் ஸ்பெயினது வலிமையையும் மதிப்பையும் அழிப்பதற்கும் காலாக இருந்ததென்றால் மிகையாகாது.

இந்நிலையில் ஓரேஞ்சு வில்லியமை புரட்சிவாதிகள் தமக்கு தலைமை தாங்குமாறு அழைத்தனர். முன்னர் ஆல்வாவிற்கெதிராக படைதிரட்டியவர் இவர் என்பது நினைவுகூரத்தக்கது. அழைப்பின் பேரில் மீண்டும் போராட்டத்தில் குதித்தார். இவரிடத்தில் காணப்பட்ட நெஞ்சத்துணிவும் நேர்மைத்திறனும் காரியவன்மையும் அரசதந்திர திறனும் சுயநலமற்ற பண்பும் மனிதாபிமானமும் விடுதலைப்போருக்கு உரமூட்டியது.

1573 இல் ஆல்வா - ஐ நீக்கிவிட்டு ரெக்யூசன்ஸ் - ஐ தன் அரச பிரதிநிதியாக பிலிப் நியமித்தார். இவர் ஆரம்பத்தில் சமரசமான முறையில் அங்குள்ள பிரச்சினையை தீர்த்துக் கொள்ள யோசனை செய்தார். ஆனால் பிலிப்பின் அனுமதி இன்றி அவ்விதம் செய்வதற்கு அவருக்கு அதிகாரம் இல்லை. அதேநேரம் கல்வினின் கொள்கையை தழுவியிருந்த வில்லியம் சில கோரிக்கைகளையும் முன்வைத்தார். அதாவது சமய சகிப்புத்தன்மை அளிக்கப்படவேண்டும், வம்சா முறையாக வழங்கி வந்த சலாக்கியங்களும் ஆட்சி முறையும் மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும். ஸ்பானிய துருப்புக்களும் உத்தியோகத்தர்களும் நாட்டினின்று விலகவேண்டும் என்று கோரினார். ஆனால் அவ்வாறு செய்வதற்கு அரச பிரதிநிதிக்கு அதிகாரம் இல்லை. இதனால் மீண்டும் போருக்குத் தயாரானார்கள்.

ரெக்யூசன்ஸ் நெதர்லாந்தில் உள்ள கத்தோலிக்கர்கள் - புரட்டஸ்தாந்துகளிடையே கருத்துவேறுபாட்டை ஏற்படுத்தி அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிப்பதில் வெற்றிகண்டார். எனினும் மனந்தளராத புரட்டஸ்டான்டுகள் கிளர்ச்சியைத் தொடர்ந்தனர். மூகெர், ஹெய்டு ஆகிய இடங்களில் நெதர்லாந்து புரட்சிபடை தோல்வியடைந்ததெனினும் 1574 இல் செய்கரைகளை வெட்டி சமுத்திரத்தை நாட்டுக்குள் பாயவிட்டதன் மூலம் ஒரு வருடமாக முற்றுகையிட்டிருந்த லெய்டனை ஸ்பானியரிடமிருந்து கைப்பற்றிக் கொண்டனர். டச்சுக்களீட்டிய வெற்றிகளில் இது முதலானதாகும்.

1576 இல் ரெக்யூசன்ஸ் இறந்தபின் பல மாதங்களாக ஸ்பானிய படைவீரர்களுக்கு ஊதியம் கொடுக்கப்படவில்லை. இதனால் கோபமுள்ள படைவீரர்கள் ஆன்ர் வெர்ப்ட் நகரத்தையும் மற்றய இடங்களையும் தாக்கி சூறையாடினர்.

வரலாற்றில் "ஸ்பானிய சீற்றம்" (Spanish Fury) என குறிப்பிடப்படும் இச் செயலால் கோபமடைந்த தெற்கு மாகாணங்களும் வடக்கில் உள்ள மாகாணங்களோடு சேர்ந்து ஸ்பானியரை நெதர்லாந்தில் இருந்து துரத்துவதற்கும் சுயாட்சி முறை ஒன்றை நிறுவுவதற்கும் தீர்மானஞ்செய்தனர். கென்ட் (Ghent) பட்டணத்தில் நிறைவேறிய இந்த ஒற்றுமை உடன்படிக்கையே "கென்ட் சமாதானம்" (Pacification of Ghent) எனப்படுகின்றது. ஆனால் மத உணர்ச்சி காரணமாக மூன்றாண்டுகளிலேயே இந்த ஒற்றுமை குலைந்து உண்மையான பல வேறுபாடுகள் வெளிப்பட்டன. அப்போது ஸ்பானிய தளபதியாக இருந்த பாமா அலெக்சாண்டர் அவ்வேறுபாடுகளை தக்கமுறையில் பயன்படுத்தி இருபகுதியினரிடையேயும் பேதத்தை உருவாக்கினார். இவ்வுடன்படிக்கை தொடர்ந்து காப்பாற்றப்பட்டிருக்குமானால் போராட்டம் குறுகிய காலத்திற்குள் முடிவடைந்திருக்கும். கிளர்ச்சியாளரும் அதிக நன்மையை பெற்றிருக்கலாம்.

இந்நிலையில் எல்லா மாகாணங்களையும் ஒன்றாக இணைப்பது சாத்தியமற்ற கனவென உணர்ந்த ஓரெஞ்சு வில்லியம் 1579 இல் அக்கருத்தை கைவிட்டு அதே ஆண்டில் புரட்டஸ்தாந்து இயக்கத்தை சேர்ந்த 7 வட மாநிலங்களை உட்ரெக் என்ற இடத்தில் கூட செய்தார். இதுவே உட்ரெக் ஒற்றுமை எனப்படுகின்றது. இதன்படி 7 மாநிலங்களையும் சேர்த்து டச்சு குடியரசு எனப்பட்டது. உட்ரெக் ஐக்கியத்தின் மூலம் போரை நடத்துவதற்கும் பொதுப்பட்ட ஓர் ஆட்சியின்கீழ் வருவதற்கும் இவ்வேழு அரசுகளும் ஒத்துக்கொண்டன. 7 அரசுகளும் தத்தம் உள்ளூர் அலுவல்களை கவனித்துக்கொள்வதென்றும் அந்நியநாட்டலுவல்களிலும் படை விடயங்களிலும் பொதுவாக உள்ள அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வாட்சியமைப்பு மிக முக்கியமான தொன்றாகும். தற்கால வரலாற்றில் நடைமுறைக்கு வந்த முதல் கூட்டாட்சி அமைப்பு இதுவேயாகும். அமெரிக்க ஐக்கிய அரசுகளின் ஆட்சி அமைப்பின் முன்னோடியாக இவ்வாட்சியமைப்பு விளங்கிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெதர்லாந்தியரிடையே ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற வில்லியமை கொலை செய்ய வேண்டுமென தீர்மானித்த பிலிப் "தேசதுரோகி" என குற்றம்சாட்டி அவரை உயிருடனோ பிணமாகவோ கொண்டுவருபவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும் என 1580 இல் அறிவித்தார். 1581 இல் ஹேக் நகரில் கூடிய வட மாநில பிரதிநிதிகள் டச்சுவிடுதலைப் பிரகடனத்தை வெளியிட்டனர். 1584இல் பேகண்டியை சேர்ந்த சமயவெறியன் ஒருவனால் வில்லியம் கொல்லப்பட்டார். நெதர்லாந்து அந்நேரம் சுதந்திரத்தை பெற்றுவிடவில்லை. என்றாலும் வில்லியம் அதைப் பெறுவதற்கு வேண்டிய அத்திபாரத்தை இட்டுவைத்தான். எனினும் புரட்சிவாதிகள் தமக்கு தலைவன் இல்லாது தத்தளித்தனர். இக் குழப்பமான நிலையைப் பயன்படுத்தி ஸ்பானிய அரச பிரதிநிதியான அலெக்சாண்டர் அன்ர்வெர்ப்ட் நகரை (1585) கைப்பற்றினான்.

இந்நிலையில் தாம் தனித்து நிற்பது ஆபத்தென உணர்ந்த அந்நாட்டு தலைவர்கள் பிரான்சின் அரசனாகிய 3ஆம் ஹென்றியிடம் ஆளும் அதிகாரத்தை கொடுத்தபோது பிரான்சின் உள்நாட்டு நிலைமை திருப்திகரமானதாக இல்லாமையால் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் இங்கிலாந்தின் அரசி எலிசபெத்தை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டனர். ஸ்பானியாவிற்கு சொந்தமான பகுதியாகையால் அதை ஏற்று சண்டையில் ஈடுபட அவர் விரும்பவில்லை. ஆனால் படைத்துணையை அளித்தான். நெதர்லாந்து அவ்வுதவியால் பெரும் பயனடைந்ததாக கூறமுடியாது. எனினும் சாதகமான நிலை தோன்றியது. அதாவது அந்நேரத்தில் இங்கிலாந்திற்கு படை அனுப்புவதா நெதர்லாந்தை அடக்குவதா என்ற சிக்கலான நிலை பிலிப்பிற்கு ஏற்பட்டது. இங்கிலாந்தை கைப்பற்றவேண்டுமென தீர்மானம் செய்த பிலிப் ஆமதா என குறிப்பிடப்படும் போர்க்கப்பற் கூட்டம் ஒன்றை 1588 இல் இங்கிலாந்திற்கெதிராக அனுப்பி வைத்தார். ஆங்கில துப்பாக்கி வீரர்களால் இப்பெருங்கப்பற்படை தோற்கடிக்கப்பட்டது. இத்தோல்வி இன்னலுற்ற தெதர்லாந்து வாசிகளுக்கு பெருவிமோசனமளித்தது.

ஆமதா தோல்வியுடன் போர் நின்றுவிடவில்லை எனினும் அதற்கு பின் ஐக்கிய நெதர்லாந்தை முற்றிலும் அழிப்பதென்பது முடியாத காரியமாயிற்று. அதற்குப்பின் ஸ்பெயின் இங்கிலாந்துடனும் பிரான்சுடனும் வன்மையான போரில் ஈடுபட வேண்டியும் ஏற்பட்டது. இப்போர்களினால் வீரத்துடனும் சுய நம்பிக்கையுடனும் போராடிய டச்சுக்களுக்கெதிராக போதிய படையினரை பிலிப் அனுப்பமுடியாதிருந்தது. மேலும் டச்சுகாரர் பக்கத்தில் இப்பொழுது ஓரெஞ்சு வில்லியத்தின் மகன் மொரிசு தலை சிறந்த வீரனாக ஒளிர்ந்தான். இவன் 1597 இல் தோண்கவுற்று எனுமிடத்தில் நடந்த பெரும்போரில் ஸ்பானியரை தோற்கடித்தான். இதேவேளை டச்சுக்கப்பற்படை ஸ்பானிய கப்பற்படையிலும் பார்க்க சிறந்ததாக வளர்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான சூழ்நிலையில் 1598 இல் 2ஆம் பிலிப் இறக்க அவர் மகன் 3ஆம் பிலிப் அரசரானார். இவரின் காலத்திலும் நெதர்லாந்து தொடர்ந்து போராடியது. டச்சுகாரர் அளவு காரிய சித்தி வேட்கை கொண்டிருந்த ஸ்பானியர் இறுதியில் தோல்வியை ஏற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டது அவ்வாறாயினும் ஐக்கிய நெதர்லாந்தின் சுதந்திரத்தையும் அது தனிப்பட்டதொரு அரசியல் நிறுவனமாக இயங்குகின்றதென்ற உண்மையையும் ஏற்றுக்கொள்ள ஸ்பெயின் மறுத்தது. ஆயினும் 1609 ஆம் ஆண்டினிறுதியில் நெதர்லாந்துடன் 12 ஆண்டுகால இடைக்கால போர் நிறுத்தத்தை 3ஆம் பிலிப் செய்துகொண்டார். அக்கால வெல்லை முடிவதற்குள் முப்பதாண்டுபோர் தொடங்கியது. அப்போரின் முடிவில் ஏற்பட்ட வெஸ்ட்பேலியா உடனபடிக்கையில் (1648) டச்சுக்களின் சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டு நெதர்லாந்திற்கு ஸ்பெயின் விடுதலையளித்தது.

## வெற்றிக்கு சாதகமான பின்னணிகள்:-

நெதர்லாந்தின் வடக்கு மாகாணங்களாகிய ஐக்கிய மாகாணங்களில் காணப்பட்ட சுதந்திர வேட்கையும் சமய பற்றுமே பல இன்னல்களுக்கூடாக விடாமுயற்சியுடன் சண்டை செய்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள உதவியாயிருந்தன. நெதர்லாந்து நாட்டின் மக்களின் தலைவனாகிய வில்லியமும் அவனுடைய மகன் மொரிசும் சிறந்த தலைவர்களாக விளங்கினர். இவைகளை விடவும் அவர்களுடைய வெற்றிக்கு பல சாதகமான பின்னணிகள் அமைந்திருந்தன.

அதாவது கடல்மட்டத்திற்கு கீழாக நாடு அமைந்திருந்தமையால் கடலணையை உடைத்து கடல்நீரை உட்புக விடுவதன்மூலம் பகைவர்களுக்கு அதிக இடர்பாடுகளை ஏற்படுத்த முடிந்தது. ஸ்பானியரை கலைப்பதற்காக பல தடவை இவ்வாறு செய்து நாட்டுள் வெள்ளத்தை பாயவிட்டனர். அந்நிய நாடுகளிடமிருந்து பெற்ற உதவியும் இவர்களுடைய வெற்றிக்குதவின. மேலும் ஐரோப்பாவில் உள்ள புரட்டஸ்தாந்து நாடுகளில் இருந்து போர் வீரர்கள் சமய ஆர்வத்தினால் சண்டையிற் பங்குபற்றினர். பிலிப் நெதர்லாந்திற்கு அனுப்பிய அரச பிரதிநிதிகள் அவனுடைய முழு நம்பிக்கையையும் பெற்றிராதபடியால் அவர்கள் தங்களுடைய திறமையையும் பலத்தையும் காட்ட முடியாமற் போயிற்று. ஆமதா தோற்கடிக்கப்பட்டதனால் ஸ்பானியாவின் ஆர்வம் குறைந்தது. ஸ்பெயின் நாடு நிதி முழுவதையும் வேறுபல காரியங்களில் செலவழித்துவிட்டதால் படையினர் அடிக்கடி படிபெறாதிருந்தனர். இதனால் அவர்களும் கலகம் செய்தனர். அத்தோடு ஐரோப்பாவின் எல்லாப் பாகங்களிலும் ஸ்பெயின் பெருந்தொந்தரவில் தன்னை மாட்டிக்கொண்டிருந்தது. டச்சு போராட்டம் முடிவதற்குள் பிரான்சுடனும் இங்கிலாந்துடனும் போர் செய்யவேண்டி நேரிட்டது. இவ்வாறான பல சாதகமான காரணிகளின் பின்னணியில் நெதர்லாந்து வாசிகளின் தளராத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத நம்பிக்கையும் அதனாலுண்டான வீர உணர்வும், விடாமுயற்சியும் நெதர்லாந்தை ஸ்பெயின் ஆட்சியிலிருந்து பிரித்தெடுத்து சுதந்திரமாக நிறுவுவதற்கு ஆதாரமாக நின்றன எனலாம்.

## போரினால் ஏற்பட்ட விளைவுகள்:-

இரண்டாம் பிலிப்பின் சமயக்கொள்கையால் உருவான டச்சு சுதந்திரப் போர் அவருடைய மரணத்துடன் முக்கியத்துவம் இழந்து வெஸ்ட்.:.பேலியா உடன்படிக்கை மூலம் முடிவுக்கு வந்ததெனினும் அதனால் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டுள்ளன. அதாவது போரின் முடிவில் சுதந்திரம் பெற்ற டச்சு குடியரசு தோன்றியது. அதனால் கத்தோலிக்கத்தின் எதிர்நடவடிக்கையும் ஐரோப்பாவில் வல்லரசாகத் திகழ்ந்த ஸ்பெயினின் வலிமையும் பெருந்தோல்விகண்டன. அத்தோடு மத, அரசியல் சுதந்திரங்களை அடிப்படையாகக் கொண்ட புதியமுறை அரசு தோன்றியது. இவ்வரசு 7 மாநிலங்களைக் கொண்ட கூட்டாட்சியாக செயற்பட்டது. ஒவ்வொரு மாநிலமும் தனியுரிமை, தனிசபை, தனி ஆளுனர் ஆகியன பெற்றிருந்தது. மாநில நிர்வாகத்தை சட்டசபை பிரதிநிதிகள் கொண்ட ஸ்டேட்ஸ் ஜெனரல் என்ற பாராளுமன்றம் நிர்வகித்தது. இதுவே 17ஆம் நூற்றாண்டு ஐரோப்பாவில் முற்போக்கு நாடாக விளங்கியது. இங்கிலாந்திலும் பிரான்சிலும் எதேச்சதிகாரம் தலைதூக்கியபோது சுதந்திர வீரர்கள் நெதர்லாந்திலேயே புகலிடம் பெற்றனர்.

அந்நியர் ஆதிக்கமும் அடக்குமுறையும் அதிகரிக்கும்போது தேசிய உணர்ச்சியும் விடுதலை வேகமும் வலுப்பெறுவதும் அடக்கப்படுபவர்கள் பொங்கியெழுந்து போராடி விடுதலை பெறுவதும் வரலாறு தரும் உண்மை. இந்த உண்மையே 16ஆம் 17ஆம் நூற்றாண்டில் நெதர்லாந்திலும் நடந்தேறி இருப்பதை காண்கின்றோம். அதாவது பிலிப்பின் ஆட்சியில் அதிருப்தியடைந்து கிளர்ச்சியில் ஈடுபட்ட மக்கள் கொடூரமான முறையில் அடக்கப்பட்டார்கள். ஆனால் ஓரினத்தின் தேசிய - சுதந்திர உணர்ச்சியை எந்த சக்தியாலும் நசுக்கிவிடமுடியாதென்பது வரலாறாயிற்றே...! அதன்படி ஓரெஞ்சு வில்லியம் என்ற சிறந்த தலைவனின் கீழ் செயற்பட்ட புரட்சிவாதிகளை ஆதிக்கவாதிகளால் எளிதில் அடக்கிவிடமுடியவில்லை. காலப்போக்கில் புரட்சித்தலைவன் கொல்லப்பட்ட போதும் புரட்சிவாதிகள் தமது இலட்சிய பாதையில் தொடர்ந்து பயணித்தனர். இறுதியில் மொரிசு என்பவன் தலைமையில் போராடி ஸ்பெயினிடமிருந்து நெதர்லாந்து மக்கள் சுதந்திரம் பெற்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்பட்டியல்

ஆரோக்கிய சாமி, மு., - ***ஐரோப்பிய வரலாறு,*** சென்னைப் பல்கலைக்கழகம்:1960.

இளையதம்பி, மு., ***இலங்கை சரித்திரமும் ஐரோப்பிய சரித்திரமும்*** (கி.பி 1453 - 1796), யாழ்ப்பாணம்:1964.

கிரான்ற், ஏ.,சே ***ஐரோப்பிய வரலாற்று சுருக்கம்***, இலங்கை:1958.

சிராஜுதீன்., ***ஐரோப்பிய வரலாறு*** (கி.பி 476-1789), வெற்றிப்பதிப்பக வெளியீடு, ஆர்க்காடு.

***வாழ்வியற்கழஞ்சியம்***, தொகுதி. II, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதச்சீர்திருத்தத்தில் மாட்டின்லூதர்

செல்வி த. தவதர்சினி
மூன்றாம் வருடம்
வரலாறு சிறப்புக்கலை.

மறுமலர்ச்சிக்காலத்தில் தோன்றிய பகுத்தறிவு இயக்கத்தால் சமயத்துறையிலுங்கூட, பல மாற்றங்கள் ஏற்பட்டன. ஐரோப்பிய மக்களிடையே சீர்திருத்த மனப்பான்மை தோன்றியது. அந்த ஆர்வத்தால் அவர்கள் திருச்சபையிலும், கிறிஸ்தவ சமயக் கோட்பாடுகளிலும் கூட பல மாற்றங்களைச் செய்ய வேண்டுமென விரும்பினார். இவ்விதமான ஆர்வம் குறிப்பாக ஜேர்மனிய மக்களிடம் அதிகமாகத் தோன்றியது. இதனால் சமயப்புரட்சிக்கு மிக முக்கியமான காரணங்களாக இருந்தவர்கள் ஜேர்மனியர்களே என்று கூறப்படுகின்றது. அவர்களுள் மிக முக்கியமான சீர்த்திருத்தவாதியாக விளங்கியவர் மாட்டின்லூதராவார். இவர் திருச்சபைக்கு எதிரானவரல்லர். ஆனால் திருச்சபையிலும் மற்றும் கிறிஸ்தவக் கோட்பாடுகளிலும் கூட பல மாற்றங்களைச் செய்ய வேண்டுமென விரும்பினார். தேவாலயத்துக்குரிய அதிகாரத்தையும், அதனுடைய போதனைகளையும் ஆராய்ந்து திருச்சபை அனுசரித்து சில முறைகளை அவர் கண்டித்து திருத்தங்களை செய்ய விரும்பினாரேயொழிய கத்தோலிக்க சமயத்திலிருந்து விலகுவதோ அல்லது பிளவை உண்டாக்குவதோ அவரது நோக்கமல்ல. இருப்பினும் இதன் விளைவாக உரோமன் கத்தோலிக்க மதம் இதுவரை ஐரோப்பாவில் பெற்றிருந்த ஆதிக்கத்தன்மையை இழந்தது. அது இருந்த இடத்தில் பல கிளைகள் தோன்றியதுடன், மிக முக்கயமாக லூதாரால் ஏற்படுத்தப்பட்ட புரட்டஸ்தாந்துமதம் செல்வாக்குப் பெற்றுக் கொண்டதெனலாம்.

ஜேர்மனியில் நூற்றுக்கணக்கான சிறுநாடுகள் இருந்தன. ஒவ்வொரு சிற்றரசரும் ஒவ்வொரு விதமாக ஆட்சிசெய்து வந்தார்கள். மேலும் லூதர் போன்ற சீர்திருத்தவாதிகளும் அங்கேதான் தோன்றினார்கள். இந்த சீர்திருத்தவாதிகள் சமய ஆதிக்கத்தையும் போப்பாண்டவரின் தலையீட்டையும் அவருடைய கட்டளைகளையும் மற்றும் அவர் செய்யும் நியமனங்களையும் முறையாகக் கண்டிக்கத் தொடங்கினர். இடைக்காலத்தில் போப்பாண்டவரின் போக்கைக் கண்டிக்கும் அளவிற்கு மக்களிடம் துணிச்சல் ஏற்படவில்லை. ஆனால் மறுமலர்ச்சி தோன்றியதன் பின்னர் அவர்களுக்கு இவ்விதமான துணிச்சல் இயற்கையாகவே தோன்றியது. பகுத்தறிவு வளர்ச்சி ஏற்பட்டதன் காரணமாக அவர்கள் எதையும் அறிவுக்கண்ணோட்டத்தில் பார்த்தனர். எதையும் அவர்கள் அப்படியே நம்பத்தயாராக இல்லை. இவ்வாறான சூழ்நிலையில் மாட்டின்லூதருடைய சீர்திருத்த இயக்கம் தோன்றியதால் ஐரோப்பிய சமய வளர்ச்சியிலே ஒரு புதிய வளர்ச்சி ஏற்பட்டதெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயப்புரட்சி தோன்றக்காரணம்.

ஐரோப்பிய நாடுகளிலுள்ள திருச்சபைகளைப் பெரும்பாலும் போப்பண்டவரே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். சமயத்தின் பெயரால் ஆதிக்கம் செலுத்துவதும் அதனால் எற்படுகின்ற சலுகைகள் காரணமாக அரசியலில் தலையிடுவதும் மற்ற நாடுகளில் அரசர்களை மிரட்டுவதும் அதிகமாகிவிட்டது. இதைவிட திருச்சபைகளில் குற்றங்குறைகள் மிகுந்திருந்தன. நிர்வாக ஊழல்கள் அதிகமாகியிருந்தன. திருச்சபை அதிகமான சொத்துக்களுக்கு உரிமையுடைதாகக் காணப்பட்டது. இதனால் குருமார் பக்தியுடையவர்களாகவும் துறவிகளாகவும் வேடம் தரித்துக் கொண்டு துறவறவாழ்க்கையை கைவிட்டு உலகியல் வாழ்க்கையிலும் என்று நடித்தனர். அவர்களுடைய தனிப்பட்டவாழ்க்கை மிகவும் மட்டமாக இருந்தது இவ்விதமான குறைபாடுகள் கத்தோலிக்க திருச்சபையில் மிகுந்துவிட்டதன் காரணமாக கத்தோலிக்க மதத்தின் மீதிருந்த நம்பிக்கையை பலர் இழந்தனர். இவ்விதமான சூழலில் தான் மதச்சீர்திருத்த இயக்கம் தோன்றியது. மறுமலர்ச்சிக்கு முன்னரும் யோன்வைக்கிளிப், யோன்கஸ் போன்றோர் சமயசீர்திருத்தத்தில் ஈடுபட்டபோதும் அவை அவ்வக்காலங்களில் அழிந்து விட்டன. இவற்றை மனதில்கொண்டு திருச்சபையை சீர்திருத்தும் நடவடிக்கைகளை ஈராஸ்மஸ் (1465-1536) மாட்டின்லூதர் (1483 - 1546) போன்றோர் துணிச்சலுடன் முன்னெடுத்துச் சென்றார்கள்.

## மாட்டின் லூதரும் மதப்புரட்சியும்:-

கி.பி 1483ஆம் ஆண்டு ஜேர்மனியில் உள்ள ஐசன் பெனில் என்ற இடத்தில் ஏழைக்குடும்பத்தில் மாட்டின் லூதர் பிறந்தார். இவர் கல்லூரி வாழ்க்கையை முடித்து பட்டப்படிப்பை தொடங்கும் பொழுதுதான் கிறிஸ்தவ மதத்தின் மீது பற்றிக் கொண்டு, ஒரு மதகுருவாக வரவேண்டுமென்று விரும்பி ஒரு திரிதுறவியாக மாறினார். நரகத்தின் பயங்கரத்திலிருந்து விடுபட வேண்டுமெனின் கடவுளின் ஆதரவைப் பெறவேண்டும். அதைவிடுத்து வேறுவழியில் முடியாதென்று அவர் நம்பினார். இவருடைய மடாலயத்திற்கு ஒரு நாள் சாக்ஸனி நாட்டு மன்னர் பிரடறிக் வில்லியம் விஜயம் செய்த பொழுது இவர் அறிமுகமாகி விட்டன்பேக் பல்கலைக்கழகத்தில் அரிஸ்டோர்டலினுடைய நூல்களை கற்பிக்க அனுமதிக்கப்பட்டனர். இவர் தனது மாணவர்களிடம் அரிஸ்டோட்டலின் நூல்களைக் கற்பதில் பயனில்லை என்று அதற்குப்பதிலாக வேதபாடங்களையும் மற்ற மகான்களுடைய நூல்களையும் படிக்க வேண்டும் என்று கூறியதோடு கடவுள் நம்பிக்கை, செய்த பாவங்களை உணர்ந்து மனம் திருந்துதல், பற்றியெல்லாம், ஓயாமல் எடுத்துரைப்பார். மாணவர்களுக்கு இவருடைய பிரச்சாரம் பிடிக்கவில்லை. ஆனால் எதிர்பாராதவகையில் 1517இல் நடந்த நிகழ்ச்சி இவரை மக்கள் புரிந்து கொள்ளவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்பீற்றர் கோயிலை புதுப்பித்துக்கட்ட நிறையப்பணம் தேவைப்பட்டது. இதனால் போப்பாண்டவர் பலவழிகளை பின்பற்றி நிதி திரட்டுவதில் முனைந்திருந்தார். போப் 10ஆம் லியோ என்பவரும் 1513இல் பதவியேற்றார். அவர் காலத்திலேயே நிறைய நிதியை திரட்டிக்கோயிலை நிர்மாணித்துவிட வேண்டுமென்று விரும்பினார். அதற்காக பாவமன்னிப்புச்சீட்டுக்களை விற்றுப் பணம் திரட்டுவதில் ஆர்வம் காட்டினார். ஜேர்மனியில் நிதி திரட்டுவதற்கு டெட்ஸல் (Jetz ,el) என்ற டொமினிக்கன் சபையைச் சார்ந்த ஒரு துறவியை அனுப்பினார். பாவமன்னிப்பு என்பது கத்தோலிக்க மதகுருக்கள் பாவம் செய்தவர்களுக்கு வழங்கும் மன்னிப்பு என்பதும், பாவமன்னிப்பு பெறாது ஒருவன் இறந்துவிட்டால் அவனுடை மனம் சாந்தியுறாது வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் என்பதும் கிறிஸ்தவர்களின் கருத்தாகும். பாவம் மன்னிக்கப்படும் முறை கேலிக்கூத்தாக இருந்தது. வெளிப்படையாக இது மக்களைக் கடவுள் பெயராலும் மதத்தின் பெயராலும் ஏமாற்றவதைப் போன்றிருந்தது. சிந்திக்கத் தெரிந்த எந்த மனிதனுக்கும் இதனுடைய நோக்கம் உண்மையில் விளங்கும் பாவங்களை மன்னிக்க கொடுக்கப்படும் சீட்டுக்கள் இவையல்ல. அவை பணம் சம்பாதிக்கும் வழியே என்பதை தெரிந்துகொள்ள அதிகநேரம் பிடிக்கவில்லை. மதத்தின் பெயரால் செய்யப்படும் எந்தச் செயலையும் நியாயமானது, என்று கண்மூடித்தனமாக கீழ்ப்படியும் மக்களைத் தவிர, பகுத்தறிவு படைத்தவர்கள் இந்த முறையை கண்டிக்க முன்வந்தார்கள். அவர்களில் முக்கியமானவர்தான் மாட்டின் லூதன் என்றழைக்கப்படும் தத்துவப் பேராசிரியர்.

மாட்டின் லூதர் கிறிஸ்தவ மதக் கொள்கைக்கும் டெற்ஸல் விற்கும் பாவமன்னிப்புச் சீட்டுக்கும் எவ்வித தொடர்பும் இருப்பதாககத் தெரியவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி 95 நியாயங்கள் கொண்ட ஓர்அறிக்கையை வெளியிட்டார். இவ்விளக்கங்களை அவர் கோயில் வாசற்படியிலேயே ஒட்டவைத்து இதைப்பற்றி விவாதிக்க விரும்புவோர் அவரிடம் வரலாம் என்று கூறினார். பாவமன்னிப்புக்சீட்டு விற்பது முறையான செயலல்ல என்பது அவரது கருத்தேயொழிய கிறிஸ்தவ மதத்திற்குரியதல்ல என்பதை தெரிந்து கொள்ள மறுப்பவர்கள் கிறிஸ்தவ மதத்தையே சரியாகப் புரிந்து கொள்ளாதவர்கள் என்று கூறினார். இவ்விதமான கருத்துக்களை அவர் எடுத்துக் கூறியதால் அவருக்கு திருச்சபையைத் தாக்க வேண்டுமென்றே அல்லது பெரிய பரபரப்பை ஏற்படுத்த வேண்டுமென்றோ எண்ணமில்லை. இவ்விளக்கங்களையும் அவர் இலத்தீன் மொழியில்தான் வெளியிட்டிருந்தார். அதனால் படித்தவர்கள் மட்டுமே புரிந்து கொள்வதற்கு எழுதியதாக கருதவேண்டியிருந்தது. பாமர மக்களுக்காக, அவர் அவற்றை எழுதாதவிடத்தும் அவர் நினைத்ததற்கு மாறாக அனைவரும் இதைப் பற்றி விவாதிக்க வந்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டின் லூதருடைய விளக்கத்தின்படி பாவம் செய்தவர்கள் உண்மையிலேயே பிராயச்சித்தம் செய்து மனம் திருந்தி விடுவார்களேயானால் அதற்கு மன்னிப்பு கோரமாட்டார்கள். கடவுளின் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் விரும்பமாட்டார்கள். தொடர்ந்து பாவம் செய்வபர்களும் கடவுள்மீது உண்மையான நம்பிக்கை வைக்காதவர்களும் மனம் திருந்தாதவர்களும் தான் வெளித்தோற்றத்தில் மயங்கி இவ்விதமான பாவமன்னிப்புக்களை விலைக்கு வாங்கி ஆறுதலடைகிறார்கள், எனக்கூறினார். இவ்விதமாக பாமரமக்கள் பாமரமக்களையே ஏமாற்றிப் பணம் பறிக்கிறார்கள் என்று உண்மையில் போப்பிற்கு தெரிந்தால் அந்தக் கோயிலை அவர் சுட்டுப்பொசுக்கி சாம்பலாக்கி விடுவாரே தவிர ஏமாற்றிய பணத்திலிருந்து பீட்டரின் கோயிலை புதுப்பிக்க முற்படமாட்டார் எனவும், கூறியதோடு போப் பாண்டவர் நிறைய பணம் படைத்தவராயிற்றே, அப்பணத்தைக் கொண்டு பீட்டர் ஆலயத்தை புதுப்பித்துக் கொள்ளலாமே? ஏழையின் பணத்தை பெற்றுக் கொண்டுதானா இக்கோயிலை புதுப்பிக்க வேண்டும். ஏன் தருமமாகவே இந்த நற்காரியத்தைச் செய்யக்கூடாது? என்று பல்வேறு கருத்துக்களால் லூதர் அக்கால மக்களிடமும் போப்புக்களிடமும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

லூதருக்கு முன்னர் சமயச்சீர்திருத்தவாதியாக இருந்தவரும் சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருந்தவருமான ஈராஸ்மஸ்ஸின் கருத்துக்கள் லூதருக்கு மேலும் வளர்ச்சியடைய வழிகாட்டியது. இருந்தபோதிலும் ஈராஸ்மஸினைவிட மாட்டின்லூதர் சுறுசுறுப்பாகவும் செயற்பாடுகளில் ஈடுபட்டதாலும் குறிப்பிட்டளவு வெற்றியை பெற்றுக் கொண்டார். ஈராஸ்மஸ், 'மனிதன் முன்னேற்றத்தை நோக்கி செல்பவன்'. அவன் மனப்பான்மையை நன்கு பக்குவப்படுத்திக் கொள்ளவதற்கு போதுமான கல்வியறிவையும் அளித்தால் அவனுடைய வளர்ச்சி மேலும் மேம்படும். அதைவிடுத்து திருச்சபையையும் போப்பின் ஆதிக்கத்தையும் தாக்குவதால் குழப்பம் ஏற்படுமே தவிர ஊழல்கள் மறையாது என்றார். ஆனால் லூதரின் கருத்துப்படி திருச்சபை திருந்தாவிடின் மக்களினுடைய நல்ல செய்கைகளில் பொய்யான நம்பிக்கையை வளர்த்து அவர்களுடைய மனத்தை பாழ்படுத்திவிடும் அதனால் உடனடியாக திருச்சபை திருத்தப்பட வேண்டும். என்று கூறினார். ஈராஸ்மஸ் திருச்சபையில் சீர்திருத்தங்கள் ஏற்படும் வரை காத்திருந்தார். ஆனால் லூதர் சிறிது அவசரப்பட்டு விட்டார். எனவே ஈராஸ்மஸ் போலவே லூதரும் திருச்சபையை தூய்மைப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களையே வெளியிட்டார்.

## போப்புக்கு லூதர் விடுத்த சவால்கள்:-

லூதர் ஜேர்மானிய அரசர்களுக்கு விடுத்த வேண்டுகோளாவது "திருடர்களுக்கு தூக்குத்தண்டனையும் சூறையாடுவர்களை கத்தியால் குத்திக் கொன்றும் கடவுள் பக்தில்லாதவர்களை நெருப்பிலிட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டிக்கின்றோம். ஏன் மதத்தின் பெயரால் ஏமாற்றிவரும் குருமார்களையும் போப்புக்களையும் தண்டிக்க எவ்விதமான ஆயுதங்களையும் பயன்படுத்தக்கூடாது? நாள் குறித்தாகி விட்டது. உரோமின் கோபத்தை நான் வெறுக்கின்றேன். அதனுடன் எக்காலத்திலும் நான் தொடர்போ சமாதானமோ செய்து கொள்ள விரும்பவில்லை. என்னுடைய கருத்துக்களை அவர்கள் தண்டிக்கட்டும். ஆனால் போதிய நெருப்பு இருந்தால் நானுங்கூட போப்பின் கட்டளைகளை பகிரங்கமாக கண்டித்து நெருப்பிலிட்டு கொழுத்தத்தயங்க மாட்டேன்" இந்த உணர்ச்சிமிக்க அறிக்கை ஜேர்மானிய மக்களை தூண்டியதுடன் போப்புக்களிற்கு எதிராக மக்களை கிளர்ச்சி செய்யக்கூடிய மனநிலையையும் தூண்டியது. உதாரணமாக போப்பின் பரம எதிரியான Ulrich von Hutten என்பவர் செல்வாக்குமிக்க பிரபு. இவர் லூதரை ஆதரிக்க முன்வந்தமையை குறிப்பிடலாம்.

அதுமட்டுமன்றி இடைக்கால பிற்பகுதியில் திருச்சபையில் காணப்பட்ட ஊழல்களை வெளிக்கொணர ஏராளமான அறிக்கைகளை வெளியிட்டார். அதில் ஜேர்மானிய பிரபுக்களுக்கான அறிக்கை மிகவும் பிரசித்திபெற்றது. அதில் லூதர் கூறுவதாவது "திருச்சபையை சீர்திருத்தம் செய்யும் குரல் போர்ப்பின் காதுகளில் ஏறுவதில்லை. அதற்குக்காரணம் அவரைச்சுற்றியுள்ள மூன்று சுவர்கள்" என்கிறார். அதாவது

01. மதகுருமார்கள் தனிச்சிறப்பும் சலுகைகளும் பெற்ற வகுப்பினராக உள்ளனர். அவர்கள் அரசர்களையும் விட மேம்பட்டவர்கள் என்று கருதிவருகின்றனர். ஏனெனில் அவர்கள் தவறு செய்தாலும் அவர்களைத் தண்டிக்க அரசர்களுக்குக் கூட அதிகாரமில்லை.

02. திருச்சபைக்குழுவினரை விட போப் மிகவும் மேன்மை வாய்ந்தவரென்றும் அவரைத்திருத்தசபையின் எந்தப்பிரதிநிதிக்கும் அதிகாரமில்லை.

03. ஏதாவது சமயசம்பந்தமான வேறுபாடுகள் ஏற்படின் வேதபாடங்களிலிருந்தும் கூட உதாரணங்கள் காட்டி அவரை மாற்ற முடியாது ஏனெனில் அவர் சொல்வதே வேதவாக்கு என்று கருதவேண்டும் அவரிடுவதே கட்டளையாக பாவிக்கப்படவேண்டும். என்பவையாகும்.

எனவே இவ்விதமான மனப்போக்குள்ள போப்புகளுக்குச் சவாலாக திருச்சபையில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் என்று கூக்குரலிட்டார் லூதர். அது எப்படி முடியும்? எனவேதான் லூதர் குற்றம் புரிகின்ற குருமாரைத் தண்டிக்கும் அதிகாரத்தைப் பெறுவது நியாயமானதும் இயற்கையானதும் கூட என அறிக்கைகள் விடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லூதருடைய அறிக்கையில் அவருடைய சமயம் சமூகப்புரட்சியை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டுமென்று கூறுகிறார். மடாலயங்களை நிறுவுவதைக் குறைத்துக் கொண்டு சோம்பேறிகளாக திரியும் மடாதிபதிகளை வெளியே விரட்ட வேண்டும் என்றும், மடாதிபதிகளுங்கூடத் திருமணம் செய்து நல்வாழ்க்கை நடத்த வழிசெய்து கொடுக்க வேண்டுமென்றும், இந்த மடாலயங்களையெல்லாம் பள்ளிகளாகவும் மருத்துவமனைகளாகவும் மாற்றவேண்டும் என்றும், பல்கலைக்கழகங்கள் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் ஒரு நீண்ட பட்டியலைக்கொடுத்தார். இக்குறைகளை தனித்து சமயத்திற்காக மட்டுமல்ல, சமுதாயத்தின் நல்வாழ்விற்காகவும் அவர்களின் அமைதிக்காகவும் கூட இச்சீர்திருத்தங்களை செய்யவேண்டும் என்று கூறினார். இவர்விடுத்த 2ஆவது அறிக்கையில் உரோமன் கத்தோலிக்க மதத்தின் புனிதர் சடங்குகளுக்காக ஏற்பட்ட குருப்பட்டம் தரித்தல், விவாகம் புரிதல், அபிஷேகம் செய்தல் ஆகியவற்றை அவர் நிராகரித்தார். மக்கள் ஒன்றாகக்கூடி செபிக்கும் முறையை புதுப்பித்தார். மதகுருமார்களுடைய வேலையே வேதபாடங்களை போதிப்பதாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறினார். இவ்விதமாக மாட்டின் லூதருடைய மதப் புரட்சி இடைக்காலபிற்பகுதிக்குரிய திருச்சபையை தூய்மைப்படுத்துவதற்கு பல அறிக்கைகளை விடுத்ததுடன் வெற்றிகரமாகவும் செயற்பட்டது.

## லூதர் எதிர் நோக்கிய சாவால்கள்:-

இவ்விதமாக இவர் போப்பிற்கும் திருச்சபைக்கும் எதிராக எழுதியும், பேசியும் பிரச்சாரம் செய்தும் வந்ததால் போப்பிற்கு கோபம்வந்தது. இதனால் 1520இல் லூதரும் அவருடைய ஆதரவாளர்களும் மதத்திலிருந்து விலக்கப்பட்டார்கள். லூதர் இவ்வேளையில் உரோமானியத்திருச்சபையிலிருந்து பிரிந்து செல்லவேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கவில்லை. தொடர்ந்தும் ஆன்மீக பௌதீக ஒழுங்குகளுக்கு உட்பட்டு நடப்பதையே விரும்பிவந்தார். 1517 - 1521 வரையான காலத்தில் இடம் பெற்ற பல்வேறு அம்சங்களும் நடவடிக்கைகளும் அவரை ஒருசீர்திருத்தவாதி என்ற நிலையிலிருந்து மாற்றி ஒரு புரட்சியாளன் என்ற நிலைக்கு இட்டுச் சென்றது. லூதர் தனது கருத்துக்களை சமகால மனிதவாத சிந்தனைகளின் தலைவராக விளங்கிய ஈராஸ்மசிற்கு அனுப்பியிருந்தார். ஈராஸ்மஸ் அவற்றை ஆதரித்திருந்தார். இது லூதருக்கு தனது கருத்துகள் புராதன நவீன சிந்தயாளர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. என்ற எண்ணத்தை வலுவடையச் செய்தது.

இவ்வேளையில்தான் போப் 10ஆம் லியோ லூதரை தனது கருத்துக்களை திருத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆணையைப் பிறப்பித்தார். லூதர் தனது கருத்துக்களில் மாற்றத்தை ஏற்படுத்த விரும்பவில்லை. போப்பின் ஆணையை 1520 டிசம்பரில் பகிரங்கமாக தீக்கிரையாக்கினார். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போப் 1521 மேயில் லூதரை திருச்சபையிலிருந்து விலகும் ஆணையை பிறப்பித்தார். பேரரசனும் லூதரை கண்டித்து அடக்கவிரும்பிய போதிலும் அப்பகுதியில் பரவலாகக் காணப்பட்ட ஆதரவால் அவ்வாறு செய்ய முடியாமல் போயிற்று. ஆயினும் லூதரை விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். லூதர் பேரரசின் சபைக்கு ஊர்வலமாக சென்றார். அவர் சென்ற பாதைகலெல்லாம் அவருக்கு பெரிய உபசாரம் வழங்கப்பட்டது. அரசவையின் முன்னால் லூதர் தனது கருத்துக்களை வாபஸ் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். லூதர் மறுத்ததால் அவருக்கு எவ்வாறு தண்டனை வழங்கலாம் என பல கருத்துக்கள் எழுந்தது. இறுதியில் மே 26இல் விடுக்கப்பட்ட கட்டளைப்படி லூதர் சட்டத்திற்கு எதிரானவர் என பிரகடனப்படுத்தப்பட்டார்.

சாக்சனிய மாகாணத்தின் தேர்வாளன் லூதருக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான உத்தரவாதத்தை வழங்கியிருந்தார். உடனடியாக லூதரை அழைத்துச் சென்று தனது மாகாணத்திலிருந்த வாட்பேக் மாகாணத்தில் பாதுகாத்துக் கொண்டார். ஒரு வருடம் அவர் அங்கேயே வாழ்ந்தார். லூதரின் பாதுகாப்பிற்கு அக்காலத்தில் மக்களின் மத்தியிலிருந்தே ஆதரவும் அங்கீகாரமுமே காரணமாயிருந்தது. முன்னைய சமய சீர்திருத்த வாதிகள் தமது கருத்துக்களுக்காக பல்வேறு கொடுமைகளைச் சந்தித்தனர். ஆனால் லூதரின் கருத்துக்கள் தக்க தருணத்தில் வெளிவந்த காரணத்தால் வெற்றிகரமாக முன்னேற்றமடைந்தது. லூதர் தான் தனித்திருந்த காலப்பகுதியில் திருச்சபையின் வரலாற்றினை நன்கு கற்று தனது கருத்துக்களை தெளிவாக வற்புறுத்தும் வாய்ப்பினை பெறுவதற்குரிய தகுதியை தான் பெற்றிருந்தார். அதன்படி போர் கிறிஸ்தவ உலகின் தலைமைத்துவத்தை தாங்குவதற்கு தகுதியுடையவரல்லர் என்பதை வலியுறுத்தினார். போப்புக்களின் வழிகாட்டலின் கீழ் கிறிஸ்தவ மரபுகள் தவறாக கொண்டு செல்லப்படுகின்றன எனவும் எடுத்துக் காட்டுகிறார். அத்துடன் மனிதனுக்கு கிடைக்க வேண்டிய ஆன்மீக விடுதலையை பெற்றுக்கொள்வதில் குருமார் அவசியம் என்ற கருத்தையும் எதிர்த்து நின்றார்.

இவற்றின் பின்னணியிலே புதியதோர் கோட்பாட்டினை லூதர் முன்வைத்தார். அதுவே Jetification by faith. நம்பிக்கையின் மூலம் இறைவனை அடையலாம். அல்லது ஆன்மீக விடுதலை பெறலாம் என்பதும் ஒவ்வொரு மனிதர்களும் தமது நம்பிக்கைக்கு பொறுப்பாளிகள் என்பதும் இதன்மூலம் வலியுறுத்தப்பட்டது. இவற்றை ஒவ்வொரு மனிதனும் புரிந்து கொள்வதற்கும் அறிந்து கொள்வதற்கும் பைபிளை அவர்களுக்கு தெரிந்த மொழியில் மொழிபெயர்ப்.புச் செய்து லூதர் வெளியிட்டார். மனிதனது பொறுப்பில் இத்தகைய விடயங்களை முழுமையாக விட்டமை மதவரலாற்றிலேயே திரிபுகளும் மீள்பிரிவுகளும் தொடர்ந்தும் இடம் பெறுவதற்கு வழிவகுத்தது. லூதர் தனது கோட்பாட்டில் பல தவறுகள் இருப்பதை பிற்காலத்தில் நேரடியாகவே உணர்ந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லூதர்பெற்றுக்கொண்ட வெற்றிகள்:-

இக்காலகட்டத்தில் லூதரது சிந்தனைகளின் அடிப்படையில் எழுச்சி பெற்ற அநாவஸ்டிக்கன் என்ற அமைப்பினில் பைபிளைத்தவிர வேறு எதையுமே அதிகாரம் உடையதாக ஏற்றுக்கொள்ளவில்லை. லூதரின் கருத்துக்களினால் மதக்காரணங்களினாலும் ஜேர்மனியில் இரு குடியியல் யுத்தங்கள் நடந்தன. 1522, 1523இல் இடம்பெற்றது 1ஆவது குடியியல் யுத்தம். இதன்போது நிலப்பிரபுக்கள் தம்மீது ஆதிக்கம் செலுத்திய சற்றுப்பெரிய சிற்றரசர்களுக்கு எதிராக போர்க்குரல் எழுப்பினர். அவர்கள் புதிய சமயமே தமது பிரதேசத்தின் சமயமாக இருக்குமென பிரகடனப்படுத்தினர். 1523, 1524இல் Peasents War நடந்தது. குடியானவர் ஆட்சியிலிருப்பவருக்கு எதிராக போராட்டத்திலிறங்கினர். இவ்வாறாக இடம் பெற்ற மதக்குடியியல் சார்பான அநாஜக சிந்தனைகளும் போராட்டங்களும் லூதரை பழமை பேணுகின்ற போக்கிற்கு இட்டுச் சென்றது.

லூதரின் பிற்பட்டகால வளர்ச்சியை எல்லோரும் ஏற்றனர். எனக்கூற முடியாது. ஈராஸ்மஸ் லூதரின் விவாதக் கொத்தினை அங்கீகரித்தபோதும் பிற்பட்டகால மாற்றங்களை அங்கீகரிக்கவில்லை. மறுபுறத்தில் ஜேர்மனியல் ஒரு தேசிய அரசன் இல்லாது போனமை காரணமாக பல்வேறு பிளவுகள் தொடர்ந்தும் இடம் பெறுவதற்கு லூதரிச சிந்தனைகள் வழிவகுத்தன. இறுதியில் லூதரின் சிந்தனைகள் குறிப்பிட்டளவு சிற்றரசர்களையும் மத்தியதர வகுப்பினரையும் கவர்வதாக மட்டுமே அமைந்தது. அவர்கள் லூதரிச சமயத்தை பின்பற்றுவதன் மூலம் பல்வேறு பொருளாதார இலாபங்களை பெற்றுக் கொண்டார்கள். சிற்றரசர்கள் மதத்தின் பெயரால் கத்தோலிக்க மத நிறுவனங்களின் சொத்துக்களை தமதாக்கிக் கொண்டனர். வர்த்தக வகுப்பினர் தமது நடவடிக்கைகளை, லூதரிச சிந்தனைகளை அங்கீகரித்தனர் என்று கூறினாலும் கல்வினியனின் மதமும் திட்டவட்டமான கருத்துக்களை வெளியிடப்பட்டது. எவ்வாறெனினும் லூதரின் செயற்பாடுகள் திருச்சபையில் காணப்பட்ட பிரச்சினைகளை திருத்தியது மட்டுமல்லாமல் லூதரிச சமயம் தனது காலத்தில் முழுவளர்ச்சி கண்டது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் பட்டியல்

இராஜகோபால் N.K., **ஐரோப்பியவரலாறு,** தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம்:1971.

நல்ல பெருமான், சு., **சிந்தனைவகுத்தவழி,** சென்னை: 1965.

**வாழ்வியற் களஞ்சியம்.,** தொகுதி. 5, தஞ்சாவூர்: 1987.

ஜோசப்.செ., நா., **நாகரீக வரலாறு,** சென்னை: 1974.

ஆரோக்கியசாமி, மு., **ஐரோப்பிய வரலாறு,** சென்னை:1961.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டி சுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயம்

செல்வன் வி. அருட்செல்வம்
இரண்டாம் வருடம்
புவியியல் சிறப்புக்கலை.

ஈழத்தில் பழமையும் பெருமையும் வாய்ந்த பல சிவாலயங்கள் உள்ளன. இவற்றிலே சில இடிந்தும் சிதைந்தும் போய்விட்டன. தான்தோன்றி ஈசுவரர் என்ற பெயரில் இரு பிரசித்திபெற்ற ஆலயங்கள் இருக்கின்றன. மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயம், ஒட்டிசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயம் என்னும் இவ்விரண்டு கோயில்களும் சைவநன்மக்களின் பெருமதிப்பைப் பெற்ற தேசத்துக் கோயில்களாகத் திகழ்கின்றன. இவற்றுள் ஒட்டிசுட்டான் தான்தோன்றிஈஸ்வரர் ஆலயமானது முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளத்திலிருந்து 15மைல் தொலைவிலும் முல்லைத்தீவிலிருந்து 15மைல் தொலைவிலிலுள்ள ஒட்டிசுட்டான்என்னும் இடத்தில் அமைந்துள்ளது. இவ்வாலயமானது சேக்கிழார் காலத்தில் (10ஆம்11ஆம் நூற்றாண்டு) தோன்றியிருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுவர்.

இவ்வாலயத்தின் தோற்றம்பற்றி மரபுவழிக்கதையொன்று காணப்படுகிறது. அக்கதையின்படி யாழ்ப்பாணத்தின் இடைக்காடு எனும் ஊரைச்சேர்ந்த வீரபத்திரர் எனும் சைவ வேளாளரும் அவரது இருபிள்ளைகளும் வன்னிக்குச் சென்று குடியேறினர். இவர்களும் இவர்களது சந்ததியினரும் வாழ்ந்த இடம் தற்போது ஒட்டிசுட்டானில் இடைக்காடு என அழைக்கப்படுகிறது. வீரபத்திரர் காடுவெட்டித்திருத்தி குரக்கன் பயிரிட்டார். குரக்கனை வெட்டி எடுத்த பின் குரக்கன் ஒட்டுக்களுக்கு நெருப்பு வைத்தார். அப்படி எரிக்கும் போது ஒரு கொன்றை மரத்தடியில் ஒட்டுக்கள் எரியாது பச்சையாக இருப்பதைக் கண்டார். அவ்விடத்தை சுத்தம் செய்ய நினைத்து மண்வெட்டியால் வெட்டினார். அவ்வாறு வெட்டிக் கொண்டிருக் கொண்டிருக்கையில் அவ்விடத்தில் காணப்பட்ட கல்லொன்றில் அவரது மண்வெட்டி வெட்டப்படவே அக்கல்லிலிருந்து குருதி பாயத் தொடங்கியது. இம்மர்மத்தை அறியாத அவர் அப்பகுதியினை ஆட்சி புரிந்த வன்னி அரசனிடம் கூறினர். அதைப்பார்த்த அரசன் அவ்விடத்திலே கோயில் அமைத்து வழிபடும்படி பணித்தான். அதன்படி கொன்றையடிப்பிள்ளையார் எனும் பெயரில் சிறுபந்தல் இட்டு வழிபாடு மேற்கொள்ளப்பட்டது. பிள்ளையார் எனக்கருதப்பட்ட இக்கல் சிறுநாட்களில் வளர்ந்து லிங்கமாக மாறியது. தானாகவே தோன்றிய லிங்கமாகையால் தான்தோன்றிஈஸ்வரர் எனப் பெயரிடப்பட்டது. ஒட்டுக்கள் எரியாத இடத்தில் தோன்றியதால் வேகாவனேஸ்வரர் என்றும் வேகாவனப்பெருமான் எனவும் பெயர்களைப் பெற்றுக் கொண்டார். ஒட்டுக்கள் சுட்டதனாலேயே பிரபல்யமான அந்த இடம் ஒட்டிசுட்டான் எனப் பெயர் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்துக்கு குளக்கோட்ட மன்னன் திருப்பணி வேலைகள் செய்ததாகவும் மரபுக் கதைகள் குறிப்பிடுகின்றன. கி.பி433 ஆம் ஆண்டுக்குச் சமமான சாலிவாகன சகாப்தம் 358ஆம் வருசத்திலே மநுநீதிகண்டசோழன் மகன் குளக்கோட்டன் கோணேசர் சிவாலயத்தினைத் தரிசித்து தம்பலகாமத்தில் அழிவுற்றுகிடந்த கோணேசர் ஆலயத்தை பழுது பார்ப்பித்தான் என யாழ்ப்பாண வைபமாலை கூறுகிறது. கோணேசர் கல்வெட்டு திருகோணமலை கோணேசர் ஆலயத்திருப்பணி வேலையில் குளக்கோட்டன் ஈடுபட்டான் எனக் கூறுகிறது. யாழ்ப்பாண மன்னனான உக்கிரசிங்கன் மாருதப்பிரவையை மணந்து ஒட்டிசுட்டானுக்கு அருகிலுள்ள வாவெட்டி மலையில் மண்டபமியற்றி ஆட்சிபுரிந்தான் என வையாபாடல் கூறுகிறது. உக்கிரசிங்கனே குளக்கோட்டன் என சுவாமிஞானப் பிரகாசர் குறிப்பிடுகிறார். தற்கால ஆய்வாளர்கள் குளக்கோட்டன் 13ஆம் நூற்றாண்டளவில் இலங்கை வந்ததாய்க் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

கோயில் திருப்பணி வேலையில் அடுத்த கட்டத்தைக்குறிக்கும் இன்னோர்கதையும் இருக்கின்றது. இக்கதையின்படி ஒல்லாந்தர் யாழ்ப்பாண இராட்சியத்தை கைப்பற்றியதும் வன்னிப்பற்றுக்கள் மீது தமது மேலாணையினை வலியுறுத்தினர். வன்னியர் திறை செலுத்திக் கொண்டபோதும் ஒழுங்காகத்திறை செலுத்தவில்லை. ஆண்டுதோறும் ஒல்லாந்தரும் யானைகளைத் திறையாகக் கொடுப்பதற்காக யானைகளைப் பிடிக்குமாறு பணிக்கர்களுக்கு கட்டளையிட்டனர். இவர்கள் எங்கு தேடியும் யானைகள் கிடைக்கவில்லை. பணிக்கன் தான்தோன்றி ஈஸ்வரரிடம் முறையிட்டான். யானைகள் கிடைக்கும் பட்சத்தில் கோயிலைப் பெருப்பித்து கட்டுவதாக நேர்த்திக்கடன் வைத்தான். இறைவன் கனவிலே தோன்றி கிளிமடுக்காட்டில் பௌர்ணமி தினத்தில் ஏராளமான யானைகளைக்காண்பாய் எனக் கூறி மறைந்தார். யானைகளும் கிடைத்தன. பணிக்கனும் உடனடியாகக் கோயிலைப் பெருப்பித்துக்கட்டிவித்தான் எனக் கூறப்படுகிறது. பிரித்தானியர் காலத்தில் கோவில் திருப்பணி வேலைகளின் அடுத்த கட்டம் இடம் பெற்றதாக இலங்கை சிவில் சேவையைச் சேர்ந்த கே.பி லூமிஸ் எழுதிய வரலாற்று கைநூலில் (1895) குறிப்புண்டு. சண்டிலிப்பாயைச் சேர்ந்த சின்னத்தம்பி ஓவசியர் கோயிலின் முன்னே பெரும் திருக்குளத்தை கட்டுவித்தார். இத்திருக்குள அமைப்பைப் போல வேறு எந்த இந்து ஆலயத்திலும் இந்த அமைப்பு இல்லை. இத்திருக்குளத்தினை பார்வையிட்ட அடியார்களுக்கு இது புரிந்திருக்கும். கோயில் திருப்பணிவேலைக்கு பணமுடைவு ஏற்பட்டபோது பெருமான் அருளால், வீதியில் மண்சரிவு ஏற்பட்டு மரங்கள் முறிந்து விழுந்ததாயும் இவற்றை சீராக்கியதால் பெற்ற இலாபம் முழுவதையும் சின்னத்தம்பி ஆலய திருப்பணி வேலைக்குச் செலவு செய்தாராம் என அக்கதை கூறுகிறது.

இவ்வாலயம் 1990இல் விமானத்தாக்குதலால் பலத்த சேதமடைந்து பின் 1992ல் புனரமைப்புச் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் 1999இல் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையால் செயலிழந்து போனது. இவ்வாலயம் ஆனி மாதத்தின் தினத்தின் கொடியேற்றப்பட்டு 16 நாட்கள் திருவிழா நடைபெறும். இவ்வாலயத்தில் 13ஆம் நாள் திருவிழாவான வேட்டைத்திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது. தீராத நோயால் பீடிக்கப் பட்ட அடியார்கள் இறைவனுடன் காட்டுக்குச் சென்று உடல் முழுவதும் கரிபூசி வாகை மரக்குழைகளால் ஆடை அணிந்து ஆலயத்துக்கு வந்து தம் நேர்த்திக் கடன்களை செய்வர். இவ்வேட்டைத் திருவிழாவினை பார்க்கவென பலதிக்கிலும் உள்ள அடியார்கள் அலைஅலையாய் வந்து குவிவர். ஆலயத் தேர்திருவிழாவும் சிறப்பானது. ஆனால் தேர் போர் நடவடிக்கையால் முற்றாகச் சிதைக்கப்பட்டது. இவ்வாலயம் சிவராத்திரி தின விரத நிகழ்வுக்குப் பேர் போன ஆலயமாகும். தற்பொழுது இவ்வாலயம் வவுனியா மாவட்ட விஞ்ஞானபாட உதவிக்கல்விபணிப்பாளர் திரு.சி.சிவபாலகுரு அவர்களின் தலைமையில் பல புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகிறது.

எமது இந்துமதத்தின் முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானைக் கொண்ட இவ் ஒட்டிசுட்டான் தான்தோன்றி ஈஸ்வர் ஆலயமானது எமது இந்து மதத்தின் வரலாற்றுப் பொக்கிசமாகும். ஈழத்திலே மிகத் தொன்மைக் காலத்தில் தோன்றிய இந்த ஆலயம் வரலாற்று ஆலயத்தை சீரழிய விடாது பாதுகாக்க வேண்டிய தலையாய கடமை, ஒவ்வொரு இந்து மதத்தவனுக்கும் உண்டு. இத் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய முக்கிய விழாக்களின் போது நாமும் அங்கு சென்று எம் பெருமானின் திருவருளைப் பெற்று நோய்பிணி நீங்கி இவ்வுலகில் சிறப்புடன் வாழ்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சிய வரலாற்றில் 14ம் லூயி

செல்வி. ம.ஜெ. மேரிமக்டலீன்
மூன்றாம் வருடம்
வரலாறு சிறப்புக்கலை.

## அறிமுகம்

17ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் முதன்மை பெற்ற நாடாக பிரான்ஸ் விளங்கியது. 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும், முதலமைச்சர்களும், நிதி அமைச்சர்களும் பிரான்சின் வளர்ச்சியின் பொருட்டு அதிக அக்கறை காட்டி உழைத்து வந்தனர். மக்களின் நலனைப் பேணும் வகையில் சில மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். மக்களுக்காக மன்னனேயன்றி மன்னனுக்காக மக்கள் அல்ல என்பதை உணர்ந்து மக்கள் நலனைக் கருதி பல நன்மைகள் செய்து நற்பெயர் ஈட்டினர் சிலர். அவர்களுள் 14ஆம் லூயி மன்னன் சிறப்பித்து சொல்லத்தக்கவராக காணப்பட்டார். இவர் ஐந்து வயதுக் குழந்தையாக இருந்த போதே 1643இல் பிரான்சின் அரியணை ஏறினார். அவர் நேரடியாக ஆட்சியை மேற்கொண்டது 1661ஆம் ஆண்டில்தான் 1715 ஆம் ஆண்டுவரை ஆட்சிபுரிந்து, பிரான்சிலும், ஐரோப்பாவிலும் பெரு மாற்றங்களை ஏற்படுத்தியதன் அடிப்படையில் இவரின் காலம் வரலாற்றில் "லூயியின் சகாப்தம்" என்றே அழைக்கப்படுகின்றது. அவர் மாமன்னர் 14ஆம் லூயி என்றும், பெருமைமிகு மன்னர் 14ஆம் லூயி என்றும் அவரது சமகால மன்னர்களாலும், அவருக்கு பிறகு இருந்த அரசர்களாலும் அழைக்கப்பட்டார்.

14ஆம் லூயி 17ஆம் நூற்றாண்டில் தலைசிறந்த எதேச்சதிகார மன்னராவார். அவர் உடலமைப்பிலும், தோற்றத்திலும் கவர்ச்சி மிக்கவராக காணப்பட்டார். அவர் பெருந்தன்மை வாய்ந்தவர், கம்பீரமானவர், அடக்கமானவர், அவர் பண்புள்ளம் கொண்டவர், பொதுஅறிவு நிரம்பப் பெற்றவர். ஆராய்ந்து முடிவெடிக்கும் திறமை கொண்டவர், அவர் ஒரு சிறந்த அரசியல் நிபுணர். எனவே மக்கள் அவரை "கதிரவமன்னன்" என்றும் "மாபெரும் மன்னர்" என்றும் அழைத்தார்கள். இத்தகைய குணநலன்களைக் கொண்ட லூயி பிரான்சின் வளர்ச்சியின் பொருட்டு அரசியல், பொருளாதாரம், மதக்கொள்கை, கலை ஆகிய உள்நாட்டுக் கொள்கைகளில் சீர்திருத்தங்களையும் மேற்கொண்டு அயல் நாட்டுடன் மேற்கொண்ட போர்களின் மூலமும் பிரான்சின் வளர்ச்சிக்கு பாடுபட்டார். இவரது இந்த நடவடிக்கைகள் பிரான்சின் வளர்ச்சிக்கு வழி வகுத்தது போல, ஒரு சில நடவடிக்கைகள் வீழ்ச்சிக்கும் வழி வகுத்துள்ளதையும் நாம் நோக்கமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் கொள்கை

லூயி கடைப்பிடித்த உள்நாட்டுக் கொள்கையில் அரசியல் நடவடிக்கையின் பிரதான அம்சங்களை எடுத்து நோக்கின் 14ஆம் லூயி சிறுவயதிலிருந்தே மசாரினின் வளர்ப்பின் கீழ் இருந்ததன் காரணமாகவும் சிறு வயதிலேயே பல போர்களின் ஈடுபட்டதன் காரணமாகவும், அரசியல் தந்திரங்களை நன்கு அறிந்திருந்தார். இதன்மூலம் அரசியல் சீர்திருத்தம் பலவற்றை பிரான்சிய அரசனாக 1661ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்து மேற்கொண்டார். இதன் விளைவாக இக்காலத்தில் அமைச்சரவை ஒன்றை நிறுவி "நானே அரசனும் நானே மந்திரியும்" என்ற தலைமையில் ஆட்சியை மேற் கொண்டார். இதன் காரணமாக பிரபுக்களின் செல்வாக்கை குறைத்ததுடன், நாட்டின் முழு அதிகாரங்களையும் தனது நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்தமையை, "நான் என்னுடைய ஆட்சிமுறையில் பிரபுக்களைச் சேர்ந்துக்கொள்ள விழையவில்லை என்பதை முதன் முதலாக மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என விரும்புகிறேன்." என்று அவரே நூலொன்றில் எழுதினார். மற்றொரு சமயம் "நான்தான் நாடு" எனக் கூறி உலகத்தைத் திகைக்க வைத்தவர். என்ற வகையிலும் 14 ஆம் லூயியின் அரசியல் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்குகிறன. அவர் தேர்ந்தெடுத்த அமைச்சர்கள் சாதாரண குடியினரே, எனினும் மிகவும் திறமை வாய்ந்த அமைச்சர்களாக விளங்கியமை லூயியின் ஆட்சிக்காலம் சிறப்புப்பெற வழிவகுத்து. இவ் அமைச்சர்களுள் லூவோ (Louvos), போக்கு (fouquet), கொல்பேட் (Colbert) போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்ஆவர்.

## பொருளாதார நிதி நிர்வாக முறைமை

14ஆம் லூயி பதவி ஏற்றகாலத்தில் பிரான்சினுடைய நிதி நிர்வாக முறைமை மிகவும் மோசமான நிலையில் இருந்தது. எனவே நிதி நிர்வாக முறையை சீர்படுத்தும் முகமாகவே இவரால் "கொல்பேட்" என்பர் நிதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். இவர் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த ஒரு வணிகரின் மகனாகப் பிறந்தார். ஆகையால் நடுத்தர மக்களின் நலனுக்குப் பெரிதும் பாடுபட்டார். இவர் தனது அறிவுக் கூர்மையாலும், திறமையாலும் பல பெரும் பதவிகளை ஒன்றன்பின் ஒன்றாகப் பெற்றார். மசாரின் இறந்த பிறகு அவர் பொதுப்பணித் துறையின் கண்காணிப்பாளர் பதவியைப் பெற்றார். அதற்குப்பிறகு நிதி நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரியானார் (controller general of finance). பின்னர் அவர் வேளாண்மைத்துறை அமைச்சரானார். அதற்குப்பின் கடற்படை, வணிகம் ஆகிய துறைகளின் அமைச்சர் பொறுப்பை நிர்வகித்தார். குடியேற்ற நாடுகளின் அமைச்சராகவும் சிறிதுகாலம் பணிபுரிந்தார். சுருங்கக்கூறின் 1683ஆம் ஆண்டு தான் இறக்கும் வரை, போர்த்துறையைத் தவிர மற்ற எல்லாத் துறைகளிலும் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்கைப் பயன்படுத்தினார். அந்த வகையில் நிர்வாகத்தில் மேற்கொண்ட சீர்திருத்தங்களே முக்கியமானவையாகும்.

நிதி நிர்வாகத் துறையில் கொல்பேட்டைக் கொண்டு மேற்கொண்ட நடவடிக்கைகள் பிரான்சின் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாக அமைந்தது. அந்த வகையில் கொல்பேட் நிதி நிலையைச் சீராக்குவதை தனது முக்கியமான கடமையாக கருதினார். அதில் வியத்தகு பெரும் மாற்றங்களை அவர் நிகழ்த்திக் காட்டினார். அவர் பொறுப்பேற்றபோது பெருங்கடன், வரிவிதிக்கும் முறையில் குறைபாடுகள், வரிவசூல்பாக்கி, அலுவலக வேலைகளை விற்றல், வணிகக்கணக்கு முறையின்மை ஆகிய தவறுகள் மலிந்து கிடந்தன. கடனும் அதிக வட்டிக்கு வாங்கப்பட்டிருந்தது. ரிச்சல்யூ, மசாரின் ஆகியோர் காலத்தில் பொதுச் செலவினங்கள் அதிகமாகிக் கொண்டே சென்றன. பிரபுக்கள் வரியிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர். ஆனால் வரிப்பளு வணிகர்கள், குடியானவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோர் மீது விழுந்திருந்தது. முறை கேடான வரியமைப்பு புழக்கத்தில் இருந்து வந்தது. வரி அமைப்பு முறை என்பது வரி வசூலிக்கும் வேலையை தனிப்பட்டவர்களுக்கோ அல்லது ஒரே தனிப்பட்ட குழுவுக்கோ விட்டு விடுவதாகும். அவர்கள் வரி கொடுப்போரிடமிருந்து கசக்கிப் பிழிந்து ஏராளமான பணத்தைப் பெற்றுக்கொண்டு அரசுக்கு கொடுக்குவேண்டிய குறிப்பிட்ட தொகைபோக மீதியைத் தாங்களே எடுத்துக் கொள்வார்கள். இந்த அமைப்புத்தான் மிகவும் கொடுமையான வரியமைப்பு முறையாகும். இக் கொடுமைகளை குழி தோண்டிப் புதைக்கும் வகையில் நிதி வசூல் செய்யும் முகவர்களை கொல்பேட் ஏற்படுத்தினார். இதனால் வரி வசூல் செய்பவர்கள் தண்டிக்கப்பட்டனர். வட்டி விகிதமுறை குறைக்கப்பட்டது. பொதுச் செலவினங்கள் குறைக்கப்பட்டன. இவ்வகையான நிதிச் சீர்திருத்தங்களால் கொல்பேட் புதுவரிகள் விதிக்காமலேயே பணமுடையைப் போக்கிக் கருவூலத்தை நிரப்பிக் காட்டினார். எனவே 14ஆம் லூயி கொல்பேட் நிதி அமைச்சரூடாக பிரான்சின் நிதி நிர்வாகத்தை சீர்ப்படுத்தினார்.

அடுத்து 14ஆம் லூயி கொல்பேட் ஊடாகவே பிரான்சின் வேளாண்மைத்துறையை முன்னேற்றினார். விவசாயம் முன்னேற்றமடைய வேண்டும் என்பதனால் குடியானவர்களுக்கு பல உதவிகளைச் செய்தார். பயிரிடுவதற்கு பயனுள்ள வகையில் பலகால்வாய்கள் வெட்டப்பட்டன. அதைப் போலவே பல புதிய சாலைகளையும் அமைத்தார்.அவர்கள் எளிய முறையில் தங்கள் உற்பத்திப் பொருள்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கு அச்சாலைகள் பயன்பட்டன. நல்ல குதிரைகளையும் மற்ற கால்நடைகளையும் வளர்ப்பதற்கு அவர் ஆக்கம் தந்தார். இதனால் பிரான்ஸ் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றது. அதனால் மக்களும் வளமுடன் வாழ்ந்து வந்தார்கள். இவை 14ஆம் லூயி இவ்வாறாக வேளாண்மைத் துறையை முன்னேற்றுவதற்கு ஆற்றிய செயற்பாடுகளைக் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் விவசாயத்தில் முன்னேறியது போலவே தொழில்த்துறையிலும் முன்னேற்றமடைய வேண்டும் என்பது 14ஆம் லூயியின் எண்ணமாகும். எனவே கொல்பேட்டினூடாக தொழிற்றுறையை முன்னேற்றினார். தொழில் சிறந்தால் செல்வம் சிறக்கும். நாட்டுக்கும், மக்களுக்கும் அது சிறந்த வருவாயை அளிக்கும் என்பதை அவர் உணர்ந்து செயற்பட்டார். கொல்பேட் பதவி ஏற்றபோது வெளிநாடுகளிலிருந்து பெருமளவு பொருட்கள் பிரான்சிற்கு இறக்குமதி செய்யப்பட்டன. இதனால் பிரான்சின் செல்வம் வெளிநாடுகளுக்கு சென்றது. எனவே இவற்றைத் தடை செய்தார். இதற்காக ஏராளமான தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடிவு செய்தார். இங்கிலாந்து, ஹாலந்து, இத்தாலி ஆகிய வெளிநாடுகளிலிருந்து கைத்தொழில் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டார்கள் பிரான்சின் தொழில் நிபுணர்கள் அங்கிருந்து வெளியேற அனுமதிக்கப்படவில்லை. எனவே உற்பத்தி பெருகியது, பிரான்சில் செய்யப்பட்ட பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு வரிவிதித்தார். இது "காப்புவரி" என்று அழைக்கப்பட்டது. புதுத்தொழில்கள் பாதுகாக்கப்பட்டன. பிரெஞ்சு உற்பத்தியாளர்களும், வணிகர்களும் இலாபம் அடைந்தனர். சுங்க வரிகள் பல விதிக்கப்பட்டன. இக்கொள்கை இங்கிலாந்தில் நிலவிய "மெர்க்கண்டலிசம்" என்ற முறையைத் தழுவியதாகக் காணப்பட்டது. நாட்டின் நன்மையைக் கருதித்தான் இது இரண்டு நாடுகளிலும் செயற்பட்டது. உலோகம், கண்ணாடி, காலுறைகள், பட்டுநெய்தல் ஆகிய தொழில்கள் நடைபெற்று வந்தன. உள்நாட்டுப் பொருட்களை பிரபுக்களும் போட்டி போட்டு வாங்கினர். இதனால் பொருட்கள் நேர்மையான விலையில் விற்கப்பட்டன. எனவே இவ்வாறான முயற்சிகள் பிரான்சின் தொழில்துறையை முன்னேற்றியது.

அடுத்தபடியாக நாட்டின் வணிகநிலையை உயர்த்துவதற்கு 14ஆம் லூயி கொல்பேட்டினூடாக பல முயற்சிகளை மேற்கொண்டார். அப்போது ஆங்கிலேயரும், டச்சுக்காரரும் ஐரோப்பிய வாணிபம் முழுவதையும் தங்கள் கையில் வைத்துக்கொண்டிருந்தனர். ஏனெனில் வாணிபப் பொருட்களை ஓரிடத்தில் இருந்து வேறோர் இடத்திற்கு ஏற்றிச் செல்வதற்கு இவர்களுடைய கப்பல்களையே பயன்படுத்தினர். எனவே ஐரோப்பியரின் வாணிபம் இவர்கள் கையில் இருந்ததென்பதில் வியப்பில்லை. இதனைக் கருத்தில் கொண்டு ஆங்கிலேயரிடமும், டச்சுக்காரரிடமும் இருக்கும் கப்பல் எண்ணிக்கையின் அளவிற்கு பிரான்ஸ் நாட்டிலும் கப்பல்களைச் செய்து கொண்டால் தம் செல்வாக்கின் காரணமாய் ஐரோப்பிய வாணிபம் பிரெஞ்சுக்காரர்களிடம் வரும்படி செய்யலாம் என்ற முடிவிற்கு கொல்பேட் வந்தார். உடனே கப்பல்கட்டும் தொழிலில் முனைந்தார். வணிகக்கம்பனிகளை தோற்றுவித்தார். இவ்வாறாக பிரான்சின் வணிக நிலையை உயர்த்தவும் லூயி காரணமானார்.

தொடர்ந்து நோக்கின், 14ஆம் லூயி நாட்டின் செல்வத்தை மேலும் பெருக்கி கொள்ளும் நோக்குடன் பிரெஞ்சுக் குடியேற்றங்களை கொல்பேட் ஊடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தினார். அதன் மூலம் தாய்நாடு வாணிபத்தில் தனியுரிமை பெற்று விளங்க வழி ஏற்படும் என்று கருதினார். கொல்பேட் குடியேற்ற நாடுகளின் அமைச்சராக இருந்து பணியாற்றிவர். எனவே குடிறே்றங்களை ஏற்படுத்துவதில் மிக்க ஆர்வம் காட்டினார். மேற்கிந்தியத் தீவுகளில் மார்ட்டினிக், குவாடிலூப் ஆகிய இரு இடங்களைவாங்கி அங்கே பிரெஞ்சுக் குடியேற்றங்களை அமைத்தார். இந்தியாவிலும், செனகலிலும். மடகாஸ்கரிலும் முக்கிய வாணிபத்தலங்கள் அவரால் நிறுவப்பட்டன. இங்கிலாந்திற்கு நிகராக பிரான்சும் குடியேற்றங்களை ஏற்படுத்துவதில் சிறந்து விளங்கியது. எனவே கொல்பேட்டினூடாக நிறுவப்பட்ட குடியேற்றங்கள் பிரான்சின் வளர்ச்சிக்கு வழிவகுத்தன.

மேலும் ஒரு நாட்டினுடைய வளர்ச்சிக்கு இராவணுவத்தின் அவசியம் இன்றியமையாததாகும். அந்த வகையில் கொல்பேட்நேரடியாக இதன் பொறுப்பை மேற்கொள்ளாவிட்டாலும் இராணுவத்தின் அவசியத்தை நன்கு உணர்ந்து லூவா என்ற போரமைச்சருடன் இணைந்து செயற்பட்டார். நிதித்துறையின் பொறுப்பாளர் என்ற முறையில் அவர் இராணுவத்தின் நிலைமையை அடிக்கடி உணர்ந்து பணியாற்றினார். லூவா மன்னரின் படைகளைத் திரட்டி அவைகளுக்கு வேண்டுவன தந்து, போருக்குத் தயாராய் வைத்திருப்பதில் சிறந்து விளங்கினார். ஐரோப்பாவில் மிகப்பெரும் போர் அமைச்சர்களுள் ஒருவராக 1661 இலிருந்து 1691வரை அப்பதவியில் இருந்தார். இவரோடு சேர்ந்து உழைத்வர்களில் காண்டே, டுரென், லாபன், ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் லாபன் ஒரு இராணுப் பொறியியல் வல்லுநர். அவர்மட்டும் ஐம்பத்து மூன்று நகரங்களில் முற்றுகையை நடத்தியுள்ளார். முந்நூறு கோட்டைகளைத் தாக்கியுள்ளார். இவர் லூவாவிற்கு பெரும் உதவி புரிந்துள்ளார். போரில் காயமுற்ற வீரர்களின் நலனிற்காக, "ஹோட்டல்தி இன்வேலிட்" என்ற நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாறு லூவாவினால் அமைக்கப்பட்டு, பொறியியல் வல்லுநரின் திறமையால் செயற்ப்படுத்தப்பட்டு டுரென் தளபதியின் தலைமையை ஏற்று வீறுநடைபோடும் போர் வீரர்களைக் கொண்ட நிலைப்படையின் துணைகொண்டு 14ஆம் லூயி ஐரோப்பாவில் பல போர்களைத் தொடக்கினார். இதன் மூலம் பிரான்சின் வளாச்சிக்கும் காரணகர்த்தாவாகச் செயல்ப்பட்டார்.

## கலைப்பணிகள்

கொல்பேட் ஒரு சிறந்த நிதிநிர்வாகியாகவும், பொருளாதார நிபுணராகவும், இருந்ததது மட்டுமன்றி, கலை, அறிவியற்கலை ஆகியவற்றை போற்றிப் பாதுகாக்கும் ஒரு சிறந்த கலைஞரும் ஆவார். 14ஆம் லூயியின் வெர்செயில்ஸ் மாளிகை கலைஞர்களின் கூட்டத்தால் ஒளி பெற்றுத்திகழ இவர் செய்த சாதனைகள் பல. இவர் பிரெஞ்சுக் கல்விக்கழகம் என்பதை விரிவாக்கினார். அறிவியற் கழகம் என்பதையும் நிறுவினார். அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்காலத்தில் பிரான்சின் கழகம் என்று அழைக்கப்பட்டது. பாரிஸ்மாநகரில் வான் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவினார். 16000 பிரிவுகள் கொண்ட நூல் நிலையமானது இரண்டரை மில்லியனுக்கு உயர்த்தப்பட்டது. இவர் காலத்தில் எழுத்தாளர்கள் ஏற்றம் பெற்றனர். அவர்களுக்கு உதவிப் பணம் அளிக்கப்பட்டது. வெளிநாட்டு கலைஞர்களும், அறிவியல் நிபுணர்களும் பிரான்சிற்கு விரும்பி வந்து தங்கள் பணிகளில் ஈடுபடலாயினர். பொதுக்கட்டிடங்கள் பொலிவுடன் துலங்க இவர் ஆற்றிய பணி ஏராளம். புதிய கட்டிடங்கள் பல எழுப்பப்பட்டன. வெற்றி வளைவுகள் நிறுவப்பட்டன..

## மதக்கொள்கைகள்

மதக் கொள்கையைப் பொறுத்தவரையில் 14ஆம் லூயி கத்தோலிக்க சமயத்தைச் சாந்தவராக இருந்தமையினால் அந்த நாட்டு மக்களெல்லாம் கத்தோலிக்க மதத்தவர்களோவே இருக்க வேண்டும் என்று, அவர் விரும்பினார். லூயி முதலில் போப்பை எதிர்த்தார். ஆனால் விரைவில் கத்தோலிக்கக் கொள்கைகளை எதிர்த்தவர்களை ஒறுப்பதே நோக்கமாகக் கொண்டார். 1682ஆம் ஆண்டு "கேலிகன் சுதந்திரம்" என்ற ஓரறிக்கையை லூயி விடுத்தார். இதன்படி சமயத்தைப் பொறுத்தவரையில் போப்புக்குப் பிரான்சில் உரிமையும், அதிகாரமும் உண்டென்றும், ஆனால் அரசரைப் பதவியிலிருந்து விலக்கவோ, குடிகளை அரசருக்குக் கீழ்ப்படியக் கூடாதென்று ஆணை பிறப்பிக்கவோ அவருக்கு அதிகாரமில்லை என்றும், சமயத்தில் போப்பின் அதிகாரமும் அவருடைய ஆலோசனைச் சபையின் முடிவிற்குக் கட்டுப்பட்டவை என்றும் இந்த அறிக்கையில் குறித்தார்.

14ஆம் லூயி அரசன் வேற்று மதத்தவர்களுக்கு எதிராக பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஹியூ யெனட்டுக்களின் மத உரிமை இவன் காலத்தில் மீண்டும் மறுக்கப்பட்டது. 4ஆம் ஹென்றி அரசன் காலத்தில் கொண்டுவரப்பட்ட நான்டேஸ் பிரகடனம் மூலம் ஹியூயெனட்டுக்களின் மதஉரிமை ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் 14ஆம் லூயி அரசன் ஹியு யெனட்டுகளின் மத உரிமையை மீண்டும் மறுத்தான். நான்டேஸ் பிரகடனத்தை இவன் ரத்துச் செய்தான். ஹயுயெனட்டுக்கள் பலர் நாடு கடத்தப்பட்டனர். இதனால் வாழ முடியாத இவர்கள் பிரான்சிலிருந்து வெளியேறினர். இதனால் பிரான்ஸ் வீழ்ச்சி நிலையை அடைந்தது. எனவே 14ஆம் லூயி பிரான்சின் வளாச்சியின் பொருட்டு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்ததோடு வீழ்ச்சிக்கும் வழி சமைத்துக் கொடுத்துள்ளான் எனக் கூறிக் கொள்ளலாம்.

## வெளிநாட்டுக் கொள்கைகள்

ஐரோப்பாவிலே வலிமை பெற்ற ஒரு நாடாக பிரான்சை ஆக்க வேண்டும் என லூயி விரும்பினார். இதற்காக ஆக்கிரமிப்பு கொள்கையை அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பற்றினார். நாட்டின் எல்லையை வடக்கிலும், கிழக்கிலும் றைன்நதி வரையிலும், தென்கிழக்கில் அல்ப்ஸ் மலை வரையிலும் தெற்கில் பிரணீஸ் வரையிலும் பரவியிருக்க வேண்டுமென அவர் விரும்பினார். இதற்காகத் தன் வாழ்நாளில் பெரும்பகுதியை போரிலேயே செலவு செய்தார். இவரின் ஆக்கிரமிப்புக்கள் அளவுகடந்ததாக இருந்தமையினால் மற்றைய ஐரோப்பிய நாடுகள் சேர்ந்து இவரை எதிர்த்தனர். இவர் மேற்கொண்ட வெளிநாட்டுப் போர்கள் எதிலும் வெற்றி பெறவில்லை. தோல்வியடைந்த அதே வேளையில் ஐரோப்பிய அரசுகள் எல்லாம் பிரான்சிற்கு எதிராக இயங்கலாயிற்று. இவர் மேற்கொண்ட வெளிநாட்டுப் போர்களில் ஆரம்பத்தில் ஒருசில வெற்றிகளைப் பெற்றாலும் இறுதியில் பல தோல்விகளை எதிர்நோக்க நேர்ந்தது. ஆனாலும் 14ஆம் லூயி மேற்கொண்ட வெளிநாட்டுப்போர்கள் அனைத்தும் தோல்வியில் முடிந்ததெனக் கூறமுடியாது. பிற்காலத்தில் 1ம் நெப்போலியன் காலத்தில் பிரான்ஸ் அவமானப்பட்டது போல, இவனுடைய காலத்தில் பிரான்ஸ் அவமானப்பட்டது என்று கூறமுடியாது.

14ஆம் லூயி அரசன் பிரான்சை ஐரோப்பாவிலே உயர்த்துவதற்கு பிரான்சினுடைய எல்லைகள் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்பது இவன் கொள்கையாக இருந்தது. ஆனால் வடக்கேயுள்ள றைன்நதிக்கரை மாகாணங்களைக் கைப்பற்றுவது இலகுவானதாக இருக்கவில்லை. நெதர்லாந்து இதற்குத் தடையாக இருந்தது. கி.பி 1665ஆம் ஆண்டு ஸ்பானிய மன்னனாகிய 2ம் பிலிப் ஆட்சிசெய்தபோது ஸ்பானியாவிற்கெிராக இயங்க முற்பட்டான். பல ஐரோப்பிய நாடுகளோடு இவன் போரில் ஈடுபட்டு பிரான்சிற்கு பல நாடுகளை சொந்தமாக்க வேண்டும் என்பது இவனது நோக்கமாக இருந்தது. வடகேயுள்ள றைன்நதி மாகாணங்களை கைப்பற்றுவதற்கு நெதர்லாந்து தடையாக உள்ளதால் நெதர்லாந்தின் பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கமாக கி.பி 1665இல் நெதர்லாந்தோடு சண்டையில் ஈடுபட ஆயத்தமானான். ஆரம்பத்தில் இவன் வெற்றி கொள்வதாகக் காணப்பட்டாலும் இங்கிலாந்து, சுவீடன் போன்ற நாடுகள் ஒல்லாந்திற்கு ஆதரவு வழங்கியமையால் 14ஆம் லூயி முதலில் தோல்வியையே அடைந்தார்.

ஆனாலும் கி.பி 1672இல் மீண்டும் ஒல்லாந்தோடு போரிட்டான். இரண்டாவது முறையாகப் போரிட்டபோது இங்கிலாந்தையும், சுவீடனையும் தந்திரமாக தன்பக்கம் சேர்த்து ஒல்லாந்திற்கு எதிராக போரிட்டான். ஒல்லாந்து தனித்து நின்று போரிட்டபோது பிரான்சிடம் சரணடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் ஒரேஞ் வம்சத்து வில்லியம் பெரும் படைகளைத் திரட்டி பிரான்சிற்கு எதிராக மீண்டும் சண்டையில் ஈடுபட்டான். புவியியல் நிலையின் அடிப்படையில் ஒல்லாந்து கடல் மட்டத்திலும் தாழ்வாக இருப்பதினால் கடல்நீர் நாட்டிற்குள் உட்புக விடப்பட்டது. இதனால் பிரான்சியப் படைகள் பல நீரினால் அழிந்தன. இறுதியில் இங்கிலாந்தும் ஒல்லாந்தின் பக்கம் சேர்ந்தது. இச்சண்டை 1678ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நிமக்குவன்” உடன்படிக்கையின் மூலம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இவ் உடன்படிக்கையின் படி பிரான்சின் வட எல்லையில் இருந்த சில இடங்கள் ஸ்பெயினின் கிழக்கு எல்லையில் இருந்த பிரெஞ்சு காம்டே நடுநிலைக் குழுவின் மூலமாக அல்சேஸ், சஸ்பேக், லக்சம்பேக் ஆகியன லூயிக்கு கிடைத்தன. இவர் கைப்பற்றிய தெற்கு கொலண்ட் திருப்பி அதற்கே வழங்கப்பட்டது.

அடுத்து 14ஆம் லூயி மேற்கொண்ட போர் ஆங்கில சிம்மாசனத்துடன் தொடர்புடையதாக் காணப்பட்டது. இங்கிலாந்தில் சிம்மாசன உரிமை சம்மந்தமாக ஒரேஞ்வம்ச வில்லியத்திற்கும், 2ஆம் ஜேம்சிற்குமிடையே கடும்போட்டி ஏற்பட்டு கொண்டிருந்தது. கி.பி 1688இல் இங்கிலாந்தில் ஏற்பட்ட இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் 2ஆம் ஜேம்ஸ் பதவி நீக்கம் செய்யப்பட்டு வில்லியம் அரசனாக்கப்பட்டான். இதன்மூலம் புரட்டஸ்தாந்து மதத்தைச் சார்ந்த ஒருவன் அரசனாகும் மரபு இங்கிலாந்தில் முதல் முறையாக தோற்றுவிக்கப்பட்டது. அத்துடன் புரட்டஸ்தாந்து நாடுகளுக்கு முதன்மையான நாடாக இங்கிலாந்து விளங்கியது. அயர்லாந்து மக்களோ 2ஆம் ஜேம்சையே அரசனாக்க விரும்பினர். பிரான்சிய மன்னன் 14ஆம் லூயி ஜேம்சிற்கே அதரவளித்து அவனையே அரசனாக்க விரும்பினான். கி.பி 1688 இல் இங்கிலாந்தின் அரசுரிமைபற்றித் தோன்றிய பிரச்சனை 1697வரை தொடர்ந்து நடைபெற்றுள்ளது. இவ்வாறு நடைபெற்ற போரே ஆங்கில சிம்மாசனப் போராகும்.

இதன் காரணமாக 14ஆம் லூயிக்கு எதிராக 3ஆம் வில்லியத்தின் தலைமையில் நாடுகள் பல கூட்டுச் சேர்ந்தன. டென்மார்க், சுவீடன், ஸ்பானியா, பிரண்டன்பேக் ஆகிய நாடுகள் பிரான்சிற்கு எதிராக கூட்டுச் சேர்ந்தன. ஆயினும் உண்மையில் ஆங்கிலேயரும் டச்சுக்காரருமே 14ஆம் லூயியை எதிர்த்தனர். நீண்டகாலமாக இடம்பெற்ற போரில் பிரான்சிற்கு பல வெற்றிகள் கிடைத்தன. இப்போர் கி.பி 1697இல் செய்து கொள்ளப்பட்ட. “நிஷ்விக்” உடன்படிக்கை மூலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இவ் உடன்படிக்கையின்படி இங்கிலாந்தின் அரசனாக 3ஆம் வில்லியம் ஏற்றுக்கொள்ளப்பட்டான். ஆங்கிலேயரின் வர்த்தக உரிமையில் லூயி தலையிடுவதில்லை என ஒப்புக்கொண்டான். அத்தோடு 2ஆம் ஜேம்சிற்கு ஆதரவு வழங்குவதில்லை என உறுதி அளித்தான் உண்மையில் ஆங்கில சிம்மாசனப் போரில் 14ஆம் லூயி வெற்றியைக் கொடுத்து தோல்வியை விலைக்கு வாங்கினான் என்றே “பிஷர்” போன்ற வரலாற்றாசிரியர்கள் வர்ணிக்கின்றார்கள்.

14ஆம் லூயி மன்னன் மேற்கொண்ட இறுதிப்போர் ஸ்பானிய வாரிசுரிமைப் போராகும். ஸ்பெயின் மன்னர் 2ஆம் சார்லசிற்கு வாரிசில்லை. எனவே தமக்குப்பின் தம் அரியணையை லூயியின் இளைய பேரர் பிலிப்பிற்கு சாசனம் செய்து விட்டு இறந்தார். இப்போது பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு நாடுகளும் ஒரே குடையின் கீழ்வரும் அபாயம் ஏற்பட்டது. இதனால் ஐரோப்பாவின் வல்லமைச் சமநிலை சீர்கெடும் என்று இதர ஐரோப்பிய அரசுகள் அஞ்சின. எனவே லூயிக்கு எதிராக இங்கிலாந்து, ஆஸ்திரியா, ஹாலந்து சில ஜேர்மன் சிற்றரசுகள் சேர்ந்து ஒரு பெருங் கூட்டணியை அமைத்தன. இந்த யுத்தம் 12வருடம் நடந்தது. ஆங்கிலத்தளபதியான மல்பரோ பிரபு பிரான்சை பிரின்ஹிம், சாமிலிஸ் ஆகிய இடங்களில் தோற்கடித்தார். உட்ரக்ட் உடன்படிக்கையின்படி இப்போர் முடிவுற்றது. இச்சமாதான உடன்படிக்கை ஸ்பானிய வாரிசுரிமைப்போரை முடிவிற்கு கொண்டு வந்தது.

ஸ்பானிய வாரிசுரிமைப் போரோடு 14ஆம் லூயியின் வெளிநாட்டுப் போர்களும் ஓய்ந்தன. அதனோடு பிரான்சிய மக்கள் அவனது அரசியல் நிர்வாகத்தை கண்டித்தனர். வெளிநாட்டுப் போர்களால் பிரான்சிய பொருளாதாரம் நலிவடைந்தது. பாகுபாடான முறையில் வரி அறவிடப்பட்டது. பிரபுக்கள் ஆடம்பர வாழ்வில் ஈடுபட்டதோடு பல சலுகைகளையும் அனுபவித்தனர். இதனால் பிரான்சிய மக்கள் கொதித்தெழுந்தனர். இந்நிலையில் 14ஆம் லூயி செய்வதறியாது திகைத்தான். அவரது பரம்பரையினர் ஒருவர் பின் ஒருவராக இறக்க மனமுடைந்தான். வெளிநாட்டுப் போர்கள் பிரான்சியப் படைவீரர்கள் பலரை பலி கொண்டதை மக்கள் எதிர்த்தனர். இந்நிலையில் மனமுடைந்த லூயி கி.பி 1715ஆம் ஆண்டு இறக்க லூயின்யுகமும் முடிவுற்றது.

## முடிவுரை

தொகுத்து நோக்குமிடத்து 14ஆம் லூயி மன்னன் பிரான்சின் வளர்ச்சியின் பொருட்டு பல சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டான். குறிப்பாக சீர்குலைந்திருந்த பிரான்சின் நிர்வாகத்தை சீர்ப்படுத்தினான். பொருளாதார ரீதியாக பிரான்சை ஒரு தொழிற்துறை நாடாக மாற்றினான். அதுமட்டுமன்றி சிறந்த தொரு அரசியல் அமைப்பை உருவாக்கினான். மற்றும் கலைத்துறையை முன்னேற்றினான். இவ்வாறான பல சீர்திருத்தங்ளை மேற்கொண்டு பிரான்சின் வளர்ச்சிக்கு உதவினாலும் இவனது மதக்கொள்கைகளும், வெளிநாட்டுக் கொள்கைகளும் பிரான்சின் பொருளாதாரத்தை பாதிக்க வைத்தன. அதாவது இவன் மேற்கொண்ட வெளிநாட்டுப் போர்கள் பிரான்சினுடைய திறைசேரியையே வெறுமையாக்கியது. இருந்தபோதிலும் இவன் மேற்கொண்ட மேலே கூறப்பட்ட நடவடிக்கைகள் பிரான்சின் வளர்ச்சிக்கு இன்றியமையாத ஒன்றாக விளங்குகின்றது எனக் கூறினால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் பட்டியல்

இராமச்சந்திரன், டி.ஆர்., **உலகவரலாறு,** 1789 - 1960, சென்னை: 1969.

இராஜகோபால், N.K., **ஐரோப்பிய வரலாறு,** தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம்: 1971.

ஆரோக்கியசாமி, மு., **ஐரோப்பிய வரலாறு,** சென்னை:1960.

ஜெயபாலன், நா., **நாகரிக வரலாறு,** சென்னை: 1974.

இளையதம்பி, மு., **இலங்கைச் சரித்திரமும் ஐரோப்பியச் சரித்திரமும்,** யாழ்பாணம்: 1969.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியாக்கிரகப் போராட்டம் பற்றிய எண்ணக்கருவுக்கு காந்தீயம் வழங்கிய பங்களிப்பு

செல்வி எஸ்.நளினா
மூன்றாம் வருடம்
வரலாறு சிறப்புக்கலை.

இன்றைய உலக வரலாற்றை எடுத்து நோக்கும்போது பல்வேறுபட்ட அரசியல் முறைகளும் அவைகளுக்கேற்ப போராட்ட முறைகளும், யுத்திகளும் இடம்பெற்று வந்துள்ளன. அவ்வகையில் உள்ளடங்குகின்ற உன்னதமான போராட்டமே சத்தியாக்கிரகப் போராட்டமாகும். இது ஏனைய போராட்டங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட வலிமைமிக்க தார்ப்பரியமுள்ள ஒன்றாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டமானது இன்றுவரையிலும் படிப்படியாக வளர்ச்சி பெற்று பல்வேறு பரிமாணங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கிறது. இனி சத்தியாக்கிரகமென்றால் என்ன? அதன் தோற்றம், வளர்ச்சிக்கட்டங்கள் எவ்வாறானவை? இப்போராட்ட எண்ணக்கருவுக்கு காந்தியடிகள் வழங்கிய பங்களிப்புக்கள் எவை? என நோக்குவோம்.

முதலில் சத்தியாக்கிரகம் என்றால் என்ன? என நோக்கின் "கத்தியின்றி, இரத்தமின்றி, யுத்தமின்றி சத்தியத்தைக் கடைப்பிடிப்பதே" சத்தியாக்கிரகம் என்பதாகும். பலாத்காரத்தை உபயோகிப்பதை இது விலக்குகிறது. சத்தியாக்கிரகம் சத்தியம், ஆக்கிரம் என்ற 2 வடமொழிச் சொற்களும் இணைத்ததாகும். சத்தியமென்பது உண்மை/மெய்மை ஆகும். ஆக்கிரம் என்பது கடைப்பிடித்தல்/உறுதியாகக்கைக்கொள்ளுதல் எனும் பொருளுடையது. இவற்றை அடிப்படையாகக்கொண்டு சத்தியாக்கிரகம் என்பதனைப் பின்வருமாறு வரையறுத்துக் கொள்ளலாம்.

"என்றுமறியாத உண்மையில் நம்பிக்கை வைத்து
உள்ள உறுதியுடன் நேர்மையைக் கடைப்பிடித்தலாகும்."

இதனைவிடப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வரைவிலக்கணங்களைக் கூறியுள்ளனர். இந்தவகையில் அமெரிக்க சிந்தனையாளரான வில்லியம் ஜேம் கூறியதாவது

"Moral equixalent of war" அதாவது "போருக்கு அறவழியிலான மாற்று" என்கிறார்.

டால்ஸ்டர் என்பவர்

"உடல் வலிமையைக் கொண்டு நிகழ்த்தும் வன்முறைப் போராட்டத்திற்குப் பதிலாக மனவலிமையால் நிகழ்த்தும் போராட்டம் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தியடிகள்

"உண்மையிலிருந்தும் அகிம்சையிலிருந்தும்
பிறந்த சக்தியே சத்தியாக்கிரகமென்றார்."

மேற்கூறிய அறிஞர்கள் யாவருடைய வரைவிலக்கணத்தையும் ஏற்று அவற்றிற்கு நடைமுறை விளக்கத்தைத் தந்துள்ளார். சத்தியாக்கிரகம் வன்முறையின் அடிப்படையில் அமைந்திடக்கூடாது என்பதில் காந்தியடிகள் மிகக் கவனமாக இருந்தார். இவற்றிற்கு மத்தியில் காந்தியடிகளைப்பற்றி சிறிது நோக்குவோம்.

இந்திய விடுதலைக்காகப் பெரும்பாடுபட்ட அண்ணல் காந்தி நம்மைப் போலவே குறைகள் மிக மானிடனாக அவதரித்தார். ஆனாலும் நம்மைப் போலன்றி முயன்று குறைகளைப் போக்கிக் கொண்டார். புலன்களுக்கு அடிமையாகாது வாழ்ந்தார். உலகியல் இம்சைகளுக்குக் காரணமான புலன்களை வென்று வீரரானார். நம்மைப் போலவே துன்பங்கள் குழப்பங்களுக்கு நடுவே நொந்தார். மெல்ல மெல்ல நெஞ்சில் உரம் வளர்த்துக் கொண்டவர் உள்ளத் தூய்மையால் பற்றற்ற பெருந்தன்மையோடு உலகத்தொண்டு செய்தார். அறமே வாழ்க்கைக்கு அடிப்படை என்ற தெளிவுடன் வன்முறையை, அடக்குமுறையை, சுரண்டலை, முற்றுமுழுதாக எதிர்த்து அகிம்சை நெறியில் போராடியவர்.

யான் என்ற செருக்கின்றி வாழ்வதற்காக புலனடக்கத்தையும், நகைச்சுவை கருதிக்கூடப் பிறரின் மனதைப் புண்படுத்தக் கூடாது என்பதற்காக நாவடக்கத்தையும் வாய்மைப் பேச்சு ஒன்றே நிலைக்க வேண்டும் என்பதற்காக உள்ளத்தூய்மையையும் மிதமிஞ்சிய தேவைகள் அநீதிக்கு இட்டுச் சென்றிடும் என்பதற்காகத் தேவைகளைக் குறைத்தும் எந்நேரத்திலும் எதையும் எதிர்நோக்கத்தக்க துணிவுடனும் அச்சமின்மையுடனும் வாழ்ந்த ஓர் உத்தம புருஷர் காந்தியடிகள்.

காந்தி விரும்பி அரசியலில் இணைந்து கொள்ளவில்லை. ஆனால் சிறந்த ஓர் அரசியல்வாதி எவ்வாறு இருக்கவேண்டும் என்பதற்கு இவர் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தவர். காந்தி தாராண்மைவாதிகள் போல தனிமனித உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் அதிக மதிப்புக் காட்டிய அதேநேரம் தாராண்மைவாதத்தின் நுகர்வுக் கலாசாரத்தை முன்னிலைப்படுத்துகின்ற முதலாளித்துவத்தையும் அதனுடைய உயர் குலத்தினரின் நலன் பேணும் ஜனநாயகத்தையும் நிராகரித்தவர்.

மார்சிசவாதிகள் போல காந்தியும் அரசையும் தனிச் சொத்துரிமையையும் வெறுத்த போதிலும் வன்முறை அடிப்படையில் புரட்சி மூலம் அவற்றை ஒழிப்பதை அவர் ஏற்கவில்லை. பலாத்காரத்தின் அடிப்படையில் ஒரு உண்மையான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்று அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமையாக உணர்ந்திருந்தார். இதனாலேயே சத்தியம், அகிம்சை, அன்பு, இன்னா செய்யாமை, உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் போன்றவற்றைத் தேர்ந்துகொண்டார்.

காந்தி தனித்து அகிம்சை, சத்தியம், சத்வோதயம், சத்தியாக்கிரகம் சமத்துவம், வர்க்க பேதமின்மை போன்றவற்றை அரசியலிலே மட்டும் பிரயோகிக்கவில்லை. மாறாக சமயம், பொருளாதாரம், கலாசாரம், தனிமனித பழக்கவழக்கம் போன்ற சகல துறைகளிலும் பயன்படுத்தினார். முக்கியமாக கிராமிய அரசியலில் காணப்படுகின்ற பஞ்சாயத்து முறைகளை கவனத்தில் கொண்டவர். இங்கே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அரசியல் அமைப்பு இருக்கவேண்டும் எனவும் அதிகாரங்கள் ஒரேஇடத்தில் குவிக்கப்பட்டிருக்காமல் பரவலாக்கப்படவேண்டும் என்றார். இவற்றில் தீண்டாமை ஒழிப்பு, மது மாது விலக்கு, கதர்கிராமக் கைத்தொழில்வளர்ச்சி, ஆதாரக் கல்வித்திட்டம், பெண்கள் முன்னேற்றம் ஆகிய திட்டங்களுக்கு காந்தியடிகள் முதன்மை கொடுத்தார்.

காந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படையான விதி யாதெனில் எல்லா மக்களும் உழைக்கவேண்டும் என வற்புறுத்தினார். இதனால் சமூக ஏற்றத்தாழ்வுகள் மறையும் என்றார். அத்தோடு எவரும் தேவைக்கு மேலாக எதையும் வைத்திருக்கக் கூடாது. காந்தீயப் பொருளாதாரம் சமுதாயத்தில் சமத்துவத்தை ஏற்படுத்துவதையே நோக்காகக் கொண்டது. காந்தி நகரத்தை விடக் கிராமத்தையே அதிகம் நேசித்தபடியால் கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த முயற்சித்தார். நெசவுத் தொழில்களை ஊக்குவித்தார்.

உழைப்பவருக்கு உழைப்பின் பயன் கிடைக்க வேண்டும், முதலாளி தொழிலாளிக்கிடையே உள்ள வேற்றுமை மறைய வேண்டும், ஏற்றத் தாழ்வு அகலவேண்டுமென்ற, நோக்கோடு காந்தியடிகள் தர்மகர்த்தா முறையை உருவாக்கினார். செல்வர்களும் முதலாளிகளும் அன்றாடம் உழைத்துச் சாப்பிடுபவர்கள் என்ற நிலைக்கு வர வேண்டும் என இக்கொள்கை வலியுறுத்தியது.

மேலும் சமூக விழுமியங்களில் மிக முக்கியமான கலாசாரத்தை ஒவ்வொரு மனிதனும் பேண, பின்பற்ற வேண்டும் எனக் கூறிய காந்தியடிகள் மேலைத்தேச நாகரீகமும், கல்விமுறையும், மற்றும் அரசியல், சமூக, பொருளாதார ரீதியான நிறுவனங்களும், கருத்துக்களும், உன்னதமான கீழைத்தேசக் கலாசாரத்தைப் புற்றுநோய்க் கிருமிகள் போல தாக்கியுள்ளன. இதனால் அந்நியர்களைக் கண்டு வியப்படையாமல் அந்நியக் கலாசாரத்தில் மோகம் கொள்ளாமல் ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் தனது பாரம்பரியக் கலாசாரத்தை நேசிப்பவனாகவும் தேசப்பற்று உள்ளவனாகவும் மாறும் போது இந்தியா உண்மையான விடுதலையைக் காண முடியுமென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமய ரீதியில் நோக்கும் போது காந்தி ஒரு மதவாதி ஆவார்.

"நான் கண்ட மதவாதிகள் யாவரும் மதவேடம்

பூண்ட அரசியல்வாதிகள் ஆனால் நானோ அரசியல்

வேடம் பூண்ட மதவாதி"

எனக் கூறிய காந்தியடிகள் தன் சொந்தமான மதமாகிய இந்துமதத்தை இறுக்கமாகக் கடைப்பிடித்தார். அதேசமயம் ஏனைய மதங்களில் உள்ள தன் கருத்தை வரவேற்பவராகவும் ஏனைய மதங்களை மதிப்பவராகவுமே இருந்து வந்தார்.

உ+ம்:-"புத்தருடைய மகாவீரருடைய அகிம்சையையும் யேசுபிரானின் மறைப்பிரசங்கங்களில் கூறப்பட்ட கருத்துக்களில் காணப்படுகின்ற அன்பு பற்றிய கருத்தையும் இந்துக்களின் உபநிடதத்தில் காணப்படுகின்ற சத்தியம் பற்றிய கருத்துக்களையும் ஒன்று சேர்த்தே சத்தியாக்கிரகம் பற்றிய கருத்துக்களை வெளியிட்டார்."

கடவுள் என்ற பரம்பொருள் வெகு தொலைவிலில்லை என்றும் ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் மனச்சான்று என்ற வடிவில் இறைவனின் குரல் எப்போதும் ஒலித்துக்கொண்டேயிருக்கும். அக்குரலுக்கு எவரும் எச்சந்தர்ப்பத்திலும் தீங்கிழைக்கக் கூடாது என்பது இவரது உயர்வான தயவான கருத்தாகும். இதன் பின்னணியிலேயே காந்தியடிகள் ஓர் அரசியல் போராட்ட வழிமுறையாக சத்தியாக்கிரகம் என்பதை அறிமுகப்படுத்தினார். இவ்வாறாக ஒவ்வொருவரும் நல்ல சிந்தனையும் இன் சொல்லும் உடனடிச் செயலும் கொண்டிருக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறார்.

காந்தியடிகள் பற்றியும் அவரது கொள்கைகளையும் போராட்டமாகப் பார்த்த நாம் இனிமேல் சத்தியாக்கிரகப் போராட்டம் பற்றிய எண்ணக்கருவுக்கு காந்தியடிகள் வழங்கிய பங்களிப்பினை ஆராய்வோம். அகிம்சையே வெல்லும் எனும் நம்பிக்கை இவரது உள்ளத்தில் இயல்புணர்வாக இருந்து (Inherent nature) வந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. காந்தீயம் பற்றிய கருத்துக்களிலே சத்தியாக்கிரகம், சத்தியம், அகிம்சை, சர்வோதயம், தீண்டாமை, தர்மகர்த்தாமுறையும், உள்ளடக்கிய சத்தியாக்கிரகம் மிக மிக முக்கியமானதும் முதன்மைப்படுத்தப்பட வேண்டிய ஒன்றுமாகும். இளமையிலேயே காந்தியடிகள் சத்தியம் அகிம்சை ஆகியவற்றில் பற்றுக்கொண்டிருந்தார். அவை இரண்டும் காந்தியக் கொள்கைகளின் அடிப்படையாக அமைந்தன.

காந்தியடிகள் 1893இல் தென்னாபிரிக்காவில் வாழ்ந்த போது சத்தியாக்கிரகம் பற்றிய கொள்கைகள் அவரது உள்ளத்தில் உருப்பெற்று வளர்ந்தது. அந்நாட்டில் வாழ்ந்த ஒடுக்கப்பட்ட இந்திய மக்களுக்கு அன்றைய அரசு செய்த கொடுமைகளை இவர் உணர்ந்திருந்தார். இனஒதுக்கல் சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு தலைவிரித்தாடியது. கொடுமைகளுக்குப் பணிவது கோழைத்தனம் என்பதை உணர்ந்த காந்தியடிகள் வன்முறைக்கு இடம் கொடுக்காமல் அக்கொடிய சட்டத்தை எதிர்க்க அமைதியான முறையில் போராட்டம் ஒன்று மூண்டது. அப்போராட்டத்திற்கு நல்லதொரு பெயர் வைக்க விரும்பி சத்தியாக்கிரகம் என்ற தொடரைப் பயன்படுத்தினார். அன்றிலிருந்தே காந்தியடிகளின் சத்தியாக்கிரகம் பற்றிய போராட்டம் ஆரம்பமாயிற்று எனலாம்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் காந்தியடிகள் வரை (கி.பி 1869-1948) தோன்றிய அறநூல்கள் யாவும் தனி ஒருவர் கடைப்பிடிப்பதற்கும் அரசு கடைப்பிடிப்பதற்கும் உரிய அறநெறிகளைப் பாகுபடுத்தியே கூறியுள்ளன. ஆனால் தனிமனிதனுக்கு ஒரு அரசிற்கும் பிறிதொரு அறமும் என்றில்லாமல் அறம் ஒன்றே என்றும் அது இடத்திற்கிடம் மாறாது என்றும் விளக்கியதோடு அன்றியும் அதனை நடைமுறைப்படுத்தியும் காட்டிய பெருமை காந்தியடிகளையே சாரும்.

சத்தியாக்கிரகப் போராட்டத்திற்குரிய மிகத் தெளிவான விளக்கத்தை நாம் காந்தியடிகளின் வாழ்க்கையிலே இலகுவாகக் காண முடியும். சத்தியாக்கிரகத்தின் உறைவிடம், வரைவிலக்கணம் யாவுமே காந்தியடிகள் தான். பகையைப் பகையால் ஒழிப்பது நீடித்த பயனைத் தராது எனவும் போர் மீண்டும் போரையே உருவாக்கும் எனவும் அழிவுகளே மிஞ்சுமெனவும் உணர்ந்த காந்தி சத்தியாக்கிரகப் போராட்டமே சிறந்த கருவி எனத் தெரிந்து கொண்டார். இந்த ஆன்ம சக்தியால் கல்லையும் பிழிந்து கனியாகக்க முடியுமென நம்பிய இவர் சத்தியாக்கிரகத்தின் நாளங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார். இவை காந்தியின் பங்களிப்புக்களாகும்.

01) ஒத்துழையாமை (Non - Cooperation)
02) சட்டமறுப்பு (Civil Disobedience)
03) உண்ணாவிரதம் (fnst)
04) அன்பு (Love)
05) வன்முறையின்மை (Non - Violence)
06) வாய்மை (Truth)

ஒத்துழையாமை என்பது கொடுமைக்கு ஒத்துழைப்புச் செய்யாமையாகும். கொடுமைக்கு நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ உதவியாகவும் உடந்தையாகவும் சத்தியாக்கிரகம் இருத்தல் கூடாது என்கிறது. கொடுமையாளனுக்கு உதவாமல் அவனுக்கு ஒத்துழைப்புக் கொடாமல் எதிர்க்கலாம் அவ்வாறு உதவ மறுப்பதால் அவனைத் திருத்த முடியும் என்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ+ம் :- அரசன் கொடியவனாக இருந்தால் குடிமக்கள் அவன் செய்யும் கொடுமையை எதிர்க்கலாம் வரிகொடாமை அவன் மேற்கொள்ளும் அரச காரியங்களுக்கு ஒத்துழையாமை இதனால் அவனைத் திருத்த முடியும்.

தொடர்ந்து இதைச் சிறிது காலம் கடைப்பிடிப்பதனால் அவன் நெறிப்படுவது தவிர அவனுக்கு வேறு வழியில்லாமல் போகும். ஆனால் வன்முறையில் ஈடுபடவே கூடாது என ஒத்துழையாமை கூறுகிறது. மேலும் சத்தியாக்கிரகம் பயன்படுத்தும் சாதனங்களுள் சட்ட மறுப்பும் ஒன்றாகும் அதாவது மக்கள் நலனைப் பாதிக்கும் படியான சட்டம் அரசினால் இயற்றப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றில்லை. கொடுமையான சட்டத்திற்கு பணிந்து போகாமல் அதனை மீறலாம். அவ்வாறு தீய சட்டங்களை எதிர்த்து பணிய மறுப்பதும் நன்னெறியேயாகும். இதற்கு மனவுறுதி அவசியம். அமைதியான சட்டமறுப்பினால் சமுதாயத்தில் குழப்பமேற்படாது. வன்முறைதான் கலகத்தைக் கொணரும். ஆகவே வன்முறை தவிர்க்கப்பட வேண்டும்.

மேலும் நியாயமற்ற செயல்களை எதிர்ப்பதற்கு உண்ணாவிரதம் ஒரு கருவியாகும். தனி ஒருவன் நன்மை பெறுவதற்காக உண்ணாவிரதம் இருப்பது தகாது அது தன்னலத்தின் பாற்படும். உண்ணாவிரதத்தின் குறிக்கோளாகப் பொதுநலனே இருக்க வேண்டும். தூய்மையும் அச்சமின்மையும் உண்ணாவிரதத்தின் இன்றியமையாப் பண்புகளாகும். பிறரை திருத்துவதற்காகவே இது மேற்கொள்ளப்படுகின்றது. எனவே அதற்குரிய அம்சங்களோடு அதனைப் பின்பற்ற வேண்டு மென்கிறார் அண்ணல்.

மேலும் சாந்தி முன்வைத்த அன்பு பற்றிப் பலர் வலியுறுத்தி இருப்பினும் அவற்றைத் தனித்தனி வாழ்க்கையிலும் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டும். வலிமை பொருந்திய ஆங்கில அரசாங்கத்தை எதிர்த்துப் போராடிய அவசிய வாழ்க்கையிலும் இவற்றை நெகிழவிடாமல் கடைப்பிடித்த காரணத்தினால் சத்தியாக்கிரகம் என்ற தொடர் உண்மையான விளக்கம் பெறலாயிற்று. எமது அன்பு நண்பரிடமோ/உறவினரிடமோ இருப்பதை விட எமது எதிரியான பகைமையானவர்களிடம் காணப்படவேண்டும் என்றார். காந்தி "பகைவரை அன்புசெய்" இது சத்தியக் கிரகத்திற்கு அவசியமென்றார்.

மேலும் இன்னா செய்யாமையையும் வாய்மையையும் அரசியலில் புகுத்திய முதல் சத்தியாக்கிரகி காந்தியே. இங்கு எமக்கு தீமை செய்தவர்க்கும் நாம் தீமை செய்யக்கூடாது. எச்சந்தர்ப்பத்திலும் உண்மையே பேசவேண்டும் என்பதும் வாய்மையே வெல்லும் எனவும் கூறப்படுகிறது. இவ்வாறாக சற்று முன்னேறிய ஒரு நிலைமையை இது காட்டுகிறது. இன்னா செய்யாமை என்பது பிறரை வருத்தாமையாகும். மனமொழி மெய்களால் எந்த உயிர்க்கும் தீங்கு செய்தலானது ஆன்ம நேய ஒருமைப்பாட்டுடன் திகழ வேண்டும் என்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் காந்தியடிகள் வழங்கிய பங்களிப்பினை நோக்கின் தென்னாபிரிக்காவிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பியபின் இந்திய விடுதலை இயக்கத்தை தலைமை தாங்கி நடாத்தும் பொறுப்பை அவரேற்க வேண்டிய சூழ்நிலை வாய்த்தது. இந்திய விடுதலைப் போராட்டம் 1857இல் தொடங்கினாலும் 1919ஆம் ஆண்டில் காந்தியடிகள் தலைமையேற்ற பின்னர் தான் அது ஒரு நாடு தழுவிய விடுதலை இயக்கமாக உருப்பெற்று ஒரு புதிய திருப்புமுனையை அடைந்தது. இந்திய மக்களுக்கு சேவையாற்றுவதற்கு அரசியல் ஒன்றே சிறந்த சாதனமெனக் கண்டமையினாலேயே காந்தி அரசியலில் பிரவேசித்தார். ஆசியஇந்தியதேசிய காங்கிரஸ் என்ற அரசியல் கட்சியை உருவாக்கினார். அதனூடாக சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேலும் வலுப்படுத்தினார்.

காந்தியடிகள் நெடிய இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல கட்டங்களில் தூய்மையான உள்ளத்துடன் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டார் உ+ம் :- சம்பரான் சத்தியாக்கிரகம், உப்புச் சத்தியாக்கிரகம் முதலியன குறிப்பிடத்தக்கவை. இவற்றின் மூலம் அவர் ஆன்ம சக்தியைப் பெருக்க முடிந்தது.1941இல் நடைபெற்ற தனியொருவர் சத்தியாக்கிரகம் வரலாற்றுச் சிறப்பு மிக்கது. 'வெள்ளையனே வெளியேறு' என்ற காந்தியடிகளின் அறைகூவலுக்கு இச் சத்தியாக்கிரகமே வழிகோலியது. தொடக்ககாலத்தில் சத்தியாக்கிரகத்தை எள்ளி நகையாடியவர்கள் இதன் இன்றியமையாமையைக் காலப்போக்கில் உணர்ந்தனர். அமெரிக்கா, இத்தாலி முதலிய நாடுகளிலும் சத்தியாக்கிரகதத்துவம் அண்மைக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இன்றைய இந்தியாவில் சத்தியாக்கிரகத்திற்கு இடமுண்டா? உண்டு என்பதே விடை எந்த நாட்டிலும் எந்தக்காலத்திலும் இதன் பயன்பாடு குறைந்து விடாது இதற்குக் காந்தியடிகளே காரணமானவர் எனின் யாராலும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

அணுயுகமாக இருந்தாலும் ஊழிகள் பல சென்றாலும் கொடுமைகளும் அநீதிகளும் சமுதாயத்தில் இருக்கும் வரை சத்தியாக்கிரகம் செயற்படும். ஆனால் இந்த நுட்பமான போர்க்கருவியை எடுத்தாளும் சமாதானப்போர் வீரர்கள் கிடைப்பது அரிதாகலாம். தெருபிடிப்போரும் பொருளாதார நெருக்கடிகளும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளும் பூசல்களும் வன்முறைகளும் பெருகிவரும் இன்றைய உலகில் முன்னைவிட அன்பு வாய்மை இன்னா செய்யாமை முதலியவற்றைத் தன்னுள் கொண்டுள்ள சத்தியாக்கிரகம் காலத்தின் பெருந்தேவையாகிறது.

2 நூற்றாண்டுகளுக்கு மேல் ஆங்கிலேயர் வல்லாட்சி நடத்தியதால் தாழ்வுற்று வறுமை மிஞ்சி பாழ்பட்டுப் போன பாரதத்தைச் சத்தியாக்கிரகம் என்கின்ற சாந்தம் நிறைந்த போர்க்கருவியைப் பயன்படுத்திக் காந்தியடிகள் விடுதலை பெறச் செய்தார். கத்தியின்றி இரத்தமின்றி நடைபெற்ற இந்திய விடுதலைப் போரின் வரலாறு உலகமென்றும் கண்டிராத ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவர்களும் ஆளப்பட்டவர்களும் அடிமைத்தளை நீங்கியதும் தோழமையுணர்வு குன்றாமல் இணைந்து வாழும் காட்சி சத்தியாக்கிரகத்தின் மாட்சியாகும். க. சந்தான மென்பவர் கூறுவதற்கிணங்க காந்திஜியின் முக்கியமான உபதேசங்களை மூன்றாகப் பிரிக்கலாம். அவை சத்தியம், அகிம்சை, சத்தியாக்கிரகம் என்பனவாகும். மேலும் காந்தியத்தை மூன்றாகப் பிரிக்கலாம்.

01. காந்தீய இலட்சியங்கள்
02. காந்தீய கொள்கைகள்
03. காந்தீய வழிகள்

என்பனவாகும். இந்தவகையில் அரசியல் விடுதலை, சர்வோதய சமுதாயம் நிறுவல் இரண்டும் காந்தீய இலட்சியங்கள் என்றும் சத்தியம் அகிம்சை உழைப்பைப் போற்றுதல் ஆகியவை காந்தீயக் கொள்கைகள் என்றும் சத்தியாக்கிரகம் ஆதாரக்கல்வித் திட்டம் என்பவை காந்தீய வழிமுறைகள் என்றும் மிகத் தெளிவாக "பண்ரேண்ட்" என்பவர் கூறுகின்றார்.

சத்தியாக்கிரகம் என்பது சத்தியம் அகிம்சை என்ற இரண்டையும் அடிப்படையாகக் கொண்ட போராட்ட முறையாகும். சத்தியத்தையும் அகிம்சையையும் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் வாழும் கேடயம் என்று காந்தி வர்ணித்தார். எத்தனை சோதனை, வேதனை வந்தாலும் சத்தியத்தை தொடர்ந்து கடைப்பிடித்து அகிம்சை மார்க்கத்தை வெளிப்படுத்தி இறுதி வெற்றியை அடைவதாகும். காந்தியின்படிசத்தியமே உயர்ந்த தர்மம் பிரபஞ்சத்தின் இருப்புக்கு மூலாதாரம் சத்தியாக்கிரகம் என்கிறார். தர்மத்தின் வழியில் செல்பவரை தர்மமே பாதுகாக்குமென்பது இவரது கருத்து. அவரின் படி சத்தியம் என்ற தர்மத்தின் மற்றொரு பக்கம் அகிம்சையாகும். இவ்வாறாக சத்தியமும் அகிம்சையும் கலந்ததே சத்தியாக்கிரகப் போராட்டமாகும்.

சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு அகிம்சை மிக முக்கிய உயிர் நாடி என்றார். நாம் எமது எண்ணத்தால் சொல்லால் செயலால் உலகில் வாழும் எந்தவொரு உயிருக்கும் ஒரு சிறிதும் துன்பம் செய்யாமையே அகிம்சை ஆகும். அகிம்சை இன்றி ஒரு சத்தியாக்கிரகப் போராட்டமில்லை என்கிறார். அகிம்சை உயர்ந்த வாழ்க்கை நெறிகளை உள்ளடக்கியதாக விளங்குகிறது என்றார். மேலும் சத்தியாக்கிரகம் என்ற எண்ணக்கருவை மட்டுமன்றி அப்போராட்டத்திற்கு அவசியமானவை எனச் சில பண்புகளைக் காந்தியடிகள் கூறி சத்தியாக்கிரகப் போராட்டத்தை வளர்த்த பெருமையைப் பெறுகிறார். சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு இருக்க வேண்டிய பண்புகளாக.

1) அன்பு செலுத்துதல், அனைவரிடத்தும் வெறுப்பின்மை
2) தவறு செய்தவரிடத்தும் அன்பு செய்தல்
3) வன்முறையை எதிர்க்கும் வீரம்
4) உடமைப்பற்றின்மை
5) சத்தியம் அகிம்சையில் பற்றுடைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) பிரமச்சரியம், புலனடக்கம் ஆகியவற்றைக் கடைப்பிடித்தல் இவை காந்தியின் சத்தியாக்கிரகத்திற்கான பங்களிப்பாகும்.

அடுத்து சத்தியாக்கிரகப் போராட்டம் ஒரு சத்தியாக்கிரகியின் குணாம்சங்களிலே தங்கியுள்ளது எனக் கருதிய காந்தி சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடாத்துகின்ற சத்தியாக்கிரகத்துக்கு எதையும் நிதானித்து ஆற்றல்அறிவோடும் வன்முறையிலமையாத பண்புகளும் இருக்க வேண்டும் எனவும் எதையும் யாருக்கும் தெரிவிக்கக் கூடியதான துணிவும் அச்சமின்மையும் வர்க்க முரண்பாடற்ற சமத்துவமும் இருக்கவேண்டும் என்றார். இத்தோடு மேலும் பல பண்புகளைக் குறிப்பிடுகிறார் அவையாவன.

01) அச்சம் தவிர்த்தல்
02) ஆண்மை கடைப்பிடித்தல்
03) காழ்ப்புணர்ச்சி விடுதல்
04) நெஞ்சில் உரமும் நேர்மைத் திறமும் ஆன்ம வலிமையும்
05) மனக்கட்டுப்பாடு, புலனடக்கம், நாவடக்கம்
06) உணவில் கட்டுப்பாடு
07) பணிவு
08) திருடாமை
09) உணவுக்கான உழைப்பு
10) தீண்டாமை
11) சுதேசியம்

போன்ற பண்புகளைக் கொண்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தைக் கடைப்பிடிக்கின்ற சத்தியாக்கிரகம் இவைகளைக் கடைப்பிடித்து ஒழுகும் போது அப்போராட்டம் உன்னதமானதாக உயர்வடையும் என்றார் காந்தி. மேலும் சாந்தி சத்தியாக்கிரகப் போராட்டமும் சாத்வீகப் போராட்டமும் ஒன்று என்று கூறவில்லை. சாத்வீகப் போராட்டத்திலிருந்து சத்தியாக்கிரகப் போராட்டம் பலவழிகளில் தனித்துவமும் - சிறப்பும் கொண்டது என அவர் கருதினார். ஹென்றி டேவிட் தோரோ என்பவரது Civil Disbedience (சட்ட மறுப்பு) என்ற நூலிலுள்ள சாத்வீக எதிர்ப்பு எனும் போராட்டமுறை பற்றிக் கூறியுள்ளார். இதை 1907இல் காந்தி வாசித்ததாகவும் கூறப்படுகிறது. அதைக் கொண்டு நோக்கிய காந்தி சாத்வீகம் போராட்டத்திலிருந்து சத்தியாக்கிரகப் போராட்டம் பின்வரும் வழிகளில் வேறுபட்டதாகவும் கூறுகிறார். அதாவது,

01. சத்தியாக்கிரகக் கொள்கை பொதுமக்கள் நடத்தும் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதால் அது சாத்வீகப் போராட்டத்தை விட ஆற்றல் உடையதாகும்.

02. சாத்வீகப் போராட்டம் வன்முறையைக் கைக்கொள்வதை மறுக்க வில்லை ஆனால் சத்தியாக்கிரகத்தில் இத்தகைய வெறுப்புக்கு இட மில்லை.

03. சாத்வீகப் போராட்டத்தை மேற்கொள்பவர்கள் எதிரியை மனதளவில் வெறுக்கின்றனர். அத்துடன் இவர்கள் பலவீனமானவர்களாகக் காணப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றனர். ஆனால் சத்தியாக்கிரகத்தில் இத்தகைய வெறுப்புக்கு இட மில்லை. அத்துடன் பலமானவர்களாலே சத்தியாக்கிரகப் போராட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

04. சாத்வீக எதிர்ப்பு அரசியல் போராட்டத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டது. ஆனால் சத்தியாக்கிரகம் அரசியலில் மட்டுமல்லாது சமூகத்தின் எல்லா நிலைகளிலும் சமுதாயக் குறைகளைப் போக்கு வதற்காகப் போராட்டம் மேற்கொள்ளும் வகையில் உருவாக்கப் பட்டுள்ளது.

இவ்வாறாகச் சாத்வீகம் போராட்டத்திற்கும் சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கும் இடையிலான வேறுபாட்டைக் கூறி சத்தியாக்கிரகத்தின் மேன்மையை மேன்மேலும் வளப்படுத்தினார்.

காந்தி தனது சத்தியாக்கிரகப் போராட்டத்தை நவீன கண்டுபிடிப்பாகக் கூறவில்லை. சத்தியாக்கிரகத்தில் காந்தியடிகள் நம்பிக்கை ஏற்படக் காரணம் அவர் இளமையில் படித்த கேட்டறிந்த அரிச்சந்திரன் கதையே யாகும். மேலும் அவர் தனது இக்கொள்கைக்கு உபநிடதங்கள், பகவத்கீதை, இயேசுவின் மறைப்பிரசங்கம், ஆசியஜோதிநூல் மேலும் பல சமண பௌத்த நூல்களிலும் கூறப்பட்டுள்ள அகிம்சை சத்தியம் ஆகியவற்றைப் பயன்படுத்தினார். அவரது இப்படைப்பு இன்று முழு உலகிற்குமே ஓர் சிறந்த சாதனமாகப் பேசப்படக் காந்தியே காரணமாவார் சத்தியாக்கிரகத்தை உலகறிய வைத்த பெருமை இவரையே சாரும்.

எனவே முடிவாக நோக்கின் ஒரு தனிமனிதராக இருந்த காந்தியடிகளால் முன்வைக்கப்பட்ட இக்கருத்து/கொள்கை இன்று முழு உலகிலும் பரவியுள்ளது. இப்போதுள்ள சத்தியாக்கிரகத்தின் அடிப்படை அடித்தளம் காந்தியிடமே இருந்து வந்தது எனலாம். இளம் வயதில் காந்தியடிகளையும் அவரது கொள்கைகளையும் ஏற்க மறுத்த பலர் பின்னர் உண்மையைப் புரிந்தவர்களாய் காந்திக்கு அவரே நிகர். அவர் ஒரு மகாத்மா என்று கூறி அவரை மகாத்மாகாந்திஜி என்றழைக்க அவரது சத்தியாக்கிரகமே காரணமாகும்.

சிறந்த ஒரு சத்தியாக்கிரகியாக இருந்து உயர்ந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தையும் நிகழ்த்திய காந்தியை நம்துர்அதிஸ்டவசம் இடையில் அவரை இழந்து விட்டோம். ஆனாலும் அவரது கொள்கைகள் பங்களிப்புக்கள் என்பவை என்றும் அழியாதவை. 'பசு இன்றி பாலில்லை' என்பது போல காந்தி இன்றி சத்தியாக்கிரகப் போராட்டமில்லை எனும் அளவிற்கு காந்தியையும் சத்தியாக்கிரகத்தையும் ஒன்றை விட்டு ஒன்று பிரித்து நோக்க முடியாது. இவ்வாறாக காந்தி சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு தன் பங்களிப்பை நல்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் பட்டியல்


அருணாசலம், ச., ***தமிழ் நாவல்களில் காந்தீயத் தாக்கம்,*** தொண்டியார் தெரிதேவக்கோட்டை:1981.

"சத்தியாக்கிரகம்", ***வாழ்வியற் களஞ்சியம்,*** தொகுதி . 08, தஞ்சாவூர்:1991.

பிர்லா, க., ***நானறிந்த காந்தி,*** (மொழிபெயர்ப்பு) சுப்பையா, அ., சென்னை:1948.

வரதராஜன், மு., ***காந்தி அண்ணல்,*** சென்னை:1950.

சிவபாதசுந்தரன், நா., ***காந்தீய நோக்கு,*** அகில இலங்கை காந்தீய சேவா சங்கம், நீர்வேலி:1951.

சென் றாஜன், தி,சே., ***தமிழ் நாட்டில் காந்தி,*** சென்னை:1954.

டாங்கே, எஸ், ஏ., சர்தேசாய், எஸ்,ஜி., ***மகாத்மா - ஒரு மாக்ஸ்சிய மதிப்பீடு,*** (தமிழாக்கம்), கல்பனா, தா., சென்னை:1978.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருஷ்யாவின் எழுச்சியில் மகாபீட்டர்

செல்வி எ.அனற் சர்மிளா
மூன்றாம் வருடம்
வரலாறு சிறப்புக்கலை.

## அறிமுகம்

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலக வரலாற்றிலே மிகவும் பின்தங்கிய நாடாக ருஷ்யா காணப்பட்டது. 10ஆம் நூற்றாண்டுவரை ருஷ்ய மக்கள் கிறிஸ்தவ மதத்தில் சேராமல் இருந்தனர். ஆனால் நுக்கிரின் பேரனான விளாடிமிர் என்பவர் அரசனான பின்னர் அவரின் வற்புத்தலின் பேரில் கிறிஸ்தவ மதத்தைத்தழுவிக் கொண்டனர். இரண்டு நூற்றாண்டுகளில் ருஷ்யாவை மொங்கோலியர் கைப்ற்றி தங்களது மொழியையும் பழக்கவழக்கங்களையும் புகுத்தினர். ஒரு நூற்றாண்டு காலத்தில் மொங்கோலியராட்சி வீழ்ச்சி கண்டது. இதனால் ருஷ்யா மீண்டும் பழைய நிலையிலேயே இருந்தது. 17ஆம் நூற்றாண்டில் ருஷ்யர்கள் பிறநாட்டவர்களைக் காணவும் மறுத்தார்கள். என்று ஐரோப்பாவிலிருந்து ருஷ்யா சென்ற பிரயாணிகள் கூறினார்கள் என்றால் ருஷ்யர்களது வாழ்வு எத்தகைய நிலையில் இருந்திருக்க வேண்டும் என்று ஓரளவு உணர்ந்துகொள்ள முடியும்.

இவ்வாறு கீழ்நிலை எய்தியிருந்த ருஷ்ய மக்களின் வரலாற்றில் திருப்புமுனையாக அமைந்த சம்பவம் 1613இல் ரோமனாப்(Romanaff) குடும்பத்தை சேர்ந்த மைக்கல் என்பவர் அரசுப்பட்டமெய்தியமையாகும். அப்போது தொடங்கி கி.பி. 1917ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சிவரை இவரையும் இவரது குடும்பத்தவரையும் ருஷ்ய மக்கள் கடவுளின் பிரதிநிதியாகவே கருதினார். ரோமனாப் குடும்பத்தை சேர்ந்தவர்கள் ஆட்சியை பெற்றதுடனேயே ருஷ்யாவின் மறுமலர்ச்சி தொடங்குகிறது என்பர். இவ்வாறான ரோமனாப் குடும்பத்திலிருந்து 1682இல் ருஷ்யாவின் மன்னராகப் பதிவியேற்றவரே மகாபீட்டர் ஆவார். ருஷ்ய வரலாற்றை மாற்றியமைத்தவர்களுள் மிகவும் முக்கியமானவராகத் திகழ்பவர் இம்மகாபீட்டரேயாவார். இவருடைய பணியை முன்னிட்டு இவர் ருஷ்யாவின் தந்தை எனவும் மேன்மை தங்கிய பீற்றர் (Peter the Great) எனவும்அழைக்கப்படுகின்றார். ருஷ்ய நாட்டின் மறுமலர்ச்சிக்கு இவர் பல கொள்கைகளை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்தினார். ஆயினும் இவருடைய கொள்கைகள் மக்களதும் பிரபுக்களதும் பலமான எதிர்ப்பைக் கண்டே பின்னர் படிப்படியான வெற்றிபெற்று விரைவில் ருஷ்யா எழுச்சி பெறத்தொடங்கியது எனலாம். இவ்வாறு பீட்டர் ருஷ்யாவின் எழுச்சிபொறுத்து உள்நாட்டில் பல அரசியல், பொருளாதார, சமூக ரீதியான பணிகளை மேற்கொண்டதுடன் வெளிநாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு ருஷ்யாவின் வாணிபத்தையும், பொருளாதாரத்தையும் படைபலத்தையும் மேம்படுத்தி ருஷ்ய வளர்ச்சிக்குப் பணிபுரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் கொள்கைகள்

பீற்றர் ருஷ்யாவை வளர்ச்சியடைச் செய்ய 14ஆம் லூயி பிரான்சில் அமைத்த நன்மையான எதேச்சதிகாரத்தை ருஷ்யாவிலும் அமைக்கவேண்டும் எனக்கருதினார். தொழிற்துறை, வணிகத்துறை போன்றவற்றில் முன்னேற்றம் காண வேண்டும். மக்கள் கல்வி கற்கவும், நாட்டிற்காக சண்டை செய்யவும் பழக்கப்பட வேண்டும் வெறும் செல்வந்தர்களும் பிரபுக்களும் வேண்டாம். அதற்கு உழைக்கின்றவர்களே நாட்டிற்கு அவசியம் என்றார். பிரபுக்கள் சேவை செய்யாவிட்டாலும் மன்னருக்கு கீழ்ப்படிவாகவேனும் இருக்க வேண்டும். அல்லது கீழ்ப்படியச்செய்ய வேண்டும். மக்களை நாகரிகமடையச் செய்து அவர்களை ஐரோப்பிய சிந்தனையும், கலையும், அன்றாடவாழ்க்கையும் கொண்டவர்களாக ஆக்கவேண்டும் போன்ற கொள்கைகளை மனதிற்கொண்டு செயலாற்றினார்.

பீட்டர் ருஷ்யாவை எழுச்சியடைச் செய்வதற்கு மேற்கொண்ட உள்நாட்டுப் பணிகளுள் முக்கியமானது ருஷ்யாவில் நிலையான அரசாங்கத்தை ஏற்படுத்தவும், அங்கு ஒழுங்கையும் அமைதியையும் நிறைநாட்டவும் பலமிக்கதொரு இராணுவத்தை உருவாக்கியமையாகும். சிறு வயதிலேயே அவர் தன்னுடைய நண்பர்களை அழைத்து. “பிரியோ பிராஸ்கி” என்ற தனது அரண்மனையில் இராணுவப் பயிற்சி அளித்தார். அவர்களுக்கு சிறந்த ஒழுக்கத்தையும் கட்டுப்பாட்டையும் போதித்தார். ஆரம்பதில் ஐம்பது இளைஞர்களை கொண்டு உருவான இக்குழு பின்னர் பெரிய இராணுவப் படையாக மாறியது. இவ்வாறு ஒன்றுமில்லா மையிலிருந்து ஒரு பெரும்படையை நிர்மாணித்து குற்றுயிராய் கிடந்த நாட்டிற்கு சிறந்த தரைப்படை, கடற்படை, சீரிய அரசமுறை என்ற இவை மூன்றையும் அளித்து ருஷ்ய எழுச்சிக்கு மகாபீட்டர் பெருந்தொண்டாற்றினார்.

நாட்டின் நிரந்தரமான வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் சிறந்த அரசியல் முறை அவசியம் என்பதினைக் கண்ட மன்னர் அதுவரை ருஷ்யாவில் நடந்துவந்த பிரபுக்களின் ஆட்சியை ஒழித்து நாட்டைப்பலமாவட்டங்களாகப் பிரித்து அவை ஒவ்வொன்றையும் படைத்தலைவர்களின் ஆளுகையின் கீழ் ஒப்படைத்தார். இந்த ஆட்ச்சித்தலைவர்கள் பேரரசின் கீழ் பணியாற்றினர். அவருடைய சீர்திருத்தக் கட்டளைகளை நிறைவேற்றினர். அக்கால ருஷ்யாவில் அரசியல் பணியாற்ற படைவலிமை உள்ளவர்களாள்தான் முடியுமாகையால் அவர் படைத்தலைவர்களை உத்தியோகத்தில் அமர்த்தினார். இவ்வகையில் ருஷ்யாவில் முதல்தடைவையாக அரசாங்க ஊழியர் முறை (Civil service) பீட்டரால் ஏற்றபடுத்தப்பட்டது. பிரபுக்களுடைய வலிமையை குறைப்பதற்கு ஒவ்வொரு பட்டணத்திலும் தன்னாட்சிக் கட்டங்களை எழுப்புவித்தார் பிரபுக்கள் ஒடுங்கினர் மத்திய அரசாங்கம் வலுப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக மூதவை (Administrative) ஒன்றை பரிபாலன விடயங்களுக்குப் பொறுப்பாக்கினார். அரசாங்கத்தின் அலுவல்களை பல திணைக்களங்களுக்கும் பங்கிட்டு கொடுத்தார். அரசாங்க ஊழல்களைத் தடுப்பதற்கு பல வழிகளைக் கையாண்டார். உள்ளூர் நிர்வாகங்கள், உள்ளூராட்சி மன்றங்களிடையே விடப்பட்டது. ஸ்றெய்லீசி (Streltsi) என்னும் படையை அகற்றி மேல்நாட்டு முறையில் பரப்பப்பட்ட தனக்கே பொறுப்பான படையை நிறுவிப் பிறநாட்டவனான பற்றிக்கோடன் என்பவனை தளபதியாக்கினார்.

அவ்வாறே பிரபுக்களின் நடவெடிக்கைகளை கட்டுப்படுத்தி அவர்களது வலிமையை குறைப்பதற்கு, புதிதாக தமக்கு வேண்டியவர்களை பிரபுக்களாக்கி புதியபிரபுக்களுக்கு நிலங்களையும் உரிமைகளையும் வழங்கி விவசாயத்தை ஊக்கிவித்தார். பிரபுக்களின் நிலங்களில் வேலைசெய்தவர்கள் அடிமைகள் போல நடத்தப்பட்டார்கள். அவர்கள் எக்காரணம் கொண்டும் நாட்டைவிட்டு வெளியேறக்கூடாது எனச்சட்டம் இயற்றப்பட்டது. நாட்டின் வளர்ச்சிக்கு பயிர்த்தொழில் அவசியம் அதற்கு தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை பாராது வேலையில் ஈடுபட வேண்டும் இதற்காகவே பீட்டர் இச்சட்டத்தை இயற்றினார்.

## பொருளியல் நடவெடிக்கை

ருஷ்ய தொழில் நிலையையும் வாணிபத்தையும் பெருக்கு வதற்குக் கடல் வலிமை தேவையென்பதை பீட்டர் அறிந்து கொண்டார். ருஷ்யாவில் இதுவரை கப்பற்போக்குவரத்தேயில்லை. துறைமுகம் பட்டினங்களுமில்லை. அதற்காக அசோவ் துறைமுகத்தை துருக்கியுடன் சண்டையிட்டு கைப்பற்றிக் கொண்டார். ஆனால் அதை வைத்துக்காப்பதற்கு ஐரோப்பிய உதவி தேவையாய் இருந்தது. இதற்காக அவர் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டார். அப்போது கொலண்ட், இங்கிலாந்து, வெனிஸ் போன்ற கடல்வலிமை பெற்ற நாடுகள் கப்பல் கட்டுவது, அதனை கடலில் செலுத்துவது, கப்பற்படையை எவ்வாறு அமைப்பது என்பது பற்றியும் பயணத்தின்போது நுணுகி ஆராய்ந்தார். கப்பல் கட்டுதல், கோட்டைகளை அமைத்தல், மொழிகள் கற்றல் ஆகியனபற்றிக் கற்றறிவதற்காக 1696இல் ஐம்பது ருஷ்ய இளைஞர்களை இங்கிலாந்து, ஒல்லாந்து, வெனிஸ் ஆகிய இடங்களுக்கு அனுப்பிவைத்தார். அடுத்த ஆண்டே 'பீற்றர் மைக்னோப்' என்னும் புனைபெயருடன் தானும் சார்டாம், டெப்போட் ஆகிய இடங்களுக்கு சென்று கப்பல்கட்டும் கலையை கற்றார். 400 டச்சுக்காரர்களை கப்பல்கட்டுவதற்காகத் தனது நாட்டுக்குள் வரவேற்றார்.

மேனாட்டு முறைகளைக் கைக்கொண்டு ருஷ்யாவை நாகரிகமுறச் செய்தார். இதன் மூலம் ருஷ்யா மேனாடுகளில் தங்கியிருக்காது செய்தார். பிறநாட்டவரை தன்னாட்டில் குடியேறச் செய்து அவர்களின் ஒத்துழைப்பைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஆக்க பூர்வமான திட்டங்களுக்கு பயன்படுத்தினார். ருஷ்யாவின் இரும்பு, வெள்ளி, செம்பு, ஆகிய உலோக அபிவிருத்திக்கு உதவினார். இரும்புத் தொழிற்சாலைகளை நிறுவினார். தோல், புடவை, ஆகிய பொருட்களின் வர்தக நடவடிக்கைகளை ஊக்குவித்தார். புதியவிவசாய முறைகளை ஏற்படுத்தினார். ஊழிய விவசாயிகள் பிரபுக்களால் நசுக்கப்படுவதைத் தடுத்தார். சென். பீற்றர்ஸ்பேக் நகரத்தை நிர்மாணித்தார். அசோவ் துறைமுகத்தை கைப்பற்றியமை வெளிநாட்டு வர்தகத்தை பெரிதும் ஊக்குவித்தது. மேனாட்டு முறைகளை கையாண்டு இராணுவம், கைத்தொழில் போன்றவற்றில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தி ருஷ்யாவை எழுச்சியுறச் செய்தார்.

## சமூகப்பணிகள்

ருஷ்யாவை ஐரோப்பிய மயமாக்கும் நோக்குடன் 1698இல் பிரபுக்கள் தாடிவளர்ப்பதை தடைசெய்து சட்டமியற்றினார், 1700ல் வழிந்தோடும் மேலங்கிகளை விடுத்து இறுக்கமான சட்டைகளை அணியுமாறு எல்லோரையும் பணித்தார். ஆனால் மக்கள் அதனை உறுதியுடன் எதிர்த்தார்கள். தாடியை நீக்குவது தெய்வத்துரோகம் எனக்கூறினர். அக்கால ருஷ்ய சமயமும் அதனை வலியுறுத்தியது. ஆனால் பீற்றர் துணிந்து தானே பிரபுக்களின் தாடிகளை கத்தரித்தார். இன்னும் சட்டவிரோதமாக தாடி வைத்திருப்பவர்கள் அரசருக்கு வரி செலுத்த வேண்டும் என்று ஆணைபிறப்பித்தார். பல இடையூறுகளை கடந்து முடிவில் வெற்றிபெற்றார். ருஷ்ய மக்கள் ஐரோப்பிய உடைகளை அணியவும், பெண்கள் மறைந்துவாழாது சமூகத்தில் வெளிவந்து ஆண்களுடன் குதூகலமாகப் பழகவும் விருந்துகளில் ஐரோப்பியரைப்போன்று ஆண்களுடன் சேர்ந்து நாட்டியமாடவும் செய்தார். மேற்கத்திய நடனங்கள், பாடல்கள் ஆகியவற்றை ருஷ்யாவிற் புகுத்தினார்.

## கல்விச்சீர்திருத்தம்

பாடசாலைகள், வைத்தியசாலைகள், மருத்துவக்கல்லூரி, விஞ்ஞானக் கலைக்கூடம், ஆகியவற்றை நிறுவி மலிவான புத்தகங்களையும் மாணவர்களுக்கு வழங்கினார். ருஷ்ய அட்சரங்களை இலகுவாக்கினார். கல்வியறிவற்ற பிரபுக்கள் விவாகம் செய்யக்கூடாதென தடைவிதித்தார். 1714இல் பேராசிரியர்களை நாட்டின் பல பகுதிகளுக்கும் நியமித்தார்.

ருஷ்யாகளின் பழைய கலண்டர் முறையை மாற்றி ஐரோப்பிய முறைப்படி தைமாதத்திலிருந்து தொடங்கும் கலண்டரை ஏற்படுத்தியதோடு கிரகரி பஞ்சாங்க முறையையும் அறிமுகப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயசீரதிருத்தம்

1700இல் திருச்சபைமீது தனது அதிகாரத்தை நிலை நாட்டினார்.. ஆத்மீகத் திணைக்களம் (Spiritual Department) ஒன்றைநிறுவி மேற்றிராசனங்களுக்கும் பிற பதவிகளுக்குமுரிய வேட்பாளர் பட்டியலை தயார் செய்து தனது அங்கிகாரத்துக்கு சமர்ப்பிக்குமாறு பணித்தார். இவராட்சியில் மதப்பொறை நிலவிற்று.

## வெளிநாட்டுப் படையெடுப்புகள்

மகாபீட்டர் ருஷ்யாவை எழுச்சியடைச் செய்வதற்காக பல வெளிநாடுகளுடன் போர்களில் ஈடுபட்டார். ருஷ்யமக்கள் முன்னேறவேண்டுமானால் அவர்களுடைய தொழில்களும் வாணிபமும் வளரவேண்டும். இவை வளர்வதற்கு அவர்கள் கடல்கடந்த வர்தகத்தில் ஈடுபட வேண்டும். இதற்கு கப்பல்கள் தேவை துறைமுகங்கள் தேவை. துறைமுகங்களைப் பெறுவதற்கு சுவீடன், போலந்து ஆகிய நாடுகளுடன் போர்களில் ஈடுபட்டார். ஏனெனில் சமகாலத்தில் பின்லாந்து, எஸ்தோனியா, லட்வியா ஆகிய போல்ட்டிக்கரை நாடுகள் ஸ்வீடனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கருங்கடலில் ருஷ்யா தனது செல்வாக்கை நிலைநாட்ட முனைந்து முடியாதபோது போல்டிக் கடலில் செல்வாக்குப் பெறுவதே ருஷ்யாவின் வர்த்தகத்துக்குச் சிறந்த வழியாகக்காணப்பட்டது. ஆகவே மேலைநாடுகளுடன் தொடர்பு கொள்ள இன்னாடுகளை தன் நாட்டுடன் இணைப்பது அவசியம் என்பதை பீட்டர் உணர்ந்திருந்தார். ஆகவே சுவீடனுடன் போரிட்டார் அப்போது சுவீடனை பன்னிரண்டாம் சார்ள்ஸ் ஆண்டுகொண்டுடிருந்தார். இச்சண்டையில் பீட்டர் தமக்கு உதவியாக போலந்தையும், டென்மார்க்கையும் சேர்த்துக்கொண்டார். ஆரம்பத்தில் பலதோல்விகளை கண்டபோதும் இறுதிவெற்றியை பீட்டரே பெற்றுக் கொண்டார். இப்போரில் ருஷ்யா போல்டிக் கடலில் பல பிரதேசங்களையும் ரிகா, ரெவாள் போன்ற இடங்களையும் பெற்றது. இப்போரின் பின்னர்தான் அதாவது 1697இன் பின்னரே ருஷ்யா எழுச்சியடைத்தொடங்கியது எனக்கருதப்படுகிறது.

இவ்வாறு மகாபீட்டர் ருஷ்யாவை எழுச்சியடையச் செய்வதற்கு பல அரிய முயற்சிகளை மேற்கொண்டார். தாம் மேற்கொண்ட நடவடிக்கைகளில் தம் குடும்பத்தவரையும் ஈடுபடுத்தியதுடன் நாட்டின் எழுச்சிக்கு தன்னையும் தன் குடும்பத்தவரையும் முழுமையாக அர்ப்பணித்தார். தண்ணளி வல்லாட்சியைக் கடைப்பிடித்து உள்நாட்டில் அரசியல் பொருளாதார சமூக, சமயப்பாணிகளைப் மேற்கொண்டதுடன் பல வெளிநாட்டுப் போர்களிலும் ஈடுபட்டு ருஷ்யாவை எழுச்சியடையச் செய்யும் பணியில் வெற்றிகண்டார். தனது குறிக்கோளில் வெற்றி பெற்று ருஷ்யாவின் தந்தை என அழைக்கப்படும் சிறப்பினைப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்பட்டியல்


இராமச்சந்திரன், டி.ஆர்., : *உலகவரலாறு* சென்னை : 1969

Marc Raeff., ***Peter the Great changes Russia,*** Second Editicn 1972

நெடுஞ்செழியன், இரா., ***உலகவரலாறு,*** : 1967

ஆரோக்கியசாமி, மு., ***ஐரோப்பியவரலாறு,*** பாகம் ll, சென்னை பல்கலைக்கழகம் : 1961




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு கிராமத்து இதயம்

செல்வி க.நிரோஷனி
முதலாம் வருடம்
வரலாறு சிறப்புக்கலை.

ஓ! இலங்கைத் தழிழ்த் தொல்லியலாளனே!
நீ மண்படையை
எப்படி நேசிக்கின்றாயோ
அப்படி நான் - என்
கிராமத்தை நேசிக்கிறேன்
நீ! காணும் ஒவ்வொரு பொருளிற்கும்
வரலாறு கூற விளைகிறாய்- நானும்
கல் மலையாய்ப் போன
செல் ஊர்ந்த ஊரின்- ஒவ்வொரு
செல்வந்த வீட்டிற்கும் நீண்ட
வரலாறு சொல்ல விளைகிறேன்
வெயில் மழை பாராது
பசித்தூக்கம் காணாது- நீ!
ஆய்வு செய்யும் பொழுதுகளை
என் கிராமத்தின்
வியர்வை சிந்தி
விளைநிலம் காத்த
விவசாயிகளின் கடந்து போன
பொன்னான பொழுதுகளுடன்
ஒப்பிட்டுப் பார்க்கிறேன்
இலங்கை வரலாற்றுக்கு
சிங்களத் தேசியச்சாயம் பூசி
உன் ஆய்வறிக்கைகள்
மங்கவிடப்படும் வேளைகளில்
உன் இதயத்தில் இடப்படுகின்ற
கீறல்களையும் குழிகளையும்
என் கிராமத்தில்
அரையுயிராய் அனுதாபம் கூறும்
கட்டிடங்களிற்கும்
கண்ணிகளால் குழியாகிப்போன
விளை நிலங்களிற்கும்
ஒப்பனை செய்து பார்க்கிறேன்
தொல்லியலாளனே!
உன்னுடன் ஒப்பிட
ஒரு தொழிலாளனும் இல்லையென
கவலைப்படாதே!
கிராமத்தை நேசிக்கும்
ஒரு இதயம்
உன்னைப் போலவே
வாழ்ந்து கொண்டிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருவள்ளுவர் அச்சகம், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org